# நான் நானாக



சிவசங்கரி

# நான் நானாக

*சிவசங்கரி*

## 1

வேடிக்கையாய் இருந்தது.

நம்பமுடியாமலும் இருந்தது...

பால்கனி குட்டைக் கைப்பிடிச் சுவரின்மேல் முழங்கைகளை ஊன்றி, நான்கு மணிகூட ஆகாததால் வெறிச்சிட்டு கிடந்த மணற்பரப்பு, தூரத்தில் அகன்று, விரிந்து நீலமாய் ஜ்வலித்த கடல், அதில் கரும்புள்ளிகளாய் இங்கும் அங்கும் தெரிந்த கப்பல்கள், உயரத்தில் தன்னந்தனியாய் வட்டமடித்த கழுகு—என்று எந்தக் குறிக்கோளுமின்றிப் பார்வையை அலையவிட்ட நிமிஷத்தில்தான் அந்தப் பசுமாட்டையும் அவன் பார்த்தான்.

பழுப்புநிறப் பசு. தாழ்ந்திருந்த நிறை மடியும், கூட்டிக் குவிந்திருந்த வயிறும் அது சினையாக இருப்பதை உடனே உணர்த்தின.

தெருவுக்கு அந்தப் பக்கம், மணல் துவங்கும் இடத்தில் நின்றுகொண்டு, முழுசாய் ஒரு நிமிஷத்துக்கு தொலைவில் தெரிந்த நீர்ப்பரப்பை வெறித்த பிறகு, நேர்கோட்டில் நிதானமாய்த் தண்ணீரை நோக்கிப் பசு நடக்க ஆரம்பிக்க, அந்த நேர்ப்பார்வையும், யோசிக்கிற மாதிரி நின்ற பாவனையும், பின்னர் ஏதோ முடிவுக்கு வந்துவிட்ட இறுதியில், இப்படி அப்படி கவனத்தைத் திருப்பாமல் நடந்த தோரணையும் மாட்டின் செயல்களாக அல்லாமல்

மனுஷத்தனம் கலந்திருப்பதாகத் தோன்ற ஸ்வாரஸ்யம் தட்டியது.

இப்படி நாலு மணி வெயிலைப் பொருட்படுத்தாமல் நீளக் கடலைப் பார்க்க நடக்கும் பசுவின் நடத்தை அவனுக்குப் புதுசாகப்பட்டது.

இந்தப் பசு எங்கே செல்கிறது? கடலுக்கா? ஏன்?

இந்தப் பக்கம் இருப்பது சமுத்திரம் என்பது மணலின் அந்தப் பக்கம் இதற்குத் தெரியுமோ! ஒரு சிலர் தங்கள் வளர்ப்பு நாய்களை கூட்டிவருவதும், கடலுக்குள் கட்டையை எறிவதும், அந்த நாய்களும் நீரில் பாய்ந்து கட்டையைக் கௌவி எடுத்துவந்து விளையாடுவதும் உண்டே, தவிரவும், பெஸன்ட் நகர் வீட்டுக்குக் குடிவந்து இத்தனை வருஷங்களில் இப்படிக் கடலை நோக்கி ஆடோ, மாடோ சென்று கண்டதே இல்லையே! அப்புறம் இது மட்டும் ஏன் போகிறது?

இது நாறிகை வேடிக்கையாய்த் தோன்றியது, நமநம வென்று தவிப்பாய் மாற, சற்றே முன்னால் சாய்ந்தவன் தெருவில் மாட்டுக்குச் சொந்தக்காரர் மாதிரி யாராவது வருகிறாரா என்று பார்த்தான்.

கூடை நிறைய அலுமினியப் பாத்திரங்களை சைக்கிள் காரியரில் கட்டிக்கொண்டு போன வியாபாரி, வேகமாய் வந்துநின்று, மறுபடி கிளம்பிப்போன பல்லவனிலிருந்து இறங்கிய வயசான பெண்மணி, கல்லை உதைத்தபடி சென்ற சிறுவன், எருக்கம் புதரைப் பார்க்கத் திரும்பிநின்று சிறுநீர் கழித்துக் கொண்டிருந்த பாண்ட் போட்ட இளைஞன்... இன்னும்...

அவன் மறுபடியும் பார்வையை பசுவிடம் வீசிய போது அது அலைகள் அடித்து ஓயும் மேட்டை அடைந்து விட்டிருந்தது.

அங்கேயே சில நொடிகள் நின்று மாடு தண்ணீரை வெறித்துப் பார்ப்பதை, துல்லியமாக முதல்மாடியில் நின்றிருந்த காரணத்தால் காணமுடிய, அவனுடைய தவிப்பு அதிகமாயிற்று...



கடல் என்று புரியாமல் நீரில் இறங்கி, அலைகள் இழுத்துக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது? கர்ப்பமாய் இருப்பதுபோல வேறு தோன்றுகிறதே!

அவன் அனிச்சையாய்ப் பதைத்த சமயத்தில் பசு நாலடி நடந்து, சரிவாய் மேட்டிலிருந்து இறங்கி, அலைகளின் நுனிநாக்கு கால்களில் படும்படி நின்றது. கூடவே ஆர்ப்பரித்த தண்ணீரை லட்சியம் பண்ணாமல் அலை வீசிக்கொண்டு வந்தபோது முகத்தைத் தாழ்த்தி மேலாக மிதந்த தண்ணீரை ஒருவாய் குடித்து, மணல் வாய்க்குள் புகாமல் இருக்கவேண்டி அவசரமாய் முகத்தைத் தூக்கிக் கொண்டது—

பாரு! 'அட [illegible]!' என்றுதான் உரக்க...

தாகத்துக்குத் தண்ணீர் குடிக்க வேண்டி கடலை நெருங்கி, சற்று தூரம் போனால் ஆழம் என்பதை உணர்ந்து துவக்கத்திலேயே நின்று, திரும்பிச் செல்லும் அலைகள் மணல் துகள்களையும் தன்னோடு இழுத்துச் செல்லும் என்பது புரிந்து வரும் அலையில் மேலாக உள்ள நீரைக் குடித்து...

ஓ! இந்தப் பசு வாஸ்தவத்திலேயே புத்தியுள்ளது தான்!

தவிப்பாகச் சற்றுமுன் தோன்றிய உணர்வு பாராட்டாக மாற, மாட்டின் செய்கையை ஆமோதிக்கும் விதமாய் இருந்த இடத்திலிருந்தே பார்த்து உதட்டைப் பிதுக்கி பெருமையுடன் புன்னகைத்தான்.

நாலு வாய் குனிந்து தண்ணீரைக் குடித்த பிறகு, பசு மீண்டும் மேட்டில் ஏறி மணலில் நடக்க ஆரம்பிக்க, எவ்வளவு தாகமாக இருந்தால் உப்புத் தண்ணீரைக் குடிக்கச் சென்றிருக்கும், பாவம்—என்கிற நினைப்பு புதுசாக அவனுக்கு எழுந்தது.

கூடவே, இந்த உப்புநீர் கூடக் கிட்டாமல் இன்னும் எத்தனை வாயில்லா ஜீவன்கள் எப்படி எப்படி தவிக்

கின்றனவோ என்கிற ஆதங்கமும் எழ, என்ன அரசாங்கம், என்ன கார்ப்பரேஷன் வேண்டிக்கிடக்கிறது? வெயில் தாளாமல் தாகத்தில் தவிக்கும் வாயில்லா ஜீவன்களுக்கு குடிக்கத் தண்ணீர் கிடைக்கக்கூட வழி செய்ய இயலா மல்— என்கிற எரிச்சலும் தலைதூக்கியது.

என்னிடம் மட்டும் அதிகாரம் இருந்தால் தெருவுக்கு ஒரு தொட்டி கட்டிவைத்து, அதில் ஆடு மாடுகள் மட்டு மல்லாது பறவைகளும் நினைத்தபோது நீர் அருந்தி இன்புறும் வகையில் தண்ணீரை நிறைத்து...

மேற்கொண்டு இதே ரீதியில் சிந்தனை தொடரும் முன் பாரதி சட்டென்று தன்னைத்தானே உலுக்கிக் கொண்டாள்.

சின்ன வயசில் அடிக்கடி 'என்னிடம் மட்டும் அதிகாரம் இருந்தால்' கற்பனை அவளுக்குள் தோன்றி ஒருவித கிளர்ச்சி கலந்த நிறைவைத் தரும்தான். அதுவும் பிடிக்காத காரியங்களைச் செய்யும் நிர்பந்தம் எழுந்த போதெல்லாம் கட்டாயம் மனசுக்குள் 'என்னிடம் மட்டும் அதிகாரம் இருந்தால்' என்று மௌனமாக முனகி, தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டது தப்பாமல் நடந்திருக்கிறது.

ஆனால், திருமணம் ஆன பிறகு முதல், சிலமுறைகளை புதுப்பெண்டாட்டி மனசு நோகவேண்டாம் என்று புன்னகையோடு பேசாமல் இருந்த ரமணி, அப்புறம் பொறுமை இழந்தவனாய் 'என்ன பைத்தியக்காரத்தனம் இது பாரதி? இந்த மாதிரி கற்பனை உத்தரவு போடற தால பிரச்னைக்குத் தீர்வு வந்துடுமா?' என்று கேட்ட பிறகு, அவமானத்தில் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைய ஆரம்பித்த, சின்ன வயசுப் பழக்கம் நாளடைவில் மறந்தே போனது.

இத்தனை வருஷங்களாய்க் காணாமல்போன 'என்னிடம் மட்டும் அதிகாரம் இருந்தால்'— ஆசை திடுமென எங்கிருந்து இன்று மறுபடி முளைத்தது!

என்னாயிற்று இன்று!



பாரதி அடி உதட்டைக் கடித்து, நீளமாய் மூச்சை உள்ளுக்குள் இழுத்துப் பெருமூச்சாய் வெளியிட்டாள்.

இன்று மட்டுமல்ல— கொஞ்ச நாட்களாகவே— கிட்டத்தட்ட ஒரு மாசமாய் இருக்குமா?— இருக்கும், இருக்கும்— சின்னச் சின்னதாய், விவரிக்கத் தெரியாத விதமாய், என்னென்னவோ மனசுக்குள் நடக்கிற மாதிரியான உணர்வு—

என்ன விஷயம்? முழுசும்— விளக்கத் தெரியவில்லை. பராக்குப் பார்ப்பதும், வெட்டியாய் பொழுதைக் கழிப் பதும் கூட அதிகமாகி இருப்பது இந்தச் சில நாட்களில் தான்... முன்பெல்லாம் அவள் இப்படி இல்லை.

சோம்பேறித்தனமா? அப்படியும் தோன்ற வில்லையே!

இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்கலாம், வாய்க் குப் பிடித்த தின்பண்டங்களைத் தட்டில் நிரப்பிக் கொண்டு சமீப கால வம்பைக் கூறும் அந்த வாரப் பத்திரிகை எதாவதுடனோ, விறுவிறுப்பான நாவல் ஒன்றுடனோ உட்காரலாம் என்றால், அதுவும் ரசிக்க வில்லையே! அப்புறம்?

பொருந்தி உட்கார்ந்து வி.ஸி. ஆரில் முழுப் படத் தையும் பார்க்கமுடியாமல், அம்மா வீட்டுக்குப்போய் விஸ்ராந்தியாய் அரட்டை அடிக்கக்கூடப் பிடிக்காமல் ஒரு...? என்ன உணர்வு அது? இருப்புக் கொள்ளாமை? உறுத்தல்? வேதனை? அலுப்பு? சலிப்பு? தெரிய வில்லை... சரியாகப் புள்ளி குத்தத் தெரியவில்லை ஏதோ ஒரு நெருடல் என்று மட்டும் புரிகிறது. ஆனால் அது என்ன, எதனால் என்பதெல்லாம் தெளிவாகவில்லை என்பது நிஜம்.

பத்துப் பதினைந்து நாட்களுக்குமுன், முதல் முறை யாகத் தனக்குள் ஏதோ அவளை நெருடுகிறது என்பது புரிய ஆரம்பித்த பிறகு, யாருடனாவது இது குறித்துப் பேசலாமா என்று பாரதி யோசிக்கவே செய்தாள்.

சரி, யாருடன்?

அவர் ரமணியிடமா? இரண்டு நிமிஷம் காது கொடுத்துக் கேட்டவர், பிறகு "ஒண்ணுமே இல்லாதது விணா நீயா கற்பனை பண்ணிக்கறே... நூறு பர்ஸென்ட் [illegible] ஓகே! சாயங்காலம் கால் வீசிப்போட்டு நூறு மீட்டர் நடந்துட்டு வா... எல்லாம் சரியாயிடும்... முன்னையவிட வெயிட் போட்டுட்டா கொஞ்சம் குறைச்சுக்கோ... அதான்" என்பார். அத்துடன் முடிந்தது கடமை என்கிற சந்தோஷத்துடன் ஆபீஸ் வேலையில் மூழ்கிவிடுவார்.

இரண்டு பிள்ளைகளில் பெரியவன் சேகர் கொஞ்சம் அனுசரணையுள்ளவன். எதையுமே நிதானமாய்க் கேட்டு அடுத்தவர் கண்ணோட்டத்தையும் புரிந்து கொள்ள முயற்சிப்பான். ஆனால், அவன்தான் இங்கே இல்லையே! திருச்சி ரீஜனல் என்ஜினீரிங் காலேஜில் படிக்க அவன் போனபுதில் அவ்வப்போது மனசுவிட்டுப் பேசக்கூட ஆள் கிடைக்காமல் பாரதி சிரமப்பட்டிருக்கிறாள். இந்த மூன்று வருஷத்தில் அதுவும் பழகிவிட்டது. முதல் வருஷம் மூன்று பெரிய விடுமுறைகளுக்கு மட்டுமல்லாது நடுவில் இரண்டு நாள் ஸ்ட்ரைக் அது, இது என்றாலும் சென்னை ஓடிவந்துவிடும் பிள்ளை, அடுத்த வருஷத்துக்குள் மாறித்தான் போனது. பெற்றவளையும், வீட்டுச் சாப்பாட்டையும் நினைத்து ஏங்கிக் கொண்டு வருவது நின்றுபோனதோடு, சுதந்திரமாய் மூச்சு விடுத்து விடுமுறைகளில் நண்பர்களோடு ஊட்டி டூருக்குப் போவதும் வெவ்வேறு தொழிற்சாலைகளில் 'சம்மர் ட்ரெய்னிங்' எடுக்கச் செல்வதும் சேர்ந்துகொண்டிருக்கிறது...

சின்னவன் விக்ராம் குணத்தில் அப்பனுக்கு நேர் மார். சரியான ஜாலிப் பேர்வழி. 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று பரபரக்கும் ஸ்வபாவம். ஒரு நிமிஷம் ஒரு இடத்தில் அவனால் சும்மா இருக்கமுடியாது. வாக்மேனில் பிங்க் ஃப்ளாய்ட் பாட்டை அலறவிட்டுக் கொண்டே, டி.வி.யில் கிரிக்கெட் மாட்ச் பார்க்கும் ரகம். வாயைத் திறந்தால் 'விஷய ஞான' பேச்சோடு, 'ஏ' ஜோக்குகளும் தாராளமாகவே



கொட்டும். நேற்றுகூட [illegible] பெண்மணி ஒருவரின் புது வீட்டுக்குப் போயிருந்த சந்தர்ப்பத்தில் தோட்டமும், புல்வெளியும் கொண்ட அத்தனை பெரிய பங்களா இல்லை என்கிற ஆதங்கத்தோடு "இது என்ன வீடு" என்று அந்தப் பெண்மணி ஆரம்பிக்க, சட்டென்று குறுக்கே புகுந்து "யாருக்கு?" என்று கேட்டுச் சிரித்து வைத்துவிட்டான். அங்கேயே முறைத்து, வீட்டுக்கு வரும்வழியில் "என்ன விக்ராம் இது? அசிங்கமா கேலி பண்றே?" என்றதும், தலையைப் பின்னுக்குத் தள்ளி கடகடச்சிரிப்பு. பிறகு, நிதானமாக— "மா— எனக்கும் [illegible] சிரிக்கச் சந்தர்ப்பம் [illegible] எதுவும் இல்லாம [illegible] இருக்காளா... நாம [illegible] தெரியுமா [illegible] எட்டர்... அவளை என்ன சொல்லணும் [illegible]" என்று [illegible] கிண்டியில் [illegible] ஐ.ஐ.டி.க்கான நுழைவுத் தேர்வில் [illegible] பி.டெக் படிக்கவென [illegible] ஒரு மாசமே ஆகிறது. சனி, ஞாயிறுகளில் 'ஜாலி' என்று சுத்தியடிக்கிறது. இரண்டு நாள் [illegible] அழுக்குத் துணிகளைக் கொண்டு தள்ளி, பாரதி வருந்துவதிருக்கும் [illegible] சோபாவில் காலை நீட்டிப் படுத்து தொடர்ந்தவாறு, குறைந்தபட்சம் ஒரு [illegible] மூன்று படங்களை வி.ஸி.ஆரில் பார்ப்பது [illegible] நடப்பு.

தாளமுடியாமல் "விக்கி—என்னடா இப்படி பொறுப்பு இல்லாம இருக்கே?" என்று பாரதி கேட்டால், "காலேஜ்ல பொறுப்போட இருக்கேனே, போதாதா? ரிலாக்ஸ்மா" என்பது தயார் பதில்!

பாரதிக்கும் மனசு ஆவல் இல்லைதான். போகட்டும் குழந்தைதானே... வீட்டுக்கு வரும் ஓரிரு நாட்களில் கூட இப்படி இல்லாவிட்டால் எப்படி!

உண்மையைச் சொல்லவேண்டும் என்றால இந்தப் பிறந்த வீட்டைவிட்டுப் போனதிலிருந்து செய்வதற்கு ஒரு காரியமும் இல்லாத நிலையில் ஒரு வெறுமை உண்டாகி விட்டது மாதிரியே தோன்றுகிறது.

தாத்தாவின் வீட்டைவிட்டு மூன்று வருஷங்களுக்கு முன் கிளம்பியபோது இதயத்தில் முதல் முறையாய் ஒரு துக்கத்தை உணரமுடிந்தது... இப்போது இரண்டாம் முறை இந்த ஊரில் சேர்ந்த பிறகு அதுவே நிரந்தரமாகி...

சிறகுகள் முளைத்துவிட்ட பறவைக் குஞ்சுகள் —தங்க ஆர்வம் காட்டுவதுபோல வளர்ந்துவிட்ட குழந்தைகள், தங்கள் எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளப் பாதைகளைத் தேர்ந்தெடுப்பது இயற்கை தானே!

அப்புறம் எதற்காக இது குறித்து வேதனை...

"நேரமாகலியாம்மா? சின்னத்தம்பி வர்றத்துக்கு முன்னால டிபனை ரெடி பண்ணணும்னு சொன்னீங்களே!"

திரும்பினாள்.

புஷ்பா!

சமையல், இதர வேலைகளில் உதவ என் வீட்டோடு... கல்யாணமான நாலாம் மாசம், உறங்கிக் கொண்டிருந்தவளின் ஆறு பவுன் நகைகளை—தாலி உட்பட—சுருட்டிக்கொண்டு ராவோடு ராவாகக் கணவன் ஓடிவிட்டதில் நிர்கதியாய் நடுத்தெருவில் நின்று, தெரிந்தவர்களின் சிபாரிசில் இவர்கள் பக்கத்து வீட்டுக்கு வந்திருந்தபோது வந்து ஒண்டிக்கொண்டவள். புஷ்பாவின் கதையை தனியாகச் சொல்ல வேண்டியது. இங்கே வேண்டாம்.

"மணி என்ன?" கழுத்தை ஒடித்து டைனிங் ஹால் கடிகாரத்தை எட்டிப்பார்த்தபோது அது தாமதம் என்றது.

"தாழ்ப்பாச்சதான்—நீபோய் தோத்து வாங்கிட்டு வந்த பொரி பொட்டலத்தைப் பிரிச்சு; சுத்தம் பண்ணு... நான் வந்துண்டே இருக்கேன்."

அவள் சென்றதும், பாரதி நிமிர்ந்தாள்.



ரொம்ப நேரமாக ஊன்றி இருந்ததால் வலி கண்டு விட்டு முழங்கைகளைத் தடவிக் கொடுத்தாள். சொர சொரவென்றிருந்த கைப்பிடிச்சுவரால் ஊன்றிய இடத்தில் தோல் சிவந்து, சிறு சிறு மேடு பள்ளங்களாக மாறி இருந்தது.

உள்ளே செல்லத் திரும்பும் முன், பசுமாடு எங்கே என்று பாரதி தேடினாள். காணோம். எங்கே போனதோ?

சமையல் அறையில் புஷ்பா இவள் காலையிலேயே சொல்லி இருந்த விதத்தில் சாமான்களை எடுத்து வைத்திருந்தாள்.

விக்ரமுக்கு 'பேல்' என்றால் உயிர். மூன்று, நான்கு கிண்ணங்கள் கூட சாப்பிட்டு விடுவான்.

புஷ்பா அரிசிப் பொரியை முறத்தில் கொட்டி சுத்தம் செய்த நாழிகையில், பாரதி இரண்டு பெரிய உருளைக் கிழங்குகளை அலம்பி ப்ரஷர் பேனில் வேகப் போட்டாள்.

ஒரு பெரிய வெங்காயம், இரண்டு தக்காளி, கொத்துமல்லியைப் பொடியாக நறுக்கவென, தனித்து வைத்தாள்.

ஒருகை மைதா மாவு, அரைக்கை கோதுமை மாவை தாம்பாளத்தில் கொட்டி, இட்டமாய் உப்பு, ஒரு ஸ்பூன் விழுது நெய் சேர்த்து ஜலம் தெளித்துக் கெட்டியாய்ப் பிசைந்தாள். கடப்பா கல் மேடையைத் துடைத்து, கோதுமைமாவை ஒத்தாற்போல் தூவி, பிசைந்த மாவை அதில் வைத்து குழவியின் உதவியால் மெல்லிய அப்பளமாக இட்டாள். ஒரு இன்ச் அளவில் துண்டங்கள் வரும் விதத்தில் கத்தியால் குறுக்கும் நெடுக்கும் கோடு கிழித்தாள். வாணலியில் எண்ணெய் வைத்துக் காய்ந்ததும், கலகலவாய் துண்டங்களை கை, கையாய்ப் போட்டு பொன்னிறத்தில் முறுகல் பூரிகளாக பொரித்து வைத்தாள்.

ஒரு கிண்ணத்தில் தித்திப்புச் சட்னிக்காக பத்தும் பேரிச்சம் பழங்கள், ஒரு சின்ன உருண்டை வெல்லம், சிட்டிகை உப்பையும், இன்னொன்றில் கார சட்னிக்காக

ஒரு கட்டு ஆய்ந்து அலம்பிய புதினா இலைகள், ஆறு பச்சை மிளகாய், ஒரு ஸ்பூன் சீரகம், கொட்டைப்பாக்கு அளவு புளி, உப்பையும் போட்டு இரண்டு கிண்ணங்களையும் புஷ்பாவிடம் தந்து ''தனித்தனியா நைஸா அரைச்சு, திட்டமா தண்ணி கலந்து கெட்டி சட்னியா வச்சுடு'' என்றாள்.

வெந்துவிட்ட உருளைக்கிழங்குகளின் தோலை நீக்கி, உதிர்த்தாள். முதல் நாளே செய்து வைத்திருந்த ஓமப்பொடி நமுத்துப் போகாமல் இருக்கிறதா என்று வாயில் போட்டுப் பார்த்தாள். இருந்தது.

இரண்டு கை அரிசிப் பொரி, ஒரு கை ஓமப்பொடி, உதிர்த்த உருளை ஒரு கரண்டி, ஒன்றிரண்டாய் நொறுக்கப்பட்ட எட்டு பூரிகள், நறுக்கிய வெங்காயம், தக்காளி, கொத்துமல்லி கலவையில் தாராளமாய் ஒரு கை, இச்சமைக்கும் நேரம் வைத்த மாதிரி தேவையான அளவு ஸ்வீட், காரசட்னி... அவ்வளவுதான், ஸ்பூனைச் செருகி விட்டால் கண்ணைக் கவரும் விதத்தில் ருசியான 'வடநாட்டு பேல்' ரெடி!

அத்தனையும் சாப்பாட்டு மேஜைமேல் தனித்தனியாய் கொண்டுவைத்து, விக்ரமுக்குப் பிடிக்குமே என்கிற நினைப்பில் காலை வெயிலைப் பொருட்படுத்தாமல் சென்று கிராண்ட் ஸ்வீட் ஸ்டாலிலிருந்து வாங்கி வந்து, ஜில்லென்று இருக்க வேண்டி ஃப்ரிஜில் வைத்திருந்த ரசமலாய் சட்டியை எடுத்த நிமிஷத்தில் வாசல் மணி அழைத்தது.

''ஹாய்— மா''

''ஹாய் விக்கி''

எதிரில் வந்து நின்ற பிள்ளையை கரிசனத்துடன் பாரதி எதிர்ப்பட்டாள்.

''என்னடா ஒரு வாரத்துல கறுத்து இளைச்சுப் போயிட்டே... சாதம் சரியா சாப்பிடறதில்லையா?''

விக்ரம் இரண்டு கைகளையும் அகல விரித்து அம்மாவை அணைத்துக் கொண்டான்.



''என்னம்மா— ஒரு வாரத்துல இன்னும் குண்டாயிட்டே எங்க சாப்பாட்டை எல்லாம் சேர்த்து சாப்பிடறியா என்ன?''

இல்லாததைச் சொல்லி மகன் சீண்டுவது புரிய, 'போடா' என்றாள் பாரதி.

''அம்மா— ஒரு ஜோக் கேக்கறியா? ஒரு ஆண் தன் பொண்டாட்டி இறங்க கார் கதவைத் திறந்து விடறான்னா என்ன அர்த்தம்?''

''என்ன?''

''ஒன்னு கார் புதுசு, இல்லே பொண்டாட்டி புதுசு...''

ஜோக் விளங்கி பாரதி சிரித்த போது போன் ஒலித்தது.

எடுத்து ''ஹாய் பால்... இப்பத்தான் நுழைஞ்கிட்டே இருக்கேன்'' என்றவன் அரை நிமிஷம் நண்பன் சொன்னதைக் கேட்டுவிட்டு ''வாவ்! நிச்சயமா... அஞ்சு நிமிஷம் டைம் கொடு... வாசல்ல ரெடியா இருக்கேன்'' என்று கூறி தொடர்பை துண்டித்துவிட்டு தன் அறைக்குச் சென்று கொண்டே பேசினான்.

''மா— ஆறரை மணிக்கு யு எஸ் ஐ எஸ் ஆடிடோரியத்துல அமெரிக்காவிலிருந்து வந்த ம்யூஸிக் குரூப் ஸ்பெஷல் டெமான்ஸ்ட்ரேஷன் கொடுக்கறாளாம்... ராஜு வந்து பிக் அப் பண்ணிக்கறேன்னு சொன்னான்...''

''அதுக்கு முன்னால உனக்கு தான் பண்ணி வச்சிருக்கற 'பேல்' சாப்பிட்டு விட்டு எங்க வேணா போ''

''நோ டைம்மா... ராஜு இப்ப வந்துடுவான்''

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கும் மேலாய் மன்றாடி அவனுக்காகத் தயாரித்திருந்த 'பேலை' ருசித்துப் பார்க்கக் கூட அவகாசமோ, நினைப்போ இல்லாமல் 'ஸீ, யு... மா' என்று கூறி விடைபெற்று விக்ரம், தடதடவென்று வெளியே ஓட, இப்போதெல்லாம் அடிக்கடி ஆட்கொள்ளும் அவஸ்தை சடக்கென்று மறுபடி நெஞ்சில் கனமாகப் படருவதைத் தடுக்க இயலாமல் பாரதி நாற்காலியில் அமர்ந்து மேஜைமேல் கவிழ்ந்து கொண்டாள்.

## 2

ட்யூபிலிருந்த சோப்பைப் பிதுக்கி எடுத்து, தாவா கட்டையிலும், கன்னத்திலும் தடவி, பிரஷை வெந்நீர் குவளையில் முக்கி சோப்பில் தேய்த்து, அது நுரை நுரைத்துக் கொண்டு, முகம் பூராவும் பரவியதும், வலது பக்க கன்னத்தை உப்பி, இடக்கையால் காதுக்கு மேற்புறம் இழுத்துப்பிடித்து, வலக்கையில் ரேஸரைப் பிடித்து மழிக்க முற்பட்ட போது பாரதியின் பிம்பம் கண்ணாடியில் தெரிந்தது.

என்ன என்கிற விதமாய் ரமணி திரும்பினார். சில நொடிகள் தாமதித்த பின்னரும் பாரதி எதுவும் கூறாமல் நிற்க ஏதோ வேலையாய் வந்திருக்கக் கூடும் என்கிற எண்ணத்தில் கைக் காரியத்தைத் தொடர்ந்தார்.

வலது கன்னத்தை மழித்து, இடதுக்குப் போன பிறகும் பாரதி அப்படியே நிற்பது தெரிய, திரும்பாமலேயே "என்னம்மா ?" என்றார்.

பாரதி முன்னால் வந்து பேஸின் மேல் சாய்ந்து கொண்டாள்

இப்போதும் அவள் எதுவும் பேசாமல் இருக்க, ரமணி கண்ணாடி வழியாக அவளைப் பார்த்து கண்ணைச் சிமிட்டினார்.

''என்ன, சரியா ஷேவ் பண்ணிக்கறேனா, இல்லை யான்னு ஸூப்பர்வைஸ் பண்றியா ?" பேசியவர் குரலைத் தழைத்தார். குரலில் குறும்பு விரவ ''நேத்து ராத்திரி யம்மா" என்று ராகத்தோடு இழுத்துவிட்டு ''ராத்திரி எப்படி ?'' என்றும் கேட்டு மறுபடி கண்ணைச் சிமிட்ட, பாரதி அலுப்புடன் 'பச்' என்றாள்.

''இன்னும் நாலு வயசு போகட்டும், அப்புறமா இப்படியெல்லாம் விளையாடலாம்... என்ன ரமணி வேடிக்கை காலங் கார்த்தால...'

ரமணி பாதி சோப்பு நிறைந்த முகத்துடன் அவளை அணைத்துக் கொண்டார்

"ஏன்— காலங்கார்த்தாலன்னா ஆசையா இருக்கக் கூடாதா ? ராத்திரிதான் மூட் வரணுமா ? ம் ? அப்படி என்ன உனக்குப் எனக்குப் வயசாயிடுத்துன்னு இப்படி அலுத்துக்கறே? உனக்கு நாற்பது— எனக்கு நாற்பத்தி வெட்டு... தட்ஸ் ஆல்... செகண்ட் ஹனிமூனுக்குப் போறதுக்கு ஏத்த சமயம்..."

''ஆமாமா... போக வேண்டியதுதான்... பசங்க ரெண்டையும் விட்டு விட்டு அனுப்பிச்சதுல ஜயாவுக்கு பால்யம் திரும்பறதாக்கும் !"

அலுப்பு மாறாமல் பாரதி பேச, ரமணி அவள் வகிட்டில் முத்தமிட்டார். முகவாய் சோப் அவள் மூக்கில் தீற்றியது.

"விடுங்கோ ரமணி... மூஞ்சியா சோப் போறது..."

"நா பெட்ரூமல இருக்கறப்போ அவ வரமாட்டாளே...''

''ப்ளீஸ்.''

நிஜமான எரிச்சலுடன் குரல் ஒலித்ததும், அப்போது தான் அவள் எப்படியோ இருப்பது மனதில் உறைத்த தினுசில் ரமணி பிடியைத் தளர்த்தினார்.

''உடம்பு சரியில்லையா பாரதி ? கம்மிங் டு திங்க் ஆஃப் இட், நேத்து ராத்திரிகூட நீ ஸ்வாரஸ்யம் இல்லாத மாதிரி பட்டுது... வாட்ஸ் ராங் ? ம் ?"

''ஒண்ணுமில்லே..."

''நிஜம்மா ?

அவள் மௌனிக்க, ரமணி கண்ணாடி பார்க்க நின்று கொண்டு ஷேவிங்கை முடித்தார். டவலால் முகத்தைத்

துடைத்து, இன்ஸ்பெக்டர் ஷேவ் லோஷனை எடுத்துத் தடவிக் கொண்டார்.

"இந்த வாட்டி ஏன் போன சனி, ஞாயிறு வீட்டுக்கு வரலை?"

"அதான் சொன்னானேமா, ஃப்ரெண்ட்ஸோட சேர்ந்துண்டு மகாபலிபுரம் போறதா..."

"ரெண்டு வாரம் முந்தியும் வரல..."

"அப்போ டெஸ்ட்ஸ் இருந்தது படிக்கணும்னு சொன்னான்..."

"ஏதோ ஒரு உப்புப் பெறாத காரணம்... வரவர ரெண்டு பசங்களுக்குமே வீட்டுக்கு வர்றதுன்னா கசக்கறது— இவனுக்காக வாரம் பூரா நாம காத்துண்டு இருக்கோங்கறத மறந்துட்டு 'வேலை இருக்கு, படிக்கணும்'—னு ஏதேதோ சாக்குப் போக்கு..."

"வயசுப் பசங்க அப்படித்தான் இருப்பா பாரதி... புரொபஷனல் காலேஜுக்குப் போயும் இன்னும் பழைய படி குழந்தையா இருக்கணும்னு எதிர்பார்த்தா எப்படி?"

பாரதி படுக்கை அறைக்குள் வந்து கட்டில் மேல் உட்கார்ந்து கொண்டாள்.

குளிப்பதற்காக பாத்ரூம் கதவைச் சாத்த முற்பட்ட ரமணி அவள் சோர்ந்து உட்கார்ந்திருக்கும் விதத்தைக் கண்டு மீண்டும் கதவைத் திறந்துகொண்டு கிட்டத்தில் வந்தார்.

"பிள்ளையைப் பார்க்கலேங்கற வருத்தமா பாரதி? அடுத்த வாரம் அவன் வர்றப்போ வேணா, 'டேய்— இனிமே இப்படி வராம இருக்காத. உங்கம்மாவால உன்னைப் பாக்காம இருக்க முடியலை'னு கண்டிச்சு சொல்லிட..."

அவரை முடிக்கவிடாமல் பாரதி அவசரமாய்க் குறுக்கிட்டாள்.

"ஐய்யையோ... வேண்டாம். வேண்டாம்... ஏற்கனவே எதுக்கெடுத்தாலும் 'ரிலாக்ஸ்மா... சின்ன



விஷயத்தை எல்லாம் ஏன் பெரிசு பண்றே'னு எல்லாம் தெரிஞ்சவ மாதிரி அட்வைஸ் பண்றான்... நீங்க வேற இப்படி சொல்லிட்டேள்னா அக்கப்போர் தாங்காது— அது சரி— அவனைப் பாக்கலைங்கற வருத்தம் எனக்கு மட்டும்தானா? உங்களுக்கு இல்லையா?"

ரமணி அவள் அருகில் அமர்ந்து கொண்டார்.

"இருக்கு... ஆனா, என்ன பண்றது? பழகிக்கறதைத் தவிர வேற வழி?"

"உங்களுக்கென்ன சுலபமா சொல்லிடுவேள்... காத்தால எழுந்தா நாலு பேப்பர், படிச்சு முடிச்சு, பெருக்கு எங்கிட்ட [illegible] தயாராகி ஆபீஸுக்குப் போயிட்டா, அப்புறம் ராத்திரி ஏழோ, எட்டோ... அது வரைக்கும் வீட்டு ஞாபகம் ஏது?"

ரமணி தலையைப் பின்னுக்குத் தள்ளிச் சிரித்தார்.

"அதானே பாத்தேனே... என்னடா இன்னும் ஒரு தரம் கூட ஆபீஸ் வேலையை இழுக்கலையேன்னு யோசிச்சண்டே இருந்தேன். நேரா டைமாயிண்டே... நாழியாச்சு, நா குளிக்கப் போறேன்... பத்து மணிக்கு ரத்னவேல் செட்டி அப்பாய்ன்ட்மென்ட் இருக்கு..."

சிரிப்பு மாறாமல் குளிக்கப் போனவர், குளித்து, உடை உடுத்தி, தயாரான நாழிகையிலும் உட்கார்ந்த இடத்தை விட்டுப் பாரதி எழுந்திருக்காமல் இருப்பதைப் பார்த்து விட்டு தலையை வாருவதைப் பாதியில் நிறுத்தியவராய் அருகில் வந்து அவள் தோளைத் தட்டினார்.

"கமான் பாரதி... எழுந்திரு... என்னாச்சு உனக்கு? தூக்கமே இன்னும் கலையாத மாதிரி, வொய் ஆர் யூ சோ டல்? ம்? கார்த்தால எழுந்ததும் விறுவிறுனு ரெண்டு தரம் பீச்சுல நடந்துட்டு வா— வெயிட்டும் போடமாட்டே, சுறுசுறுப்பாவும் இருக்கும்னு கரடியாக் கத்தறேன்... எங்க, கேட்டாத்தானே? அவனவன் எங்கேயோ இருந்து காரை எடுத்துண்டு வந்து நிறுத்திட்டு

பீச் காத்துக்கு ஆசைப்பட்டுண்டு நடக்கறான்— கண்ணெதிர பீச்... ஆனா, அது உனக்கு லட்சியம் பண்ணத் தோணலை... ஆமா, இப்ப உனக்கு பீரியட்ஸ் சமயமா, அதான் டயர்டா இருக்கியா ?''

அவள் இல்லை என்று தலை அசைத்தாள்.

ரமணி பொறுமை இழந்து கட்டில் விளிம்பில் விரல்களால் தாளம்போட்டார்.

"அப்புறமா ஏன் இவ்வளவு டல்லா இருக்கே? சொல்ல வேண்டாம்னு பாத்தேன்— ஆனா கொஞ்ச நாளாவே நீ பழையபடி இல்லத் தெரியுமா ?''

பாரதி சரக்கென்று தலைநிமிர்ந்தாள். "அம்மாடி! ஒரு வழியா உங்களுக்குப் புரிஞ்சுதா! நாலைஞ்சு மாசமா என்னடா நமக்கு ஆயிடுத்துனு நான் குழம்பிண்டு இருக்கறது இப்பவாவது புரிஞ்சு, கேக்கணும்னு தோணித்தே !"

ரமணி கண்கள் இடுங்கி, புருவங்கள் முடிச்சுப்போட அவளை அழுந்த ஏறிட்டார்.

"நாலைஞ்சு மாசமா குழப்பமா ? சொல்லவேயில்லையே ஏம்மா ?"

அரை நிமிஷம் முன்னால் தோன்றிய கோபம் மறைய பாரதியின் கண்கள் லேசாகக் கலங்கின.

''தெரியல ரமணி...''

"டாக்டரை வேணா பாக்கறியா ?''

"எதுக்கு ?"

"ஒருவேளை 'மெனோபாஸ்' வர்றதோ என்னவோ ? அந்தச் சமயத்துல காரணமில்லாம அலுப்பு, எரிச்சல் எல்லாம் நிறைய பொம்பளைகளுக்கு வரும்னு சொல்வாளே !''

"மெனோபாஸா ? நாப்பது வயசிலயா ? நிச்சயம் இருக்காது... மாசா மாசம் பீரியட்ஸ் எந்தத் தொந்தரவும் இல்லாம ஒழுங்காத்தானே வர்றது."



''அப்புறம் ?" — அவள் மௌனிக்க, ரமணி தொடர்ந்தார்.

''[illegible] ஆபீஸ் போற வழில உங்கம்மா வீட்டுல இறக்கி விட்டுட்டுப் போறேன், வரயா ?''

"ம்ஹூம். வேண்டாம்"

''சரி, புஷ்பாவ அனுப்பி புதுப்படமா எடுத்துண்டு வரச் சொல்லி, வீடியோ பாரேன்..."

இதற்கும் உற்சாகமாய்ப் பதில் கூறாமல் பாரதி 'ப்ச்' என்று உள் கொட்ட, இனிமேலும் தான் என்ன சொல்ல இருக்கிறது என்பது போல ரமணி ''சரி—சாப்பாடு எடுத்து வைக்கறியா ? நாழியாச்சு" என்று கூறி அந்தப் பேச்சுக்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைத்தார்.

அவர் அலுவலகத்துக்குப் போனதும் 'நீங்க சாப்பிடலியாம்மா ?" என்று கேட்ட புஷ்பாவிடம் கொஞ்ச நாழி போகட்டும்— பசிக்கலை" என்று கூறி அவளைத் துணிகளைத் துவைக்க அனுப்பியவள், படுக்கை அறைக்குள் வந்து கதவைச் சாத்திக்கொண்டாள்.

நட... காலை வீசிப்போட்டு நட... இல்லாவிட்டால் எடை கூடிவிடும் இந்த குற்றச்சாட்டு...இவர் ஆபீஸில் இருக்கும் நேரத்தில் எக்ஸர்ஸைஸ் பண்ணுவதையும், மாலை வேளைகளில் நடப்பதையும் மறந்து, இது என்ன பேச்சு ? பாரதி கட்டிலுக்கு அடியில் வைத்திருந்த எடை பார்க்கும் மிஷினைக் குனிந்து வெளியே இழுத்தாள். ஊசிமுள் ஸீரோவில் இருக்கிறதா என்று சரி பார்த்துவிட்டு ஏறி நின்றாள்.

60 கிலோ

அதே தான். ஏறவும் இல்லை. இறங்கவும் இல்லை. மன நிறைவோடு மிஷினைப் பழையபடி கட்டிலுக்கு அடியில் தள்ளி விட்டாள்.

அலமாரிக் கதவில் பதித்திருந்த ஆள் உயரக் கண்ணாடிக்கு முன் நின்று இடுப்பில் கையை வைத்து

இப்படியும் அப்படியும் திரும்பி பிம்பத்தை ரசித்தான். தொப்பையில் இடுப்பில் எக்ஸ்ட்ரா சதை? ம்ஹூம். இல்லை...

அடுத்து என்ன என்ன செய்யலாம் என்று யோசிக்கற தினுசில் யோசனையுடன் விரல்களைச் சொடுக்கிய வண்ணம் நின்றவன் நகர்ந்து மெத்தை மேல் அமர்ந்தான்.

புஸ்தகம் ஏதாவது படிக்கலாமா?

என்ன புஸ்தகம்?

அந்த வாரப் பத்திரிகை? கன்னிமாரா லைப்ரரியிலிருந்து எடுத்து வந்த ஆங்கில நாவல்.

படிக்க வேண்டும் போலத் தோன்றாமல் போக, எழுந்து துணி அலமாரியைத் திறந்து எதையாவது ஒழிக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்று பார்த்தான்.

அந்த வீட்டில் அவனுடைய 'ஒழிக்கும் குணம்' மற்றவர்களிடையே ஒரு சகஜமான ஜோக்.

"உங்க அம்மாவுக்குப் பொழுது போகலைன்னா அலமாரில வலது பக்கம் வச்சிருக்கிற துணிகளை இடது பக்கத்துக்கு மாத்துவா... மறுநாள் திரும்ப அத்தனையும் பழையபடி ஒரிஜினல் இடத்துலியே அடுக்குவா... அப்புறம்... அதுக்கும் அடுத்த நாள்..."

ஒவ்வொருமுறை ரமணி கேலி பண்ணும்போதும், என்னமோ அப்போதுதான் புதுசாகக் கேட்கிற தினுசில் இரண்டு பிள்ளைகளும் வயிற்றைப் பிடித்துக்கொண்டு சிரிப்பது மாறாமல் நிகழ்ச்சி...

அலமாரியின் அத்தனை தட்டுகளும் பளிச்சென்று துளி அலங்கோலம் இல்லாமல் இருக்க, கணவர் கேலி பண்ணும் ரீதியில் தேவை இல்லாமல் வேலையை இழுத்துப் போட்டுக் கொள்வது எதற்கு என்கிற அலுப்புடன் அலமாரிக் கதவுகளை பாரதி மூடினாள்.



'போர்' அடித்தது. எதுவும் செய்யப் பிடிக்காமல் மனசு பூராவும் அலுப்பு மண்டியது. திறந்திருந்த ஜன்னல் கதவு மேல் காகம் ஒன்று வந்து உட்கார்ந்து 'கா... கா...' என்று கட்டைக் குரலில் கத்த, கவனம் அதன் மேல் போயிற்று. சில நொடிகள் அப்படியே உட்கார்ந்து தலையைச் சாய்த்து ஒன்றரைக் கண் பார்வை பார்த்த பிறகு, ஏதோ அவசர காரியத்தின் நினைப்புக்கு வந்து விட்ட மாதிரி பறந்து செல்ல, பாரதி பார்வையின் திசையை மாற்றினாள்.

ஜன்னலை ஒட்டியிருந்த மேஜை மேல் அருகருகே வைக்கப்பட்டிருந்த வாழ்த்து அட்டைகளைப் பார்த்த நொடியில் உதடுகளை புன்னகை ஒன்று ஆக்ரமித்தது.

பிறந்த நாள் வாழ்த்து அட்டைகள்...

இரண்டு நாட்கள் முன்பு வந்த அவளுடைய நாற்பதாவது பிறந்த நாளை ஒட்டி பிள்ளைகள் அனுப்பின மடல்கள்...

மூத்தவனிடமிருந்து ஒருநாள் முன்னதாகவே வாழ்த்து வந்து விட்டது—'எவரெஸ்டை விட உயர்ந்தது எது தெரியுமா?' என்னும் கேள்வி முதல் பக்கம்—பிரித்ததும் உள்ளே 'வேறு என்ன? என் தாயின் அன்பு தான்!' என்கிற பதில்! கீழே கௌதமின் அழகான கையெழுத்தில் 'அம்மா— ஐ லவ் யூ'—

ஒற்றை வரியில் வண்டி வண்டியாய் அன்பைத் தெரிவிக்கும் அற்புதமான கார்ட்!

வாஞ்சையோடு ஒருதரம் அந்த வாழ்த்தைக் கையில் எடுத்து உள்ளே மகன் எழுதியிருந்ததைப் படித்த பாரதி "ஐ லவ் யூ டூ — கௌதம்' என்றாள் முணுமுணுப்பாய், என்னமோ பக்கத்திலேயே பிள்ளை நிற்கும் பாவனையில்.

இரண்டாவது அட்டையைக் கையில் எடுத்தபோது சிரிப்பு வாயில் குமிழாக வெடித்தது.

'அம்மா— உனக்கு வயசாகி விட்டது...' என்பது முதல் பக்க வரி— புரட்டினால்—' 'ஆனாலும் அழகில், நிறமையில் அன்பைக் கொடுப்பதில் உனக்கு நிகர் நீ தான்'— என்கிற வரிகள்.

விக்ரம் அனுப்பிய கார்ட் அவன் குணத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவதை உணர்ந்தவாறு சிரிப்பு மாறாமல் இரண்டு அட்டைகளையும் பழையபடி அருகிலேயே இருந்த இடத்திலேயே வைத்தாள்.

வழக்கம்போல ரமணி சுத்தமாய் அவள் பிறந்த நாளை மறந்து தான் போய் விட்டிருந்தார்.

உறங்கி எழுந்ததும் 'வாழ்த்துவார்' என்று எதிர் பார்த்து, அப்படி அவர் சொல்லாமல் போக, 'நினைப்பு இல்லாதவருக்கு ஞாபகப்படுத்துவானேன்' என்கிற வீம்பில் இவளும் சும்மா இருந்து விட்டாள்.

ஆனால் அவர் குணம் தெரிந்து அலுவலகத்துக்குப் போன் பண்ணி விக்ரம் விஷயத்தை நினைவூட்டி இருக்க வேண்டும். அதிசயமாய் மாலையில் சீக்கிரம் வீடு திரும்பி னவர் கையில் ஒரு மைசூர் ஸில்க் புடவை கொண்ட பெட்டி, பத்து சிகப்பு ரோஜாக்கள் அடங்கிய மலர்க் கொத்து... கூடவே 'மறந்தால் தானே நினைக்க?' என்கிற டயலாக், பெரிய ஹீரோ மாதிரி...

பாரதி புன்னகையுடன் திரும்பினாள்.

நாற்பது வயசு!

அம்மாடி! அத்தனை வயசாகி விட்டதா என்ன?

அடி உதட்டைக் கடித்தவள் ஒரு உந்துதலோடு ட்ரெஸிங் டேபிள் மேல் பதிந்திருந்த கண்ணாடி முன் சென்று நின்றாள்.

நாற்பது வயசா!

எனக்கா?



பார்த்தால் நாற்பது மாதிரி தெரிகிறதா, அதைவிடக் குறைவாகவா, இல்லை கூடுதலாகவா?

சற்றே முன்னால் சாய்ந்து கண்ணாடியில் பிரதிபலித்த பிம்பத்தை உற்றுப் பார்க்கையில் நெற்றிக்கு மேலே, காதுக்கு அருகே சீறாய் ஒரிரு வெள்ளி முடிகள் பளபளப்பது தெரிந்தது.

நரை!

கடவுளே... இது எப்போது வந்தது!

இத்தனை நாட்களாய் கவனிக்காததோடு, ரமணியோ விக்ரமோ இது பற்றிக் குறிப்பிடவே இல்லையே... ஏன்?

ஓ! அதுதான் மறைமுகமாய் 'உனக்கு வயசாகி விட்டது' என்று கூறுகிற கார்டை விக்கி அனுப்பி இருக்கிறானா!

இங்கு மட்டும்தான் இருக்கிறதா, இல்லை வேறு எங்காவதும் வந்து விட்டதா?

கைக் கண்ணாடியை வலக்கையில் பிடித்து இன்னும் கிட்டத்தில் குனிந்து தலையை இப்படியும் அப்படியும் திருப்பி பெரிய கண்ணாடிகளிலும், சின்னதிலும் தெரிந்த பிம்பங்களில் வெள்ளி முடிகளை பாரதி தேடினாள்.

ம்ஹூம், நெற்றியைத் தவிர வேறு இடங்களில் தேடிய வரைக்கும் காணவில்லை.

ட்வீஸர் கொண்டு இருப்பதைப் பிடுங்கி விடலாமா!

எண்ணி முடிக்குமுன் எப்போதோ ரஜனி சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. "பிடுங்கினா ஒண்ணு நாலா மொளைக்குமாம். அதான் பரவாயில்லைனு நான் 'டை' பண்ணிக்கறேன்."

ரஜனியும் அவளும் கல்லூரியிலிருந்தே ஸ்னேகிதிகள் பாவம் அவளுக்கு ஏனோ முப்பது வயசுக்கு முன்பாகவே நரைக்கத் தொடங்கி விட்டது. மாசம் தப்பாமல் ப்யூட்டி பார்லருக்குச் சென்று சாயம் பூசிக் கொள்வாள்.

இப்போதெல்லாம் புதுசாக 'காலா ஹென்னா' கறுப்பு மருதாணி கலந்த இயற்கைச் சாயம் வந்திருக்கிறது. பூசிக் கொண்டால் இரண்டு மாசத்துக்கு ஜோராக இருக்க முடிகிறது— என்றாளே, வேண்டுமானால் அந்தக் கறுப்பு மருதாணிக் கலவையை உபயோகித்துப் பார்க்கலாமா?

பாரதியின் கஸின் ஒருத்தி டெல்லியில் வசிப்பவள்- பத்து நாட்களுக்கு ஒருமுறை மருதாணி பவுடர், ஒரு முட்டை, கரண்டி தயிர், ஒரு ஸ்பூன் காபித்தூள் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து தலையில் அப்பிக் கொண்டு அரை மணி போல ஊறி குளிப்பாள். கேட்டால் "மயிர் நரைக்காமலும், கொட்டாமலும் இருக்கத்தான்; நீயும் ட்ரை பண்ணிப்பாரேன்" என்பாள். அவள் தலைமயிர் பூராவும் செம்பட்டையாய் அசட்டு சிகப்பு நிறத்தோடு காட்சி தருவது அழகே இல்லாத மாதிரி தோன்ற, இதுவரை பாரதி அந்த முயற்சியில் ஈடுபட்டது இல்லை.

கறுப்பு மருதாணியும் தலைமுடியை அப்படி சிவக்க வைத்தால் என்ன செய்வது?

அப்புறமாக ரஜனிக்கு போன் பண்ணிக் கேட்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு டேபிள் மேல் இருந்த புகைப்படத்தை எடுத்தாள்.

கல்யாணத் தினத்தன்று மாலை ரிசப்ஷனில் அவளும் ரமணியும் கழுத்தில் மாலையும், வாய் கொள்ளாச் சிரிப்பும், கண்களில் கனவுகளுமாய் நின்றிருந்த போது எடுத்த படம், ரமணிக்கு ரொம்பப் பிடித்தமானது...

புடவைத் தலைப்பால் பிரேமையும், படத்தின் கண்ணாடியையும் அழுந்தத் துடைத்த போது பழைய போட்டோக்களைப் பார்த்து ரொம்ப நாட்கள் ஆகிவிட்டன என்பது நினைவுக்கு வந்தது.

இப்போது பார்த்தால் என்ன?

கல்யாண ஆல்பத்தை...



அவனுடைய நடனப் படங்கள் கொண்ட டான்ஸ் ஆல்பத்தை...

அப்புறம்...

சட்டென்று ஒருவிதப் பரபரப்பு உடம்பில் பரவியது. மேஜையின் கடைசி இழுப்பறையை இழுத்து உள்ளே இருந்த இரண்டு ஆல்பங்களை வெளியில் எடுத்தாள். மேலாக இருந்த டான்ஸ் ஆல்பத்தின் மேல் படிந்திருந்த தூசியை வாயால் ஊதி, கையால் தட்டி, பிரித்து ஒன்றன் பின் ஒன்றாக படங்களை உன்னிப்பாக ஏறிட்ட நிமிஷத்தில் பழையபடி தட்டுக்கோலைக் கையில் வைத்து "ஆடும் மயில்தனை நாடும் முருகனே...' என்று காம்போதி ராகத்து சப்தத்தை டான்ஸ் டீச்சர் பாடுவது காதில் துல்லியமாய் ஒலிக்கிற மாதிரியே இருந்தது

## 3

"ப்ளீஸ்— மா"

இரண்டாவது முறையாக பாரதி கெஞ்ச, செய்து கொண்டிருந்த காரியத்தை நிறுத்திவிட்டு அன்னபூரணி நிமிர்ந்தாள்.

"என்னத்துக்காக இப்படி காவல்காரத்தால வேலை பண்ண விடாம தொண தொணக்கறே, பாரதி?"

"அப்பாகிட்ட சொல்லும்மா... ப்ளீஸ்"

"அது நடக்கற காரியமா எனக்குத் தோணலே..."

"ப்ளீஸ்—மா... எனக்காக முயற்சிபண்ணி பார்க்கக் கூடாதா?"

ஆய்ந்திருந்த பீன்ஸை கிண்ணத்தில் போட்ட அன்னபூரணி 'ப்ச்' என்றாள்.

"சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிண்டிருக்கா ஆச்சா, பாரதி?"

"பாட்டி இருந்தா வேணா, நீ இத்தனை கவலைப்படறதுக்கு அர்த்தம் உண்டு... அவர்தான் இல்லியே! பின்னே— எனக்கு ரொம்ப ஆசையா இருக்குங்கறது உனக்கு கூடவா புரியலை? இல்லை, உனக்கே இதுல இஷ்டம் இல்லியா? சொல்லிடு..."

மகளின் பேச்சு ஆறுமாசம் முன்னால் ராமாமிர்தம் கதாகாலட்சேபத்துக்குப் போய்வந்து "மோர் கொண்டா, நாக்கை வரட்டறது" என்றவாறு சோபாவில் சாய்ந்து, முழுசாய் ஒரு நிமிஷம் போவதற்குள் 'என்னப்பனே ராமா' என்று அரற்றிய வண்ணம் மரணத்தைத் தழுவிய மாமியார் கமலாம்பாளை நினைவுபடுத்த, அன்னபூரணி மௌனித்தாள்.

கமலாம்பாள் அவளுக்கு மட்டும் மாமியார் இல்லை; அந்த ஊருக்கே மாமியார்— என்கிற ரீதியில் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்று அந்தத் தெருவிலுள்ள பெண்கள் அனைத்தும் பயந்தது உண்மை.

கோலைத் தட்டிக்கொண்டு நடந்து வந்து கூடத்தில் இறங்கிவிட்ட கண்ணாடி வழியாக எதிரில் நிற்பவர்களை ஊடுருவிப் பார்த்துக் கணீரென்ற குரலில் பேசினால் கேட்பவர்களுக்கு சத்தியமாய் வெலவெலத்துப் போகும்; அப்படி ஒரு தோற்றம், கண்டிப்பு, கம்பீரம்.

கழுகுக் கண்களில் அகப்படாத விஷயமே இருக்காது.

"யாருடீ அது, பாவாடையை அப்படி பொரள பொரள, தரையைப் பெருக்கற நினைப்பில கட்டிண்டு போறது? என்னடீ அது, பூணூல் மாதிரி மேலாக்கைப் போட்டுண்டு வெட்கமில்லாம நிக்கறது?"— என்பார் கூடத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்தபடியே தெருவில் போவோர் வருவோர்களை அழைத்து...

"நன்னாயிருக்குடீ, நீ வாசல்ல கோலம் போட்டுருக்கற அழகு... நேத்து சாயரட்சை கோவிலுக்குப் போறப்ப பார்த்தேன். மாவ அள்ளிக்கொட்டின மாதிரி கோலமா நீ கோலம் போட்டுருக்கற லட்சணத்த... ஆம்படையான் வெயில்லேயும், மழையிலேயும் நின்னு சம்பாதிக்கிற பணத்தையெல்லாம் இப்படியே வாரிவிட்டுடலே போல இருக்கே?" என்பார், மூணாவது வீட்டுப் பெண்மணியை நிற்கவைத்து...



"எதுக்கா டீ குட்டிகளா இந்த ஓட்டம் ஓடறேள்? பூமி அதிர ஓடினா, பூமாதேவி வலி தாங்காம இந்த இடத்தைவிட்டுப் போயிடுவா... பொம்மனாட்டியா லட்சணமா பதவிசா நடக்க, பேசக் கத்துக்கோங்கோடீ..." என்பார், தன் வீட்டு, எதிர்வீட்டுக் குழந்தைகள் என்கிற பாரபட்சம் இன்றி அனைவரிடமும்...

"சாமிநாதன் பொண் மேடை ஏறிக் கச்சேரி பண்ணப் போறாளாமே! இதுக்கு அந்த வெக்கங்கெட்டவனும் சரின்னுட்டானா? சிவ, சிவா, கலி முத்திடுத்துடீ... இல்லேன்னா சமயக்கட்டோட இருக்கவேண்டிய பொம்மனாட்டிய மேடை ஏத்தத் துணிவானோடீ?" என்பார்— யார் வீட்டிலோ நடக்கும் நிகழ்ச்சியை எதிர்த்து...

மொத்தத்தில் வாய் அதிகம், வேண்டாத நாட்டாண்மை, அடுத்தவர் விவகாரத்தில் தலையீடு என்னதான் இருந்தாலும், கூடவே உபகார குணமும் ஏகத்துக்கு அமைந்திருந்ததில் இருந்த வரைக்கும் குறை பெரிசாய்த் தெரியாமல் ஊருக்குள் உயர்ந்தவராகவே வாழ முடிந்தது.

யார் வீட்டிலாவது கல்யாணமா, பிள்ளைப் பேறா, கவலை வேண்டாம் அப்பளம் இட்டு, பட்சணம் தயாரிப்பதிலிருந்து, சகலத்துக்கும் இழுத்துப் போட்டுக் கொண்டு லிஸ்ட் போடுவதே கமலாம்பாள்தான். பிள்ளைத்தாய்ச்சி பொண்ணுக்கு பத்தியம் போட வேண்டுமா, மருந்து இடித்துத் தயார் பண்ணவேண்டுமா, 'என்ன செய்வேன்!' என்று கையைப் பிசையவே தேவையில்லை. கமலாம்பாள் வீட்டிலிருந்து அத்தனையும் கேட்காமலேயே வந்துவிடும்.

சுபகாரியம் என்றில்லை, துக்க சமாசாரம் என்றாலும், முதலில் உதவிக்கை நீட்டுவது கமலாம்பாள்தான்.

"உடம்பு, மனசு, செயல், பணம்னு எல்லாத்தாலேயும் முடிஞ்சவரைக்கும் அடுத்தவாளுக்கு உபகாரம் பண்றது மனுஷாளா பொறந்தவாளோட கடமை" என்பார் வாய்க்கு வாய்.

தோற்றத்திலும் சரி, குணத்திலும் சரி, கமலாம்பாள் அலாதி ரகம். இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட மனிதர்களைப் பார்ப்பது அபூர்வமே!

பாட்டி இருந்தவரையில் நெஞ்சில் புதைந்திருந்த ஆசையை வெளியிட்டு, நிறைவேற்றிக் கொள்ள பாரதி துணியவில்லைதான். ஆனால் இப்போது நிலைமை வேறு. பாட்டி இல்லை... அப்பா நாராயணனும் புரிந்து கொண்டு சம்மதிக்கலாமோ என்கிற நம்பிக்கையில், தன்னை வந்து சிபாரிசு செய்யும்படி அடிபோடுகிறாள்.

தவிர, பாரதி எதிர்பார்ப்பதைப்போல நாராயணனும் சராசரி தந்தையிலிருந்து பலவிதங்களில் மாறுபட்டவர்தான்; மறுப்பதற்கில்லை.

பெற்றவர்களுக்கு தான் ஒற்றைப் பிள்ளை என்பதையும் மறந்து, சுதந்திரப் போராட்டத்தில் மனப்பூர்வமாய் ஈடுபட்டவர். ஆண் வாரிசைப் பெருமையாக எண்ணிய அந்தக் காலத்தில் வரிசையாய் மூன்றும் பெண்களாகப் பிறந்ததை எண்ணித் துளிகூடக் கலங்காததோடு, தான் பெருவாகப் போற்றிய மகாகவி பாரதியார், அன்னை கஸ்தூரிபா, கமலா நேரு—ஆகியோர்களின் பெயர்களைப் பெண்களுக்குச் சூட்டி மகிழ்ந்தவர்.

அடுத்தவர்களுக்கு உதவ முன்வருவதில் கமலாம்பாளுக்குச் சரியான பிள்ளை என்று ஆதி நாட்களிலேயே பேர் வாங்கியவர். தெய்வ பக்தி நிறைந்தவர். உழைக்க அஞ்சாதவர்.



சின்னதாக எந்தப் பிரமாத ஆரவாரமும் இல்லாமல் துவங்கப்பட்ட நாராயணன் அண்ட் கோ— இன்று சென்னை நகரில் முக்கிய வீதியில் எஞ்ஜினீரிங் ஸ்தாபனங்களில் ஒன்றாகத் திகழ்வதற்கும், மைலாப்பூரில் சொந்த வீடு, போர்டிகோவில் வண்டி, சமையலுக்கும், தோட்டத்துக்கும் ஆள் என்கிற அந்தஸ்தைத் தொடுவதற்கும் நாராயணனின் அயராத உழைப்பு ஒரு முக்கிய காரணம் என்று தயங்காமல் சொல்லலாம்.

ஆசாரம், கட்டுப்பாடு இவைகளோடு பெண்களை பெண்மை நிறைந்தவர்களாக வளர்க்கும் அதே சமயத்தில் அவர்கள் தன்னம்பிக்கையோடும், சுயமரியாதையோடும் வாழப் பழகவேண்டும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை உள்ளவர்.

இதன் காரணமாகத்தான் பெண்களை ஏ.ஸி.ஸி., என்.ஸி.ஸி. போன்ற இயக்கங்களில் தீவிர பங்கெடுக்கத் தூண்டினார்.

"என்னது ஆம்பள மாதிரி கால்சராயும், சட்டையும் என் பேத்தி போட்டுக்கப் போறாளா? உனக்குப் புத்தி பேதலிச்சுப் போச்சாடா, நாணா?" என்று அம்மா உரக்க ஆட்சேபித்துப் புலம்பியபோது "புரியாம பேசாதம்மா... பொம்மனாட்டிக் குழந்தைகள் படிக்கற பள்ளிக்கூடத்துல இருக்கற என்.ஸி.ஸில சேர்றதால எந்தத் தப்பும் நடந்துடாது. பேண்டும், ஷர்ட்டும் போட்டுண்டா என்ன? ஒண்ணும் ஆயிடாது. என்.ஸி.ஸி—ல இருக்கறது மனசுக்கும் உடம்புக்கும் நல்ல எக்ஸர்ஸைஸ். தாய் நாட்டுப்பற்று தெரிஞ்சுக்கறதுக்கும் தேசபக்தியோட வளர்றதுக்கும் நிச்சயமா என்.ஸி.ஸி. உதவும்" என்று பேசி அடக்கினார்.

இதைப் போலவே நண்பர் பெண் திருமணமாகி வெண்ணாற்றங்கரை என்கிற ஊரில் இருந்த மாமியார் வீட்டுக்குச் சென்றபோது பின்னால் சலசலத்த வெண்ணாற்றில் குளிக்கப் போய் நீச்சல் தெரியாத காரணத்

தான் மாண்டு போனது நடந்தபின், தன் பெண்களுக்கு நீச்சல் கற்றுத் தரவேண்டும் என்று தீர்மானித்தார்.

அந்த நாட்களில் சென்னை நகரில் மொத்தம் மூன்று நீச்சல் குளங்கள்தான். மெரினாவில், வொய். எம். ஸி. ஏ.—வி., கன்னிமாரா ஹோட்டலில்... மூன்றுமே ஆண்களும் பெண்களும் சேர்ந்து குளிக்கும் இடங்கள். என்ன செய்யலாம்?

நாராயணன் யோசித்தார்.

நண்பர் மூலமாக வொய்.எம்.ஸி.ஏ. நிர்வாகிகளைச் சந்தித்து விஷயத்தை விளக்கினார்.

"பல குடும்பத்துப் பெண்கள் ஆண்களோடு சேர்ந்து குளிக்கக் கூச்சப்படுகிறார்கள். இதனாலேயே பலருக்கு விருப்பம் இருந்தும் நீச்சல் கற்பது சாத்தியமில்லாமல் போகிறது. இந்த கஷ்டம் புரிந்து வாரத்துக்கு இரண்டு நாட்கள் காலையில் ஆறிலிருந்து எட்டுவரை பெண்களுக்கு மட்டும் என்று நீச்சல் நேரத்தை ஒதுக்கினால் பல குடும்பத்துப் பெண்கள் மனநிறைவோடு நீச்சல் பழக முன்வருவார்கள்."

பெரிய விதத்தில் பேசியதற்குக் கைமேல் பலன். மறு வாரத்திலிருந்தே நிர்வாகிகள் தனி நேரத்தை ஒதுக்கித் தந்தனர். இன்று நாராயணனின் மூன்று பெண்கள் மட்டுமல்ல இன்னும் பல நண்பர்களது பெண்களும் நீச்சலில் மீன் குஞ்சுகள்தான்!

"அம்மா— நான் பாட்டிக்கும் பேசிண்டே இருக்கேன— நீ தலைக்குத் தானே சிக்கெடுத்துண்டே இருந்தா என்ன அர்த்தம்"

கோபம் தலைதூக்க, பாரதி சற்றே உயர்ந்த குரலில் கேட்க, அன்னபூரணி கையை நீட்டி, மகளின் கலைத்திருந்த தலைமுடியை வாஞ்சையுடன் கோதிவிட்டபடி நீளமான மூச்சை இழுத்து வெளியிட்டு, சின்னக் குரலில் பேசினபோது, என்றோ தோன்றி, என்றோ மறந்து போய்விட்ட கனவுகளில் மெல்லியதாய் வெளிச்சம் போட்டது.



"ஹூம்... எனக்கா இஷ்டம் இல்லையானு கேக்கிறே! நான் குழந்தையா இருந்தப்போ இப்ப நீ ஆசைப்படற இதுகல நானும் வேணா ஆசைப்பட்டிருக்கேன். ஆனா, வாயத்திறந்து யார்கிட்டேயும் எதையும் வெளிப்படுத்தினதில்லை. அது அந்தக் காலம். அம்மாவும் பொண்ணும் நானும் நீயும் இப்படி உக்காந்து பேசற மாதிரியெல்லாம் செய்யறத நெனைச்சுகூட பார்க்க முடியாத காலம். அதனால முளைக்காமலேயே என் ஆசையெல்லாம் அழுகிப் போயிட்டதுதான் நிஜம். சரி... சரி... இப்ப அந்தப் பேச்சு எதுக்கு? அப்பாகிட்ட பேசணும். அது தானே? சரி பேசறேன். ஆனா உன் விருப்பத்துக்கு அவா ஒத்துப்பார்னு எனக்கு என்னமோ தோணலை"

ஆயாமல் வைத்திருந்த பீன்ஸ் காய்களை ஒவ்வொன்றாக எடுத்து ஆய்ந்தபடியே பாரதி அம்மாவின் கூற்றைத் தலை அசைத்து மறுத்தாள்.

"அப்பா வித்தியாசமானவர்மா... இது உனக்கே தெரியும். தான் சரி, தப்புனு நம்பற இதுகல சில 'ரூல்'ஸ் அண்ட் 'டோண்ட்'ஸ் வைச்சிருக்கார். ஒத்துக்கறேன். ரொம்ப கண்டிப்பானவர், கட்டுப்பாடுகளை தன்கிட்ட மட்டுமில்லாம அடுத்தவர்கிட்டயும் எதிர்பார்க்கற மனுஷர். ரைட்... ஆனா, அப்பா ஊர் உலகத்துலே இருக்கற எல்லா சாதாரண அப்பா மாதிரியானவர் இல்லேங்கறத அவரைத் தெரிஞ்ச எல்லாருமே ஒத்துப்பா... பொம்மனாட்டி குழந்தைகள் சில கட்டுப்பாடு, பாதுகாப்போட வளரணும்னு நினைக்கறவர்தான் 'கோ எஜுகேஷன் ஸ்கூல்'க்கு எங்களை அனுப்பறதில்லை, சாயங்காலம் ஆனா தனியா வெளியே போக சம்மதிக்கறதில்லங்கறதெல்லாம் உண்டுதான்— ஆனாலும்மா, பொம்பள துணிச்சலோட, தன்னம்பிக்கையோட இருக்கறது அவசியம்னு என்னை என் வழியே சேர தூண்டலியா? நீச்சல் கத்துக்கறது நல்லதுனு அதுக்கு ஏற்பாடு பண்ணலியா? இப்படி அடுக்கிண்டே போகலாமேமா... உனக்கு நான் ஞாபகப்படுத்தணுமா? எனக்கென்னமோ நீ சொல்றபடி சொன்னா அப்பா ஒத்துப்பார்னே தோணறதும்மா... ப்ளீஸ்..."

அழுத்தந்திருத்தமாக பாரதி வாதாட, அன்னபூரணி புன்னகைத்தார்.

"சரியான அப்பா கோண்டுவாச்சே, நீ... அப்பாவை விட்டுக் கொடுத்துடுவியா... அது இருக்கட்டும்... நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லலியே... அப்பா வேணாம்னு சொல்லிட்டா?"

பாரதி புருவங்கள் முடிச்சுப்போட அரை நிமிஷம் யோசித்தான். கழுத்துச் செயினை எடுத்து, கடித்து அம்மா திட்டுவாள் என்பது நினைவுக்கு வர, கடிப்பதை நிறுத்தி லோக்கினுள் சங்கிலியை தள்ளிய பிறகு நிதானமாகப் பேசினான்.

"அங்க சேர அப்பா சம்மதிக்கலையா, அட்லிஸ்ட் ஹொஸ்டலுக்குப் போய் நான் கத்துக்கவாவது அவர் ஒத்துக்கணும்... ரெண்டு வருஷமா இந்த ஆசை தனித் தனியா எனக்குள் ஜாஸ்தி ஆகி, இப்ப ரொம்ப அதிகமா, நினைச்சுட்டா கைகால்களைப் பரபரக்க வைக்கற ஒரு தவிப்பாட்டம் ஆயிடுத்து... நான் என்ன சொல்றேன்னு உனக்குப் புரியறது இல்ல?... ப்ளீஸ் மா..."

சட்டென்று பாரதியின் கண்கள் கலங்க, குனிந்து அவன் கையை ஆதங்கத்துடன் அன்னபூரணி பற்றிக் கொண்டாள்.

"அட, அசடே... இதுக்குப் போய் வருத்தப்படுவானா? என்னால முடிஞ்ச வரைக்கும் அப்பாகிட்ட நான் பேசிப் பார்க்கிறேன்... நீ கண்ணைத் தொடச்சுண்டு ஏதாவது வேலையிருந்தா பாரு... இல்ல எழுந்து குளிக்கப் போ."

அம்மாவின் பேச்சு இது நாழிகை இல்லாத நம்பிக்கையைத் தர பாரதி மெள்ள எழுந்து வாசலைப் பார்க்கப் போனான்.



கூடத்தில் பேப்பரும் கையுமாக அமர்ந்திருந்த நாராயணன் இவனைக் கண்டதும் வம்புக்கு இழுத்தார்.

"விடிஞ்சதும் விடியாததுமா அம்மாவோட என்ன கான்பரன்ஸ்?"

பாரதி விழித்து மழுப்பப் பார்த்தான்.

"ஒண்ணுமில்லைப்பா... சும்மா கொஞ்ச நாழி கம்பெனி கொடுத்துட்டு வந்தேன்"

ஞாயிற்றுக்கிழமை என்பதால் கூடத்திலேயே அமர்ந்து கமலாவுடன் கேரம் ஆடிக்கொண்டிருந்த கஸ்தூரி தலையை நிமிர்த்தாமல், சிகப்பு காய்க்குக் குறி வைத்தபடியே பேசினாள்.

"ஹை... ஹை... டபாய்க்கறாப்பா... கொஞ்ச நேரமாகவே அம்மாகிட்ட ஏதோ குசுகுசுனு பேசிண்டிருந்தா. நான் பாத்தேன். பின்னா'ம் ஆயல... ஒண்ணும் இல்ல..."

"ஆமா... இவ பெரிய சி.ஐ.டி. உண்மையைக்கண்டு பிடிச்சு சொல்றதுக்கு... ஏய்... கஸ்தூரி... வீணா என் வழிக்கு வந்து வம்பு விலைக்கு வாங்காதேனு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்... பாருங்கோப்பா..."

பேசியவனுக்கு, அங்கேயே நின்றால் அப்பா மேலும் ஏதாவது கேட்க முனைந்தால் தனியா மாட்டிக் கொள்வோமே—என்கிற பயம் எழ, "நான் குளிக்கப் போறேன்" என்று மெதுவாகக் கூறிவிட்டு அவசரமாய் உள் அறைக்குச் சென்றான்.

சொன்ன வார்த்தையைக் காப்பாற்றும் உத்தேசத்தோடு அன்று மாலையே பாரதி அருகில் ஆர்வத்தோடு நிற்க, நாராயணனிடம் அன்னபூரணி பேச்சைத் துவங்கினாள்.

கணவரின் குணம் அறிந்தவளாய் சுற்றி வளைக்காமல் நேரடியாய் விஷயத்துக்கு வந்தாள்.

"பாரதி காலேஜ்ல சேர்றதப்பத்தி உங்ககிட்டே பேசணும்"

இன்கம்டாக்ஸ் பற்றின புத்தகத்திலிருந்து பார்வையை நாராயணன் உயர்த்தி, மனைவி மகளை ஏறிட்டுப் புன்னகைத்தார்.

"எந்தக் காலேஜ்ல சேர்த்துப்பாங்கற பயமே உனக்கு வாண்டாம். எம் பொண் அந்தளவு சப்ஜெக்ட்லயும் என்பதுக்கு மேல... தங்கத்தாம்பாளத்துல அட்மிஷன் கார்டை வச்சு, ஆனாளுக்கு கூப்பிடப் போறா... நீ வேணா பாரேன்..."

நாராயணன் தன் ஜோக்கை தானே ரசிக்கிற மாதிரி உரக்கச் சிரிக்க, அன்னபூரணி பாரதியை ஒருதரம் ஏறிட்டு விட்டு, நாவால் உதட்டை ஈரப்படுத்திக் கொண்டு பேசினாள்

"வந்து... காலேஜ் எதுலயும் சேர பாரதிக்கு இஷ்டமில்லை..."

கேட்டதை நம்பமாட்டாமல் நாராயணன் கண்ணகல உரக்க வினவினார்.

"அப்புறம்?"

"க... கலாக்ஷேத்ரால சேர்ந்து டான்ஸ் கத்துண்டு, டிப்ளமா பண்ணணும்னு..."

சொல்ல வந்ததை முடிக்காமல் அன்னபூரணி நிறுத்த சில நொடிகள் சும்மா இருந்து விட்டு "என்ன ஆசை இது, திடீர்னு அன்னம்?" என்றார் நாராயணன் கனத்த குரலில்.

"திடீர்னு இல்ல... ரெண்டு வருஷமாவே டான்ஸ் கத்துக்கணும்னு இவ ஆசைப்படறது எனக்குத் தெரியும். அம்மாவுக்குப் பிடிக்காதுனு நா எடமே குடுக்கல... இப்ப..."

"இப்ப?"

நாராயணன் எடுத்துக் கொடுக்க, அன்னபூரணி மேற்கொண்டு என்ன பேசுவது என்று புரியாத மாதிரி மௌனித்தாள்.



கண்ணாடியைக் கழற்றி மேஜைமேல் போட்ட நாராயணன் எழுந்து, கைகளைப் பின்னால் கோர்த்தபடி இப்படியும் அப்படியும் நடந்தார், நின்று பாரதியை ஏறிட்டுத் தீர்மானமாகப் பேசினார்.

"ஸாரிம்மா... உன் விருப்பத்துக்கு நான் சம்மதிக்கப் போறதில்லை. கலாக்ஷேத்ரால சேர்றதோ டான்ஸ் கத்துக்கறதோ பிடிக்காம நான் வாண்டாம்னு சொல்லலை... காலம் இருக்கற இருப்புல பெண்களுக்கு அகடமிக் க்வாலிஃபிகேஷன் அவசியம்னு நான் நம்பறேன். அத முதல்ல முடிச்சுடு; அப்புறமா மத்ததப் பார்த்துக்கலாம். தன்னம்பிக்கையோட வாழ்க்கைல எதிர்ப்படற பிரச்னைகளைச் சமாளிக்கப் படிப்பு நல்ல அஸ்திவாரமா உதவும். அதனால, காலேஜ்ல சேர்ந்து டிகிரி வாங்கறது என்னைப் பொறுத்தவரை முக்கியம். நான் சொல்றத உங்க ரெண்டு பேராலுமே புரிஞ்சுக்க முடியும்னு நினைக்கிறேன்..."

வார்த்தை வார்த்தையாக, ஆனால் தெளிவான உறுதியோடு அவர் பேசின பிறகு இனி வாதாடுவதில் அர்த்தமே இல்லை என்பது புரிய, கலங்க முற்பட்ட பாரதியின் கையை 'பதட்டப்படாதே—நிதானமாய் இரு' என்கிற பாவனையில் அழுத்தப் பிடித்த அன்னபூரணி கெஞ்சலாய்க் கேட்டாள்

"நீங்க எதையுமே யோசனை பண்ணி மத்தவாளுக்கு எது சரியோ அதைத்தான் சொல்லுவேள்னு தெரியும். அதனால உங்க முடிவ இவள ஏத்துக்க வைக்கறது என் பொறுப்பு. ஆனா... வந்து குழந்தையோட விருப்பத்தையும் நாம நினைச்சுப் பார்க்கணும் இல்லையா? டான்ஸ் கத்துக்கணும்ங்கற ஆசை இவளுக்கு கழுத்து மட்டுக்கு இருக்கு... அதனாலே..."

"அதனால?"

"வந்து... பக்கத்துத் தெருல டான்ஸ் மாஸ்டர் ராஜமாணிக்கம் நடத்தற க்ளாஸுக்குப் போய் இவ டான்ஸ் கத்துக்கவாவது நீங்க கட்டாயம் சம்மதிக்கணும்..."

படபடவென்று பேசியவளையும் மகளையும் கண்கள் இடுங்க நாராயணன் வெறித்தார்.

பின், ''ஸாரிம்மா. இதுக்கும் என்னால ஒத்துக்க முடியாது. இருட்டினப்புறம் தனியா போய், கும்பலை ஒருத்தியா நீ டான்ஸ் கத்துக்கறதுல எனக்கு விருப்பம் இல்லை'' என்றவர் கொஞ்சம் தாமதித்து ஒரு ஸஸ்பென்ஸ் பார்வையோடு ''வேணும்னா — மாஸ்டரை வீட்டுக்கு வரவழைச்சு பொறுப்பா கத்துக்கோ—எனக்கு ஆட்சேபணை இல்லை'' என்றபோது மெதுமெதுவாகக் குறும்புப் புன்னகை ஒன்று அவர் உதடுகளில் பரவவே செய்தது.

## 4

''யாரென்று ராகவனை எண்ணினீர் அம்மா—
இதை அறிந்தும் சொன்னீரோ ? அறியீரோ ?''

ராம நாடகத்தில் மாயமான் உருக்கொண்ட மாரீசனைத் தொடர்ந்து ராமன் செல்ல, அடிபட்ட ராக்ஷஸன் வேண்டுமென்றே 'லக்ஷ்மணா' என்று அலறியபடி சாவ, அந்தக் கதறலைக் கேட்ட சீதாதேவி வாஸ்தவத்திலேயே ராமச்சந்திர மூர்த்தி தம்பியை உதவிக்கு அழைக்கிறார் என்ற பதட்டத்தில் மைத்துனனை ஏச, பரிகசிப்புடன் அண்ணனின் பராக்ரமங்களை இளையவர் அண்ணிக்கு நினைவூட்டும் இடம்.

'யாரென்று ராகவனை...' என்கிற பல்லவியை ஆசிரியர் சுழற்றிச் சுழற்றி நிரவல் செய்து பாட, ஒரே வரிக்கு வெவ்வேறு விதமாய் ஸ்வானுபாவத்துடன் பாரதி அபிநயிக்க முற்பட்டாள்.

இடக்கையில் கோதண்டமும், வலக்கையில் தரையில் ஊன்றிய அம்புமாய் விரிந்த மார்பும், உயர்ந்த புஜங்களும், புன்னகை ததும்பும் முகமுமாய்க் காட்சி அளித்த கோதண்டராமர் கணத்தில் மறைந்து, தாயின் விருப்பத்தையும் தந்தையின் ஆணையையும் சிரமேற்று, காட்டுக்குச் செல்லும் தசரதராமனாகி, பின்னர் மனைவிக்காகப் பொன் மானைத் துரத்திக் கொண்டு ஓடிய சீதாராமனாக மாற இரண்டே வரிகளில் ராமாயணத்தின் முப்பகுதியை அற்புதமாக மகள் பாவத்தாலும், அபிநயத்தாலும் சித்திரிப்பதை ஒரு பக்கமாய் அமர்ந்தபடி பார்த்துக் கொண்டிருந்த அன்னபூரணிக்கு சந்தோஷத்தில் நெஞ்சு விம்மியது. கண்ணோரத்தில் நீர்ப்பூக்கள் பளபளக்க முற்பட்டன.



''ஏற்காத வார்த்தை இது—வசையோ, அடுக்குமோ—
அம்மா—
போரில் எண்டிசை அதிரும் அண்டினை படையுடன்
மண்டினாலும் என் அண்ணன் சுண்டு விரல்
போதாதோ ?''

ராமபிரானுக்கு ஆபத்தா ? அந்த ராமச்சந்திர மூர்த்தியின் பராக்ரமத்தில் சந்தேகமா ? எட்டுத் திசை அதிபர்களும் ரத, கஜ, துரக, பதாதிகளுடன் வந்தாலும் அத்தனை பேர்களின் பலமும் என் அண்ணனின் சுட்டு விரலுக்குச் சமமாகுமா ?...

முதலில் என்னை இப்படிப் பேசிவிட்டீர்களே என்கிற பதைப்பு ; தொடர்ந்து இப்படிப் பேசியது நீங்கள்தானா என்கிற வியப்பு— இறுதியாக என் அண்ணன் எத்தனை வீராதி வீரர் தெரியுமா—என்கிற பெருமிதம்...

கண்சிமிட்டும் நாழிகையில் பாரதி பதறி, வியந்து, கர்வநடை நடக்க, அன்னபூரணி நெகிழ்ந்தாள். சிலிர்த்தாள்.

''ஆதிருத்ரன் வில் ஒருவர் ஒடிக்கப்போமோ ? அதை
அறிந்தும் பெண் ஒருத்தியாலே நிந்திதம்
தோணுமோ—
பேதையாம் என்னையும் சோதிக்கலாமோ ?
நல்ல வேதண்டம் என்ன பெரும் கோதண்டம்தனை
அண்ணன்
காதண்டம் வளைக்கும்முன் மூதண்டம் பிளக்குமே.''

ஜனகனின் சபையில் ஜானகியின் சுயம்வரம். ஆணவப்பட்டவர்கள் வந்து வில்லை உடைக்க முடியாமல் திணறுகிறார்கள். கோசலை மைந்தன் அனாயாசமாய்ச் சிவதனுசைத் தூக்கி, நாண் ஏற்றி, வில்லை இரண்டாக உடைக்க, பிராட்டி அண்ணலுக்கு மாலையிட்டு அவர் உடைமையாகிறாள்...

சுயம்வர மண்டபத்தையும், நாணம் ததும்பி நிற்கும் அன்னையையும், வில்லை அசைக்க முடியாமல் தோற்றுப் போகும் மன்னர்களின் அவமானங்களையும், ராமபிரானின் கம்பீரத்தையும், அலட்சியமாகச் சிவதனுசை முறிப்பதையும், சபையோர்களின் 'ஆஹா'காரத்தையும், தேவியின் புளகாங்கிதத்தையும் நேர்த்தியாக அபிநயித்து ஒரு சில நிமிஷங்களில் சீதாபிராட்டியின் திருமணத்தைப் பாங்குற பாரதி கண்முன் கொணர்ந்து நிறுத்த 'என் கண்ணே' என்று வாய்விட்டு அரற்றத் தோன்றிய சந்தோஷத்தைச் சிரமப்பட்டு அன்னபூரணி அடக்கிக் கொண்டாள்.

எங்கிருந்து வந்து புகுந்துகொண்டது இந்தப் பெண்ணுக்குள் இப்படியொரு தெய்வீக வித்தை! ஆசிரியரே மெய்மறந்து போகும் திறனில் அது என்ன முகபாவம், அபிநயம்! பரதம் கற்கத் துவங்கி இன்னும் மூன்று ஆண்டுகள் கூட பூர்த்தி ஆகவில்லை. அதற்குள் கைதேர்ந்த நடனமணியிடம் மட்டுமே காணப்படும் அங்க அசைவுகள், அபார சுயலயிப்பு!

வழக்கமாய் ராஜமாணிக்கம் லேசில் எவரையும் பாராட்டிவிடும் மாஸ்டர் இல்லை என்பதோடு முதல் ஒரு வருஷம் அடவுகளை மட்டுமே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுத்து, உரமேற்றும் கடினமான ஆசான் என்பது ஊருக்கே தெரியும்தான்.

ஆனால், பாரதி விஷயத்தில் அவர் என் என்பதற்குமுன் இவள் எண்ணெய்யாகத் தன்னைத் தயார் பண்ணிக் கொண்டு எட்டாம் மாசம் முடிவதற்குள் கற்றுத் தந்த அடவுகள் அத்தனையும் கச்சிதமாய் மூன்று காலங்



களில் ஆடிக்காட்ட, அலாரிப்பு, ஜதிஸ்வரத்தைத் தொடர்ந்து சரியாகப் பயிலத் துவங்கி ஒன்றரை வருஷத்துக்கெல்லாம் 'சதங்கை அரங்கேற்றத்தை' ராஜமாணிக்கம் நிறைவோடு நடத்தியது நிஜம்.

நெருங்கின உறவினர்கள் பத்துப் பேரை அழைத்து ஒரு சுபதினத்தில் பூஜையில் வைத்த சலங்கைகளை கால்களில் கட்டி பாரதி ஆடியபோது அவளுடைய நாட்டியத்தைக் கண்டவர்கள் மெய்மறந்துதான் போனார்கள்.

சதங்கை அரங்கேற்றத்தைத் தொடர்ந்து ராகமாலிகை வர்ணம், பதங்கள், பத்து நாட்கள் முன்பு காலடா தில்லானா கூட பாடமாகிவிட்டது. இன்னும்...

"இன்னிக்கு ஆட்டம் போதும்மா... கட்டிக் கும்பிட்டுக்க"

மாஸ்டர் "தை தித்தை" என்று சொல்லித் தட்டுக் குச்சியால் தட்ட, பாரதி இரண்டு கைகளையும் மார்புக்கு நேராக கடகாமுக முத்திரையில் பிடித்து, கால்களைத் தட்டி, முழு மண்டியில் உட்கார்ந்து பூமியைக் கைகளால் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு அன்றையப் பயிற்சியை முடித்தாள்.

தட்டுக் குச்சியைக் கீழே வைத்த ராஜமாணிக்கம் அன்னபூரணி பக்கம் திரும்பினார். 'எப்படி என் ஸ்டூடன்ட் ஆட்டம்?' என்று அந்தப் பார்வை கர்வத்தோடு கேட்பது புரிய அன்னபூரணி மகிழ்ச்சியாகப் புன்னகைத்தாள்.

சமையல் கட்டுக்குச் சென்று சமையல்கார அம்மாள் தயாராக கலந்து வைத்திருந்த காபியை ஆசிரியரிடம் கொணர்ந்து பாரதி நீட்டினாள். அதை வாங்கி நுரை பொங்க ஆற்றியபடியே ராஜமாணிக்கம் பேசினார்.

"பத்து நாளாகவே அம்மாகிட்ட பேசணும்னு நினைப்பு— ஆனா, ஒவ்வொரு க்ளாஸ் போதும் கூட யாரோ வேத்து மனுஷங்க இருந்ததால பேச முடியல..."

சொல்லுங்கள் என்கிற அர்த்தத்தில் அன்னபூரணி அவரைப் பார்க்க, ஒரு வாய் காபியை விழுங்கியவர் தொடர்ந்தார்.

"வேற ஒண்ணுமில்லே... பாடவும் துவங்கி ரெண்டரை வருஷம் ஆயாச்சு... பாப்பாவும் எல்லா ஐட்டங்களையும் பிரமாதமா பெப்பராட்டம் புடிச்சுக்குது. இல்லாணா கூட பாடம் ஆயிடுச்சு. பாத்தீங்க இல்ல... தானா பதம், ஒரு ஜாவளி எல்லாம் பர்பெக்டா ஆடுது... இன்னும் குறைஞ்சிருக்கோ, இல்ல ஒங்களுக்கு விருப்பம்னா ஆண்டாள் நாட்டியமோ கத்துக் கொடுக்க வேண்டியது தான் பாக்கி... ஒரு 'மார்க்கம்' பயிற்சி ஆயிடுச்சுன்னா ரங்க பிரவேசம் செய்துடலாம்னு பரத சாஸ்திரமே சொல்லுது..."

"மார்க்கம் கத்துண்டா ரங்கபிரவேசம் செய்யலாமா? அப்படின்னா?" லேசான குழப்பத்துடன் அன்னபூரணி வினவ, ராஜமாணிக்கம் வாயைத் துண்டால் துடைத்துக் கொண்டு விளக்கினார்.

"அது என்ன பரிபாஷைம்மா... பரத சாஸ்திரத்துல ஆரம்பிச்சு இன்னாள் வரைக்கும் உள்ள நடனங்கள் ஒரு 'மார்க்கம்'னு பரத முனிவர் குறிப்பிட்டுச் சொல்றாரு. அதாவது ஒரு ஃபுல் கோர்ஸ்னு வச்சுக்குங்க. ரங்க பிரவேசம்னா வேற ஒண்ணுமில்லே அரங்கேற்றத்தைத்தான் அப்படிச் சொல்வோம்..."

"ஓ!..." என்று அன்னபூரணி என்ன பதில் கூறுவது என்று புரியாமல் மௌனித்தாள்.

சதங்கை அரங்கேற்றத்தன்று நாட்டியத்தைக் கண்டு களித்த உறவினர்கள் ஆஹா, ஓஹோ என்று புகழ்ந்ததும், 'பாரதி நாடு புகழும் நடனமணியாக வரப்போகிறாள்' என்று ஜோஸ்யம் கூறிவிட்டுப் போனதும், அன்று இரவு தனிமை கிடைத்தபோது நாராயணன் 'நம்ம பாரதி ஆத்ம திருப்திக்காக கத்துண்டு ஆடறாங்கறது புரியாம ஆளாளுக்கு என்னென்னமோ பேசிட்டுப் போறா இல்லே?' என்று புருவங்களை சுருக்கியவாறு நாராயணன் பேசியது



நினைவுக்கு வர, ஏனோ அடிவயிற்றில் கவலை முடிச்சுப் போட்டது.

இன்றுவரை அரங்கேற்றம் பற்றிக் கணவரிடம் அன்னபூரணி பேசியதில்லை என்பதுதான் உண்மை. பெண் அபாரமாக ஆடுவதும், அவளுக்குள் அரங்கேற்ற ஆசை முட்டுவதும் புரிந்தும்கூட வலியச் சென்று புருஷனிடம் பேச்சை எடுக்காததற்குக் காரணம், பயம். "என்னது? அரங்கேத்தமா? பணிச்சுனு டான்ஸ் பண்ணிண்டு பத்து ஆம்பளை பாத்து ரசிக்க என் பொண் மேடை ஏறி ஆடறதா? இம்பாஸிபிள்' என்று அடிக்குரலில் பேசி, தீர்மானமாக மறுத்து விடுவாரோ என்கிற பயம். நதிக் கரைக்கு வந்த பிறகு அதை எல்லாம் கடப்பது என்று யோசித்துக் கொள்ளலாம் என்கிற சமாதானம்.

கடைசியில் அந்த நாள் வந்து விட்டதா?

"என்னம்மா... அரங்கேத்தம்னு சொன்னதும் மகளை மேடை மேலக்கு வெளிச்சத்துல கற்பனை பண்ண ஆரம்பிச்சிட்டீங்களா?" கிண்டலோடு ராஜமாணிக்கம் வினவ, சமாளிக்கும் ரீதியில் அன்னபூரணி புன்னகைத்தாள்.

"பாப்பாவ எதிர்ல உக்கார வச்சிக்கிட்டே சொல்றதுல எனக்கொண்ணும் தயக்கம் இல்லே... உண்மை தானே சொல்லப் போறேன். எப்படியும் அவ அறிய ஒருநாள் சொல்லப் போறத இப்பவே உங்களண்ட சொல்லிடறேன்— கேட்டுக்குங்க... மொத மொதல்ல பாடத்தை பாரதிக்கு ஆரம்பிச்சப்போ இந்த அளவுக்கு சூட்டிகையா, பரதக் கலைல ஈடுபாடு உள்ளவளா அவ இருப்பாளுன்னு நான் நினைக்கலதான். ஆனா பத்து அடவுக முடியறதுக்குள்ள ஓஹோ... இது சாதாரண ஸ்டூடண்ட் இல்லேனு புரிஞ்சு போச்சு... இன்னிக்கு புது அடவு சொல்லிக் கொடுத்துட்டுப்போனா அடுத்த கிளாஸுக்குள்ளாற மூணு காலத்துலயும் சுத்தமா ஆடிக்காட்டும். காலேஜ்ல பரீட்சை இருந்தா கூட கிளாஸ நிறுத்தாது. அதும்பாட்டுக்கு அது... இதும் பாட்டுக்கு இது... நானும் எத்தனையோ பசங்களுக்கு பாடம் எடுக்கறேன்தான். ஆனாலும் ஒரே மாசத்துக்குள்ள

ராகமாலிகை வர்ணத்த பர்ஃபெக்டா பாடம் யாரும் பண்ணினது இல்லை... நிஜம்மா சொல்றேன். வழுவூர் ராருக்கு குமாரி கமலா கிடைச்ச மாதிரி எனக்கு பாரதி அமைஞ்சிருக்குன்னே நான் நினைக்கிறேன்."

முகத்துக்கு எதிரிலேயே இத்தனை உயர்வாய் ஆசிரியர் பாராட்டிவிட்ட பரவசத்தில் கண்கள் கலங்க பாரதி கூச்சத்தோடு தலையைக் குனிந்துகொள்ள, நெகிழ்ச்சியோடு அன்னபூரணி சொன்னாள்.

"நீங்க உயர்வா இப்ப ஆட்டத்தைப்பத்தி பேசறத கேக்கறப்போ ரொம்ப நிறைவா இருக்கு ஸார். எல்லாத்துக்கும் உங்க சிறப்பான ட்ரெய்னிங்தான் காரணம். நீங்க சிரத்தையா கத்துத்தரேள்; அவ ஆடறா..."

பையிலிருந்த வெற்றிலைப் பொட்டலத்தை எடுத்துப் பாக்கை வாயில் போட்டுக் கொண்ட ராஜமாணிக்கம் 'இல்லை' என்று மறுத்தார்.

"சொல்லித்தந்தா மட்டும் பத்தாதும்மா... பிடிச்சுக்கற புத்தி வேணும். எத்தனையோ பணக்கார வீட்டுக் கொழந்தைகளுக்கு நான் சொல்லித்தரேன்தான்— ஆனா, ஏனோ தானோனு அதுங்க ஆடறப்போ தட்டுக்குச்சியால முழங்கால்ல ஓங்கிப் போடலாமானு ஆத்திரம்தான் வரும். போன மியூஸிக் ஸீஸன்ல சுப்புடு ஸார் என்கிட்ட 'லய சுத்தபத்தமா அரைமண்டில உக்காந்து ஆடற பரத நாட்டியமே குறைஞ்சிட்டு வருது'னு வருத்தப்பட்டுக் கிட்டப்போ பொறுக்கமாட்டாம 'அடுத்த வருஷம் என் சிஷ்ய பொண் ஒண்ணுக்கு அரங்கேத்தம் பண்ணுவேன்— அந்த ஆட்டத்தப் பார்த்திங்கன்னா சத்தியமா நீங்க மனசு குளிர்ந்து போவீங்க'னு சொன்னேன்... ஆமாமா... வசிஷ்டர் வாயால பிரும்ம ரிஷினு பேர் வாங்கணும்— சுப்புடு ஸார் கிட்ட அரங்கேத்தத்துலேயே நல்ல பாரதி பாராட்டுப் பெறணும்... அதான் என் ஆசை... அதுக்கு அவளுக்கு தகுதி இருக்கு... தேதி, சபா எல்லாம் நிர்ணயம் பண்ணிட்டம்னா, டெல்லிக்கு எழுதி, சுப்புடு ஸாரைத் தலைமை தாங்க எப்படியும் வரவழைச்சிடணும்..."



கண்களில் பெருமை வெளிச்சம் போட நீள நீளமாய் ராஜமாணிக்கம் பேசியதும், வாஸ்தவமாகவே அன்னபூரணி அரண்டுதான் போனாள்— இந்த மனிதருள் இத்தனை நம்பிக்கையா என்று.

அதனால்தான் அன்றிரவே துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கணவரிடம் இது குறித்துப் பேசினாள்.

டான்ஸ் மாஸ்டரின் விருப்பத்தையும், மகளின் ஆட்டத் திறமையையும் எடுத்துச் சொல்லி 'அரங்கேத்தம் பண்ணறது தான் நியாயமான முடிவுனு நானும் நினைக்கிறேன்' என்று அன்னபூரணி மெல்லக் குரலில் கூறி முடித்துச் சில நிமிஷங்கள் சென்றும் நாராயணன் எதுவுமே பேசாமல் கண்களை மூடியபடி அமர்ந்திருந்தார்.

பின், கண்ணாடியைக் கழற்றி வேஷ்டியில் துடைத்து மறுபடியும் அணிந்து கொண்டார். விரல்களால் மேஜை மேல் தாளம் போட்டவாறு யோசித்தார். தனக்குத் தானே ஒரு முடிவுக்கு வந்துவிட்ட பிறகு தெளிவாகப் பேசினார்.

"ஆல்ரைட்... மாஸ்டர் ஆசைப்படறார்ங்கறதோட, பாரதி பிரமாதமான ஈடுபாட்டோட ஆடறதையும் நினைச்சுப் பார்க்கறப்போ அரங்கேத்தம் செய்யறதுல எந்தத் தப்புமில்லேனே எனக்குத் தோணறது. ஆனா ஒண்ணு. கவனமா கேட்டுக்கோ. அரங்கேத்தம் ஆனப் புறம் டான்ஸ் ஆடி வியாபார ரீதில பணம் சம்பாதிக்க மாஸ்டரோ, பாரதியோ, இல்ல நீயோ நினைச்சா அதுக்கு மட்டும் நான் கட்டாயம் ஒத்துக்கவே மாட்டேன். பரதநாட்டியம் ஒரு தெய்வீகக் கலைனு பெரியவா சொல்லுவா... சாட்சாத் பரமேஸ்வரன் கிட்டேயிருந்து தோணினது... அதனால பயபக்தி கெடாம அரங்கேத்தம் பண்ணி, விஷயம் தெரிஞ்ச நாலுபேர் பாரதி சுத்தபத்தமா ஆடறானு ஆமோதிக்கறதும், விஷய

ஞானம் உள்ளவா ரசிக்கறதும் போதும்... அதுக்கும் மேல இந்த சபால அந்தக் கல்யாணத்துல ப்ரோக்ராம் வச்சிக்க லாமாங்கற பேச்சே கூடாது... என்ன, சரிதானா?"

கறாரான கண்டிஷன்களுடன் பச்சை விளக்கு எரிய, அடுத்த மூன்று மாசங்களும் தலைகால் புரியாத சந்தோஷத்துடன் அன்னபூரணி அரங்கேற்ற ஏற்பாடுகளைக் கவனித்தாள்.

வீட்டில் வாத்தியங்களுடன் தினமும் ஒத்திகை நடந்தது ஒருபக்கம் என்றால் உடைகள் தைத்து, நகைகள் வாங்கி, ஆசிரியருக்கு அளிக்க வேண்டிய சன்மானங்களைத் தயார் செய்து, அழைப்பிதழ்களை அச்சடித்து அனுப்புவது போன்ற இதர ஏற்பாடுகள் இன்னொரு பக்கம்.

ராஜமாணிக்கத்துக்கு மனம் போல மாங்கல்யம். சுப்புடு ஸார் டெல்லியிலிருந்து பிரத்யேகமாய் தலைமை தாங்க வந்ததும் அல்லாமல் "பாரதியின் நடனம் அப்பழுக்கு இல்லாமல் இருக்கிறது. சிரத்தையோடு உழைத்தால் நாட்டின் முன்னணி நடனமணியாகத் திகழ்வது நிச்சயம்" என்று மனப்பூர்வமாக வாழ்த்தி விட்டுப் போனார்.

அடுத்து வந்த மாசங்களில் இரண்டு நிதியுதவிக் கச்சேரிகளும், கிருஷ்ணகான சபையின் நாட்டிய விழாவிலும் பாரதியின் நடனக் கச்சேரி நடைபெற்றதும் எழுதப்பட்ட நடன விமர்சனங்கள் 'ஓஹோ' என்று அமைந்துவிட, தன் கண்டிப்பைத் தளர்த்திக் கொண்டு சில சபாக்களில் நடனமாட நாராயணன் ஒப்புதல் அளித்தார். ஆனால், மகளின் நாட்டியமாடும் திறமையை எல்லாரும் நன்கு உணரும் வகையில் கச்சேரிகளை அனுமதிப்பதன் மூலம் கணவர் துளித்துளியாக மாறி வருகிறார் என்று அன்னபூரணி யாருக்கும் தெரியாமல் குதூகலித்ததை அதிக நாட்கள் நீடிக்க விடாமல் ரொம்ப சீக்கிரமே அந்த சம்பவம் நடந்தது.

# 5

ரொம்ப நேரமாய்ச் சலனம் எதுவும் தென்படாமல் இருந்த பொந்துக்குள் கறுப்பாய் ஏதோ அசைந்ததைத் தொடர்ந்து தலை மட்டும் வெளியே தயக்கத்தோடு நீண்டது.

பச்சைத் தலை; மிளகாய்ப் பழ நிறத்தில் அலகு. சின்னக் கறுப்புக் குன்றிமணியாய்க் கண்.

இப்படியும் அப்படியும் தலையைத் திருப்பிப் பார்த்து விட்டு 'க்கி...கி!' என்று அது ஒலியை எழுப்பியதும் இரண்டாவது தலை ஒன்று வெளியில் நீண்டது.

முதல் குஞ்சுக்கு இருந்த துணிச்சல் இரண்டாவதற்கு இல்லை. எட்டிப்பார்த்து விட்டுப் பயந்து போனது மறுபடி பொந்துக்குள் மறைந்து கொள்ள, முதலாவது 'என்ன கோழைத்தனம் இது' என்கிற தொனியில் 'க்கி...க்கீ...' என்று குரல் எழுப்பிவிட்டுத் தன் சூரத்தனத்தை நிரூபிக்கிற மாதிரி அலகால் பொந்தின் விளிம்பைக் கொத்தி, மரப்பட்டையை உடைக்கப் பார்த்தது.

பொந்தில் குஞ்சுகள் இருப்பதை முதல் நாள் பாரதி எதேச்சையாய்க் கவனித்திருந்தாள். மதிய வேளையில், அவை வெளியே தலைகாட்டக் கூடும் என்கிற எதிர்பார்ப்பில் அப்பாவின் பைனாகுலரைக் கையில் வைத்தபடி நின்றிருந்தது வீணாகவில்லை.

தூரதிருஷ்டிக் கண்ணாடிகளைக் கண்களில் பொருத்திப் பார்த்தபோது நாற்பதடியில் இருந்த மரமும், கிளிக்குஞ்சுகளும் எட்டித் தொட்டு விடுகிற தூரத்திற்கு வந்தன.

அலகால் மரப்பட்டையை உரிக்கப் பார்த்த குஞ்சின் கழுத்தில் கயிறு கட்டின மாதிரி கறுப்பு வளையம்!

கழுத்தில் கறுப்பு வளையம் இருந்தால் அது ஆண் கிளி என்று ஏதோ புத்தகத்தில் படித்திருந்தது நினைவுக்கு வந்தது.

அந்தப் பவழ மூக்கும், துருதுருவென்ற செயலும் அதன் விஷமபுத்தியை வெளிச்சம் போட்டுக்காட்ட தாவிச் சென்று கிளிக்குஞ்சைக் கையில் ஏந்தி 'டே—கண்ணா' என்று கொஞ்ச வேண்டும் போல இருந்தது.

பொந்தின் ஓரத்தைக் கடித்து ஒடிக்க அந்தக் குஞ்சு படாதபாடு பட்டுக் கொண்டிருக்கையில் திடுமென எங்கிருந்தோ அணில்கள் இரண்டு ஒன்றை ஒன்று துரத்திக்கொண்டு 'க்கக்கக்'— என்று உச்சஸ்தாயில் கத்தியவாறு பொந்தை அடுத்திருந்த மரக்கிளையில் ஓட, என்னமோ ஏதோ என்று பயந்து போன கிளிக்குஞ்சு பொந்தினுள் அவசரமாய் மறைந்தது.

அப்படியே நின்று மீண்டும் கிளிக்குஞ்சு வெளியில் வரும் என்று காத்து அலுத்துப் போனபின் பாரதி பைனாகுலரை மரத்தின் இதர பகுதிகளுக்குத் திருப்பினாள்.

மொட்டை மாடியில் துளி வெயில் விழாமல் ராட்சச குடைமாதிரி கவிழ்ந்திருந்த அந்த தூங்குமூஞ்சி மரத்தின் இலைகளுக்குச் சரியாய் பூத்திருந்த மலர்கள் கவனத்தை ஈர்த்தது, ஒரு பூவின் மேல் பார்வையை நிலைக்கச் செய்து ஊன்றிப் பார்த்தாள்.

உள்ளங்கை அளவில் வட்டமான பூ. ரோஜா நிறம். நூற்றுக்கணக்கில் அமைந்த மகரந்தக் காம்புகள்... சன்னமாக 'லேஸ்!' போல... இல்லை... மன்னர்களுக்கு வீசும் சாமரம் போல இல்லை இல்லை... விஷ்ணு சக்கரத்தின் கதிர்வீச்சுக்கள் போல—

பைனாகுலரை தழைத்து விட்டு மொட்டை மாடியில் விழுந்திருந்த பூ ஒன்றைக் கையில் எடுத்து பாரதி பார்த்தாள்.

எஸ்—விஷ்ணு சக்கரம் மாதிரி அழகான பூதான்.



இத்தனை அற்புதமான பூக்களைப் பூக்கும் மரத்திற்குப் போய் தூங்குமூஞ்சி மரம் என்று பேர் வைக்க எப்படி மனசு வந்ததோ!

கட்டாயமாக 'இனிமேல் யாரும் இந்த மரத்தைத் தூங்குமூஞ்சி மரம் என்று அழைக்கக் கூடாது. விஷ்ணு சக்கர மரம் என்றே குறிப்பிட வேண்டும்'— என்று உத்தரவு போட முடிந்தால் எத்தனை நன்றாக இருக்கும்?

"என்னிடம் மட்டும் அதிகாரம் இருந்தால்..."

தொடர்ந்து ஆணையை மனக்கண் நிறைவேற்ற முடியாமல் கீழிருந்து உரக்க தங்கையின் குரல் எழ, பாரதி சுவரை நெருங்கி எட்டிப் பார்த்தாள்.

கமலாவும், அவள் ஸ்நேகிதிகளும்தான்!

மதிய வெயிலைப் பொருட்படுத்தாமல் பாண்டி ஆட்டம் ஜரூராய் நடந்து கொண்டிருந்தது... மூன்றாவது வீட்டு ரமா தலையை அண்ணாந்து, இரண்டு கால்களையும் பரத்தி அந்தந்த கட்டங்களில் வைத்து "ரைட்டா?" என்று கேட்க, மற்றவர்கள் 'ரைட்' என்று மேலே அவள் செல்ல அனுமதித்துக் கொண்டிருந்தார்கள்.

"ரைட்டா?"

"ரைட்"

"ரைட்டா?"

"ரைட்"

"ரைட்டா?"

"ஆ! தப்பு... தப்பு... கோட்டை மிதிச்சுட்டே!"

கடைசிக் கட்டத்தில் வகையாய்க் கோட்டை மிதித்து ரமா மாட்டிக்கொள்ள, அவள் கைச்சில்லைப் பறித்துக் கொண்டு கமலா விளையாட முற்பட்டாள்.

இந்த மாசி மாதம் வந்தால் கமலாவுக்கு வயசு பதினாறு முடிகிறது. ஆனாலும் இன்றைக்கும்

தன்னைவிட சின்னதுகளோடுதான் அவளுக்கு ஆட்டம் பாட்டம், சகவாசம் எல்லாம்!

"ஆம்பிளையாகப் பொறந்திருக்க வேண்டியவ— தப்பிப்போய் பொம்மனாட்டியா பொறந்துட்டா"— என்று அம்மா அடிக்கடி புலம்புவாள். அத்தனை வால்! ஒரு நிமிஷம் ஒரு இடத்தில் உட்காராது! 'தெருப் பையன்களோடு கில்லித் தண்டு, கிரிக்கெட் ஆடுவதில் துவங்கி இப்படி மதிய வேளைகளில் தெருவில் சிறுசு களைக் கூட்டி வைத்துக்கொண்டு பாண்டி, ஐஸ்பை விளையாடுவதுவரை, எதுவுமே தள்ளுபடி கிடையாது.

இரண்டாமவள் கஸ்தூரி, இவளை மாதிரி இல்லை, கொஞ்சம் சீரியஸ் டைப். படிப்பில் எத்தனைக் கெத்தனை கெட்டிக்காரியோ, அத்தனை தேர்ச்சி வாய்ப்பாட்டிலும் உண்டு. குரல் வளத்தோடு, ஆர்வமும் இயற்கையாகவே அமைந்துவிட்டதில் வாரத்துக்கு இரண்டு கிளாஸ் பி. ராஜமையரிடம் சென்று கற்கும் அளவு கர்நாடக சங்கீதத் தில் பாண்டித்தியம் வளர்ந்திருப்பதைக் குறித்து எல்லா ருக்குமே, முக்கியமாய் அப்பாவுக்குப் பெருமை அதிகம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சமாசாரம். அதுவும்...

"நான் பழம் எடுக்கப் போறேன்— கவனிச்சுக் கோங்கோ..." உரக்கக் கத்தி கில்லியை கமலா எறிந்ததும், மீண்டும் கவனத்தைத் தங்கையிடம் பாரதி திருப்பினாள்.

முதல் கட்டத்தில் துவங்கினவள் ஒரே முயற்சியில் அத்தனை கட்டங்களையும் தாண்டி, பழமும் எடுத்து விட்டதை பார்த்தபோது மனசுக்குள் 'சரியான எமன்!' என்கிற பாராட்டு எழுந்தது. கூடவே இவள் ஏன் தன்னை மாதிரியோ அல்லது கஸ்தூரி போலவோ எந்தக் கலைகளிலும் ஈடுபாடு உள்ளவளாக இல்லை என்கிற கேள்வியும் எழ, பாரதி அலுப்புடன் 'ப்ச்' என்று சத்த மில்லாமல் உதட்டைச் சுளித்துச் சூள் கொட்டினாள்.



டான்ஸில் ஆர்வம் இருந்தால் என்ன, இல்லை, 'ஓஹோ' என்று ஆடக்கூடிய திறமையும் இருந்தால்தான் என்ன?

பத்து, பன்னிரண்டு கச்சேரிகள் கொடுத்தும், ஆனானப்பட்ட சுப்புடு ஸாரிடம் பாராட்டுப் பெற்றும் என்ன பிரயோஜனம்? மூன்று மாசங்கள் ஆகிவிட்டன, சலங்கைகளைக் கால்களில் கட்டி! மாஸ்டர் வந்து தட்டுக் குச்சியைத் தட்டி ஜதி சொல்லி ஆடி!

ஹூம்.

ஆதங்கம் அதிகமானதில் நீளமாகப் பெருமூச் சொன்று வெளிப்பட்டது. பாரதி திரும்பி, சரிந்து, கைப்பிடிச் சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்தாள்.

எல்லாம் அந்த ஸினிமாத் தயாரிப்பாளர் என்று சொல்லிக் கொண்டு வந்த மனிதரால் வந்த வினை! இவரெல்லாம் நாட்டியக் கச்சேரியை வந்து பார்க்க வில்லை என்று யார் அழுதார்கள்? பெரிசாகப் பாராட்டு வதாக நினைத்துக்கொண்டு நேராக அப்பாவிடமே வந்து வேண்டாத பேச்சுக்களைப் பேசியதன் விளைவு, மூன்று மாசங்களாய் டான்ஸ் கிளாஸுக்கு மூட்டை கட்டியாகி விட்டது!

அந்த நபர் பேர் சூரியகாந்தனாம்!

காலை எட்டு மணி இருக்கும். வேளை கெட்ட வேளையில் ஸில்க் ஜிப்பாவும், கூலிங்கிளாஸும், காவிப் பற்களும், கையில் சிகரெட் பெட்டியுமாய் டாக்ஸியில் வந்து இறங்கினவர், என்னமாய் தடாலடி அடித்துப் பேசினார்!

பேப்பரும் கையுமாய் உட்கார்ந்திருந்த நாராய ணனை நெருங்கி "நமஸ்காரமண்டி" என்றவர் ரொம்பத் தெரிந்தவர் மாதிரி தன்னைத்தானே அறிமுகம் செய்து கொண்டு ஏதேதோ பேசிவிட்டு அசட்டுச் சிரிப்பு மாறாமல் தொடர்ந்தார்.

"நேத்து உங்கமக டான்ஸ் கச்சேரிக்கு வந்திருந்தேன் அடாடா ஆட்டம்! என்ன உடற்கட்டு, என்ன அழகு... அசந்திட்டேன். ராத்திரியே ஐத்திராபாத்ல இருக்குற என் பார்ட்னருக்குப் போன் போட்டு 'நமக்கு ஹீரோயின் கிடைச்சிட்டா'ன்னு சொல்லிட்டேன். மொத மொதலா நாங்க எடுக்கப்போற படத்துல ஹீரோயின் ஒரு டான்ஸரா, புதுமுகம் வேணும்னு டைரக்டர் நினைச்சார், உங்க மகளை நேத்து பாத்ததுமே இதுதான் நம்ம ஹீரோயின்னு தீர்மானம் பண்ணிட்டேன். படத்துல மொத்தம் ஆறு டான்ஸ். தேவேந்திரன் சபையில ஊர்வசி ஆடறமாதிரி, அந்த ட்ரஸ்ல ஒரு டான்ஸ், ஆதிவாசி ட்ரஸ்ல ஒரு டான்ஸ்— நாகரிகமா டைட்ஸ் போட்டுகிட்டு ஒரு மார்டன் டான்ஸ். அப்புறம்... நீங்க எதக் குறிச்சும் கவலைப்படாதீங்க... அசத்திடுவோம்... நம்ம பாப்பாவோட அழகுக்கும், வாளிப்புக்கும்..."

உள் அறையில் நின்றவாறு அந்த மனிதரின் பேச்சுக்களைக் கேட்ட அன்னபூரணிக்கும், பாரதிக்குமே குமட்டிக் கொண்டு வந்ததென்றால், நாராயணனுக்கு மூக்குக்குமேல் கோபம் ஏறி உட்கார்ந்துகொண்டதில் தான் ஆச்சர்யம் என்ன? ஆனாலும், சும்மா சொல்லக் கூடாது— வந்திருந்த நபரிடம் எதையும் காட்டிக்கொள்ளாமல் எழுந்துநின்று கைகளைக் கூப்பினார்.

"மன்னிக்கணும்— நீங்க விலாசம் தவறி வந்துட்டேன்னு நினைக்கிறேன் போயிட்டு வரேளா?" கனத்த குரலில் அவர் பேசிய தோரணையும், நின்ற விதமும் 'மரியாதை கெடும் முன்னர் சென்றுவிடுங்கள்' என்கிற மிரட்டலை வந்தவருக்கு துல்லியமாய்ப் புரியவைத்திருக்க வேண்டும்.

அசட்டுச் சிரிப்புடன் அவர் எழுந்துபோக, நாராயணன் உள்ளே வந்தார். மனைவியையும், மகளையும் கண்கள் சிடுங்க ஏறிட்டுப் பார்த்தார்.

இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு பற்களைக் கடித்தபடி உறுமினார்.



"இப்ப திருப்தியா? இந்த மாதிரி எவனாவது வெக்கத்தை இல்லாம பேசிட இடம் கொடுத்துடுவோமோன்னுதான் பயந்தது சரியாப் போச்சு! நாட்டியத்தப் பத்தி ஒரு வார்த்தை இல்ல, ஆனா, வாளிப்பாம்... அழகாம்... நளெச்சஸ்... ஸ்விமிங் காஸ்ட்யூம்ல ஒரு டான்ஸ்னு சொல்லலை... அதான் பாக்கி... போறும் அன்னம்... இப்படி ஒருத்தன் வந்து பேசறது இதுவே முதலாவும் கடைசியாவும் இருக்கட்டும். ஆடின வரைக்கும் போறும்... நாளைக்கு கல்யாணம் பண்ணின்டு ஒருத்தராத்துக்குப் போவேண்டிய பொண் இவ... அத நினைப்புல வச்சிக்காம இருந்துட்டு, அப்புறமா தலையில கைய வச்சுண்டு அழறதுல அர்த்தம் இல்ல... 'இனஃப் இஸ் இனஃப்...' என்ன, புரியறதா?"

புரியாமல் என்ன?

அன்று மாலையே பாரதி மாஸ்டர் வீட்டுக்குச் சென்றாள்.

நல்ல வேளையாக அடுத்த மாசம் வந்த யுனிவர்ஸிடி எக்ஸாம்ஸ் சரியான காரணமாகக் கை கொடுத்தது.

"படிக்க எக்கச்சக்கமா பாடம் இருக்கு ஸார், பைனல் எக்ஸாம்ஸ் இல்லையா? அதனால, பரீட்சைகள் முடியற வரைக்கும் கச்சேரியோ, பாடமோ வாண்டாம்னு அப்பாவும் அம்மாவும் அபிப்ராயப் படறா..."

பரீட்சைகள் முடிந்து இரண்டு மாசங்கள் ஆகி, முடிவுகளும் வெளியாகிவிட்டன. ஆனால், திரும்ப டான்ஸ் க்ளாஸ் மட்டும் இன்னமும் ஆரம்பிக்கப் படவே இல்லை...

மதிய வேளைகளில் அறைக் கதவைச் சாத்திக் கொண்டு, டேப் ரெக்கார்டரில் கச்சேரி ஒன்றில் எடுத்த பாட்டைப் போட்டு விட்டு, வேர்க்க விறுவிறுக்க ஒரு மணிநேரம் போல தனக்குத் தானே ஆடிக்கொள்வதோடு சரி...

அப்பாவின் முன்னால் நின்று 'மாஸ்டரை வரச் சொல்லலாமா?' என்று கேட்க வேண்டும் என்கிற

நினைப்பே உடம்பை உதறிப் போட வைக்கிறது; அப்புறம் மாஸ்டர் வந்து பாடம் எடுப்பதாவது, கச்சேரி கொடுப்பதாவது, எங்கே?

அட— கச்சேரி கொடுக்க வேண்டாம்— மாஸ்டர் வந்து கட்டுக் குச்சியைத் தட்டி, கனத்த குரலில் ஜதி சொல்ல ஆடுவதற்காவது சம்மதிக்கக் கூடாதா? என்னதான் டேப்பைப் போட்டுக் கொண்டு ஆடினாலும் ராஜமாணிக்கம் ஸார் 'அரை மண்டி பத்தாது... உக்காரு...கையை எறக்கு, இன்னும் கூடப்ப வளை' என்று அதிகாரமாய்த் திருத்திக் கொண்டே ஆடுவதற்கு ஈடாகுமா?

யாரோ என்னமோ விவரம் புரியாமல் பேசிவிட்டுப் போனதற்கு அப்பா ஏன் அந்தளவு அடிபட்டுப் போக வேண்டும்?

பொது இடத்தில் ஆடினால் நாலு பேர் நாலு விதமாகத்தான் பேசுவார்கள், விமர்சிப்பார்கள். இந்தக் காதால் கேட்டு அந்தக் காதால் வெளியே விடாமல், அந்த அர்த்தமற்ற பேச்சினால் புண்பட்டுப் போனால் எப்படி?

'ஸினிமாவில் நடிக்க விருப்பம் இல்லை' என்று சொல்லி அனுப்பி விட்டால் ஆயிற்று... அதை விட்டு விட்டு நாட்டியமே கூடாது என்றால்?

ஏக்கம் கோபமாக மாற, சட்டென்று கண்கள் கலங்க முற்பட்டன.

கால்களை மூட்டுக் கொடுத்து முகத்தை அவற்றில் பதித்து, மூக்கை உறிஞ்சியபோது "'இங்கயா இருக்க நீ?'' என்று கேட்டுக் கொண்டே அன்னபூரணி மொட்டை மாடியில் நுழைந்தாள்.

''எங்கடா ஆளையே காணமேனு பாத்தா, என்ன பண்றே, இந்த வெயில் வீணாகாம!''



அருகில் வந்தவள் பெண்ணின் கண்கள் கலங்கி இருப்பதைக் கவனித்துவிட்டு லேசான பதட்டத்துடன் ''என்ன பாரதி?'' என்றாள்.

''ஒண்ணுமில்ல...''

''தலையை வலிக்கறதா? உடம்புக்கு முடியலையா? எதுவானாலும் இப்படி வெயில்ல வந்து உக்காந்துண்டா ஜாஸ்தி ஆகாதா? என்ன பொண்ணுடிம்மா நீ... முதல்ல எழுந்திரு...''

பாரதி எரிச்சலுடன் "போம்மா..." என்றாள். தொடர்ந்து ''டான்ஸ் க்ளாஸ் ஆரம்பிக்கறது பத்தி அப்பாகிட்ட பேசப் போறயா, இல்லியா?'' என்று கேட்க,

அன்னபூரணி 'இல்லை' என்று தலை அசைத்தாள்.

"ஏன்?"

''புரியாத மாதிரி கேக்காத பாரதி— அப்பாதான் அன்னிக்கே தெளிவா சொல்லிட்டாரோன்னோ?"

சரக்கென்று தலையை நிமிர்த்தி பாரதி கத்தினாள்.

''ஊரை நினைச்சே வாழ முடியுமாம்மா? நாம உசத்தியா எதாவது பண்ணாலும் அது பேசும், தப்பா செஞ்சாலும் பேசும்... நம்ம மனசுக்கு எது சரினு தோணறதோ அத தொடர்ந்து செய்யறத விட்டுட்டு, நாலு பேர் என்ன சொல்லுவாளோனு பயந்து பயந்து நடக்கறது அநியாயம் இல்லையாம்மா?''

அன்னபூரணி 'அட அசடே' என்கிற அர்த்தத்துடன் சிரித்தாள்.

"உங்கப்பா ஊருக்குப் பயந்துண்டு உன்னை ஆட வாண்டாம்னு சொல்லலை பாரதி... அவருக்கே ஆதிலேந்தே ஸ்டேஜ்ல, நாலு பேர் பாக்க ஆடறது சம்மதம் இல்லைதானே... தமக்காகப் பொறுத்துண்

டார்... இந்த மாதிரி ஒரு ஆள் ஏடாகூடமா பேசினதும், அவருக்குப் பொறுக்க முடியாமல் வேண்டாம்னு நிறுத்திட்டார்... அதுல என்ன தப்பு ?"

"எவனோ எதுவோ பேசினா அதுக்கு நான் எனக்குப் பிடிச்ச விஷயமா கொடுத்துத் தண்டனை அனுபவிக்கணுமாம்மா ? டான்ஸ் ஆடாம என் கை, கால், உடம்பெல்லாம் பரபரக்கறது உனக்குக் கூடவாம்மா புரியல ?"

அன்னபூரணி குனிந்து மகளின் முகவாயைப் பற்றித் தன் பக்கம் திருப்பி, கரிசனத்துடன் பேசினாள்.

"நன்னாவே புரியறது... ஆனா, அப்பாவோட முடிவும் நியாயமா இருக்கே பாரதி... உன்னைப் பெத்தவா நாங்க... உன் எதிர்காலத்தைப் பத்தி நாங்க யோசித்துப் பாக்காம இருக்க முடியுமா ? ம் ? ஆடாம நீ ஏன் இருக்கணும் ? அதான் தினமும் மத்தியானம் டேப்ப போட்டுண்டு ஆடறியே !"

பாரதி அம்மாவின் கையைத் தள்ளி விட்டாள்.

"அப்படி ஆடறதுல எனக்குத் திருப்தி வரலைம்மா... எவ்வளவு சிரத்தையோட தான் ஆடறேன்னு உனக்குத் தெரியுமே... சாத்தின அறைக்குள்ள ஆடினாப் போதும்னு நினைக்கறியா ?"

அன்னபூரணி உடனே பதில் கூறாமல் மௌனித்தாள். ஒருவித இல்லாமையுடன் புன்னகைத்துச் சமாளிக்கப் பார்த்தாள். யோசனை பண்ணிக்கொண்டே நிதானமாய்ப் பேசினாள்.

"அப்பாவ மீறிண்டு இது விஷயமா என்னால ஒண்ணும் பண்ண முடியாது பாரதி. அவர் எது சொன்னாலும் அது உன் நன்மைக்குத்தான். அதை மட்டும் நினைப்புல வச்சுக்கோ... ஒண்ணு சொல்றேன் கேக்கறியா ? நீ நல்ல மாஸ்டர்கிட்ட வருஷம் போல டான்ஸ் கத்துண்டாச்சு; அறிஞ்சவா பாராட்டற அளவுல பத்துப் ப



கச்சேரியும் கொடுத்தாச்சு... நம்பள மாதிரி குடும்பத்தைச் சேர்ந்த பொண்கள் நிறையப் பேருக்குக் கிடைக்காத வாய்ப்பு உனக்கு இத்தனையாவது கிடைச்சிருக்கு. அத நினைச்சு நீ சந்தோஷப்பட்டுக்கணும்னே நான் நினைக்கறேன். ஆச்சு, இன்னும் ஒண்ணு ரெண்டு மாசத்துல உனக்குக் கல்யாணம் பண்ணிடணும்னு உங்கப்பா தீவிரமா இருக்கார். நல்ல வரனா குதிர்ந்து கல்யாணம் ஆகி, காலா காலத்துல உனக்கு ஒரு பொண்ணும் பொறந்துட்டா, அப்புறமா உன் ஆசையெல்லாம் அவ மூலமா நிறைவேத்திக்க வேண்டியதுதானே ! ஏழாம் வயசுல டான்ஸ் கத்துக்கொடுக்க ஆரம்பிச்சு, பத்தாவது வயசுல அரங்கேத்தம் பண்ணு இந்தியா மட்டுமல்ல, உலகம் பூரா கச்சேரி பண்ற அளவுக்கு அவள கொண்டு வாயேன். யார் தடுக்கப்போறா ? ம் ? என்னால என் பொண்ணுக்குச் செய்ய முடிஞ்சது இவ்வளோ தான்... உன் பொண்ணுக்கு உன்னால முடிஞ்சத நீ பண்ணு... நானும் பாத்து சந்தோஷப்படறேன்... அத விட்டுட்டு... என்னம்மா நீ... சதா இப்படி மறுகிண்டு..."

அம்மா பேசப் பேச, அட இப்படி ஒரு வழி கூட இருக்கிறதா நம்மைத் திருப்திப் பண்ணிக்கொள்ள... நம் லட்சியத்தை பூர்த்தி செய்ய... என்கிற எண்ணம் முதன் முதலாய்த் தோன்ற, பாரதி நிதானித்தாள். தொடர்ந்து— அவகாசம் கிடைத்த போதெல்லாம் முகம் தெரியாத சின்னப் பெண் ஒருத்தியை மேடை ஏற்றி அபாரமாகப் பரதம் ஆடச் செய்து அந்தக் கற்பனை தந்த சந்தோஷத்தில் திளைக்க முற்பட...

இந்த விருப்பம் வெறும் கனவாக நிற்கவேண்டியது இல்லை ; நனவாவது சாத்தியம்தான், என்பதுபோல சீக்கிரமே திருமணப் பேச்சும் ரொம்பத் தீவிரப்பட ஆரம்பித்தது.

## 6

| | | |
|---|---|---|
| **பேர்** | — | ரமணி |
| வயசு | — | இருபத்தியேழு |
| படிப்பு | — | பி.ஏ. |
| வேலை | — | பம்பாயில் தனியார் நிறுவனத்தில் |
| சம்பளம் | — | எல்லாமாகக் கிட்டத்தட்ட தொள்ளாயிரம் |
| குடும்பம் | — | பெற்றவர்களுக்கு ஒரே பிள்ளை, நாத்தனார், கொழுந்தனார் என்கிற பிடுங்கல் கிடையாது. அப்பா மகாலிங்கம் தஞ்சாவூரில் பரம்பரை மிராசுதார். |

தெரிந்தவர் மூலமாய் ஜாதகம் கைக்கு வந்தது. 'வெகு பொருத்தம்' என்று ஜோஸ்யர் சொல்ல, இரண்டு நாட்களுக்கு முன் நேரில் சந்திப்பதுதான் மரியாதை என்று நாராயணன் தஞ்சைக்குச் சென்று வரும் வரை மேற்சொன்ன விவரங்கள் மட்டுமே பாரதிக்குத் தெரியும்.

ஆனால் சற்றும் எதிர்பாராத வகையில் விடுமுறையில் ஊருக்கு வந்திருந்த ரமணியைச் சந்தித்ததோடு, மகாலிங்கம் தம்பதியினரின் பண்பான உபசரிப்பிலும், அவர்களது வீடு அந்தஸ்தான வாழ்க்கை இத்யாதிகளாலும் கவரப்பட்ட நாராயணன் திரும்பி வந்து வாய் ஓயாமல் தஞ்சாவூர் வரனைப் பற்றிப் பேச, பேசப் பாரதியினுள் கற்பனை நீரூற்றாகக் கிளம்பியது.

"நிறைகுடம் தளும்பாதுனு கேள்விப்பட்டிருக்கேன் அன்னம், இப்பத்தான் அதோட அர்த்தம் முழுமையா புரிஞ்சுது. மகாலிங்கம்— பார்வதி; என்ன பேர்ப் பொருத்தம் பாத்துக்கோ... பேர்ல மட்டும் இல்லை, பாக்கறத்துக்கும் ரெண்டு பேரும் சாட்சாத் அந்த பார்வதி பரமேஸ்வரன் மாதிரியே இருக்கா... என்ன பதவிசு... என்ன அடக்கம்! வீடு அரண்மனை மாதிரி 'ஜோரா'னு இருக்கு. சாப்பிட்டு கை அலம்பக் கொல்லைப் பக்கம் போனப்போ கவனிச்சேன்— கொட்டில் கொள்ளாம தாமலைஞ்சு மாடு! அம்பாரமா வைக்கப்போர்...கண்ணுக்கெட்டின வரைக்கும் தென்னை, மா, எலுமிச்சை மரங்கள்! எங்கப் பாரு லக்ஷ்மி கடாட்சமா இருக்குன்னாமு அத்தான் சொன்னவன் தான்— 'டே— இந்த சம்பந்தத்தை விட்டுடாதே... புளியங்கொம்பு இது...' ஆனா இம்குணத்திலேயும் அந்தஸ்திலேயும் இத்தனை உசந்த இடமா இருப்பாங்கனு நான் வாஸ்தவமா எதிர்பார்க்கல... அந்தப் பையன் ரமணியச் சொல்லணும்... அத்தனை செல்வத்துக்கும் ஏக அடிப்படை பி.ஏ. படிப்பு. கண்ணுக்கு ராஜாவாட்டம் இருக்கான்... இத்தனையும் ஒண்ணா சேர்ந்தும் துளி கர்வம் இல்லையே அன்னம்! இந்தக் காலத்துல இப்படியொரு பிள்ளையானு நம்பமாட்டாம இருக்கு... இந்த எடம் மட்டும் குதிரணும்னா நம்ம பாரதி போன ஜென்மத்துல ரங்கநாதனுக்கு பாலும் தேனுமா குளிரக்குளிர அபிஷேகம் பண்ணியிருக்கணும், அப்பதான் இத்தனை அதிர்ஷ்டமான புருஷன் வாய்க்க முடியும்... எனக்கு சந்தேகமே இல்ல... நான் அடிச்சுச் சொல்லுவேன்..."

தஞ்சாவூர்க்காரர்களின் தோட்டம், வீடு, அந்தஸ்தைப் பற்றி, பெரியவர்களின் உயர்வான குணம் பற்றி, முக்கியமாய் ரமணியின் கம்பீரம் கலந்த புத்திசாலிப் பேச்சு, நடத்தை பற்றி அப்பா விவரித்ததை வைத்துக் கொண்டு தனிமையிலும், உறங்கப் போகும் முன்னரும் கண்களை மூடிக் கொண்டு அத்தனைக்கும் மனசுக்குள் உருவம் கொடுத்துப் பார்க்கப் பாரதி முயன்றாள்.

சினிமாக்களில் வரும் இரும்பில் பெரிய கம்பிக் கேட்டும், மதில் சுவரும், உயரமாய் வளர்ந்த மரங்களும் கொண்ட பண்ணையார் பங்களா மாதிரியான வீடு.

பெரிசு பெரிசாய்க் கூடங்கள், வளைந்து செல்லும் மர மாடிப்படி, சுவர்களில் மாட்டப்பட்ட அந்தக் காலப் படங்கள், அறை வாசல்களில் தொங்கின மணிகளால் ஆன திரைச் சீலைகள், ஜரிகை வேஷ்டியும், கனத்த கண்ணாடியும் அணிந்து ஊஞ்சலில் உட்கார்ந்திருக்கும் மகாலிங்கம் அருகில் வெற்றிலைப் பெட்டி, ஊஞ்சலின் வேலைப்பாடு மிகுந்த பித்தளைச் சங்கிலியைப் பிடித்தபடி, இரட்டை பேட்டு ஜரிகை போட்ட பட்டுப் புடவையும், மூக்கின் இரண்டு பக்கமும் ஜொலிக்கும் வைரபேசரிகளும், பிச்சோடாவில் வீட்டில் பூத்த ஜாதிப்பூக்களை அடர்த்தியாய்க் கட்டின வேணியுமாய் பார்வதி.

மாடிப்படி ஏறிப் போனால் படுக்கை அறை. உயரமான அந்தக் காலத் தேக்கு மரக்கட்டில், மொட்டை மாடி தென்னங் கீற்றுக்களூடே தெரியும் நிலா.

இத்தனையும் சுத்தபத்தமாய்க் கற்பனை பண்ண முடிந்தவளால் ஏனோ ரமணியை மட்டும் அத்தனை கச்சிதமாய் உருவாக்க முடியவில்லை என்பது நிஜம்.

கண்ணுக்கு ராஜா மாதிரி இருக்கிறார் என்பது மட்டும் தான் தெரியும். மற்றபடி உயரமா, குள்ளமா, குண்டா, ஒல்லியா, மீசை உண்டா, கிடையாதா, கண்ணாடி அணிபவரா, அணியாதவரா? இன்னும்...

மண்ணாங்கட்டி... ஒரு விவரம் தெரியாத நிலையில் ஆளை எப்படிக் கற்பனை பண்ணுவது?

பாரதிக்குள் எரிச்சல் மண்டியது.

இத்தனை பக்கங்களையாய் மற்ற விஷயங்களைப்பற்றி விசாரித்துக்கொண்டும், அவர்கள் பார்ப்பதற்காக பாரதியின் படத்தைக் கொடுத்துவிட்டும் வந்திருக்கும் அப்பா 'பிள்ளையின் படம் ஒன்று தாருங்கள்— என் மனைவிக்குக் காட்டவேண்டும்' என்று கேட்டு வாங்கி வந்திருந்தால் எத்தனை நன்றாக இருந்திருக்கும்.



ஆள் கறுப்பா, சிகப்பா, வாட்டசாட்டமா, இல்லை நோஞ்சான் ரகமா என்பது கூடத் தெரியாமல் என்ன அவஸ்தை இது!

சட்டென்று பாரதிக்குக் கண்ணதாசனின் பாட்டொன்று நினைவுக்கு வந்தது.

ராதைக்கேற்ற கண்ணனோ
சீதைக்கேற்ற ராமனோ
கோதைக்கேற்ற கோமகன் யாரோ?—அழகுக்
கோட்டைக்கேற்ற காவலன் யாரோ?
............
தேக்கு மரத்தைப் போல உருண்டு திரண்டிருப்பானோ?
மூக்கும் முழியும் பார்க்கப் பார்க்க மோகத்தைத் தருமோ
முன்னழகைக் கண்டவுடன் மூச்சு நின்றிடுமோ—

ஸினிமாவில் மணமகனைக் காணாமல், அவர் யாரென்று தெரியாமல் தவிக்கும் கதாநாயகியை விளையாடி நூறு விதமாய் கேள்வி கேட்டுச் சீண்டிய காட்சி நினைவுக்கு வந்த போது அவள் நிலையிலேயே தானும் இருப்பது புரிந்தது. வெட்கம் கலந்த புன்னகை உதடுகளை ஆக்ரமிக்க, ரமணி எப்படி இருப்பார் என்று கற்பனை செய்து பார்க்க எழுந்த ஆவலை பாரதி கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

சரி—உருவத்தை வர்ணிப்பது முடியாது என்றால் பெயர் பொருத்தம் சரியா என்று பார்க்கலாமா என்று எதற்கும் அடங்காத மனசு குதிக்க, பாரதியின் கவனம் மாறியது.

எம். ரமணி
ரமணி மகாலிங்கம்
பேர் நன்றாகத்தான் இருக்கிறது.
மிஸஸ் ரமணி.
மிஸஸ். ஆர். பாரதி

மிஸஸ் பாரதி ரமணி,

எந்தப் பேர் தேவலை? எது கேட்க நன்றாக இருக்கிறது?

எழுத எது சுலபமாகவும், அதே சமயத்தில் கவர்ச்சியாகவும் இருக்கும்?

சரசரவென்று எழுந்த ஆர்வத்தைத் தணிக்க இயலாமல் அறைக்குச் சென்று தனியாக அமர்ந்தாள். கணக்கு புஸ்தகத்தில் வெற்றுத்தாள் ஒன்றை வைத்து, யாரும் பார்க்கவில்லை என்பதை உறுதி பண்ணிக் கொண்டு மிஸஸ் ரமணி, பாரதி ரமணி, என்று கையெழுத்துப் போட்டுப் பார்த்த நிமிஷத்தில் சடக்கென்று ஞானோதயம் வந்த மாதிரி உடம்பு உதறிப் போட நிமிர்ந்தாள்.

என்ன அசட்டுத்தனம் இது!

வெள்ளிக்கிழமைதான் பெண் பார்க்கவே வரப் போகிறார்கள்.

இன்னும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளக்கூட இல்லை; இருவருக்கும் பிடிக்க வேண்டும், மற்ற விஷயங்கள் படிந்து வரவேண்டும்— பெரியவர்கள் இந்த சம்பந்தத்தை ஏற்க வேண்டும். இன்னும், இன்னும்...

சே— அதற்குள் என்ன வேண்டாத கற்பனை இது!

ஒரு வேளை அவருக்கு என்னையோ, இல்லை எனக்கு அவரையோ பிடிக்காமல் போகலாம் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு நிதானத்தோடு இருக்காமல் என்ன பைத்தியக்காரத்தனம் இதெல்லாம்!

"சந்தையில மாடு வாங்கற மாதிரி பொண்களை நிக்க வைச்சு பாடச் சொல்றதுலேயும், நடக்கச் சொல்றதுலேயும் எங்களுக்கெல்லாம் நம்பிக்கை இல்ல. உங்காத்துப் பொண்ணோட போட்டோவ பாத்தோம். எங்க பையனுக்குமே புடிச்சிருக்கு. அதான் வெள்ளிக்கிழமை குடும்பமா பொண் பாக்க வரத்துக்கு ஒத்துண்



டுட்டோம். வீடு விடாப் போய் பொண்களைப் பாத்துட்டு பஜ்ஜி, சொஜ்ஜி தின்னுட்டு வர்றதுல எங்களுக்கும் உடன்பாடு இல்ல, எங்க பிள்ளைக்கும் விருப்பம் இல்ல. நாங்க மொத மொதல்ல பொண் பாக்கறதுக்கு வரப் போறதே உங்காத்துக்குதான். பகவான் இதுலேயே நிச்சயமாயிடுத்துன்னா எங்களவிட சந்தோஷப்படறவா யாரும் இருக்க முடியாது"— என்று மகாலிங்கம் மனைவி, மகனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு சொன்னதை அம்மாவிடம் திரும்பிச் சொல்லி, "அந்தக் குடும்பத்துல எல்லாருமே நாகரிகம் தெரிஞ்சவாளா இருக்கா அன்னம்— பொண்ணுக்கும் பிள்ளைக்கும் பிடிச்சு, இந்த சம்பந்தம் குதிர்ந்தா, நாம மகா அதிருஷ்டக்காராதான்" என்று குரல் குழைய அப்பா சொன்ன வார்த்தைகள் கொடுத்த தைரியத்தில்தானா இப்படிப்பட்ட கற்பனைகள் எழுகின்றன.

காரணம் எதுவாக இருப்பினும் எதுவும் நிச்சயமாகும் முன் வேண்டாத கற்பனையில் ஈடுபடுவது கூடாது. மானசீகமாகக் காதல் வசப்பட வேண்டியது, அப்புறம் பிடிக்கவில்லை என்று ஆகிவிட்டால் உலகமே அஸ்தமித்துவிட்ட நினைவில் 'உலகே மாயம், வாழ்வே மாயம்' என்று மனசுக்குள் வெதும்ப வேண்டியது.

தர்க்க ரீதியாக விளக்கம் எழுந்ததும் பாரதி புத்தகத்தை மூடி வைத்தாள்.

சரி— கற்பனை வேண்டாம். ரொமான்டிக்காக எந்த ரீதியிலும் சிந்திப்பதும் வேண்டாம். ஆனால், ப்ராக்டிகலாக யோசித்துப் பார்ப்பதில் தவறு இல்லையே!

நாட்டியம் என்றால் எனக்கு உயிர். நாட்டியத்தில் ஆர்வம் இருந்து என்னைத் தொடர்ந்து ஆடவும், மேடைக் கச்சேரிகள் செய்யவும் அனுமதித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

தஞ்சாவூர்க்காரர்களுக்கு எதிலுமே ரசனை அதிகம் என்றும், காவேரிக் கரையில் வளர்ந்தவர்களுக்குப் பாட்டும் நடனமும் ரத்தத்தில் கலந்திருக்கும் என்றும்

சொல்வார்களே! அப்படியென்றால் இவர்களுக்கும் பரதநாட்டியத்தில் ஈடுபாடு இல்லாமலா போகும்?

இருக்கும், கட்டாயம் இருக்கும். தவிர... இருப்புக் கொள்ளாமல் தனக்குத் தானே குருட்டு யோசனை செய்து, கேட்டுக்கொண்ட இத்தனை கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் அந்த வெள்ளிக்கிழமை தப்பாமல் பதில்கள் கிடைக்கவே செய்தன.

ரமணி நல்ல உயரம்தான். சிகப்பும் கூட... மீசை கிடையாது, ஆனால் கண்ணாடி உண்டு.

"பிள்ளைக்கும் பெண்ணுக்கும் பிடிச்சாச்சு... இனிமே எதைப் பத்தியும் கவலைப்படாதீங்கோ... சுபஸ்ய சீக்கிரம்... நானு முஹூர்த்த நாள் குறிச்சு அனுப்புங்கோ... எங்களுக்கு சௌகரியப்படறதை தெரிவிக்கிறேன். மத்தபடி வரதட்சணை, சீர், செனத்தினு எதைப்பத்தியும் பேச வேண்டிய அவசியமே கிடையாது. இத்தனை வருஷமா உங்க பொண்ணா வளர்ந்த குழந்தை எங்காத்துக்குப் பொண்ணா வரப் போறா... அப்போ நான்... பொண் குழந்தை இல்லாத எங்காத்துக்கு மகாலட்சுமி மாதிரி பொண்ணை நீங்க அனுப்பறதுக்கு ஆயுசு பர்யந்தம் நாங்கதான் கடமைப்படப் போறோம் — அதனால, வேண்டாதது குறிச்சு கவலைப் படாம, உங்களுக்குத் தெரிஞ்சது, முடிஞ்சது செய்யற ஏற்பாட்ட சந்தோஷமா கவனியுங்கோ... என்ன பார்வதி... நான் சொன்னது சரிதானே?"

மகாலிங்கம் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அட்சர லட்சம் பெறும். அந்தக் குடும்பத்தின் பண்பை எடுத்துக் காட்ட இதைவிடச் சிறந்த உதாரணம் தேவையா என்ன?

பார்ப்பதற்கு ஆள் எப்படி என்றும் தெரிந்து விட்டது; குடும்பத்தாரின் உயர்ந்த குணமும் புரிந்து விட்டது. கூடவே, காவேரிக்கரை காலைவாரி விட்டு விட்டதையும் புரிந்து கொள்ள முடிந்தது.



பாட்டு, நாட்டியத்தை அவ்வப்போது கேட்டு, பார்த்து ரசிக்கும் அளவுக்கு ரசனை உண்டே தவிர தாலி கட்டிய மனைவியை மேடை ஏறி ஆடச் சொல்லிப் பார்த்து மகிழ்கிற அளவுக்கு இல்லை என்பது அடுத்து வெளிப்பட்ட பேச்சுகளிலிருந்து உள்ளங்கை நெல்லிக்கனியானது!

உள் அறையில் சம்பந்திப் பெண்மணிகள் ஒன்றாக அமர்ந்து பாரதியின் திறமைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில் பார்வதியிடம் டான்ஸ் ஆல்பத்தை அன்னபூரணி கொண்டு நீட்டினாள்.

ஒவ்வொரு படமாக ஆர்வமாகப் பார்த்து, சுப்புடுவின் விமர்சனத்தை சந்தோஷத்துடன் பார்வதி படித்த போது மகள் தன்னோடு இருப்பதை உணர்ந்தவளாய் அன்னபூரணி தயக்கத்தோடு, "மாப்பிள்ளையும், மத்தவாளும் பாரதியோட டான்ஸைப் பார்க்கணும்னு நினைச்சா, இவ அப்பாவை விட்டு கச்சேரிக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லட்டுமா?" என்று சின்னக் குரலில் கேட்க, படித்துக் கொண்டிருந்த விமர்சனத்தை தாழ்த்த பார்வதி புன்னகை மாறாமல், ஆனால் தயங்காமல் உடனே பதில் கூறினார்.

'பாரதி டான்ஸைக் கட்டாயம் எங்களுக்குப் பார்க்கணும்தான்'; ஆனா, அதுக்காக பப்ளிக்கா கச்சேரி ஏற்பாடு பண்ண வேண்டியதில்லை மாமி — ஆத்து மட்டுக்கு ஆடிக் காட்டினா போதும்... எப்படியும் நகை நட்டு, புடவை வாங்கறது நாங்க இனிமே அடிக்கடி முஹூர்த்தத்துக்கு முன்னால மெட்ராஸுக்கு வருவோம். அப்படி ஒருதரம் வர்றப்போ டான்ஸ் ஆட ஏற்பாடு பண்ணிட்டேன்னா பம்பாய்லேந்து ரமணியையும் வரச் சொல்லி, எல்லாரும் ஒண்ணாவே பாத்துடலாம்..."

அவ்வளவுதான். இதற்கு மேல் விஷயமாகப் பேச யாரும் துணியவில்லை.

ஆனால், சொன்னபடி அடுத்த மாசமே வீட்டோடு பாரதியின் நடனக் கச்சேரிக்கு ஏற்பாடு பண்ணப்பட்ட

தென்னமோ உண்மை. ஒன்றரை மணி நேரக் கச்சேரி. ராஜமாணிக்கம் மாஸ்டர், தன் குழுவினரோடு அமர்ந்து நட்டுவாங்கம் செய்ய, அலாரிப்பு, சப்தம், வர்ணம், கிருஷ்ணா நீ பேகனே பாரோ, கருகலாமோ ஐயா, ஆண்டாள் நடனங்களை சிரத்தையோடு பாரதி ஆடினாள். இதுவே அவள் ஆடும் கடைசி நடனக்கச்சேரி என்பதை வெளிப்படையாக யாரும் சொல்லாவிடினும் ஆண்டாளை ஆடி சபைக்கு நமஸ்காரம் செய்த போது பாரதியின் கண்களில் ததும்பிய நீர் கன்னங்களில் கோடு போட்டுக் கொண்டு இறங்கியது.

வந்திருந்த பிள்ளை வீட்டார், 'பொதுவாக ரொம்ப நன்னா ஆடறா' என்று சொல்லிப் பாராட்டிய கையோடு இரவு உணவிற்காக அனைவரும் சென்று டைனிங்கில் சற்றும் எதிர்பாராத வகையில் தனியாக ரமணியோடு இருக்க பாரதிக்கு சந்தர்ப்பம் கிட்டியது. தன்னுடைய உயர்வான ஆட்டத்தைப் பற்றி அவர் நிச்சயம் பாராட்டிப் பேசுவார் என்கிற எதிர்பார்ப்பில் நெஞ்சு படபடக்க பாரதி நின்றது வீணாகாமல் அருகில் வந்து ரகசியமாய் ரமணி சொன்னான்:

“பாரதி—நீ எவ்வளோ அழகா இருக்கே தெரியுமா! இத்தனை அழகும் எனக்குச் சொந்தமுன்னு நினைச்சா பெருமையா இருக்கு... ஐம் ரியலி லக்கி...”

ரமணி உத்தமமானவர், நல்லவர், கெட்டிக்காரர், அருமையான மனிதர், அவரைக் கணவராக அடையக் கொடுத்துத்தான் வைத்திருக்க வேண்டும் என்கிற சந்தோஷம் நெஞ்சை அடைத்துக் கொண்டிருந்தாலும் நடனத்தை இனி தொடருவது சாத்தியமே இல்லை என்பதை ரமணியின் அந்தப் பேச்சு நுட்பமாய் உணர்த்திவிட, திருமணத்தன்று கழுத்தில் தாலி ஏறிய சில நிமிஷங்களுக்குள் அவளை வாழ்த்த ராஜமாணிக்கம் ஸார் அருகில் வந்த போது கண்களில் நீர் மல்க, உணர்ச்சி வயப்பட்டு பாரதி சொன்னாள்:

“இன்னியிலேந்து சரியா எட்டு வருஷம். நீங்க பார்த்துண்டே இருங்கோ ஸார்—என் பொண்ணை உங்க



கிட்ட கத்துக்க வச்சு, இவளை மாதிரி அற்புதமா பரத நாட்டியம் ஆட யாராலயும் முடியாதுன்னு—பேர் வாங்க வைக்கறேனா இல்லியான்னு பாருங்கோ...ஸார்...”

## 7

கண்கள் மசமசத்தன.

அடிவயிற்றிலிருந்து இனம் புரியாத அவஸ்தை நண்டு போல எட்டுக் கால்களுடன் நகர்ந்து மேலே வந்து தொண்டைக் குழியில் பிராண்டியது.

நாவால் உதட்டை ஈரம் பண்ணிக் கொண்டு கண்கள் கலங்கிவிட்டதால் மங்கலாய்த் தெரிந்த புகைப்படத்தை பாரதி உற்று நோக்கினாள்.

நடுவில் அவள். வலப்பக்கம் ரமணி, இடப்பக்கம் சற்றுத் தள்ளி ராஜமாணிக்கம் மாஸ்டர். கல்யாண ரிஸப்ஷனில் எடுக்கப்பட்ட படம்.

“இன்னியிலேந்து சரியா எட்டு வருஷம்... நீங்க பாத்துண்டே இருங்கோ ஸார். என் பொண்ணை உங்க கிட்ட டான்ஸ் கத்துக்கவச்சு, இவளை மாதிரி அற்புதமா பரதநாட்டியம் ஆட யாராலயும் முடியாதுனு பேர் வாங்க வைக்கிறேனா இல்லையானு பாருங்கோ... ஸார்...”

ஆள்காட்டி, கட்டை விரல்களால் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டவள் இரண்டு தரம் இமைகளைச் சிமிட்டி திரண்டிருந்த நீர்த்திரையை அகற்றினாள். சற்றே முன்னால் குனிந்து போட்டோவில் தெரிந்த தன் உருவத்தை அழுத்தமாகப் பார்த்தாள்.

இடுப்பில் டிஷ்யூ புடவையும், கழுத்தில் மல்லிகை மாலையுமாய் நின்றிருந்தவளின் கண்களில் எதிர்காலத்

தைப் பற்றின கனவுகள் வண்ணவண்ணமாய் வெளிச்சம் போடுவதை இப்போதும் புரிந்து கொள்ள முடிந்தது.

ஏன், ஒவ்வொரு முறை இந்த ஆல்பத்தைப் பார்க்கும் போதும் தவறாமல் விக்ரம் 'உன் கண் என்னம்மா அப்படி ஜொலிக்கிறது! கண்ணுக்குள்ள ஏதாவது ஸ்பெஷல் பிளாஷ் வச்சிருந்தியா என்ன?' என்று வியப்புக் கலந்த குரலில் சீண்டுவதும்,

அவன் இப்படி வினவும் போதெல்லாம் 'அட பிளாஷ்"ம் இல்ல, ஒண்ணும் இல்ல... ஐயாவ கல்யாணம் பண்ணிண்ட குஷில அம்மா இருக்காங்க, அதான்' என்றோ,

'சில மனுஷாகிட்ட மிருக குணம் ஏதாவது பிறவிலேந்தே இருக்கும் விக்கி— ராத்திரி நேரத்துல ரோடுல போறப்ப மாடு, ஆடு, நாய் மேல லைட் பட்டதும், கண்ணு மட்டும் பளபளப்பா மின்னுமே கவனிச்சிருக்கியா? அந்த மாதிரிதான் உங்கம்மா கண்ணும்... முத நாள் ராத்திரி பார்த்ததும் பயந்து கூட போயிட்டேன்னா பார்த்துக்கோயேன்'— என்றோ, 'மூட்' இருந்தால் மகனோடு சேர்ந்து ரமணியும் விகல்பமாய் அவளைச் சீண்டுவதும் உண்டுதான்...

'ப்ச்... உதட்டை ஒரு பக்கமாக இழுத்துச் சூள் கொட்டின பாரதி அலுப்புடன் போட்டோ ஆல்பத்தை மூடினாள்.

அவர்களுக்கு எல்லா எதையும் விளையாட்டாகவே எடுத்துக் கொண்டு பேசிவிடுவார்கள்.

ஆனால், அன்றைக்குக் கனவுகள் ஏகத்துக்கு நெஞ்சில் கூத்தாடியதும், பின்னர் ஜனனத்தைக் காணாத ஆசைகளாக அலைகள் கருகி மண்ணோடு மண்ணாகப் போனதும் எனக்கு மட்டும்தானே தெரியும்!

நீளமாய்ப் பெருமூச்சொன்று வெளியாக, மறுபடியும் தொண்டையை வேதனை தண்டு வலிக்க வலிக்க பிராண்டியது.



"இன்னிலேந்து சரியா எட்டு வருஷம்... நீங்க பாத்துண்டே இருங்கோ ஸார்... என் பொண்ணை..."
எங்கே?

எட்டு போய், பதினாறு போய் இருபது வருஷங்கள் கூட ஓடிவிட்ட பிறகு அன்று போட்ட சவால் மணலில் கட்டிய வீடாக, காற்றில் உருவாக்கிய மாளிகையாகக் கலைந்து, ஒன்றுமே இல்லாமல் போனதுதானே கடைசியில் நடந்தது!

கல்யாணமான நாலாம் மாசம் அவள் ஓமட்டலும், தலை சுற்றலுமாய்ப் படுக்கத் துவங்கிய போது இவ்வளவு சீக்கிரம் குழந்தை வேண்டுமா, இன்னும் ஓரிரு வருஷங்கள் ஜாலியாக ஊர் சுற்றி, பொறுப்பு இல்லாமல் வாழ்க்கையை ரசித்துவிட்டு, பின்னர் பிள்ளை குட்டி என்று பெற்றுக்கொண்டால் போதாதா என்கிற நப்பாசை ரமணிக்குள் எழாமல் இல்லை.

பம்பாயில் தனிக்குடித்தனம் என்பதால் 'பெரியவர்களுக்கு விவரம் தெரியும் முன்னர் ரகசியமாய் விஷயத்தை முடித்துவிடலாமா?' என்று தயங்கியவாறு ரமணி பேச்சு எடுத்ததும் பாரதி பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

சட்டுபுட்டென்று பெண்ணைப் பெற்றுக் கொள்ள வேண்டும்; நினைவு தெரிந்த நாளிலிருந்து அவளுக்கு சாதம், பால் ஊட்டும் போதும், உறங்கக் கதை சொல்லும் போதும் கூட நாட்டியத்தைப் பற்றிப் பேசிப் பேசி, பரதநாட்டியத்தின் மேல் இயல்பாக ஒரு மோகத்தை ஏற்படுத்திவிட வேண்டும். அப்புறம் 6, 7 வயசான பிறகு மாஸ்டரிடம் மாணவியாக்கி... அப்புறம் பதினொரு வயதில் அரங்கேற்றம் செய்து, அப்புறம்...

மனதுக்குள் நூறு ஆசைகளுக்குத் தீனி போட்டு வளர்த்த அதே சமயத்தில் சென்னைக்குத் திரும்பி அங்கேயே சொந்த ப்ராக்டீஸ் ஆரம்பிப்பது பற்றி ரமணி சிந்திக்க முற்பட; மெட்ராஸுக்குச் செல்வது தன் எதிர்காலத் திட்டங்களுக்கு உதவி செய்யும் என்கிற சந்தோஷத்தோடு பாரதி கணவரை ஊக்குவித்தாள்.

வயிற்றுப்பிள்ளைக்கு ஏழு மாசம் ஆன கையோடு சென்னைக்கு அவர்கள் குடிபெயர்ந்தார்கள். அந்த விஜயதசமி அன்று 'ரமணி அண்ட் ஸன்ஸ்'— சார்டர்ட் அக்கௌண்டண்ட்ஸ் நிறுவனமும் துவங்கப்பட்டது.

எந்த நேரத்தில் ரமணி அண்ட் ஸன்ஸ் என்று கம்பனிக்குப் பெயர் சூட்டப்பட்டதோ, அதை நிரூபிக்கும் நிஜமாய் பத்தாம் மாசம் எட்டரை பவுண்டு குண்டு கொழுக்கட்டையாய் சி. வி. கல்யாணி நர்ஸிங் ஹோமில் கௌதம் பிறந்தான்.

பிரசவ வலியிலிருந்து மீளும் முன்னர் குழந்தையின் அழுகுரலோடு "கங்க்ராட்ஸ் பாரதி... ராஜா மாதிரி பிள்ளை பிறந்திருக்கான்" என்று டாக்டர் சந்தோஷத்தோடு கூறிய நிமிஷத்தில் அது நாழிகை நெஞ்சுகள் உயரமாய் ஆட்டம் போட்ட நீரூற்று ஒன்று பட்டென்று பூமிக்குள் அடங்கி விட்ட மாதிரி, தங்கத்தாம்பாளமாய் ஜொலித்த முழு நிலாவை கருமேகம் ஒன்று மறைத்துவிட்ட மாதிரி, வர்ண ஜாலங்களோடு காட்சியளித்த வானவில் சடாரென்று மறைந்துவிட்ட மாதிரி, மனசு குலுங்கி இருண்டு போனது அவளுக்கு மட்டுமே தெரியும்.

ஆனால், அந்த ஏமாற்றம் சில நிமிஷங்களுக்குத்தான்.

தலை கொள்ளாத முடியும், ரோஜாப்பூ மாதிரியான நிறமும், பஞ்சு போன்ற உடலுமாய் மகனை அருகில் கொண்டு விட்டபோது பெண் பிறக்காத துக்கம் மறைந்து 'அதனால் என்ன? டாக்டர் சொன்னது போல இளவரசன் மாதிரி பையன் பிறந்திருப்பதை நினைத்து சந்தோஷிக்காமல் இருப்பது அசட்டுத்தனம்; அடுத்துப் பிறப்பது கட்டாயம் பெண்ணாகத்தான் இருக்கும். என்ன, நாட்டியம் கற்பிப்பதும், அரங்கேற்றம் செய்வதும் இரண்டு வருஷங்கள் தள்ளிப் போகப் போகின்றன... அவ்வளவுதானே!' என்கிற சமாதானம் மனசில் ஏறி உட்கார்ந்து கொண்டது.



அம்மா அன்னபூரணியைத் தவிர வேறு யாரும் பாரதியினுள் மண்டிக் கிடக்கும் பெண்— நடனம் அரங்கேற்றம் ஆசையை முழுமையாக அறியவில்லை என்பதால் பேரன் பிறந்ததில் அவளது பிறந்த வீடும், முக்கியமாய் புகுந்த வீடும் அல்லோலகல்லோலப்பட்டுத்தான் போயிற்று!

பின்னே? அந்தப் பக்கம் ஒற்றைப் பிள்ளை ரமணி; அவனுக்குப் பிறகு கிட்டத்தட்ட இருபத்தி ஒன்பது வருஷங்கள் கழித்து அரண்மனை மாதிரியான தஞ்சாவூர் மாளிகையில் ஒரு குழந்தையின் குரல்— அதுவும் ஆண் சிங்கக்குட்டியின் குரல் கேட்கிறது என்றால் சும்மாவா? இதுதான் இப்படி என்றால், பாரதியின் பிறந்த வீட்டில் மூன்றும் பெண் குழந்தைகள். ஆண்வாரிசு இல்லாத வீட்டில் முதல் முதலாய் பேரன் பிறந்திருப்பது எத்தனை உசத்தி?

இந்தச் சிறப்பு மட்டுமின்றிச் சொந்த பிராக்டீஸைத் தொடங்கி ஒரு வருஷம் பூர்த்தி ஆவதற்குள் சடசட வென்று நாலைந்து பெரிய கம்பனிகளை ஆடிட் செய்யும் வாய்ப்பு வலிய வர ஒத்தையா— இந்தப் பேரன் மகா அதிருஷ்டக்காரன். வரும்போதே அப்பனுக்கு நல்ல காலத்தையும் கூடவே கொண்டு வந்திருக்கிறான்— என்கிற பேரும் சேர்ந்து கொண்டது!

கௌதமுக்கு முதலாவது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடின இரண்டாம் மாசம் பாரதி மறுபடியும் கர்ப்பமானாள்.

'இவ்வளவு சுருக்க இரண்டாவது உண்டாயிட்டா மூத்தது சவலையாயிடுமோ?' என்று மஹாலிங்கமும், பார்வதியும்.

'அடுத்தடுத்துப் பிள்ளை பெத்தா பெண்ணோட ஆரோக்கியம் கெட்டுடாதோ?' என்று அன்னபூரணியும் நாராயணனும்.

"கௌதமுக்கு ஒரு வயசானப்புறம்தான் ராத்திரி கண் முழிச்சிண்டு அவனோட மன்றாடறது கொஞ்சம் கொறஞ்சிருக்கு. அதுக்குள்ள இன்னொரு கொழந்தையா? மூத்ததுக்கும், அடுத்ததுக்கும் நாலஞ்சு வருஷமாவது 'கேப்' இருக்கறதுதானே எல்லா விஷயத்துக்கும் நல்லதுனு டாக்டர்ஸ் நினைக்கறா" என்று ரமணியும்— அவரவர் கோணத்திலிருந்து கவலைப்பட்டாலும், சேதி அறிந்த நாளிலிருந்து 'எனக்குப் பெண் பிறக்கப் போகிறாள்— நான் இத்தனை வருஷங்களாகக் கண்டிருக்கும் கனவு பலிக்கப் போகிறது' என்று பாரதி மட்டும் பழையபடி கற்பனை உலகில் மூழ்கிப் போக முற்பட்டாள்.

ஆனால், பிறந்தது விக்ரம்— அவள் எதிர்பார்த்த திசையில் பெண் இல்லை.

இந்த முறையும் பிள்ளைக் குழந்தைதான் என்று தெரிந்ததும் முதல் முறையாக அம்மாவை அணைத்துக் கொண்டு அழுததும் அல்லாமல், பால் கொடுக்கும் நேரத்தைத் தவிர அடுத்து வந்த நாட்களில் மகனை கையில் எடுத்துக் கொஞ்சக்கூட பாரதிக்குப் பிடிக்காமல் தான் போயிற்று.

ஆனால், பிரசவ வைராக்கியம் ஸ்மசான வைராக்கியம் என்பது போல நாலைந்து நாட்கள் போவதற்குள் கொட்ட கொட்ட விழிக்கும் அந்தப் பார்வையும், பால் குடிக்கும்போது திமிறிந்து 'ங்கா' என்று சிரித்து வம்புக்கு இழுப்பதும், இரவெல்லாம் அழுது அமர்க்களப் பண்ணாமல் எழுப்பி பாலைக் கொடுத்தால் குடித்துவிட்டுக் காலை வரை தூங்கும் சமர்த்தும் மனசை ஈர்க்கத் துவங்கியதும், பெண்ணாக இல்லாமல் அவன் ஆணாகப் பிறந்துவிட்ட ஏமாற்றத்தை பாரதி துளித்துளியாக மறக்க ஆரம்பித்தாள்.

சும்மா சொல்லக் கூடாது— பாரதியின் விருப்பம் போல ஒன்றுகூடப் பெண்ணாகப் பிறக்கவில்லை என்பதைத் தவிர— இரண்டு பிள்ளைகளும் லட்டுருண்டைகள்



தாம். அழகில், சமர்த்தில், திறமையில், குணத்தில், ஒருவனுக்கு ஒருவன் சோடை போகவில்லை என்பதோடு வயசு வித்தியாசம் குறைவு என்கிற காரணத்தால் அசல் ராம-லட்சுமணனாக இரண்டு குழந்தைகளும் வளைய வந்தபோது ஊரே மயங்கித்தான் போனது.

நாளாக ஆக, அந்தப் புகழ்ச்சி தந்த மயக்கத்தில் மெது மெதுவாக பாரதியும் பெண் இல்லையே என்கிற குறையை பெரிசு பண்ணாமல் திருப்தியோடு இருக்கப் பழகிக் கொண்டாள்.

கூடவே, விக்ரமுக்கு ஐந்து வயது ஆகும் வரை 'இன்னொரு குழந்தை இப்போதைக்கு இல்லை' என்கிற தீர்மானத்தோடு ரமணி செயல்பட்டதும், 'இப்போதைக்கு பெண்— நடனம்—என்கிற ஆசைக்கு இடமே இல்லை' என்று பாரதி மனசை இறுக்கிக் கொள்ளவும் உதவியது.

நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைக்கும் என்பது பழமொழி. இது பாரதி விஷயத்தில் கச்சிதமாய் பலித்தது.

ஐந்து வருஷங்களுக்குப் பின் தன் கெடுபிடியை ரமணி தளர்த்தின பிறகும் ஏனோ பாரதி அடுத்து கர்ப்பம் தரிக்கவே இல்லை. ஏமாற்றம் அதிகமாகி ஒரு சமயம் வேலை விஷயமாய் கணவர் டெல்லிக்குப் போயிருந்த தருணத்தில் தானாக வைத்தியரைச் சென்று பார்த்ததும் அன்றி 'டி அண்ட் ஸி' செய்து பார்க்கலாம் என்று அவர் கூறியதைக் கணவரிடம் கூட 'பெண் குழந்தைக்காகச் செய்து கொண்டேன்' என்று கூற வெட்கப்பட்டுக் கொண்டு "மென்ஸஸ் சரியாக இல்ல. அதான்..." என்று சொல்லிச் சமாளித்து விட்டுச் செய்து கொண்டும்... ம்ஹும், பலன் ஏதும் இல்லை.

ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என்று ஒவ்வொன்றாகக் கடந்து பத்து வருஷங்கள் ஆகி, மூத்தவனுக்குப் பன்னிரண்டும், தனக்கு முப்பத்தி இரண்டு வயசும் ஆன நிலையில் "சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்" கதையாய்—

அப்படி என்ன அதிசயப் பெண் குழந்தை? பெண் இல்லாவிட்டால் குடியா மூழ்கிவிடும்? என்கிற ஞானோதயம் பிறக்க, மனசைத் தேற்றிக் கொண்டு பெண் ஆசையை ஒரு இலுசாய் மூட்டை கட்டிவைத்தாள்.

இதற்குள் நடுநடுவில் ஏகப்பட்ட நல்ல, கெட்ட சம்பவங்கள்

கஸ்தூரியும், கமலாவும் டிகிரிப் படிப்பை முடித்ததும் காலதாமதம் இன்றி நாராயணன் தன் கடமையைச் செவ்வனே செய்ததில், நல்ல இடத்தில் இருவருக்கும் திருமணமானதும், குழந்தைகள் கூடப் பிறந்து விட்டதும் நல்ல காரியங்களில் சில...

நினைத்த நினைப்பில்லாமல் மகாலிங்கத்துக்குச் சிறுநீரகக் கோளாறு வந்து கிட்டத்தட்ட எட்டு மாசம் போல சென்னையில் வைத்து டயாலிஸிஸ் பண்ணி வைத்தியம் பார்த்தும் பலன் இல்லாமல் போக, பம்பாய் ஜெஸ்லோக் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகலாமா என்கிற முடிவுக்கு வருவதற்குள் திடுதிப்பென்று கோமாவில் ஆழ்ந்தவர், நாலே நாட்களில் இறந்து போனது குடும்பத்துக்கு ஒரு பெரிய ஷாக்!

தும்மல், ஜலதோஷம் என்றுகூட இத்தனை வருஷங்களாய்ச் சட்டைசெய்யாத மனிதருக்கு மாபாரமாய் சிறுநீரகக் கோளாறு வருவானேன்? ராஜ வைத்தியத்துக்குக் கட்டுப் படாமல் சாவைத் தழுவுவானேன்? இறக்கும்போது அவருக்கு வயது அறுபத்தி ஆறுதானே! சாகிற வயசா? ஒரு திடகாத்திரமான ஆண்பிள்ளையின் வாழ்க்கையில் மத்ய பருவம் அல்லவா அது?

கணவரின் வைத்தியத்துக்காகச் சென்னைக்கு வந்து மகனோடு தங்கியிருந்த பார்வதி, அவர் மரித்த பிறகு மீண்டும் தஞ்சாவூருக்கே சென்று அத்தனாம் பெரிய



வீட்டில் தனித்து வாழ முற்பட்டது ரமணிக்குக் குறையான குறை...

“இங்கே தனியாய் இத்தனை பொறுப்பையும் ஏன் நீ சுமக்கணும்... நிலம், மற்றத விக்கறதுல உனக்கு இஷ்டம் இல்லேன்னா, சரி, வாண்டாம். மானேஜர் இருக்கார் பாத்துக்கட்டும், நான், மாசம் ஒரு தடவை வந்து மேப்பார்வை பாத்துக்கிறேன்... அத விட்டுட்டு, இங்க தான் இருப்பேன்னு அடம்பண்ணா எப்படிம்மா? உன்ன இங்க தனியா விட்டுட்டு என்னால அங்க நிம்மதியா இருக்க முடியும்னு நெனைக்கறியா?”

கெஞ்சிப் பார்த்தாயிற்று, சண்டை போட்டாயிற்று, வீட்டுப் பெரியவர்களை வைத்துப் புத்தி சொல்லிப் பார்த்தாயிற்று...

எதற்கும் பார்வதி மசியவில்லை.

“உங்கப்பா வாழ்ந்த வீட்ல அவர் நினைவோட என் கடைசிக் காலம் வரைக்கும் வாழறதுலதான் எனக்குத் திருப்தி ரமணி... இத ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கிறே? நா தனியா எங்க இருக்கேன்? இங்க வேண மனுஷா, கூப்பிட்ட கொரலுக்கு ஆள்— எல்லாரும் இருக்கா; முடிஞ்சப்போ நீ வந்து பாத்துண்டு போ... போறும்... இதுக்கு மேல இந்தப் பேச்ச திரும்ப எடுக்காத...”

தளர்ந்த குரலில் ஆனால் தீர்மானமாய் பார்வதி பேசிய பிறகு அதை மாற்றும் முயற்சியில் எவரும் ஈடுபடவில்லை.

மாமனார் இறந்தபோது கௌதமுக்குப் பதினாறு வயசு, இப்போது இருபது. ஆறு வருஷங்கள் ஓடி விட்டன.

நல்லதோ, கெட்டதோ, காலம் யாருக்காக நிற்கிறது!

வருஷா வருஷம் தீபாவளி, பொங்கல், பண்டிகைகளுக்குச் செல்வதோடு, அப்பாவின் திவசத்துக்கும் கட்டாயம் ஊருக்குச் சென்று இரண்டு நாட்கள் தங்கி

திசா காரியங்களையும் கவனித்துவிட்டு வருவது இந்த ஆறு வருஷங்களாய் வாடிக்கையாகி விட்டது—

'ரமணி அண்ட் ஸன்ஸ்' இந்த இருபது வருஷங்களில் பங்களூர், கொச்சி, கோயமுத்தூர், ஹைதராபாத் என்று நாலு நகரங்களில் கிளைவிட்டுக் கொண்டு ஒரு ஆலமரமாகவே ஆகிவிட்டதில் அதற்கு மேல் தங்க இங்கே காத்திருக்கும் வேலைகள் இடம் கொடுப்பதில்லை.

மூத்தவன் கௌதம் தன்னைப் போல பி. ஏ. படித்து விட்டுத் தன் கம்பெனியில் பார்ட்னராகச் சேர வேண்டும் என்பது ரமணியின் அடி மனசு ஆசை. அது பாரதிக்குத் தெரியும். ஆனால், என்ஜினியரிங் படிக்க விருப்பம் தெரிவித்த மகன் பி. ஈ. சேருவதில் காட்ட வில்லையே— அப்புறம்?

விக்ரமுக்குச் சின்ன வயசிலிருந்தே எலெக்ட்ரானிக்ஸ் படித்துவிட்டு, அமெரிக்கா போய்த் தேர்ச்சி பெற்று வர வேண்டும் என்பதுதான் லட்சியம்... ஆக, அவனும் அப்பாவின் தொழிலைப் பார்க்கப் போவதில்லை... அது தானே?

நினைவுகளின் ஓட்டம் சட்டென்று பாரதியின் உதடுகளில் ஒரு புன்னகையை தெளிய விட்டது.

பெண் பிறக்காததில் என் கனவு நிறைவேறவில்லை என்றால், பிள்ளைகள் இருந்தும் ரமணியின் விருப்பமும் ஈடேறவில்லை... என்பதுதானே உண்மை!

"பெத்துட்டோம்ங்கறதுக்காக நம்ப ஆசைகளைக் குழந்தைகள் நிறைவேத்தி வைக்கணும்னு எதிர்பார்க்கறது தப்பு பாரதி. நம்பளோட விருப்பு வெறுப்புகளை, அடுத்தவர் மேல திணிக்காம அவா என்ன விரும்பறானு தெரிஞ்சுண்டு அது போல நடக்கறதுதான் எல்லார்க்கும் நல்லது!"

கௌதம் ஆர்.ஈ.சி.யில் சேர விரும்புவதைத் தெரிவித்த தினம் தனக்குத்தானே சமாதானம் செய்து



கொண்டும் விதமாய் கணவர் பேசிய பேச்சுக்கள் நினைவுக்கு வந்த நொடியில்—

'இத்தனை வருஷங்களாய், விவேகத்தோடு அடுத்தவர் மன ஓட்டம் என்ன என்று புரிந்து செயல்படத் தெரிந்த மனிதருக்கு 'உனக்கு டான்ஸ் தொடர்ந்து ஆட விருப்பமா, ஆடாமல் இருப்பது உனக்கு கஷ்டமாக இருக்குமா?' என்று திருமணமாகு முன்னரோ, ஆன பிறகோ ஒரு தரம், ஒரே ஒருதரம்கூட கரிசனத்தோடு கேட்கத் தோன்றவில்லையே, ஏன்?' என்கிற கேள்வியும் கூடவொன்று சவுக்காய் நெஞ்சில் எழ, பாரதி திடுக்கிட்டாள்.

மீண்டும் கண்கள் கலங்குவதைப் புரிந்துகொண்டு அதைத் தடுக்கும் உத்வேகத்தோடு அவசரமாய் எழுந்து நின்றவள் ஆல்பங்களைப் பழையபடி மேஜை இழுப்பறையில் வைத்தாள். கசங்கிவிட்ட புடவையை நீவிவிட்டு, கதவைத் திறந்து 'புஷ்பா எனக்குத் தட்டு வை' என்று குரல் கொடுத்தாள்.

## 8

மறுபடியும் ஆடிப் பார்க்கலாமா?

முடியுமா?

ஏன் முடியாது?

இத்தனை வருஷங்கள் கழித்து, புடவைக் கொசுவத்தை உயரத் தூக்கிச் செருகிக்கொண்டு, முதுகு நிமிர்ந்து அரை மண்டியில் உட்கார்ந்து ஆடமுடியுமா?

அட, கச்சேரியா கொடுக்கப்போகிறேன்; கச்சிதமாய் ஆட முடியுமா? முடியாதா என்று இத்தனை பயம் பயப்படுவதற்கு?

சும்மா என் திருப்திக்கு...

வெட்டியாய்ப் பொழுதைக் கழித்து, எதற்கும் உபயோகமில்லாமல் உட்கார்ந்திருக்கும் நாழிகையில், அரைமணி மிஞ்சிப்போனால் ஒருமணி நேரப் பயிற்சி— அவ்வளவுதானே!

ஒரு மணியா? சேர்ந்தமாதிரி ஒரு மணிநேரம் ஆட முடியுமா? அதற்கு உடம்பு வளைந்து கொடுக்குமா?

ஏன் முடியாமல்? அப்படி என்ன வயசாகிவிட்டது எனக்கு, இல்லை குண்டாகிவிட்டேனா, உட்கார்ந்து எழுந்திருக்க முடியாமல்?

படுத்திருந்த பாரதி இருப்புக் கொள்ளாமல் எழுந்து ட்ரெஸிங் டேபிள் கண்ணாடி முன்நின்று பிரதிபலித்த பிம்பத்தை ஊன்றிப் பார்த்தாள்.

வயதும் ஆகவில்லை, எடையும் போடவில்லை. இருபது வருஷங்களுக்கு முன் இருந்த பாரதியைவிட இப்போது முகம் முதிர்ச்சி அடைந்தும், இரண்டு பிள்ளைகளைப் பெற்றுப் பாலூட்டி வளர்த்த காரணத்தால் உடம்பு லேசாகப் பூசின மாதிரியும் இருக்கிறது. மற்றபடி சொல்லும்படியாய் கிழடு தட்டிப்போய், சதை தொங்கி இங்கி ஆடுகிறதா?

முன்னால் சாய்ந்தவள் முகவாயை மார்போடு அழுத்தி கழுத்துக்கடியில் சதை பிதுங்குகிறதா என்று சோதித்தாள். கையைப் பக்கவாட்டில் நீட்டி முட்டிக்குக் கீழ கொத்தாய் பல பெண்களுக்கு சதை திரண்டு பிதுங்கும் நிலையில் தனக்கும் இருக்கிறதா என்று எட்டிப் பார்த்ததோடு, கையால் தடவியும் பார்த்தாள். ம்ஹூம் இல்லை தொட்ட இடம் மேடு பள்ளம் இல்லாமல் வழவழவென்றே இருந்தது.



இடுப்பில் கை வைத்து நின்று இப்படியும் அப்படியும் திரும்பித் தன்னைத்தானே கவனித்தபோது சற்றுமுன் எழுந்த சந்தேகம் குறைய, மறுபடியும் 'ஆடிப் பார்த்தால் என்ன?' என்கிற யோசனை எழுந்தது.

தவறா?

தவறு ஒன்றும் இல்லை, ஆனாலும்...

என்ன ஆனாலும்? யாரிடமாவது உத்தரவு வாங்க வேண்டுமா, அல்லது இத்தனை வருஷ இடைவெளிக்குப் பிறகு ஆரம்பிப்பது என்பதனால் நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டுமா?

பாரதி அடி உதட்டைக் கடித்து, கைவிரல்களை சொடுக்கினாள்.

யாரிடம் அனுமதி கேட்கவேண்டும்? இரண்டாம் பேருக்குத் தெரிந்தால்தானே இந்தத் தொல்லையெல்லாம்! மதிய நேரத்தில் தனித்து இருக்கையில் பயிற்சி செய்வதைத் தடுக்க இங்கு யார் இருக்கிறார்கள்? தவிர, ஆட விரும்புவது யாருக்காகவும், எதற்காகவும் அல்ல, என் ஆத்ம திருப்திக்காக— சுயானுபவத்துக்காக மட்டுமே... அப்புறம் ஆளாளாகக் கூப்பிட்டு 'நான் மதிய வேளைகளில் ஆடுகிறேன் தெரியுமா?' என்று டாம்டாம் அடிக்க வேண்டிய அவசியம்தான் என்ன?

ம்ஹூம் இல்லை... அவசியமே இல்லை.

இப்படியும் அப்படியும் யோசனையுடன் நடந்தவள் ஏதோ நினைவுக்கு வந்த நிலையில் நின்றாள்.

ஆமாம்— புஷ்பா வீட்டிலேயே இருக்கிறாளே, அவளுக்குத் தெரிந்துவிடுமே!

'எங்க வீட்டு அம்மாவுக்கு முளைச்சிருக்கிற ஆசையப் பாத்தியா? இத்தனை வயசுக்குமேல டான்ஸ் ஆடிப் பாக்கறாங்களா நம்பமுடியுதா?'— என்று அக்கம்

பக்கத்து வீட்டு வேலைக்காரிகளிடம் கேலியாய்ப் பேச முற்பட்டால் என்ன செய்வது!

யாருக்கும் தெரியவேண்டாம் என்று நினைத்திருப்பது இவன் மூலமாக குப்பனுக்கும், சுப்பனுக்கும்கூடத் தெரிந்து, சாலையில் இறங்கி நடந்தாலே அந்தத் தெருவைச் சேர்ந்தவர்கள் 'என்னாயிற்று உனக்கு?' என்று கேட்கும் விதமாய் நமுட்டாய்ச் சிரித்தால்?

பீச் சாலையில் தான் வாக்கிங் போவது போலவும் மணல் ஓரத்திலும் 'கோஸி' ரெஸ்ட்ராரண்ட் வாசலிலும் கும்பலாய் உட்கார்ந்திருக்கும் கல்லூரி மாணவர்கள் இவனைக் கண்டதும் 'ஹோ— டான்ஸிங் ஸ்டார் போறாங்க பாரு' என்றும், "பெஸ்ட் தகப்ராட வைஜயந்திமாலா யாரு தெரியுமா?" என்றும் சீண்டுகிற நினைவில் கற்பனை எழ பாரதி ஆயாஸத்துடன் கட்டில் மேல் அமர்ந்தான்.

என்னாயிற்று எனக்கு?

ஆடவேண்டும் என்கிற ஆசை எழுந்தது தப்பா? என்னமோ கொலைக் குற்றம் பண்ணத் துணிந்துவிட்ட மாதிரி என்ன வேண்டாத குறுக்குக் கேள்விகள் இவையெல்லாம்! யாருக்கு நான் பயப்படவேண்டும்? எதற்காக அஞ்சவேண்டும்?

சட்டென்று பாரதிக்கு பத்து வருஷங்களுக்குமுன் ரமணியுடன் சேர்ந்து தத்துவஞானி ஜே. கிருஷ்ணமூர்த்தியின் பிரசங்கத்துக்குப் போன தினமும் அன்று அவர் பேசின பேச்சுக்களும் ஞாபகத்துக்கு வந்தன.

வசந்த விஹார்.

அடையாறு கிரீன்வேஸ் சாலையில் இருக்கும் அமைதியான தோட்டம்.

எதிர்ப்பக்கம் பூராவும் வரிசையாய் அமைச்சர்களின் மாளிகைகள்; அகலமான, துப்புரவான சாலை, சென்னையின் அழகிய, நன்கு பராமரிக்கப்படும் சாலைகளில் கிரீன்வேஸ் ரோடும் ஒன்று— யாரும் மறுக்க முடியாது.



ஒரு காலைப் பொழுது, எட்டு கூட ஆகாத சமயம். கிட்டத்தட்ட ஆயிரம் பேர் கூடியிருந்தாலும் இடம் அமைதியாக இருந்தது. தலைக்கு மேல் பச்சைக் கூடாரம் போட்ட மரங்கள். அவற்றின் இலை இடுக்குகள் வழியாகத் தரை பூராவும் தங்கக் காசு காசாக விழுந்து சிதறிய சூரிய வெளிச்சம்.

ஜே. கே. ஒரு தலைப்பில் அரைமணி போல பேசிய பிறகு, கேள்வி பதில் செஷன் துவங்கியது.

ஆண் ஒருவர் எழுந்து நின்றார்.

"ஸ்வாமிஜி—எனக்கு வயசு முப்பத்திநாலு. தனியார் கம்பெனியில் மானேஜராக இருக்கிறேன். சின்ன வயசு முதற்கொண்டே ஓவியம் தீட்டுவதில் எனக்கு அபார மோகம் உண்டு. ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றுப் பெரிய ஓவியனாக வளரவேண்டும் என்பது என் சிறு பிராய ஆசை. ஆனால் ஸ்வாமிஜி, அந்தக் கலையை வளர்த்துக் கொள்ள எனக்குச் சந்தர்ப்பமே அளிக்கப்படவில்லை. 'கவனத்தை வேறு வகையில் இசை திருப்பாமல் பள்ளியில் பாடங்களை நன்றாகப் படித்தால் தான் முன்னேற முடியும்' என்று சதா பெற்றோர் புத்திமதி சொன்னதால், சிரமேற்று சிரத்தையாய்ப் படித்தேன். பின்னர் 'கல்லூரிப் படிப்பும், புரொபஷனல் கோர்ஸும் இருந்தால்தான் நன்றாகச் சம்பாதித்து, நிம்மதியாய் இருக்க முடியும்' என்றார்கள், அவற்றையும் செய்தேன். 'தனியாக வாழ்வது கூடாது திருமணம் செய்து கொள்' என்றனர். செய்து கொண்டேன். இப்போது எனக்கு இரண்டு குழந்தைகள். பொழுது விடிந்து, பொழுது போகும் வரை யந்திர கதியில் வாழ்க்கை வாழ்வது சலிப்பைத் தருகிறது. உறங்கி, உண்டு, உழைத்து, மீண்டும் உண்டு உறங்கி... இப்படி வாழ்நாள் பூராவும் அடுத்தவர்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருப்பது சரி

தானா? எனக்கென்று வாழ எப்போது நான் துவங்கப் போகிறேன், ஸ்வாமிஜி?" சின்ன வயசு முதற்கொண்டே அடிமனசு கனவாக ஜொலிக்கும் ஓவிய ஆசையை நிறைவேற்ற முடியாமல்... என்ன வாழ்க்கை இது ஸ்வாமிஜி? அடுத்தவர்களுக்காக வாழாமல், எனக்காக, எனக்குப் பிடித்தமானவற்றைச் செய்து கொண்டு வாழும் துணிச்சல் எனக்கு எப்போது கிட்டும்?"

தொண்டை அடைக்க, குரல் தழுதழுக்க அன்று அந்த இளைஞன் அப்படி ஒரு யதார்த்தமான கேள்வியைக் கேட்டதும், என்னமோ தம்தம் மனங்களின் ஏக்கத்தை அவன் அப்படியே பிரதிபலித்து கேட்டுவிட்ட மாதிரி சபையோரில் பலர் திடுக்கிட்டுப் போனது அவரவர் முகபாவத்திலிருந்து உணர முடிந்தது. ஸ்வாமிஜி என்ன பதில் கூறப்போகிறார் என்கிற எதிர்பார்ப்புடன் கூட்டம் மௌனிக்க, ஜே. கே. ஒரு தரம் செருமிக் கொண்டார்.

மேடையில் ஒரு வெள்ளை ரோஜா மலரின் மென்மையுடன் அமர்ந்திருந்தவர், தீட்சண்யம் மிகுந்த கண்களைச் சுழற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு, அந்த இளைஞன் மேல் பார்வையை நிலைக்கச் செய்தார்.

புன்னகையுடன் மென்மையாக வினவினார்.

"இளைஞனே—நீ பசிக்கும் போது சாப்பிடுகிறாயா?"

கேள்வி கேட்ட நபரும், கூட்டத்தாரும் 'என்ன கேள்விக்கு என்ன பதில்?' என்கிற குழப்பத்துடன் ஒருவரை ஒருவர் ஏறிட்டுக் கொள்ள, ஸ்வாமிஜி மீண்டும் கேட்டார்.

"Answer me young man—do you eat, when you are hungry?"

இளைஞன் குழப்பம் விலகாமல் 'ஆம்' என்று தலை அசைக்க, ஸ்வாமிஜி தொடர்ந்தார்.

"உனக்குத் தூக்கம் வரும்போது உறங்குவாயா?"

"ஆம் ஸ்வாமிஜி"



புன்னகை மாறாமல் ஜே. கே. பேசினார்.

"தூண்டுதல்கள் உறுதியாக எழும்போது, அவற்றை நாம் நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சியும் நிகழ்கிறது. இது இயற்கையின் நியதி. பசி ஏற்படும்போது சாப்பிட முனைவதும் நிஜம்! தூக்கம் கண்களை அழுத்தினால் உறக்கம் தன்னிச்சையாக வருவதும் உண்மை. [illegible] இது வருவது பூமியின் ஆகர்ஷண சக்தியால் என்றால், ஆசைகள் பூர்த்தி அடைய அதன் வலுவான தேவைகளால்... எண்ணங்கள் வலுவாக இருக்க இருக்க, அவற்றை நிறைவேற்றுவதும் சாத்தியமாகிறது! ஆக, ஒவ்வொரு வேலையும் என்பது நிஜமான விருப்பமாக இருந்தால் பசி, தூக்கத்தை எப்படி ஒத்திப் போட முடியாதோ அப்படி இந்தத் தேவையும் (urge) தானாகத் தன்னை முழுமையாக்கிக் கொண்டுவிடும். பசிக்கும்போது சாப்பிட்டு, தூக்கம் வரும்போது தூங்குவது போல அவற்றைச் செய்யும் நாம் நிறைவேறாத ஆசைகள் என்று வரும்போது மட்டும் அடுத்தவர் மேல் பழி போடுவது எதற்கு? நாம் பொறுப்பேற்க வேண்டிய விஷயங்களுக்குக் கூட அடுத்தவரைச் சுட்டிக் காட்டுவது சரியான செய்கையா? 'நான் காரணமில்லை—அடுத்தவர்தான்' என்று குறிப்பிட்டுவிட்டு, கோழைத்தனமாய் விலகுவது நமக்கு நாமே செய்து கொள்ளும் சப்பைக் கட்டுச் சமாதானம். தூண்டுதல் உண்மையாக இருந்தால் அது தானாகவே தன்னை நிறைவேற்றிக் கொண்டுவிடும். If the urge is genuine, then it will somehow get fulfilled— எண்ணங்களே செயல்களாகின்றன. ஆக, எண்ணங்கள் உறுதியாக இருக்க இருக்க, செயல் பூர்த்தி அடைவதும் வலுவாகிறது..."

அன்றைக்கு ஜே. கே. பேசி முடித்த பிறகு வீட்டுக்கு வரும் வழியில் ரமணியும், தானும் எத்தனை கச்சிதமாய் மனித ஸ்வபாவத்தை விவரித்துவிட்டார் என்கிற மலைப்பில் ஒருவருடன் ஒருவர் பேசக்கூட இல்லாமல் மௌனமாய்ப் பயணித்ததை இப்போது பாரதி நினைத்துப் பார்த்தான்.

வாஸ்தவம்தானே! எதற்கும் அடுத்தவர் மேல் பழியைப் போட்டுவிட்டு, 'இது மோசமாக இருப்பதற்கு, இந்தக் காரியம் முடங்கிப் போனதற்கு, இதை என்னால் செய்ய முடியாமல் ஆனதற்கு— நான் பொறுப்பு இல்லை. சமுதாயம், அரசாங்கம் அல்லது அடுத்தவரே காரணம்' —என்கிற மனோபாவத்தை வளர்த்துக் கொண்டு விட்டால் 'அப்பாடி, தவறு என் மேல் இல்லை' என்கிற போலி நிம்மதியோடு வாழ முடியாது. உண்மைதானே? ஆனால், அது சரியான கண்ணோட்டமா? தனி மனித வளர்ச்சிக்கு இந்த 'நொண்டிச் சாக்கு' குணம் உதவுமா?

அடுத்து வந்த நாட்களில் ஜே. கே.யின் கருத்துக்கள் சதா மனசில் உழல 'இனி கூடுமான வரையில் நான் பொறுப்பேற்க வேண்டிய விஷயங்களுக்காக அடுத்தவரைப் பலிகடா ஆக்கமாட்டேன்' என்று தீர்மானித்துக் கொண்டதும் அல்லாமல், சமயம் கிடைக்கும் போதெல்லாம் பிள்ளைகளுக்கும் அதை எடுத்துச் சொல்லி, தானும் முடிந்தவரை அதைக் கடைபிடிக்க முயன்று வருவதையும் நினைவுபடுத்திக் கொண்ட போது அத்தனையும் மறந்துவிட்டு இப்போது குழம்பி, சுயசுகத்துக்கு அடுத்தவரைக் காரணம் காட்டித் தப்பிக்கப் பார்ப்பது அவமானமாக இருந்தது.

அரைநிமிஷம் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தவள், நீளமாய் மூச்சை இழுத்துத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு எழுந்து ஜன்னல் அருகே சென்று, வெளியே பார்த்தாள்.

சரியான மத்தியான வேளை. ஆகாயம் கைப்பிடி அளவு மேகம்கூட இல்லாமல் நிர்மலமாய் இருந்தது.

பக்கத்து ஃப்ளாட்டில் மாடித் தொட்டிக்குத் தண்ணீர் நிரப்பவென மோட்டார் ஓடிக்கொண்டிருப்பது அந்த ஓசையிலிருந்து புரிந்துகொள்ளமுடிந்தது. அவள் ஊகம் சரி என்பதுபோல சில நொடிகளில் மாடித் தண்ணீர்த் தொட்டி நிறைந்து, வெளியே நீட்டிக்கொண்டிருந்த பைப் வழியாக நீர் கொட்ட ஆரம்பித்தது.



"இந்த ஃப்ளாட்காரர்களே எப்பவுமே இப்படித்தான். மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாத இந்த சமயத்திலும் 'டாங்க்' நிறைந்ததும், மோட்டாரை பொறுப்புடன் நிறுத்திப் பார்த்ததேயில்லை. சில நிமிஷங்களுக்காவது தண்ணீர் கொட்டி தரை எல்லாம் சொத சொதத்துப்போன பிறகே நிறு..."

பாரதியின் சிந்தனை தொடருமுன் ஜாலியாய் இரண்டு மைனாக்கள் தொட்டியிலிருந்து வெளியே வரும் 'பைப்' மேல் வந்து உட்கார்ந்தன. விளிம்புக்குச் சென்று பைப்பிலிருந்து கொட்டும் ஜலத்தை அலகால் ஏந்தி, நாலு வாய் குடித்து விட்டு முதலாவது நகர, இரண்டாவது குனிந்து குடிக்க முற்பட்டது.

எமன்களா!

எத்தனை லாவகமாக தொட்டிமாடி பைப்மேல் அமர்ந்து கொண்டு, யாரோ இவைகளுக்காகக் குழாயைத் திறந்துவிட்ட நினைப்பில் நீரைக் குடிக்கின்றன!

பறவைகள் ஆனாலும் தங்களுக்கு வேண்டியதை உணர்ந்து, பயப்படாமல், அந்த சமயம் கச்சிதமாய் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் இவைகள் சமர்த்து இல்லாமல் வேறு என்ன?

தண்ணீர் குடித்த சந்தோஷத்தோடு மைனாக்கள் பறந்துபோக, பாரதி ஜன்னல் கம்பிகளில் முகத்தைப் பதித்து யோசித்தாள்.

தனக்கு எதுவேண்டும், வேண்டாம் என்று இந்தப் பறவைகளுக்குப் புரிந்திருக்கும் அளவில்கூட, எனக்குச் சிந்தனையில் தெளிவு இல்லையே!

மீண்டும் ஆட ஆசையா, இல்லையா ?

கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்து சிந்தித்தபோது மனசு ஆசை, ஆசை என்று கூவுவது கேட்டது.

சரி— ஆசை.

அப்புறம் என்ன தயக்கம் ? ஆடிப் பார்த்துவிட வேண்டியது தானே ?

யாருக்கும் சொல்லவேண்டாம். மற்றவருக்குத் தெரியக்கூட வேண்டாம்— தினம் மதியம் காபி சாப்பிட்ட பிறகு இரண்டிலிருந்து மூன்றுவரை ஆடிப் பழகுவதில் என்ன கஷ்டம் ?

மற்றபடி— ஒன்றும் இல்லை.

எனக்காக, என் சந்தோஷத்துக்காக...

ஜே. கே. சொன்ன மாதிரி ஆர்வம்— தூண்டுதல்— உண்மையாயிருந்தால், முயற்சியும் இயல்பானதாகவே இருக்க வேண்டும்.

இருக்கிறதா ?

எஸ்— இருக்கிறது... உண்மையான ஆசைதான்... போலி இல்லை... கண்மூடித் திறக்கும் நாழிகையில் தோன்றி மறையும் மின்னல் மாதிரி இல்லை இந்த ஏக்கம்...

இது ரொம்ப வருஷத்தியது... சின்ன வயசில் எனக்குள் விதைக்கப்பட்டு, செடியாகி, இன்று மரமாகி இருப்பது.

நாட்டியத்தின் மேல் எனக்குண்டான ஈடுபாடு மனப்பூர்வமானது— யாருக்காகவும் போடும் வேஷம் இல்லை இது...

குழப்பம் நீங்கித் தெளிவு பிறக்க, ஒருவித உற்சாகத்தோடு பாரதி ஸ்டீல் அலமாரியைத் திறந்தாள். அடித்தட்டை மூடி வைத்திருந்த மெல்லிய துணியை அகற்றினாள். உள்ளே இருந்தவற்றை ஒவ்வொன்றாக கையில் எடுத்துப் பார்த்தாள்.

பரதநாட்டிய உடைகள்— இரண்டு செட்.



டைட் ட்ரெஸ்—ஒன்று.

பெட்டியில்— தலைசாமான், புல்லாக்கு, தக்கு, வங்கி, ஒட்டியாணம், கழுத்து அட்டிகை.

சலங்கை— ஒரு ஜதை.

சிகப்பு சாய அல்தா பாட்டில்—

கூடவே— டான்ஸ் பாட்டுக்கள் கொண்ட டேப்.

பெண் பிறந்த பிறகு தேவைப்பட்டால் எடுக்கலாம் என்று மூடிவைத்திருந்த பொருட்களைக் கையில் எடுத்த போது மயிர் கூச்சலிட்டது.

அத்தனையும் பழையபடி வைத்து மூடிவிட்டு, டேப்பை மட்டும் எடுத்துக் கொண்டு எழுந்தாள்.

டேப் ரிகார்டரிடம் சென்று, டேப்பைப் பொருத்தி, ஸ்விட்சைப் போட்டாள்.

'ஜெயஜெய புரிவாசா
ஜெயமகரா ஞான சபேசா—'

தோடய மங்களப் பாடல் கணீரென்று எழுந்து, சுழன்று சுழன்று அறையை வியாபித்தது. சொடுக்குப் போட்ட மாதிரி உடம்பு உதற, ஒரு துள்ளலுடன் நகர்ந்து அறையின் மையத்தில் நின்றாள்.

இரண்டு கைகளையும் மார்புக்கு நேராக கடகாமுக முத்திரையில் பிடித்து, கால்களைத் தட்டி முழு மண்டியில் உட்கார்ந்து பூமியைக் கையால் தொட்டு, கண்களில் ஒற்றிக் கொண்டு தட்டி கும்பிட்டபோது, அந்த வீடு, சூழ்நிலை எல்லாம் மறந்துபோய், எதிரே மாஸ்டர் உட்கார்ந்து தட்டுவாங்கம் செய்கிற பிரமை உண்டாக, பாரதி கைகளை மேலே தூக்கிக் கூப்பி 'தாம்தித்தாம்' என்று அலாரிப்பைப் கலகலமாய் ஆட ஆரம்பித்தாள்.

## 9

குட்டி குட்டியாய் ஒன்றோடு ஒன்று கைகோத்தபடி இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிவரை உட்கார்ந்திருந்த கடைகள், அவற்றில் அம்பாரமாய் கொட்டி வைக்கப்பட்டிருந்த காய் வகைகள், அத்தனையும் சில மணி நேரங்களுக்கு முன்னரே பறிக்கப்பட்ட புத்தம் புது பொலிவுடன்...

குளித்துவிட்டு பச்சைத் தோகையுடன் சுத்தமாய் இருந்த காரட் அடுக்குகள்; கூடை கூடையாய் பச்சென்று நிறைந்திருந்த பீன்ஸ், அவரைக்காய் வகைகள். யாரோ வேலை மெனக்கெட்டு உட்கார்ந்து ஒவ்வொன்றாக வார்னிஷ் செய்து வைத்த நிறத்தில் அலாதியாய் பளபளத்த குடைமிளகாய், கத்தரிக்காய், தக்காளி குவியல்கள்...

பச்சை நிறம் என்றால் என்னவென்று தெரியவேண்டுமென்றால் என்னைப் பார் — புரிந்துவிடும் என்று அறை கூவும் சந்தோஷத்தோடு காணப்பட்ட கீரை, மல்லி கட்டுக்கள்.

மஞ்சள் உருண்டைகளாய் கொட்டிக் கிடந்த எலுமிச்சம் பழங்கள், கொம்பு கொம்பாய் சிரித்த இஞ்சிகள்.

கடைக்குக் கடை தோரணம் கட்டிய சீரியல் விட்டத்திலிருந்து தரைவரை தொங்கிய பிஞ்சுப் புடலங்காய்கள்...

ஒரு கையால் புடவைக் கொசுவத்தை லேசாகத் தூக்கி, மற்றதில் பிளாஸ்டிக் கூடைகள், பைகளைப் பிடித்தபடி மெதுவாக பராக்கு பார்த்தவாறு மார்க்கெட்டின் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கம்வரை ஒரு தரம் நடந்த பாரதி, திரும்பினாள். மீண்டும் வந்தவழியே நடந்து அந்தந்தக் கடைகளில் நின்று தேவையான பதார்த்தங்களை வாங்க முற்பட்டாள்.

உஸ்மான் ரோடில், பனகல் பார்க்கை ஒட்டி அமைந்திருக்கும் இந்தக் காய்கறி மார்க்கெட்டிற்கு வருவதென்றால் அவளுக்கு எப்போதுமே அலாதி குஷி. வீட்டுத் தோட்டத்தில் காய்த்த காய்களைப் பறித்து சமைக்கிற உணர்வு இந்த மார்க்கெட்டுக்கு வந்து இங்கே குவிந்திருக்கும் காய் வகைகளைப் பார்க்கையில் அவளுள் தப்பாமல் எழும். அது என்ன பசுமை, அது என்ன ஃப்ரெஷ்னஸ், அதுவும் மாலை நான்கு மணிக்கு மேல் போய்விட்டால் படப்பையிலிருந்தும், பூந்தமல்லியிலிருந்தும் வந்து இறங்கும் இளசு காய்களின் பளபளப்பும், வாட்டமான தோற்றமும் 'என்னை வாங்கு...' 'என்னை வாங்கு' என்று குரல் கொடுத்து அழைக்கிற மாதிரியே ஒலிக்கும். அந்த அழகில் மயங்கி நாலு வகை வாங்கலாம் என்கிற தீர்மானத்தில் வருபவள் பத்து வகைகளோடு வீடு திரும்புவது அடிக்கடி நடக்கும் சமாசாரம்.

அன்று வெள்ளிக்கிழமை. இவள் மார்க்கெட்டிலிருந்து திரும்புவதற்குள் விக்ரம் சனி, ஞாயிறை பெற்றவர்களுடன் கழிக்கவென வீட்டுக்கு வந்திருப்பான் என்பதால் அடுத்து வரும் இரண்டு நாட்களிலும் பிள்ளையின் ரசனைக்கு ஏற்ப தடபுடலாய் சமைக்க மனதுக்குள் 'மெனு' வகுத்திருந்த விதத்தில் காய்கறிகளை வாங்கி விட்டோமோ என்று பாரதி யோசனை பண்ணினாள்.

நாளைக் காலைச் சாப்பாட்டுக்கு புலவு, குர்மா, இதற்கு பட்டாணி, குடமிளகாய், பிஞ்சு பீன்ஸ், காரட், வெங்காயம், உருளைக்கிழங்கு வாங்கியாயிற்று.

மதிய டிபனுக்கு சன்னா பட்டூரா. இதற்கு காய் எதும் வேண்டாம். வீட்டில் கொண்டைக் கடலை, இதர சமாசாரங்கள் உள்ளன.

அப்புறம்... யோசனை மாறாமல் நகர்ந்தவள் நின்றாள்.

போகும்போது இல்லை, அதற்குள் கொண்டு வந்து இறக்கிக் கடை போட்டுவிட்டார்களா?

கூம்பு கூம்பாய் பச்சைச் சோளக்கொண்டைகளை சாக்குகளிலிருந்து எடுத்து அடுக்கிக் கொண்டிருந்த பெண்மணியை பாரதி நெருங்கினாள்.

பால் வடியும் பிஞ்சு சோளம் என்றால் விக்ரமுக்கு ரொம்பப் பிடிக்கும். அவனுக்கு மட்டுமல்ல ரமணிக்கும், இவனுக்கும் கூட ரொம்பப் பிடித்தமானதுதான்.

தோலையைச் சுத்தமாய் நீக்கிவிட்டு, தணலில் ஒத்தாற் போல சுட்டு, இரண்டாக வெட்டி எலுமிச்சம் பழத்தை காரப் பொடி, உப்புக் கலவையில் தோய்த்து, சுட்ட சோளக்கதிர் மேல் தடவி, அந்த உப்பு, உறைப்பு, புளிப்பு உதடுகளில் உறைக்க சுடச்சுடச் சாப்பிட்டால்... ஆஹா... அதன் ருசியே அலாதிதான்...

வட இந்தியாவில் தெரு முனைகளில் கூட இப்படி 'புட்டா' சுட்டுத்தருவது சகஜம். நம் ஊரில்தான் இந்த ரசனை எல்லாம் அவ்வளவாகக் கிடையாது. கொடைக்கானலின் ஏரிக்கரையில் நாலைந்து தள்ளுவண்டி கடைகளில் சோளத்தை மேற்சொன்னவாறு அருமையாய் சுட்டுக்கொடுப்பார்கள். கை சுடாதிருக்க வேண்டி, தோலை இதழ் ஒன்றை அடியில் பிடித்து, அந்தக் குளிரை ரசித்தவாறு, சோளத்தைக் கடித்துக்கொண்டு நடப்பது தனி அனுபவம்.

இந்தப் பால் வடியும் சோளத்தை வைத்துக்கொண்டு எத்தனை விதமாய் சமைக்கலாம்!

சுட்டுத்தின்னுவது ஒரு ரகம் என்றால், முழுசாய் வேக வைத்துவிட்டு, உப்பு கலந்த மஞ்சள் வெண்ணையை உருக்கி வைத்த சோளக்கொண்டை மேல் தடவி, துளி மிளகுத்தூளையும் போட்டுக்கொண்டு சாப்பிட்டால் பிரமாதமாக இருக்குமே! என்ன, வெண்ணெய் என்பதால் கூடுதலாய் கலோரிகள் உடம்பில் ஏறும். இருந்தாலும் எப்பவாவது ஒருமுறை இப்படி ருசியாய்ச் சாப்பிடுவதில் தவறு என்ன?

இலைகளைத் தவிர முத்துக்களை கத்தி அல்லது அரிவாள் மணையால் செதுக்கி எடுத்து, உப்பு பச்சை மிளகாயுடன் நறநறவென்று அரைத்து, நறுக்கின வெங்காயம், பச்சை கொத்துமல்லி சேர்த்து கெட்டிக்கல்லை



யாக்கி தேவைப்பட்டால் அருகே மைதாமாவு சேர்த்து, வடைபோலத் தட்டி போட்டு எண்ணெயில் பொரித்து, டொமாட்டோ ஸாஸுடன் சாப்பிடுவது மட்டும் ருசியில் இளைத்ததா என்ன? மாலையில் தேநீருடன் சாப்பிட அமிர்தமாக இருக்குமே!

எண்ணெய், வெண்ணெய் போன்ற எடை கூடும் அயிட்டங்கள் வேண்டாம் என்று நினைப்பவர்கள் சூப் வைத்துச் சாப்பிடலாமே! செதுக்கி எடுத்த சோளமுத்துக்களை வேகவைத்து, மிக்ஸியில் ஒன்றிரண்டாக அரைத்து, ஒரு டேபிள் ஸ்பூன் சோளமாவு அல்லது மைதாவை ஒரு கப் தண்ணீரில் கட்டியில்லாமல் கரைத்து, கூழ்போலக் கொதிக்க வைத்து, கொஞ்சம் பால் கலந்து 'வொயிட் ஸாஸ்' தயாரித்துக் கொண்டு, சோளக் கலவையுடன் கலந்து தேவையான உப்பு, மிளகு, அரை ஸ்பூன் சர்க்கரை சேர்த்தால் அருமையான 'கார்ன் சூப்' ரெடி! சைனீஸ் ரெஸ்ட்ராண்டில் இதோடு கொஞ்சம் வேக வைத்த ஜுலியன் கட், கேரட் துருவல்கள், ஒரு ஸ்பூன் ஸோயா ஸாஸ் ஆகியவற்றைச் சேர்த்து 'சைனீஸ் ஸ்பெஷல் அயிட்டம்' என்று தயாரித்து நீட்டினால், கிண்ணம் ஒன்றுக்கு இருபது ரூபாய் கொடுத்து 'ஆஹா என்ன ருசி' என்று நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டுவிட்டு வருவோம்; ஆனால் பத்து நிமிஷம் சிரமப்பட்டு வீட்டிலேயே செய்தால் அதே இருபது ரூபாய்க்கு குறைந்த பட்சம் ஆறுபேர் 'சூப்' சாப்பிடலாமே!

"சோளம் வேணுமாம்மா? புச்சு... இப்பத்தான் படப்பை அய்யரு பண்ணையிலேந்து வந்து எறங்கிகிட்டே இருக்கு... சைஸ் பாத்தியா? அத்தனையும் பால் கொண்டைங்க... ஒரு டஜன் போடவா?"

பெண்மணி நீட்டிய கொண்டையை பாரதி கையில் வாங்கி ஒரு முத்தை நசுக்கிப் பார்த்தாள். பால் வடிந்தது.

"என்ன விலை?"

"ஒண்ணா வாங்கினா மூணு ரூபா... டஜனா எடுத்து கிட்டீன்னா முப்பது ரூபா..."

"ரெண்டு ரூபாயாவது போட்டுக்கக் கூடாதா ?"

"கட்டுப்படி ஆகாது தாயீ... ஒரே செலவு... டஜனா எடுத்தா முப்பது ரூபா..."

பன்னிரண்டு சோளக்கதிர்களைப் பொறுக்கிக் கூடையில் போட்டுக் கொண்டு பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பியவள் "வணக்கம்— மா" என்கிற குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

அட— ராமபத்திரனா !

ரொம்ப வருஷங்களுக்கு முன்னால் அவள் நாட்டியம் ஆடிய நாட்களில் கச்சேரிகளுக்கு பக்க வாத்தியமாக மிருதங்கம் வாசித்த அந்த ராமபத்திரனா!

"ஸார்... நீங்க ராமபத்திரன் ஸார்தானே...! எவ்வளோ வருஷமாச்சு ஸார்..."

அடக்கமாட்டாத ஆச்சர்யத்துடன் பாரதி குரலை உயர்த்த, ராமபத்திரன் கைகளை மார்புக்கு குறுக்காகக் கட்டி நின்று பவ்யமாகச் சிரித்தார்.

"அந்த நிமிஷம் முன்னாடியே உங்களை பாத்துட்டேன். நீங்கதானானு தீர்மானமா புரியலை... பாத்து இருபது வருஷம் ஆகலியா? அப்புறமா கிட்ட வந்து பாத்தேன்... நீங்கதான்னு மனசுக்குப் பட்டுது... எப்படி இருக்கீங்க ?"

பாரதி கூடைகளைத் தரையில் வைத்தாள்.

"என்ன ஸார்— இருபது வருஷமா பாக்காட்டா பழக்க வழக்கமெல்லாம் மாறிடுமா? 'ங்க' எல்லாம் போட்டு பேசற அளவுக்கு என்னைப் பாத்தா அத்தனை வயசானவளாவா தோணறது ?"

ராமபத்திரன் சிரிப்பு மாறாமல் இல்லை என்று தலை அசைத்தார்

"நீங்க ஸாரி நீ மாறவேயில்லம்மா ! அன்னிக்கு இருந்த பாரதியாவேதான் இன்னிக்கும் இருக்கே...அதான்



இது பாரதிதானா, இல்லை அவ பொண்ணானுகூட சந்தேகம் வந்துடுத்து... எப்படி இருக்கே பாரதி?... மெட்ராஸ்லதான் இருக்கறதா ராஜமாணிக்கம் ஸார் சொன்னார்..."

"பம்பாய் விட்டுவந்து ரொம்ப வருஷமாச்சு ஸார்... கல்யாணத்துக்கப்புறம் டான்ஸ் நிறுத்திட்டதுல அப்புறம் உங்களை எல்லாம் பாக்க சந்தர்ப்பமே கிடைக்கல... ராஜமாணிக்கம் மாஸ்டரை மட்டும் ஊருக்கு வந்த புதுசில ரெண்டு மூணுதரம் பாத்தேன்... 2 குழந்தைகள் பொறந்து அவளும் மாறி, நேரம் கிடைக்காம போனதுல மாஸ்டரைகூட பாத்து வருஷக்கணக்காச்சு... எல்லாரும் எப்படி இருக்கேள்? இன்னும் மாஸ்டருக்குத் தானே நீங்க மிருதங்கம் வாசிக்கறேள் ?"

"ஆமாம்மா... அதுக்கு இன்னும் அப்படியேதான் இருக்கு... ஆனா, வயலின் வாசிக்கிற சந்திரசேகர் தவறிப் போயிட்டாரு, தெரியுமில்ல? அவருக்கு பதிலா சந்தானம்னு ஒரு பையன் வாசிக்கிறான். மத்தபடி கல்யாணிபம்மா வீணை, நான் மிருதங்கம் எல்லாம் அதே ஆளுங்கதான்... அது இருக்கட்டும், போன மாசம் ராஜமாணிக்கம் சார் விபத்து ஒண்ணுல மாட்டிகிட்ட விஷயம் தெரியும் இல்ல? பேப்பர்ல நியூஸ் வந்திருந்துதே ?"

பாரதி உடம்பு உதறிப்போட திடுக்கிட்டாள்.

"வி... விபத்தா... மா மாஸ்டருக்கா... நியூஸ் தெரியாதே ஸார்... என்னாச்சு ?"

"பாண்டிச்சேரில, காயத்ரி'ங்கற பொண்ணோட கச்சேரி முடிஞ்சு நாங்கள்ளாம் பஸ்ஸுல புறப்பட்டோம். ஸாரும், மங்கை தெரியுமில்ல— ஸாரோட தங்கச்சி மக, சின்ன வயசுலேயே தத்து எடுத்துக்கிட்டாரே அந்தப் பொண்ணுதான், அதானே இப்பல்லாம் ஸாருக்கு நட்டுவாங்கத்துலயும், பின்பாட்டுலேயும் ஒத்தாசை பண்ணுறா, அவளும் கார்ல வந்தாங்க... வழில லாரி மோதி, மங்கைப் பொண்ணுக்கு ரெண்டு மூணு எடத்துல எலும்பு முறிவு. தெய்வாதீனமா பின் ஸீட்டுல படுத்

தட்டு வந்த ஸாருக்கு பெரிசா அடி ஒண்ணு இல்லே... கணுக்கால் எலும்பு மட்டும் லேசா விரிஞ்சிருக்குது கட்டுப் போட்டிருந்தாங்க. இப்ப கட்டை அவுத்துட்டாங்க... ஆனாலும் அதிகமா நடந்தா வலிக்குதுனு ஸார் நேத்து கூட சொன்னாரு... மாசக் கடைசில வரிசையா கச்சேரிங்க இருக்குது... ஸார் ரொம்பத்தான் கஷ்டப் படுறாரு பாவம்... என்னமோ போறாத வேளை... அதான் நான் சொல்வேன்..."

மங்கையை பாரதிக்கு நன்றாகவே தெரியும். இவளை விட நாலைந்து வயசு இளையவள். அப்போதே பிரமாதமாய் ஆடுவாள். கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் ராஜமாணிக்கம் மாஸ்டருக்கு வலது கையாகத் திகழ்கிறாள் என்பது தெரிந்த விஷயம்தான்.

"இப்ப மங்கை எப்படி இருக்கா ஸார்?"

"வலது கால்ல மட்டும் ரெண்டு எடத்துல முறிவு... அதனால இன்னும் எழுந்து நடக்க முடியல... பாவம்... தலைக்கு வந்தது தலைப்பாகையோட போச்சுனு சேத்துக்க வேண்டியதுதான்..."

"மாஸ்டர் சாரங்கபாணி தெரு வீட்டுலதானே இருக்கார்?"

"அதேதான்... சொந்த வீடாச்சே... விட்டுட்டு வேறு எங்க போறது..."

"இத்தனை வருஷம் கழிச்சு உங்களைப் பார்த்தது சந்தோஷமாக இருந்தாலும், மாஸ்டரோட ஆக்ஸிடெண்ட் பத்தி கேக்க ரொம்ப வருத்தமா இருக்கு... இப்பவே போய் மாஸ்டரையும் மங்கையையும் பார்க்கணும்போலத் தவிப்பா இருக்குது... அதான் வீடு மாறலியேனு கேட்டேன்..."

"அவசியம் போய்ப் பாரு பாரதி... சந்தோஷமா இருக்கறப்போ தனியா இருந்துடலாம்... ஆனா, வேதனையை அனுபவிக்கறப்போ கூட ஒருத்தர் நின்னு கரிசனமா ரெண்டு வார்த்தை பேசினா ரொம்ப தெம்பாதான் இருக்கும். உன்னை பாத்ததுல எனக்கு ரொம்ப சந்தோஷமா..."



கைப்பையைத் திறந்து அதில் எப்போதும் வைத்திருக்கும் கணவரின் விஸிடிங் கார்டில் ஒன்றை எடுத்து அவரிடம் பாரதி நீட்டி "ஒருநாள் வீட்டுக்கு வாங்க ஸார்" என்று கூறி, கைகூப்பி விடைபெற்று, கூடைகளைத் தூக்கிக்கொண்டு வெளியில் வந்தாள்.

இவளைக் கண்டதும் ட்ரைவர் முன்னால் வந்து, கூடைகளை வாங்கி முன் இருக்கையின் அடியில் சாய்த்து வைத்தான்.

"வீட்டுக்குத்தானேம்மா?"

"ம்ம்?"—அரை நிமிஷம் யோசித்த பாரதி "இல்லை... பனகல் பார்க்க சுத்திண்டு, வெங்கடநாராயணா ரோடுல போயி, சாரங்கபாணி தெருவுக்குப் போகணும்... நீ போ, நான் வழி சொல்றேன்" என்றாள்.

ராஜமாணிக்கம், வீட்டுக்கு வந்து அவளுக்குப் பாடம் எடுப்பதுதான் வாடிக்கை என்றாலும், வருஷத்துக்கொரு முறை விஜயதசமி அன்று மாணவிகள் அனைவரும் ஆசிரியர் இல்லத்துக்குச் சென்று குரு காணிக்கை செலுத்திவிட்டு, பத்துப் பேராக அந்தப் பெரிய கூடத்தை நிறைத்துக் கொண்டு அலாரிப்பு, ஜதிஸ்வரம் என்று மாஸ்டர் குறிப்பிடும் நடனங்களை ஆடுவார்கள்.

"அந்த கம்பி கிராதி போட்ட வீட்டு முன்னால நிறுத்து..."

இறங்கி, வாசக் கதவைத் திறந்தபோது கோயில் கர்ப்ப கிருஹத்துக்குள் நுழைவதுபோல மனசு பயபக்தியுடன் சிலிர்த்தது.

பக்கவாட்டுப் படிகளில் ஏறினால், மாடி முழுக்க அடைத்துக் கொண்டு நடனப் பயிற்சிக்காகக் கட்டப்பட்ட பெரிய கூடம் அன்று பார்த்தது போலவே இருந்தது.

கிழக்கு நோக்கியவாறு இடது பாதம் தூக்கி ஆடும் நடராஜர் சிலை. இரண்டு பக்கமும் மூன்றடி உயர நாச்சியார் கோவில் வெங்கலக் குத்துவிளக்குகள்.

விட்டத்திலிருந்து தொங்கிய தொம்பைகள்.

ஊதுவத்தி மணம்.

தெய்வீகச் சூழ்நிலை.

நாலு பெண்கள் ஆடிக்கொண்டிருக்க, எதிரில் தட்டுக் குச்சியுடன் ராஜமாணிக்கம் மாஸ்டர்.

முதலில் இவள் யாரென்று புரியாமல் கண்ணை இடுக்கி ஏறிட்ட ராஜமாணிக்கம், தட்டுக் குச்சியைக் கீழே போட்டுவிட்டு "வாம்மா..." என்று அழைத்த போது அந்தக் குரலில் 'நீ எங்கு வந்தாய்!' என்கிற வியப்போடு, 'அம்மாடி... இப்போது தான் வழி தெரிந்ததா...?' என்கிற நெகிழ்ச்சியும் 'இத்தனை வருஷங்கள் கழித்தாவது என் நினைப்பு வந்ததே' என்கிற பரவசமும் கலந்து மண்டுவது துல்யமாகப் புரிய—

எதுவும் சொல்லத் தோன்றாமல் அப்படியே இரண்டாக மடிந்து ஊஞ்சலை பாதி நமஸ்கரித்தாள்.

# 10

"ம், அப்பறம்?"

வாய் நிறைய சன்னா பட்டூராவைத் திணித்துக் கொண்டு ரமணி வினவ, விக்ரம் உற்சாகத்துடன் தொடர்ந்தான்.

"அப்புறம் என்னப்பா? சும்மா கதை பண்ணி டபாய்க்க நினைச்சா நடக்குமா? அதுவும் ஐ.ஐ.டி.ல? நோ சான்ஸ்... விஷயம் தெரிஞ்சவனா இருந்தா மேடை போட்டு உக்கார வைப்போம்... இல்லேன்னா ஒரு கிழிதான்... இந்தாளையும் அப்படித்தான், வாய்த் திறக்கவிடாம பண்ணி,



பொட்டலம் கட்டாத குறையா அனுப்பிச்சுட்டோம்... நாங்க செஞ்ச அமக்களத்துக்கு, புத்தி இருந்தா இனிமே இப்படி வெத்து வேட்டா, விஷய ஞானமே இல்லாம, வெறுமனே வார்த்தைகளை வைச்சுண்டு ஜாலமே பண்ணறது தப்புங்கற ஞானோதயம் அந்தாளுக்கு வந்திருக்கணும்..."

கட்டிலிருந்த சன்னா பட்டூராவைத் தின்று முடித்த ரமணி, 'இன்னும் போட்டுக்கோங்கோ' என்று வழக்கமாக உபசரிப்பது போல பாரதி செய்வாள் என்கிற எதிர்பார்ப்பில் காத்திருந்து, அவள் அப்படிச் செய்யாமல் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு தானாகவே ஒன்றை எடுத்துத் தட்டில் வைத்துக் கொண்டு "பாத்துக்கோ— நானா போட்டுக்கறேன்... அப்புறம் சாப்பிட்டது போறாதுன்னு சண்டைக்கு வராதே என்றவர் பிள்ளைப் பக்கம் திரும்பினார்.

"அரைகுறை ஞானத்தோட வந்தவரை கலாட்டா பண்ணி அனுப்பிட்டேன், சரி, அது வழக்கமா ஐ.ஐ.டி.ல நடக்கறதுதான். ஆனா, விஷய ஞானம் உள்ளவாளை போட்டு கொறவிட்டுப் போறங்கறயே, அத என்னால் நம்ப முடியல விக்கி... பொதுவா ஐ.ஐ.டி. பசங்களுக்கு தங்களுக்கு எல்லாமே தெரியும்ங்கற நினைப்பு உண்டு... ஓகேய் எக்ஸலண்ட், அது நிஜம்தான். அதிபுத்திசாலிகளா பாத்து செலக்ட் பண்ணி எடுக்கறதுல, ஒருத்தரை விட இன்னொருத்தர் புத்தில, ஜெனரல் நாலட்ஜுல ஆளைத் தூக்கி சாப்பிட்டுடற மாதிரிதான் இருக்கா... அதனாலதான் சொல்றேன்..."

அவரை முடிக்கவிடாமல் விக்ரம் தலையாட்டிக் கொண்டே குறுக்கிட்டான்.

"யு ஆர் ராங், அப்பா, டோடலி ராங்... ஐ.ஐ.டி. ஸ்டூடன்ஸ் பத்தி நிறையப் பேர் இப்படித்தான் நினைக்கறா, இது தப்பு... யார்கிட்டயாவது உசத்தியா ஒரு விஷயம் தென்பட்டுதுன்னா, அதை பாராட்டறதுக்கும் அவாகிட்டேயிருந்து கத்துக்கறதுக்கும் நாங்க தயங்கறதே

இல்ல... இன்ஸ்பாக்ட் நேத்து நடந்த இன்னொரு விஷயத்தை கேக்கறேனா? நேத்து பங்ஷனுக்கு வெளி காலேஜ்லேந்து ஸ்டூடன்ஸ் வந்திருந்தா, அதுல திருச்சிலேந்து ராமநாதன்னு ஒருத்தன். லஞ்ச் ப்ரேக்ல அவனோட சாதாரணமா பேசிண்டு இருந்தப்போ, அவன் சொன்ன விஷயங்களைக் கேட்டு நாங்கள்ளாம் அசந்துட்டோம். ஓ.கே. இதுக்கு பதில் சொல்லுங்கோப்பா— பெரியவா எல்லாம் மார்கழி ரொம்ப விசேஷமான மாசம்னு சொல்லிட்டுப் போயிருக்காளே, அது ஏன் என்று உங்களாலே எக்ஸ்ப்ளெய்ன் பண்ண முடியுமா?"

ரமணி புருவங்கள் உயர மகனை ஏறிட்டார்.

"என்ன விக்கி, எங்கேயிருந்து எங்க தாவறே. நாம என்ன பேசிண்டு இருந்தோம்னா..."

"தெரியும்பா... நா தாவல, சம்பந்தம் இருக்கறதாலத் தான் கேக்கறேன்."

"என்ன?"

"மார்கழி மாசம் ஏன் விசேஷமானது?"

"ம்ம்?— சில கணங்களுக்கு யோசித்த ரமணி மனைவியைப் பார்த்து, "நீ சொல்லு பாரதி" என அவள் உதட்டைக் கோணி 'ப்ச்' என்று சூள் கொட்டினாள். தொடர்ந்து— "நேத்திலேந்து உங்க ரெண்டு பேர்கிட்டயும் முக்கியமான விஷயம் ஒன்னைச் சொல்ல நா துடிச்சுண்டு இருக்கேன், அத என்னனு கேக்கத் தோணலை... ஆனா, மார்கழி மாசத்தைப் பத்தி கேக்க வந்துட்டேள்?" என்று முணகியதைக் காதில் வாங்காமல் ரமணி தானே பேசினார்.

"மார்கழி விஷ்ணுவுக்கு ப்ரீதியானது. 'மாதங்களில் நான் மார்கழியாய் இருக்கிறேன்'— பகவான் சொல்லி இருக்கிறார். அதனால அது உசத்தியானதுனு எங்க பாட்டி சொல்லிக் கேட்டிருக்கேன். அப்புறம்..."

விக்ரம் விரல்களால் சாப்பாட்டு மேஜை மேல் தட்டி, தாளம் போட்டு அவர் கவனத்தைத் திருப்பினான்.



"ஸாரி டாட்... நீங்க சொல்றதெல்லாம் 'லோட்டு லோடக்கு' காரணங்கள், நிஜமா விஷயம் என்னனு தெரிஞ்சா, ஸ்கூல்ல விரலை வைப்பேன்! 'ஓஸோன்'னு ஒரு சமாசாரம் இருக்குங்கறதும், நிதுசு மனைவி தாண்டி விடற சக்தி உடையதுங்கறதும் உங்களுக்குத் தெரியும். இந்த ஓஸோன் மார்கழி மாசம்தான் பூமிகிட்ட, ரொம்ப அதிகமா இறங்கறதாம். அதுவும் எப்போ? ப்ரம்ம முஹூர்த்தம்னு சொல்ற விடிகார்த்தால 4.30 லேந்து 6 மணிக்குள்ள— அந்த சமயத்துல வீட்டுக்குள்ள படுத்துக் கிடக்காம, திறந்த வெளிக்கு மனுஷாள்ளாம் வந்தாக்க, நிறைய ஓஸோனை ஸ்வாசிச்சு, நுரையீரலை சுத்தப்படுத்திக்க முடியும்... ஆனா, இத அந்தக் காலப் படிக்காத ஜனங்கள எப்படி ஒத்துக்க வைக்கறது? அவா ளுக்கு 'ஓஸோன்'னா புரியுமா, இல்ல, ஆக்ஸிஜன் ப்ரெய்ன் வெல்னஸ்னா புரியுமா?... அதனால, நம்ப புத்திசாலி அல்லொன்டார்ன் கெட்டிக்காரத்தனத்தோட கடவுள் பேரோடு 'லிங்க்' பண்ணி, விஷ்ணுவுக்கு மார்கழி மாசம் ரொம்ப பிடிக்கும், ஸோ, ஆண்கள் எல்லாம் விடிகார்த்தால எழுந்து ஊர் பூரா பஜனை பண்ணுங்கோ, பொண்ணுங்கள்ளாம் காலங்கார்த்தால எழுந்து சூரியன் உதிக்கறதுக்கு முன்னால வாசல்ல பெரிசா, அழகா கோலம் போடுங்கோ... இப்படி செஞ்சா லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகும்'னு சொல்லிக் கொடுத்தா! ஜெனுன் க்ளெவர்! ஒரே கல்லுல ரெண்டு மாங்கா! சும்மா சொல்லக்கூடாதுப்பா நம்ப பெரியவா எல்லாம் ஏதோ அர்த்தத்தோடதான் பல காரியங்க செஞ்சிருக்கா... அதெல்லாம் இன்னிக்கு ஸயன்டிஃபிக்கா நிரூபிக்கப் படறப்போ ஆச்சர்யமாவும் இருக்கு, பெருமையாவும் இருக்கு..."

ஒருவாய் தண்ணீர் குடித்த ரமணி தோளைக் குலுக்கி, சின்னதாய்ப் புன்னகைத்தார்.

"நீ சொல்றது கேட்க ரொம்ப ஸ்வாரஸ்யமாதான் இருக்கு. ஆனா, அந்த திருச்சி பையனுக்கும் இதுக்கும்

என்ன விக்கி சம்பத்தம்! எங்கோ ஆரம்பிச்சு, எங்கோ போயிட்டியே?"

"இந்த இன்ஃபர்மேஷனைச் சொன்னதே அந்த திருச்சி ஸ்டூடண்ட் ராமநாதன்தாம்ப்பா. அம்மா, கேஷுவலா பேசிண்டு இருந்தாப்போ, அவனோட அப்பா இந்த மாதிரி ரிசர்ச் எல்லாம் பண்ணிண்டு இருக்கறதா சொல்லி ஒண்ணு ரெண்டை விளக்கினப்போ, நாங்கெல்லாம் ரொம்ப திகைச்சுப் போயிட்டோம்ப்பா... உடனே கமிட்டி மெம்பர்ஸ் ஒன்னு கூடிப் பேசி, ராமநாதனோட அப்பாவ சீக்கிரமே மெட்ராஸுக்கு வரவழிச்சு, அவரோட ஆராய்ச்சிகளைப் பத்தி பேசச் சொல்லணும்ங்கற தீர்மானத்தைக் கூட நிறைவேத்திட்டோம்... எப்படி? ஃபெண்டாஸ்டிக் இல்லே? சரி, திறமை, நாலெட்ஜ் எங்க இருந்தாலும் அதைத் தெரிஞ்சுக்கறதுல ஐ.ஐ.டி. பசங்க முன்னால நிப்பான்னு இப்பவாவது ஒத்துக்கறேளா?..." பேசியவன் அம்மா பக்கம் திரும்பி அவள் கையை எட்டிப் பற்றிக் கொண்டான்.

"மா—அடிக்கடி நீ லெக்சர் அடிப்பியே 'பெரியவா அர்த்தம் இல்லாம எதையும் சொல்லலைடா— நாம்தான் புரிஞ்சிக்காம பேசறோம்'—னு உக்காந்தா எழுந்தா புத்தி சொல்லுவியே— இப்ப, உனக்கு சந்தோஷமா? உன் இளைய மகன் தம் பண்டைக்கால சரித்திரத்தை, தம் மூதாதையர் சொல்லி விட்டுப்போன பழக்க வழக்கங்களின் விளக்கத்தை விரைவிலேயே கரைத்துக் குடித்து, அவற்றில் எக்ஸ்பர்ட் ஆகி— ச்சீ, தேர்ச்சி பெறப் போகிறான் என்பதில் உனக்கு பெருமைதானே? 'ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' என்கிற குறளுக்கு ஏற்ப உன் மார்பகம் பெருமிதத்தில் விம்முகிறதா, தாயே?"

படா ஸ்டைலுடன், செந்தமிழில் அவன் வெளுத்துக் கட்டியதும், ரமணி வாய்விட்டுச் சிரிக்க முற்பட்டார்.



எப்போதும் போல, 'போடா, அட்டை' என்கிற செல்ல அதட்டல் அம்மாவிடமிருந்து பிறக்கும் என்று எதிர்பார்த்த விக்ரம், அவள் எதும் பேசாமல் தலை குனிந்து டேபிள் மேல் சொட்டி இருந்த நீர்த்துளிகளை விரலால் இழுத்துக் கோலம் போட்டுக்கொண்டு மௌனமாகக் குழம்பியவன் அப்பாவை ஏறிட்டு 'என்ன?!' என்று கண்களால் கேட்டான்.

எனக்குத் தெரியவில்லை என்கிற பாவனையில் பதிலுக்கு ரமணி உதட்டைப் பிதுக்க விக்ரம் அம்மாவின் கையை உலுக்கி "ஹோய்—மாம்ஸ்" என்று அழைத்தான்.

"ஏன் எப்படியோ இருக்கே...மா? என்னோட பேசறது போரடிக்கிறதா? ஓ கே.. குட்டி ஜோக் கேக்கறியா? அடுத்தடுத்த வீட்டுல இருக்கற ரெண்டு ஆம்பிளை பேசிண்டு இருந்தானாம்... ஒருத்தனுக்கு அடிக்கடி வெளியூர் போற வேலையாம். ஒரு தரம் கிளம்பறத்துக்கு முன்னால ரொம்பப் பெருமையோட அவன் 'நா எப்ப ஊருக்குப் பொறப்பட்டாலும் என் பொண்டாட்டிக்கு முத்தம் கொடுத்துட்டுத்தான் கிளம்புவேன்... நீ என்ன செய்வே?'னு கேட்க, இதுக்கு பக்கத்து வீட்டுக்காரன் தயக்கத்தோடு பதில் சொன்னானாம், 'அதெல்லாம் நீ பொறப்பட்டு போனப்புறம் தாம்ப்பா...'னு எப்படி ஜோக்? டக்கர் இல்லே?"

ரமணியும், விக்ரமும் உரக்கச் சிரிக்க, பாரதி 'எனக்குச் சிரிப்பே வரலை' என்றவாறு எழுந்திருக்க முனைய, விக்ரம் தன் பிடியை இறுக்கினான்.

"சிரிப்பு வரலியா? போச்சுடா... என் திறமை என்ன, என் சாமர்த்தியம் என்ன... எல்லாமே அடிபட்டுப் போச்சே... ஆ... ஊ... என் செய்வேன்? உடனடியா இன்னொரு ஜோக் சொல்லி உன்னைச் சிரிக்க வைச்சுட்டுதான் மறு வேலை... இல்லைன்னா என் பேர் விக்ரம் இல்லை... உக்காரும்மா... இத கேளு..."

முரட்டுத்தனத்துடன் பாரதியை அமரச் செய்த விக்ரம் மளமளவென்று பேசினான்.

நான்—?

26735
432527

''இரண்டு ஆண்கள் செத்த பிறகு மேல் உலகத்துக்குப் போனானாம். அங்க பொழுது போகாம ஒருத்தரோட ஒருத்தர் பேசிண்டு இருக்கறப்போ, முதல் ஆள் இரண்டாவது நபர்கிட்ட 'நீ எப்படிப்பா செத்தே?'ன்னு கேட்க, இரண்டாவது ஆள் 'நா ஒரு பேக்டரில வேலை பாத்துண்டு இருந்தேன். தினம் வீட்டுக்கு வர நடுராத்திரி ஆயிடும். என் பொண்டாட்டி ரொம்ப அழகா இருப்பா. அவளைப் பத்திப் பலரும் பலவிதமா என் காதுபடவே பேசியிருக்காதான். பொறாமைல பேசறானு நானும் விட்டுடுவேன். ஆனா, ஒரு நாள் தலைவலி காரணமா பர்மிஷன் வாங்கிண்டு சுருக்கவே வீட்டுக்குத் திரும்பினப்போ, பெட்ரூம் விளக்கு எரிஞ்சுண்டு இருந்தது. வாசல்ல ஆம்பிளையோட செருப்பு... எனக்குக் கையும் ஓடலை, காலும் ஓடலை... கதவைத் தட்டி 'திறனு' கத்தினதும், உடனே திறக்காம, அஞ்சு நிமிஷம் கழிச்சுதான் மனைவி கதவைத் திறந்தா... எனக்குக் கோபமான கோபம். 'யாருடா அவன்? எங்க இருக்கான்? இன்னிக்கு உங்க ரெண்டு பேரையும் ஒழிச்சு கட்டிட்டுதான் மறுவேலை'னு கத்திண்டே ரூம், ரூமா போய்த் தேடினேன்... என்ன தேடியும் ஆளையே காணோம்...! கடைசில அனாவசியமா ஒரு பாவமும் அறியாத பெண்டாட்டிமேல பழி சொமத்திட்டேனேங்கற குற்ற உணர்ச்சியில அரிவாள்மணையை எடுத்து என் கழுத்தை நானே வெட்டிண்டு செத்துப் போயிட்டேன்'—னு தீனமா சொன்னானாம். அவன் பேசி முடிச்சதும் முதல் ஆள் தலையில ஓங்கி அடிச்சுண்டு கத்தினானாம்— 'மடையா—இண்டு, இடுக்கு விடாம அத்தனை இடத்துலேயும் தேடின உனக்கு ஃப்ரிஜைத் திறந்து பாக்கணும்னு ஏன்டா தோணலை... காலதாமதம் பண்ணாம திறந்து பாத்திருந்தா, விறைச்சுப் போய் நான் செத்ததை தடுத்திருக்கலாம். நீயும் அனாவசியமா தற்கொலை பண்ணிண்டிருக்க வேண்டாமே!''

விக்ரம் முடிக்கு முன்னரே முடிவை ஊகிக்க முடிய ரமணி வாய் விட்டுச் சிரிக்க ஆரம்பிக்க, பாரதி கையை உதறிக் கொண்டு எழுந்து நின்றாள்.



''என்னம்மா, இதுக்கு கூடவா சிரிக்கத் தோணலை?''

கண்களை விரித்துக் கொண்டு விக்ரம் கேட்டதற்குப் பதில் கூறாமல் வேகமாய்த் திரும்பி பாரதி உள்ளே போனதும் சின்னதாய் ரமணி விசில் அடித்தார்.

''ஹேய்— உங்கம்மாவுக்கு மூட் சரியில்லை விக்கி. நிஜம்மாவே ஸம்திங் ஈஸ் ராங்... கார்த்தால நா ஆபீஸ் போயிருந்தப்போ ஏதாவது கூடமுடா நடந்துதா?''

விக்ரம் நகத்தைக் கடித்தவாறு யோசனையுடன் பதில் கூறினான்.

''ஓ... நோ... எனக்குத் தெரிஞ்சு ஒன்னும் இல்லேப்பா... ஆனா, நேத்திலேந்தே அம்மா எப்பவுமே இருக்கற மாதிரி தான் பட்டுது... ஷாப்பிங் போயிட்டு வந்ததுல தலைவலி அது இதுனு ஏதாவது இருக்கும்னு விட்டுட்டேன். ராத்திரி வி. சி. ஆர். பாத்துட்டு படுத்துண்டு, கார்த்தால லேட்டா எழுந்து பதினொரு மணிக்கு வெளியில போயிட்டு, நீங்க வர்றதுக்கு கொஞ்ச நாழி முன்னால தான் நானும் வீட்டுக்கு வந்தேன். ஸோ, எனக்கு எந்த விவரமும் தெரியாது— போய் என்னன்னு கேட்டுப் பாக்கட்டுமா?''

தலைமுடியை இடக்கையால் கோதி, முகவாயை ரமணி தடவிக் கொண்டார்.

''கம்மிங் டு திங் ஆஃப் இட், நேத்து ராத்திரி படுத்துக்கறப்போ, இன்னிக்குச் சாப்பிடறப்போ, ஏன் கொஞ்ச நாழி முன்னால கூட 'உங்க கிட்ட ஏதோ பேசணும்'னு அம்மா சொன்னாளே... நான் தான் வேலை மும்முரத்துல, இப்ப உன் கூட பேசிண்டு இருந்ததுல, அவ சொன்னதைக் கவனிக்கவே இல்லை... கமான்... ரெண்டு பேரும் சேர்ந்தே போய் அம்மாவை சமாதானப்படுத்திட்டு, என்ன விஷயம்னு தெரிஞ்சுக்கலாம்...''

கண்களைச் சிமிட்டிப் பேசிய ரமணி நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளி எழுந்திருந்து பேஸினில் கைகழுவிக் கொண்ட போது, "மா—எங்க இருக்கே? பெட்ரூம்லியா, கிச்சன்லியா? எங்க இருந்தாலும் எங்க 'அட்டாக்'குக்கு தயாராயிடு... இதோ வந்துண்டே இருக்கோம்' என்று சிரிப்போடு விக்ரம் உரக்கக் குரல் கொடுத்தான்.

## 11

கன்னத்தில் கை.

நிலைகுத்தின பார்வை.

உலகத்திலுள்ள அத்தனை கோபத்திலும் முக்கி எடுத்த முகபாவம்!

அறைக்குள் நுழையாமல், வாசலில் நின்ற ரமணிக்கு ஜன்னலருகில் மனைவி அமர்ந்திருந்த கோலத்தைப் பார்த்தபோது சிரிக்கவே தோன்றியது.

இடக்கையால் அருகில் நின்ற மகனைத் தட்டி 'அங்கே பார்த்தாயா?' என்கிற ரீதியில் கண்களை அசைக்க, அப்பாவின் சீண்டல் மகனையும் தொற்றிக் கொண்டது.

விக்ரம் தொண்டையைக் கனைத்துக்கொண்டான்.

எம்.கே. தியாகராஜ பாகவதர் பாடுகிற தினுசில் உச்ச ஸ்தாயியில்—

அம்மா— உனக்குக் கோபம் ஆகாதம்மா— என்று நீட்டி முழக்கிப் பாட ஆரம்பித்ததும், சரக்கென்று தலையைத் திருப்பின பாரதி கோபத்துடன் அவர்களை முறைக்க, அவசரமாய் ரமணி "விளையாடாதே விக்கி— அம்மா நிஜம்மாவே கோபத்துல இருக்கிறமா திரிதான் தோணறது..." என்று சொல்லி அவனை அடக்கினார்.



மெதுவாக நடந்து அறைக்குள் சென்றவர், பாரதியை நெருங்கி அவள் தோளை அணைத்து "என்னம்மா?" என்றார்.

ம்ஹூம்— பதில் எதும் இல்லை.

ரமணி குனிந்தார்.

"என்ன பாரதி, என்ன விஷயம்? எங்கிட்ட சொல்லக் கூடாதா?"

'ப்ச்' என்று சூள்கொட்டின பாரதி மீண்டும் ஜன்னலைப் பார்க்கத் திரும்பி உட்கார்ந்து கொள்ள, "சொல்லும்மா" என்றார் கெஞ்சலாய், ரமணி விடாமல்.

அப்பாவைத் தொடர்ந்து "சொல்லும்மா" என்று ராகம் இழுத்த விக்ரம் இரண்டு கைகளையும் பரபரவென்று தேய்த்தவாறு அவளைச் சுற்றிக் கொண்டு எதிரில் வந்து நின்றான்.

"அப்பா உன்னை சொல்லுன்னு கெஞ்சக் கெஞ்ச, நீ படா ஸ்டைலா முறுக்கா இருக்கறதைப் பார்க்கறப்போ எனக்கு ஒரு ஜோக் ஞாபகத்துக்கு வர்றதும்மா... சொல்லட்டா... கேக்கறியா?"

குனிந்து அவள் முகவாயில் விரலைக் கொடுத்து நிமிர்த்திய விக்ரம் அவள் பதிலுக்காகக் காத்திராமல் தொடர்ந்தான்.

"புதுசா கல்யாணமான ஜோடி ஒண்ணு. ஒரு ஸ்டோர்ல ஒண்டுக் குடித்தனமா இருந்தானாம். கல்யாணம் ஆகி ஜாஸ்தியா பத்து நாளைக் கழிச்சப்புறம் அன்னிக்குதான் முதமுதலா ஆபீஸுக்குக் கிளம்பினானாம். பொண்டாட்டியை விட்டுட்டுப் போக மனசே இல்லையாம். 'புறப்படட்டுமா? கிளம்பட்டுமா?'னு கேட்டுண்டு நின்னுண்டே இருக்கானாம் ...பத்து தரம் கேட்டுட்டு பதினோராம் தரம் 'போகட்டுமா?'னு அவன் மறுபடி கேட்டப்போ, சுத்தி இருக்கற அத்தனைக் குடித்தனக்காராளும் வெளியில் வந்து 'போய்த் தொலையேண்டா'னு ஒரே சமயத்துல கத்தினானாம்...

சொல்றதா... ஓ... ஸ்... எப்படி? சிரிப்பு வர்ற தோணலையா?... அப்பா கிட்டாம கெஞ்சியும் நீ சொல்லாம இருக்கறது பாத்துட்டு இன்னொரு தரம் அப்பா கேட்டா, சமயல்கட்டுலேந்து புஷ்பா, வெளில நிக்கற கார் ட்ரைவர் மாணிக்கம், வேலைக்காரி ராணி— எல்லாரும் ஒட்டு மொத்தமா 'சொல்லித் தொலைங்க சொம்மா...'னு கத்துவாளோன்னு... ஹஹ்..." மேலே பேச முடியாமல் சிரிப்பு வெடித்துக் கொண்டு எழ, அம்மா வுக்கு அருகில் தொப்பென்று உட்கார்ந்து அவள் கழுத்தை விக்ரம் கட்டிக் கொண்டான்.

அந்த ஜோக்கும், சிரிப்பும் நிஜமாகவே நெஞ்சைத் தொட்டுவிட, பாரதி கோபத்தை மறந்து வாய்விட்டுச் சிரித்ததும், துள்ளிக் கொண்டு எழுந்து நின்ற விக்ரம் எம். ஜி. ஆர். பாணியில் கையை நெஞ்சிலிருந்து மேலே உயர்த்தி "வெற்றி... வெற்றி... என் தாய் சிரித்து விட்டாள்! என்னைப் பத்து மாசம் சுமந்து படாதபாடு பட்டுப் பெற்ற அன்னை, தன் துக்கத்தை மறந்து புன்னகைத்து விட்டாள். நான் தன்யனானேன்... யான் தான் செய்த பாக்கியம். பிறவிப் பயன் எய்தினேன். இனி..."

மேலே மேலே நிறுத்தாமல் டயலாக் பேசியவனின் வாயை பாரதி எட்டித் தன் கையால் பொத்தினாள்

கெஞ்சலாய்ப் பேசினாள்.

"ப்ளீஸ்... விக்கி... சும்மா அறுக்காதயேன். தாங்க முடியலை... ஜோக் வாஸ்தவமாவே நன்னா இருந்தது. அதான் சிரிச்சேன். ஆனா மனசு உன் ஜோக்க தாங்கிக்கற, ரசிக்கற 'மூட்'ல இல்ல... ப்ளீஸ்."

வாயைப் பொத்தியிருந்த கையை விக்ரம் விலக்கி னான்.

"ஓகே இட்ஸ் எ பார்க்கெய்ன், நா அறுக்கல... ஆனா, நீ ஏன் இப்படி இருக்கே, காரணத்த சொல்லு..."



"ப்ச்... ஒண்ணுமில்லை..."

எழுந்திருக்க முயன்றவளை விக்ரம் அழுத்தி உட்கார வைத்தான்.

"மா— இதானே வாண்டாங்கறது?"

பாரதி பிடிவாதமாய் மௌனிக்க, ரமணி மோடாவை அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தபின், "இது உனக்கே நன்னாயிருக்கா?" என்றார்.

"எது?"

"எங்கள இப்படி கெஞ்ச வைக்கறதுதான்..."

"சரி— இது நியாயமில்லே— ஆனா நேத்திலேந்து உங்க கிட்டே பேசணும்னு நா சொல்றத காதுலியே வாங்கிக்காம, டெலிவிஷன்ல நியூஸ் கேட்டதும், ஆபீஸ் ஃபைல் பார்த்ததும், கார்த்தால எந்தக் கவலையும் இல்லாம பேப்பர் படிச்சதும், எம். எஸ். பாட்டு கேட்டுண்டு ஷேவ் பண்ணிண்டதும் மட்டும் உங்களுக்கு நியாயமா தோணறதா?"

நான் சந்தேகப்பட்டது சரியாய்ப் போய்விட்டது— பார்த்தாயா உங்கம்மா ஏதோ சொல்ல முனைந்ததை நான் கவனிக்காமல் இருந்துவிட்டதில் அவளுக்கு மூக்குக்கு மேல் கோபம்— புரிந்ததா? என்று கேட்கும் பார்வை ஒன்றை பிள்ளையை நோக்கி வீசி, உதட்டைப் பிதுக்கின ரமணி லேசான அசட்டுச் சிரிப்புடன் மனைவியின் கையைப் பற்றி "ஸாரிம்மா— நான் கவனிக்காம இருந்தது தப்புதான்— இப்ப சொல்லு, என்ன சொல்ல வந்தே?" என, பாரதி அவர் கைப்பிடியிலிருந்து தன் கையை விலக் கினாள்.

"ஒண்ணுமில்ல"— என்றாள் கோபம் தணியா மலேயே—

"ஸாரி சொன்னப்புறம் கூட என்ன பிடிவாதம் இது பாரதி? வேணும்னு அப்படி தான் நடந்துப்பேனா? ஏதோ பேப்பர் படிக்கற ஸ்வாரஸ்யத்துல..."

"வேணும்னு வேற அப்படி நடந்துக்கணுமா, ரமணி ?"

"அடக்கடவுளே... நான் என்ன சொல்ல வரேன்னா..."

என்றுமில்லாத அதிசயமாய் அம்மா பிடிவாதத்துடன் இருப்பதையும், அப்பா என்ன செய்வது என்று புரியாமல் தவிப்பதும் விளங்க, நிலைமையின் இறுக்கத்தைத் தளர்த்தும் உத்தேசத்தோடு, விக்ரம் எழுந்து நின்றான். கைகளைத் தட்டி, அவர்களின் கவனத்தைத் தன்பால் திருப்பினான்.

'லேடி அண்ட் ஜென்டில்மேன்— பத்திரிகை படிக்கற ஸ்வாரஸ்யத்துல பேச்சைக் கவனிக்கலைனு சொல்றப்போ, அருமையான ஜோக் ஒண்ணு நினைவுக்கு வந்து 'சொல்லு, சொல்லு'னு தொந்தரவு பண்ணறது, அது என்னன்னா..."

"விக்கி"— நேரம் காலம் புரியாமல் என்னடா தொந்தரவு பண்ணுகிறாய்... என்கிற தொனியில் ரமணி அதட்ட,

"அவனை ஏன் கோச்சிக்கறேள் ரமணி? என் மேல கோவம்னா அதை அவன் மேல ஏன் காட்டணும்?"

"யார் மேலயும் எனக்கு எந்தக் கோவமும் இல்லை... இப்ப, என்ன விஷயம்னு சொல்லப்போறியா, இல்லையா?"

பாரதி நீளமாய் மூச்சை இழுத்து வெளியிட்டாள். நாவால் உதட்டை ஈரப்படுத்திக் கொண்டு யோசித்து வைத்திருந்த தினுசில் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினாள்.

"ஆல் ரைட்— சொல்றேன்— நான் மறுபடியும் ராஜமாணிக்கம் மாஸ்டரோட கிளாஸுக்குப் போறதா தீர்மானம் பண்ணியிருக்கேன்"

ஏதோ முக்கியமான விஷயம் பற்றிப் பேசப் போகிறாள் என்று எதிர்பார்த்த ரமணி "அ...?" என்றார், கேட்டதைப் புரிந்து கொள்ள முடியாமல்...



"ராஜமாணிக்கம் மாஸ்டர்? யாரும்மா அது? தமிழ் சொல்லிக் கொடுக்கற கிளாஸுக்குப் போய் 'பண்டிதர்' பட்டம், கிட்டம் வாங்கப்போறியா— மா?"

"இல்லை... ராஜமாணிக்கம் மாஸ்டர் என்னோட டான்ஸ் டீச்சர்."

சட்டென்று ரமணிக்குப் புரிந்தது.

"ஓ... யாரு?"

"என் டான்ஸ் மாஸ்டர், ரமணி. நீங்ககூட ரெண்டு நாலு தரம் பார்த்திருக்கேளே!"

"எப்போ?"

"கல்யாணம் ஆன புதுசுல..."

"போச்சுடா"— என்றான் விக்ரம்.

"விளையாடாதே பாரதி" என்றார் ரமணி.

"இதுல விளையாட என்ன இருக்கு. சீரியஸாதான் சொல்றேன்..."

"என்ன?"

"மறுபடியும் டான்ஸ் கிளாஸுக்கு போப்போறேன்னு..."

அவள் பேச்சை இன்னும் நம்பமுடியாத மாதிரி கண்களை ரமணி விரிக்க, முதன்முறையாய்த் தன் விளையாட்டுத்தனத்தை மறந்து விக்ரம் புருவங்கள் உயர, பெற்றவர்களை மாறி மாறி ஏறிட்டான்.

அம்மாவின் அருகில் அமர்ந்து, அவள் கை வளையல்களை முன்னும் பின்னும் தள்ளிவிட்டான். தணிந்த குரலில் கேட்டான்.

"மறுபடியும் டான்ஸ் ஆட ஆரம்பிக்கப் போறேனா சொல்றே, மா?"

"ம்ம்" பாரதி உற்சாகமாய்த் தலை அசைத்தாள். "இன்டாக்ட் இல மாசங்களாகவே ஆத்துல மத்தியான வேளைல, டேப் போட்டுட்டு ஆடிண்டுதான் இருக்கேன்... உங்க யாருக்கும் எதுவும் தெரியாது... இப்ப, டான்ஸ் கிளாஸுக்குப் போகப்போறேன், அதான் வித்தியாசம்..."

ரமணி, இடக்கையால் தலைமுடியைக் கோதிவிட்டுக் கொண்டார். யோசனையுடன் வினவினார்.

"இரு...இரு... நீ பாட்டுக்கு நீளமா பேசிண்டுபோனா எனக்குப் புரியல... கொஞ்ச நாளாவே நீ ஆத்துல ஆடி ப்ராக்டீஸ் பண்ணறியா, என்ன ?"

"ஆமா."

"என்கிட்டே சொல்லவேயில்லையே பாரதி ?"

"நீங்க கேக்கவே இல்லையே ரமணி..."

அவள் குறும்பாகப் பேசினாளா, தீவிரமாகக் குற்றம் சாட்டுகிறாளா என்பது விளங்காமல், அதை நிமிஷம் மௌனித்துவிட்டு ரமணி அடுத்த கேள்வியைக் கேட்டார்.

"ஓ. கே. அந்த ஆத்துமட்டு ப்ராக்டீஸ் போதாதுனு இனிமே டான்ஸ் மாஸ்டர் நடத்தற கிளாஸுக்கே போய் ஆடறதுனு தீர்மானம் பண்ணிட்டியா ?"

பாரதி எழுந்து ஜன்னலருகில் சென்று நின்று கொண்டாள்.

தெருவோடுபோன நாய் ஒன்று விளக்குக் கம்பத்தை முகர்ந்து பார்த்துவிட்டு, காலைத் தூக்கிச் சிறுநீர் கழித்தது. திருப்தி அடையாத விதத்தில் திரும்பி விளக்குக் கம்பத்தை சுற்றி வந்து, மீண்டும் முகர்ந்து, மீண்டும் சிறுநீர் கழித்துவிட்டு யாரோ வலுச்சண்டைக்குக் கூப்பிட்டு விட்ட வேகத்துடன் பின்னங்கால்களால் பரக்பரக்கென்று புழுதி கிளம்ப மண்ணைப் பிராண்டி விட்டு, ஓட்டமாய் ஓடியது.



பாரதி திரும்பி, எதிரில் உட்கார்ந்திருந்தவர்களை எதிர்ட்டாள்.

"மாஸ்டர் வீட்டுக்கு ஆடறதுக்காக மட்டும் போகப் போறதில்லை..."

"அப்புறம் ?"

பாரதி பழையபடி பிள்ளைக்கும், கணவனுக்கும் இடையில் வந்து அமர்ந்து கொண்டாள்.

"இப்படி மொட்டைத் தாத்தா குட்டைல விழுந்தாப்பல மாதிரி நான் பேசினா, உங்களால எதையும் தெளியா புரிஞ்சுக்க முடியாது... மொதல்லேந்து சொல்றேன். பொறுமையா கேக்கறேளா ? நேத்து மார்கெட்டுக்குப் போனப்போ அந்த நாள்ல என் டான்ஸ் கச்சேரிக்கு மிருதங்கம் வாசிச்ச ராமபத்திரன் ஸாரை எதேச்சையா பாத்தேன். அவர்தான் ராஜமாணிக்கம் மாஸ்டருக்கு ஆக்ஸிடெண்ட் ஆன விவரத்தைச் சொன்னார். பதறிண்டு மார்கெட்லேந்தே நேரே மாஸ்டர் வீட்டுக்குப் போனேன். ரொம்ப வருஷம் கழிச்சு என்னைப் பாத்ததுல மாஸ்டருக்குச் சந்தோஷமான சந்தோஷம். ரொம்ப நேரம் பேசிண்டு இருந்தார். 'மங்கைக்கு ஆக்ஸிடெண்ட்ல கால் உடைஞ்சது இன்னும் சரியாகல... மாசக் கடைசில வரிசையா கச்சேரி இருக்கு, பரதநாட்டியம் பத்தி வீடியோ படம் எடுக்க வெளிநாட்டுலேந்து மனுஷா வேற வரா... அந்தக்கால ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம் எல்லாம் இந்தக்கால ஸ்டூடண்ட்ஸ் யாருக்கும் பூரணமா பாடம் இல்ல, இப்பத்தான் இந்த அவசியத்துக்காகச் சொல்லிக் கொடுத்திருக்கேன். ஆனா, அதைச் சரியா கத்துக்குடுத்து, கடைசி நிமிஷ திருத்தங்கள் எல்லாம் பண்ணமுடியாதபடி மங்கை படுத்துண்டுட்டா... என்ன பண்ணப்போறேன்னு புரியலை'னு சொல்லி மாஸ்டர் கண் கலங்கினதைப் பாத்தப்போ என்னால சும்மா இருக்க முடியல... 'நான் இருக்கேன் ஸார்... கவலைப்படாதீங்கோ'னு சொல்லிட்டு வந்துட்டேன்..."

ரமணி கண்களை இடுக்கிக்கொண்டு அவளை வெறித்துப் பார்த்தார்.

"புரியலை... அந்த மங்கை ஆக்ஸிடெண்ட் ஆகிப் படுத்திருக்கும், வெளிநாட்டுலேந்து வீடியோ எடுக்க ஆள் வந்திருக்கும், நீ மறுபடி ஆட தீர்மானிச்சிருக்கறதுக்கும் என்ன சம்பந்தம் பாரதி ?"

"நான் சொல்லட்டுமா ? அம்மால ஆடச்சொல்லி அந்த ஃபாரினர் வீடியோ எடுக்கப்போறார்— அதானேமா ?"

"இல்லை"

"அப்பாடி ! ஒரு நிமிஷம் ஆமா—னு சொல்லிடுவியோன்னு பயந்துட்டேன்மா. நீ ஆடி, வீடியோ எடுத்து, யாருமா பார்க்கறது ? பாவம் அந்த வெளிநாட்டுக்காரர், விட்டுடும்மா... பொழைச்சுப் போகட்டும் ?..."

"விக்கி— நீ விளையாடறதை நிறுத்தப்போறயா இல்லையா ? எதுக்கலெ உங்கம்மா ஏதோன்னு என்னென்னவோ பேசறாளேனு நான் குழம்பிப்போயிருக்கேன்— நீ வேற குட்டையை குழப்பாதடா— ப்ளீஸ்"

"ஸாரிப்பா—நீ சொல்லும்மா. நான் சமத்தா குறுக்க பேசாம இருக்கேன்."

பாரதி, கணவரைப் பார்க்கத் திரும்பி உட்கார்ந்து கொண்டாள்.

"இந்த இருபது வருஷங்கள்ல பாடம் எல்லாம் ஏகத்துக்கு மாறி இருக்கு, ரமணி. அந்தக்கால அயிட்டங்களை வேணும்னு வீடியோ எடுக்கறவா கேட்டுண்டதால, மாண்டா சமீபத்துல தான் அதை எல்லாம் ஸ்டூடண்ட்ஸ்க்குச் சொல்லிக் கொடுத்திருக்கார். இப்ப இருக்கிற சரியான ஆள் இல்லை... நான் அந்தக் கால ஸ்டூடண்ட். வீடியோ எடுக்கப் போறவா கேக்கற அயிட்டம் எல்லாம்



எனக்கு அத்துப்படி. அதனால, ஸ்டூடண்ட் சத்யா ஆடறானானு பார்க்கறதும், தேவைப்பட்டா திருத்தி, பார்த்துக்கிட்டா ஆட உதவுவதும் என் வேலை..."

"ஸோ— டீச்சர் வேலை பாக்கப் போறேன்னு சொல்லு..."

"இல்லை, அப்படிச் சொல்றது சரியில்லை... ஒரு பழைய மாணவியா, மாஸ்டருக்கு உதவப் போறேன், அவ்வளவு தான்..."

"எத்தனை நாளைக்கு ?"

"மாசக்கடைசில ஃபாரினர்ஸ் வராங்கனு மாஸ்டர் சொன்னார்"

"இன்னிக்குத் தேதி பதினாறு... ஸோ, இன்னும் பதினைஞ்சு நாளைக்கா ?"

"ம்ம்"

"வாரத்துல எத்தனை நாளைக்கு ?"

"தினமும்— சாயங்காலம் நாலுலேந்து ஏழு, எட்டு மணி வரை"

"அப்பஎன்னா நான் ஆபீஸ்லேந்து வர்றச்சே இருக்க மாட்டியா ?"

சின்னக் குழந்தையின் ஆதங்கத்தோடு ரமணி வினவ, பாரதி 'இது என்ன கேள்வி ?' என்கிற சிறுசில புன்னகைத்தாள்.

பதில் கூறாமல் எழுந்து நடந்தவளை, 'மாம்', என்று அழைத்து விக்ரம் நிறுத்தினான்.

"இன்னிக்கு நீ ரொம்ப வித்யாசமா இருக்கே— மா— மைட் இஸ் சம் ஸ்ட்ரேஞ்ச் அபௌட் யூ... இந்தமாதிரி எனக்குப் புதுசு— ஆர் யூ ஓகே—மாம் ?"

கவலையுடன் மகன் கேட்பது புரிய, பாரதி சிரித்தாள்.

"எனக்கு ஒண்ணுமில்லை விக்கி... நல்லாத்தான் இருக்கேன்... வீணா கவலைப்படாதே..." என்றவன் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். ஆற அமர யோசனை பண்ணி, என் இந்த முடிவுக்கு வந்தேன் என்பதைப் புரிந்து கொள்ளுவது உங்கள் பொறுப்பு என்கிற மாதிரி அவர்களைத் தனியாக விட்டுவிட்டு, வரவேற்பறைக்குச் சென்று ஏழரை மணி செய்திச் சுருக்கத்தைக் கேட்பதற்காகத் தொலைக்காட்சி முன் உட்கார்ந்தான்.

## 12

"முதல்லே தோடய மங்களம், தொடர்ந்து அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம் | அதுக்கப்புறம் நாலு பதம் ஜாவளி வகையறா... தில்லானா, கடைசியா குற்றாலக் குறவஞ்சி... ஆக மொத்தம் பத்து உருப்படிங்க... என்ன மங்கை, அந்த வெளிநாட்டுக்காரங்களுக்கு இது போதும் இல்லே? நீ என்ன சொல்றே பாரதி?"

கூடத்து ஊஞ்சலில் காலை சப்பணமிட்டு அமர்ந்து துளிர் வெற்றிலையைத் தொடை வேஷ்டியில் துடைத்து, சுண்ணாம்பு தடவியவாறு, சாய்வு நாற்காலியில் கால்களை நீட்டிப் படுத்திருந்த மங்கையிடமும், பின்னர் தலையைத் திருப்பி, சற்றுத் தள்ளி நாற்காலியில் உட்கார்ந்திருந்த பாரதியிடமும் கேட்க, மங்கை பதில் கூறினாள்.

"அதெல்லாம் சரியாதான் இருக்கு... ஆனா, அமெரிக்காலேந்து முதல்லே கடுதாசி போட்டப்பவே, அவங்க ஜாவளி, பதங்களை நிறைய ரிகார்ட் பண்றதுலே ஆர்வமா இருக்கறதா தெரிவிச்சிருந்ததை நாம மறக்கக் கூடாதுப்பா... அதனாலே நாலு பதங்கள் இல்லே, ஆறு உருப்படிங்க ஆடினாகூட அவங்க சந்தோஷப்படுவாங்களேன்னு நான் நினைக்கிறேன். ஆமா, என்னென்ன



பதங்கள்? நிர்மாணம் பண்ணிட்டீங்களா? யாரு எந்த அயிட்டத்தை ஆடப்போறாங்க?"

வாயில் இருந்த வெற்றிலையை இரண்டு தரம் மென்று ஒரு பக்கமாய் ராஜமாணிக்கம் ஒதுக்கிக்கொண்டார். எச்சில் அதிகமாய் ஊறாததால் பேச்சு சுபஷ்டமாகவே இருந்தது.

"ம்ம்—அந்த சுற்று நானும் யோசனை செஞ்சிட்டு தான் இருக்கேன். காயத்ரி, தமிழரசி, வள்ளி, தாராமணி இவங்க நாலுபேரா போறதாலே நான் தெரிஞ்சிக்கிறேன் ஆளாளுக்கு நாலு பதங்களையும் சேர்ந்து ஆடச் சொல்லிட்டு, காயத்திரியும், வள்ளிப் பொண்ணும் ஆடட்டும், வர்ணம் தமிழரசியும் தாராமணியும்..."

"என்ன வர்ணம் இது மாதிரி பண்ணிட்டீங்களா?"

"பச்சை மாமலை போல— ராகமாலிகை பாகத்தை ஆடச் சொன்னா எப்படி இருக்கும்? அந்தக் காலத்துலே [illegible] போட்டிருக்காளே அது! என்ன சொல்றே?"

மங்கை கொஞ்சம் முன்னால் சாய்ந்து பாரதியை எதிர்பார்த்தாள்.

"பாரதி அக்கா அந்த வர்ணத்த ஆடினது இப்பவும் என் கண் முன்னாலேயே நிக்குதுப்பா..."

ராஜமாணிக்கம் ஒரு கையில் ஊஞ்சலைத் தட்டி ஆமோதித்தார், புகையிலைக் துப்பலை வெளியே வீசிவிட்டுக் கனைத்துவிட்டு, தலையை நிமிர்த்தியவாறு குரலை உயர்த்தினார்.

"அ... அ... நிச்சயம்! காமோஜி வர்ணமே கண்ணிலே கதழுகிறது... —னு சுருதி ராகத்துல பாகமுத்த எழுத்து 'ஊழில்லேன், காணி இல்லேன், உறவு மற்றொருவர் இல்லேன், பாழில் நின் பாதமூலம் பற்றினேன் பரம மூர்த்தி' —னு சொல்லி அபிநயம் செய்யறப்போ, வாழ்நவோ

சொல்லேன் மங்கை, பாழுங்கிணறோட உருவம் மழுங்கி போய், சாட்சாத் அந்த ஆழ்வாரே பிழுக்கட்சமாயிட்ட மாதிரி நா உழுகிப் போயிடுவேன்... பாட்டுமாறாது, கட்டு வாங்கம் பண்ணவே கூடாது. அப்படியே நெகிழ்ந்து..." வாயில் அடக்கியிருந்த வெற்றிலை காரணமாய் 'ர'வுக் கெல்லாம் 'ழ' போட்டுப் பேசுவதை மற்றவர் புரிந்து கொள்வார்களா மாட்டார்களா என்கிற கவலை இன்றிப் பேசிய நாழிகையில் உணர்ச்சி வசப்பட்டு விட்டதில் கண்கள் பனித்து மேலே பேச முடியாதது போல ராஜ மாணிக்கம் தவிக்க முற்பட்டார்.

செய்ய வேண்டிய காரியங்களை ஆலோசிப்பதி லிருந்து பேச்சு திசைத்த நினைப்பில்லாமல் சென்ற காலத்துக்குத் தாவி, அவனைப் பாராட்டுவதில் வந்து நின்றவுடன் திடுமென எழுந்த பரவசத்தில் வாசுதேவின் கண்ணோரங்கள் வியர்க்கின. தயக்கத்துடன் பேசினான்:

“சார்... வந்து... என்னை சார் ஆனாலும் ரொம்ப உயர்வா எங்கியோ தூக்கி வைக்க பேசறேள்? நீங்க சொல்லிக் கொடுத்தபடி ஆடினேன்... அதனாலே நான் ஏதாவது விசேஷமா பண்ணியிருந்தா அந்தப் பெருமை எல்லாம் உங்களுக்குத்தான்...”

அவனை முடிக்க விடாது மங்கை குறுக்கிட்டாள்.

“அப்படிச் சொன்னா நா ஒத்துக்க மாட்டேன் அக்கா... அப்பாவும் ஒத்துக்க மாட்டார்...ப்பா... என்னமா ஆடுவீங்க? கிருஷ்ணா நீ பேசனே! ஆடறப்போ, பால க்ருஷ்ணனோட குறும்புகளை கண் முன்னால படம் பிடிச்சுக் காட்டுவீங்களே... கூடவே தாய்க்குத் தெரியாம மண்ணைத் தின்னுட்டு, பிடிபட்டு, அடிவாங்கி வாயத்திறந்து காட்டினதும் ஜகத்தோ உத்தாரணா, உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணா'—ன்ற வரில அந்தக் குழந்தை வாய்ல மூணு உலகமும், சர்வ ஜீவராசிகளோட தெரிஞ்சி, யசோதை விதிர்த்து போற இடத்தை அபிநயம் பண்ணீங்களே, சத்தியமா சொல்றேன்—கா, சபையில இருந்தவங்க அத்தனை பேரும் அழுவாங்க... நான் பாத்



திருக்கேன்... நீங்க மட்டும் நாட்டியம் ஆடறத விடாம இருந்திருந்தா, இன்னிக்கு 'ஓஹோ'ன்னு சொல்ற அளவுக்கு எங்கேயோ போயிருப்பீங்க... இந்த வார்த்தைய நான் சும்மாவானும் சொல்லலைக்கா... அப்பப்ப உங்க ஞாபகம் வர்றப்போ அப்பாவும் நானும் புலம்பிகிட்டது தான்...” பேசியவள், ராஜமாணிக்கம் பக்கம் திரும்பினாள். “என்னப்பா, நான் ஏதாவது இல்லாததச் சொல்றேனா?”

ராஜமாணிக்கம் நீளமாய்ப் பெருமூச்சை வெளியிட்டு 'இல்லை' என்று தலை அசைத்தார்.

“இம்ஹும்மா... என் மனசுல எப்பவோ தோணிட்ட கருத்துக்களைத்தான் நீ இப்ப வெளியிடறே... வாப்... பழங்கதை பேசி என்ன பிரயோஜனம், அதுவும் 20 வருஷங்கள் கழிச்சப்புறம்?”

அரை நிமிஷம் மௌனமாய் நகர்ந்தது. மாவுக்கட்டுப் போட்டிருந்த காலை மெதுவாக நகர்த்தி, சற்று வசதியாய் உட்கார்ந்து மங்கை பேசியபோது குரல் சன்னமாய் ஒலித்தது.

“இதை இப்பச் சொல்றது அதிகப்பிரசங்கித்தனமா கூட இருக்கும்—கா. அதுக்காக என்னை மன்னிச்சிடுங்க... ஆனா, சொல்லாம இருக்கமுடியலை... நீங்க கல்யாணம் கட்டி இருக்கவே கூடாதுக்கா. என்னை மாதிரி, ஜயா— என்னை விடுங்க—சாதாரணம்—ஆனா, பத்மா சுப்ரமணியம், அலர்மேல் வள்ளி மாதிரி, நாட்டியத்துக்கே உங்களை அர்ப்பணிச்சிட்டு இருந்திருக்கணும்னே நா நினைக்கிறேன்...”

ராஜமாணிக்கம் முற்றத்துக்குச் சென்று வாயில் ஊறிய எச்சிலைத் துப்பிவிட்டு வந்து ஊஞ்சல் கம்பியைப் பிடித்தபடி நின்று பேசினார்.

“அதெல்லாம் நடந்திருக்கக்கூடிய காரியம் இல்லை மங்கை... ஆசைப்பட்டாலும் அளவோட படணும்...மாப்

பின்னை விட்டுல கல்யாணமானப்புறமும் பாரதி டான்ஸ் தொடர சம்மதிச்சிருந்தாங்கன்னாகூட நா சந்தோஷப் பட்டிருப்பேன். ஏன், இப்ப சுதாராணி ரகுபதி, சித்ரா விஸ்வேஸ்வரா— எல்லாம் தாம்பத்தியத்துல ஈடுபட்டு இட்டே பிரமாதமா முன்னுக்கு வரலியா? அப்படி பாரதியும் வளர்ந்திருந்தா அதுவே எனக்கு நிறைவைத் தந்திருக்கும். எங்க? அநியாயமா அற்புதமான திறமை வீணா போயிடுச்சி... ஹூம், யாரு குத்தம் சொல்லி இப்ப என்ன பிரயோஜனம்!"

பேச்சு தன்னைப் பத்தியே சுழலுவதோடு அல்லாமல் பழி ரமணிமேல் போய்ச் சேருவதைப் பொறுக்க முடியாமல், பாரதி அவசரமாய்க் குறுக்கிட்டாள்.

"நீங்க சொன்ன மாதிரி எப்பவோ நடந்துபோன விஷயங்களைப் பத்தி இப்பப் பேசறதுல என்ன லாபம் ஸார்? நா கொடுத்துவச்சது அவ்வளோதான்... வேற என்ன சொல்றது!... ஆனா ஸார், இந்த மட்டுக்காவது இந்த வித்தையை கத்துக்க முடிஞ்சதேன்னு நா வாஸ்தவமா சந்தோஷப்படறேன்... இத நீங்க நம்பணும்... பொண்ணா பொறந்திருந்தா, நடந்திருக்கறதே வேறயா இருந்திருக்கும்... அதுவும் நடக்கல... விடுங்கோ ஸார்... எல்லாத்துக்கும் கொடுத்து வச்சிருக்கவாண்டாமா?"

புன்னகைத்து, நிலைமையின் இறுக்கத்தைத் தளர்த்த முயன்ற பாரதி, மற்றவர்கள் ஏதும் பேசாமல் இருக்க, தானே குரலில் உற்சாகத்தை வரவழைத்துக்கொண்டு தொடர்ந்தாள்.

"எதையோ பேச உட்கார்ந்துட்டு, வேண்டாததை எல்லாம் அரை மணியா பேசி பொழுதை வீணடிச்சுட்டோம்; மணி ஆறாகப் போறது... ஸ்டூடண்ட்ஸ் எந்த நிமிஷமும் வந்துடுவா... என்ன அயிட்டம்னு நாம இன்னும் தீர்மானம் பண்ணலியே ஸார்..."

ராஜமாணிக்கம் மீண்டும் முற்றத்துக்குப்போய் வெற்றிலையைத் துப்பி வாயைக் கொப்பளித்துவிட்டு வந்து பாரதிக்கு அருகில் நாற்காலியில் உட்கார்ந்தார்.



"அதான் அப்பவே சொல்லிட்டேனே... தோடய மங்களம், அலாரிப்பு, கல்யாணி ஜதிஸ்வரம், மண்டூக சப்தம், ராகமாலிகை வர்ணம், பதங்கள், ஜாவளி, கமாஸ் தில்லானா, குறவஞ்சினு..."

"ஜாவளி, பதங்கள் என்னென்னு தீர்மானம் பண்ணலியே ஸார்?"

"ம்ம்!"

கண்களை மூடி, விரலால் நாற்காலி கைப்பிடிமேல் தாளம் போட்டவாறு ராஜமாணிக்கம் யோசித்தார்.

"அந்த நாளை பதங்கள்ல, பாலாம்மா ஆடினது எல்லாமே விசேஷம்தான். உனக்கு 'அதுவும் சொல்லுவான், அவள் அநேகம் சொல்லுவாள். அவனுக்கென்ன' நாட்டக்குறிஞ்சி ராக பதமும், 'யாருக்காகிலும் பயமா?' பேகடா ராக பதமும் பாடமா பாரதி?"

பாரதி உற்சாகமாய் 'ஆம்' என்று தலை அசைத்தாள்.

பாலாம்மா என்று மாஸ்டர் குறிப்பிடுபவரை ஒரு தரம் மனசுக்குள் முழுசாய் நிறுத்திப் பார்த்தபோது சந்தோஷமாக இருந்தது.

பாலா என்று செல்லமாய்த் தெரிந்தவர், தெரியாதவர் என்று ஒட்டு மொத்தமாக கலை ரசிகர் அனைவராலும் அழைக்கப்பட்ட பால சரஸ்வதி!

பட்டுப்புடவையை சற்றே உயர்த்திக் கட்டி, கழுத்து, மூக்கு, காதுகளில் வைரங்கள் மின்ன, இடுப்பில் ஒட்டியாணம், ஒற்றைப் பின்னல், பெரிய குங்குமப் பொட்டு, மை தீட்டின விழிகள், வெற்றிலையால் சிவந்த உதடுகளுடன் மேடையில் நின்று 'அதுவும் சொல்லுவான், அவள் அநேகம் சொல்லுவான்' பதத்தை ஆட முற்பட்டால், ஆஹா... சபை மறந்து போகும்; மேடை, ஜோடனை, பாலஸரஸ்வதியின் வயது, உருவம் எல்லாம்

மறந்து போகும். மனசை சுண்டி இழுத்து கண்களைக் கட்டிப்போடும் அந்த முகபாவமும், அபிநயமும் சத்தியமாய் ஜொலிக்கும்.

'ஒன்றுமே இல்லாமல் இருந்தவனுக்கு வந்த அதிருஷ்டத்தைப் பாரேன், அற்பனுக்கு வசதிவந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் என்பதுபோல இவனுக்கு யோகம் அடித்தாலும் அடித்தது, அதனால் இவன் செய்யும் கூத்து தாள முடியவில்லை. எப்படி இருந்தவன், இன்று என்னமாய் ஆட்டம் போடுகிறான் ?' என்று முகவாயில் கை வைத்து, ஆற்றாமையுடன் பெண் ஒருத்தி வசதி வந்துவிட்ட இன்னொருவனைப் பார்த்துப் பொருமுவதை தத்ரூபமாய் சித்தரித்துவிட்டு கடைசியாய், யார் வீட்டிலோ ஒரு வாய் உணவுக்காகக் கெஞ்சிக் கொண்டிருந்தவனுக்கு இன்று மாளிகை ஆள், அம்பு எல்லாவற்றுடன் 'கறந்து குடிக்க ஒரு கொட்டில் மாடு உண்டாச்சு'— என்றும் முத்தாய்ப்பு வைத்து அபிநயிக்கையில், சபையே கலகலத்துப் போகுமே !

''கா வா வா கந்தா வா வா—'' என்கிற சிவன் பாடலுக்கு அபிநயம் பிடிக்கும்போது 'கூப்பிட்டாயா, பாலா ? இதோ வந்து விட்டேன்' என்று பழனி முருகன் சபையின் நட்ட நடுவில் வந்து விடமாட்டானா ?

பாலசரஸ்வதி... பாலா... பரதத்துக்கு, அபிநயத்துக்கு, நின்ற இடத்திலிருந்தே கண்களை அசைத்து உதடுகளைச் சுழித்து, பார்க்கும் ஒரு பார்வையில் நவரஸங்களுக்கு, அர்த்தமும், உயிரும் கொடுத்த மாமேதை பாலாம்மா...

ஆட்டம் மட்டும் இல்லை, நாட்டியத்தைப் பற்றின அவரது சிந்தனைகளும், கருத்துக்களும்கூட உயர்வானவை தானே... ஒரு பேட்டியில்...

''என்னம்மா யோசனை ? என்ன நினைச்சிட்டு இருக்கே... என்னடா, இத்தனை வருஷம் கழிச்சு வாத்தியார்கிட்ட வந்து மாட்டிக்கிட்டமேன்னா ?''



பாரதி சின்ன சிரிப்போடு ''சேச்சே'' என்றாள்.

''பாலாம்மாவு நீங்க சொன்னதும் அவரோடு நாட்டியத்துல கவனம் போயிடுத்து ஸார். என்னமா ஆடுவார்...! ஒருதரம் ஒரு பேட்டில பரதநாட்டிய கச்சேரிய கோவில் ஒண்ணோட அவர் ஒப்பிட்டுப் பேசியிருந்த பேட்டிக் கட்டுரையும் நினைவுக்கு வந்துடுத்து ஸார்... அதான்...''

''பரதநாட்டியத்த ஒரு கோவிலோட ஒப்பிட்டா ! அது என்னம்மா புது வியாக்யானம் !''

''நீங்க படிக்கலையா ஸார் ? அற்புதமான கம்பேரிஸன் ஸார் அது ! 'நாட்டிய கச்சேரிங்கறது ஒரு கோவிலுக்குப் போற அனுபவம் மாதிரி. முதல் அயிட்டமான அலாரிப்பு ஆடறப்போ கோபுர வாசல்ல நுழையுறோம். ஜதிஸ்வரம் வெளி பிரகாரத்துக்குச் சமம். சப்தம் ஆடறப்போ அர்த்த மண்டபத்துக்குள்ள நுழையுற உணர்வு வரும். கோவில்ல நடுநாயகமா விளங்கறது கர்ப்பக்ரஹம், நாட்டியக் கச்சேரில வர்ணம். அடுத்து இதமான ராகங்கள், முகபாவங்களுக்கு முக்கியத்வம் கொடுத்து உணர்ச்சிபூர்வமா ஆடும் பதங்கள்— இவை பகவானை வழிபட உபயோகப்படுத்தற மந்திரங்கள், பூக்கள், ஸ்லோகங்கள் மாதிரி... கடைசியா தில்லானா— இது பகவானுக்குக் காட்டப்படும் தீபாராதனைக்குச் சமம்... ஆக, அலாரிப்பிலேந்து, பக்தியோட தில்லானா வரைக்கும் பக்திரஸத்தோட ஆடறப்போ, ஒரு கோவிலுக்குப் போய் ஸ்வாமிய தரிசனம் பண்ணிட்டு வந்த உணர்வு கட்டாயம் ஒரு ரஸிகருக்கு வரணும்'—னு குழந்தைக்குக்கூட புரியற மாதிரி அவர் கொடுத்த விளக்கம் என்னால ஆயுசு வரைக்கும் மறக்க முடியாது ஸார். நீங்க பாலாம்மாவு சொன்னதும், இந்த விளக்கம் மறுபடி வார்த்தை வார்த்தையா மனசுக்குள்ள ஓடினதால, அதுலியே லயிச்சுப் போயிட்டேன்.

ராஜமாணிக்கம் மீண்டும் துளிர் வெற்றிலைகளாக எடுத்துத் துடைத்துச் சுண்ணாம்பு தடவ முற்பட்டார்.

''விளக்கம் அபாரமாதான் இருக்கு... அந்தம்மாவுக்குத்தான் இப்படிப்பட்ட உயர்ந்த விஷயங்களெல்லாம் தோணும்... அவங்களோட ஒவ்வொரு அணுவிலேயும் ரத்தம் எங்கே ஓடிச்சு? நாட்டியம்தானே நிறைஞ்சிருந்தது... ஆமா நான் கேட்ட கேள்விக்குப்பதிலை காணோமே! அந்தப் பதங்கள் உனக்குப் பாடமா?''

''எல்லாம் எனக்குப் பாடம்தான் ஸார். அப்பப்ப வீட்டுல டேப்ப போட்டுண்டு ஆடிப் பாக்கறதால, எதுவும் மறக்கல... ஸ்டூடன்ஸுக்கு நான் சொல்லித் தந்துடறேன். நீங்க கவலையே படாதீங்கோ''

''ரொம்ப சந்தோஷம்... அப்படியே குற்றாலக் குறவஞ்சிய கூட திருத்திடணும்... இப்பல்லாம் யார் வசந்தவல்லியோ, ஆண்டாளோ, இல்ல குறவஞ்சியோ ஆடறாங்க? ஏழு உருப்படிங்க ஆடினா, அதுவே பெரிசா இல்ல இருக்கு... உக்காந்து பாக்க ஜனங்களுக்கு பொறுமையும் இல்ல, குனிஞ்சு நிமிர்ந்து, உழைச்சு ஆட குழந்தைகளுக்கு மனசும் இல்ல... எல்லார் புத்தியும் டி.வி., வி.ஸி.ஆர் மேலதானே இருக்குது— என்னா நான் சொல்றது?''

ஜோக்கு ஒன்றைச் சொல்லிவிட்ட குஷியில் ராஜமாணிக்கம் குலுங்கிச் சிரிக்க, பாரதி அடக்கமாய் புன்னகைத்தாள்.

''ஸ்டூடண்ட்ஸ் வந்துடுவா... மாடிக்குப்போலாமா, ஸார்?''

எழுந்து நின்றவளின் கையை மங்கை எட்டிப் பிடித்தாள்.

''உங்க ஆட்டத்த எனக்கும் பாக்கணும் போல இருக்கு ஆனா, மாடிக்கு வர முடியாது— நாளைக்கு சுருக்க வந்து இங்க ஒரு சில உருப்படிங்க ஆடிக்காட்ட முடியுமாக்கா?''

குழந்தையின் ஆர்வத்துடன் மங்கை வினவ, பாரதி வெட்கத்துடன் அவளை ஏறிட்டாள்.



''கேலி பண்ணறியா மங்கை? இருபது வருஷம் கழிச்சு ஆடற ஆட்டம் எப்படி இருக்கும்னு உனக்கு நானா சொல்லணும்...! மாட்டுக்கு ஒத்தாசையா இருக்க வந்திருக்கறத மட்டும் நினைவுல வைச்சுக்கோ— எழுபதை ஆடுவேன்னு எல்லாம் எதிர்பாக்காதே...''

மங்கை பிடிவாதமாய் தலை அசைத்து மறுத்தாள்.

''நா கவனமா கேக்கறேன்... நீ சொல்றதுக்கு... மாடில நேத்து நீங்க அபிநயமும், சப்தமும் ஆடினது பத்தி அப்பா சொல்லக் கேட்டேன், எனக்கே ஆசை வந்துடுச்சு... 'இத்தனை வருஷம் கழிச்சு ஆடற மாதிரியே இல்ல... முத்திரை களும், அடவும் சுத்தமா இருக்கு'ன்னு அப்பா பெருமைப்பட்டுக் கிட்டார் தெரியுமா?''

பாரதி தவிப்புடன் ராஜமாணிக்கத்தையும், மங்கையையும் பார்த்தாள். உதட்டை நாவால் ஈரப்படுத்திக் கொண்டு வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினாள்.

''நாளைக்கு மங்கை— ஆனா இன்னிக்கு, இந்த வயசுலேயும் ஆட்டம் சுத்தமா இருக்குன்னா, அதுக்கு ஸார் அன்னிக்குப் போட்ட அஸ்திவாரம்தான் காரணம் மங்கை... அதை யாரும் மறந்துடக் கூடாது... என் பங்குனு சொல்லிக்க எதுவும் இல்ல... நிஜமாத்தான் சொல்றேன்... அப்புறம்...''

மேலே என்ன பேசுவது என்று புரியாமல் அவள் நின்றிருந்த நிமிஷத்தில், அந்த சங்கடத்திலிருந்து அவளை மீட்பது போல வாசல் கேட்டைத் திறந்துகொண்டு காயத்ரியும், நாராயணியும் உள்ளே வர, ''ஸ்டூடன்ஸ் வந்துட்டா... நான் மாடிக்குப் போகட்டுமா, ஸார்?'' என்று கேட்டு, அவர் தலை அசைத்த பிறகு அவசரமாய் பாரதி வாசலுக்குச் சென்று மாடிக்குச் செல்பவர்களுடன் சேர்ந்து கொண்டாள்.

# 13

கிட்டத்தட்ட ஒரு மாசமாய் தலைகால் புரியாத அளவில் தீவிரமாய் ஏதேதோ வேலைகளைச் செய்து கொண்டிருந்து விட்டு, இரண்டு நாட்களாய் ஒன்றுமே உருப்படியாய் பண்ணாமல் வீட்டிலேயே அசமஞ்சமாய் உட்கார்ந்திருப்பது காற்றே இல்லாத அறைக்குள் மாட்டிக் கொண்ட அவஸ்தையை எழுப்பினாலும், அதையும் மீறிக் கொண்டு ஒரு நிறைவான உணர்வு நெஞ்சு பூராவும் பரவியிருப்பதையும் அவளால் உணர முடிந்தது

நிறைவுதான் ஸாராவையும், மார்க்கையும் சந்திக்க முடிந்து, முக்கியமாய் ஸாராவோடு பழகி, அவளது சிந்தனை ஓட்டத்தைப் புரிந்துகொள்ள முயன்று, புதிய திசைநோக்கி புதிய கதவுகளை அடியெடுத்து வைத்திருந்ததில் புதிய எண்ணங்களை பெற்றதிலிருந்தே ஒருவித திருப்தி எழுந்திருப்பது நிஜம்தான்.

பதினைந்து நாட்கள் என்று நினைத்தது ஒரு மாசமாக இழுத்துக் கொண்டு போனதும், மாலையில் இரண்டு அல்லது மூன்றுமணி நேரம் மாஸ்டர் வீட்டுக்குச் சென்று மாணவிகளுக்கு நடனம் சொல்லிக் கொடுத்தால் போதும் என்பது நாலைந்து நாட்களுக்குள் மாறி காலை பத்து மணிக்கு ஆரம்பித்து, அங்கேயே சாப்பிட்டு மாலை எட்டு மணி அளவில் வீட்டுக்குத் திரும்பினதும், ரமணியின் லேசான கோபத்தையும், வார இறுதியில் வீட்டுக்கு வந்து 'என்னம்மா இது!' என்கிற புருவ உயர்த்தலோடு நின்ற மகளையும் 'புரிந்து கொள்ளுங்கள்' என்று கெஞ்சும் சிரிப்போடு சமாளித்துவிட்டு செய்வதைத் தொடர்ந்து செய்ததும், அமெரிக்காவிலிருந்து வந்திருந்தவர்களோடு காஞ்சிபுரத்துக்கும், மகாபலிபுரத்துக்



கும் போனதும், சிதம்பரத்திற்கு அழைத்துச் சென்று கோபுரத்தில் செதுக்கி இருக்க நூற்றி எட்டு கரண சிற்பங்களை ரசித்து நின்றதும்— இதுவரை ஆயுசில் பாரதி அனுபவித்திராத புதுமையான அனுபவங்களே!

எந்த நாட்டைச் சேர்ந்தவராய் இருந்தால் என்ன? அந்த ஸாராவும், மார்க்கும்தான் பண்பிலும், அறிவிலும் மனித நேயத்திலும் எத்தனை உயர்ந்தவர்களாய் இருந்தனர்!

சின்ன வயசில் கிடைத்த இந்திய நண்பர்கள், பின்னர் இந்திய கலாசார அறிமுகம் காரணமாய் கோவில்களை காண வேண்டும், தமிழ்ப் பண்பாட்டை அனுபவிக்க வேண்டும், முடிந்தால் பரத நாட்டியத்தைப் பற்றி ஒரு டாக்குமெண்டரி தயாரிக்க வேண்டும் என்று பல வருஷங்கள் முன்னரே மூண்டுவிட்ட ஆசையை நிறைவேற்றிக் கொள்ள, தெரிந்தவர் மூலம் ராஜமாணிக்கம் ஸாரோடு தொடர்பு கொண்டு படத் தயாரிப்பாளரும் கணவருமான மார்க்குடன் வந்திருந்த ஸாராவின் சிந்தனையும், பேச்சும்தான் மற்றவர்களிலிருந்து மாறுபட்டிருந்தன!

இந்த ஒரே மாசத்தில் அவளிடமிருந்து கற்ற விஷயங்கள்தான் எத்தனை எத்தனை!

தனக்கு என்ன வேண்டும் என்கிற தெளிவு, அதை நிறைவேற்றக் காட்டும் ஆர்வம், எடுத்துக்கொண்ட காரியத்தில் சிரத்தை, கடினமான உழைப்பு... இன்னும்...

ஒருமணி வெயிலைப் பொருட்படுத்தாமல், பிரம்புக் கூடை ஊஞ்சலில் அமர்ந்து, தூரத்தில் அதிக சலனமில்லாமல் பரந்திருந்த நீலக்கடலை ஊன்றிப் பார்த்தவண்ணம் ஸாராவின் அறிமுகம் இதுநாள்வரை தனக்குள் மூடிக் கிடந்த ஜன்னலை திறந்துவிட்டதுதானா இந்த நிறைவுக்குக் காரணம் என்று யோசித்தவள், பார்வையைத் தெருப் பக்கமாய்த் திருப்பியதும் கருப்பு, நீலம், மஞ்சள் என்று வட்டங்கள் கண் முன் மிதந்து பார்வையை மசமசக்க வைத்தன.

பாரதி கண்களை மூடிக்கொண்டு, ஊஞ்சலில் சரிந்து உட்கார்ந்தான். வலது காலால் தரையை உதைத்து ஊஞ்சலின் வேகத்தை அதிகரித்தான். சில நிமிஷங்களுக்கு அப்படியே ஆடிக்கொண்டிருந்துவிட்டு, மெதுவாகக் கண்களைத் திறந்து எந்தவித இலக்கும் இன்றி விழிகளை அலைய விட்டான்.

ஊஞ்சலை தாம்புக் கயிறுமூலம் விட்டத்துக் கொக்கியில் மாட்டி இருந்த இடத்திலிருந்து அடையாய் ஒட்டடை தொங்குவதைக் காண முடிய, விசுக்கென்று கோபம் நெஞ்சில் ஏறியது.

ஒருத்தருக்கு இரண்டு ஆட்கள்! இருந்தும் என்ன பிரயோஜனம்! பித்தளை சாமான்கள் மங்கிப் போய் விட்டத்தில் ஒட்டடை கட்டி, கார்பெட் கீழ் மண் சேர்ந்து, ஜன்னல் கண்ணாடிகளில் புழுதி படிந்து... இத்தனைக்கும் இரண்டு ஆட்களுமே சில வருஷங்களாக இருப்பவர்கள்தாம், புதிது ஒன்றும் இல்லை. பாரதியின் கறாரும், கண்டிப்பும், சுறுசுறுப்பும் அறிந்தவர்கள்தாம். உப்புக்காற்றின் சமீபம் வெண்கல, பித்தளை சாமான்களின் பளபளப்பை சீக்கிரமே மங்கச் செய்துவிடும் என்பதால் எது எப்படி ஆனாலும், வாரம் ஒருதரம் அவைகளுக்குப் பாலிஷ் போடுவது தப்பாமல் அந்த வீட்டில் நடக்கும் சமாசாரம். அலுக்காமல் பிரதி திங்களும் எலுமிச்சம் பழத்தை இரண்டாக நறுக்கி சிலைகள், பூ ஜாடிகள் மேல் அழுத்தத் தேய்த்து, அலம்பி, துடைத்து ப்ராஸோ தடவி துடைத்து விட்டுவிடுவதால் கடையில் கொடுத்து மெஷின் பாலிஷ் செய்த தினுசில் அமைந்து வரவேற்பறை சாமான்கள் ஜொலிக்கும்.

அதேபோல பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை காலை பத்திலிருந்து பன்னிரண்டு வரை வீட்டின் ஒட்டடை அடித்து, பெட்ஷீட்களை மாற்றி, கண்ணாடிகளில் முதலில் சோப்பு தடவி, பின்னர் சரியான நியூஸ் பேப்பரால் துடைத்து பளபளக்க வைப்பது பல வருஷங்களாக எந்த வீட்டில் குடியிருந்தாலும், ரொட்டீனாக செய்யும் காரியங்களில் ஒன்று.



தான் அருகில் இல்லாவிட்டாலும் ஆட்கள் தாங்களாகவே நினைவில் வைத்துக் கொண்டு இவைகளைச் செய்து முடிக்கும் அளவுக்குப் பயிற்சி இருந்தும் என் இந்த ஒட்டடை, ஜன்னலில் அழுக்கு?

தலையை மட்டும் உள் பக்கமாய் 'புஷ்பா' என்று பாரதி குரல் கொடுத்தான். ஒரு நிமிஷம் காத்துப் பார்த்து விட்டு புஷ்பா வராததால் எழுந்து உள்ளே போய் சமையல்கட்டு வாசலில் நின்று எட்டிப்பார்த்தான்.

சுவரைப் பார்க்க திரும்பிப் படுத்திருந்த புஷ்பா சுகமான உறக்கத்தில் ஆழ்ந்திருப்பதை சீராக ஏறி இறங்கிய விலாப் பக்கம் உணர்த்தியது.

'மத்தியான வேளைல என்ன தூக்கம், ஜமீன் மாதிரி?' என்று அதட்ட நினைத்தவன், ஒருசில நொடிகளில் எண்ணத்தை மாற்றிக் கொண்டு திரும்பி நடந்து மீண்டும் பால்கனிக்கே வந்து ஊஞ்சலில் அமர்ந்தான்.

புஷ்பா இவனிடம் வேலைக்கு வந்துவிட்ட இத்தனை வருஷங்களில் இப்படி மதிய வேளையில் அயர்ந்து தூங்கி, இன்றுதான் முதல் முறையாய்ப் பார்க்கிறான்.

உடம்பு கிடம்பு சரியில்லையா?

ம்ம்? அப்படியும் தோன்றவில்லையே. காலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்தாள். வழக்கம் போல கலகலப்பாய்த்தானே இருந்தாள்.

அப்புறம்?

அண்ணாந்து சிந்தித்தபோது மேலே தொங்கின ஒட்டடையும், புஷ்பாவின் பகல் தூக்கமும் சேர்ந்து கொண்டு ஒன்றும், ஒன்றும் இரண்டு என்றன.

ஓ! அதுவா காரணம்!

ஒரு மாசமாய் தான் வீட்டில் இல்லாமல் போனதில் வேலைகள் புறக்கணிக்கப்பட்டு, சோம்பேறித்தனமாய்

தூங்குவது பழக்கமாகிவிட்டதா? இவை தவிர, எஜமானி வீட்டில் இல்லாததால் கிடைத்த சுதந்திரம் கொடுத்த தைரியத்தில் அரட்டையும் பெருகி இருக்குமோ? கோபத்தோடு சந்தேகமும் சேர்ந்து கொள்ள, மேல் உதட்டில் வியர்த்தது.

பாரதி கஷ்டப்பட்டுத் தன்னை ஆஸ்வாசம் செய்து கொள்ள முயன்றாள். காரணங்களை வரிசைப்படுத்தி, தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டு நிதானிக்கப் பார்த்தாள்.

யார் வீட்டில் இதெல்லாம் நடக்கவில்லை? கோடீஸ்வரன் வீட்டிலிருந்து, சாதாரண நபர் வீடு வரை வேலைக்காரர்கள் இப்படி அப்படி நடந்து கொள்வது சகஜம்தானே? புஷ்பாவும், ராணியும் என்னிடம் பல வருஷங்களாக இருப்பவர்கள். இரண்டு பேருமே வேலையில் கெட்டி. முக்கியமாய் இருவருக்குமே கை சுத்தம், மறந்து போனாலும் வைத்த காசு வைத்த இடத்தில் இருக்கும். டம்ளர் பாலை எடுத்துக் கொண்டுவிட்டு தண்ணீர் கலந்து வைப்பதெல்லாம் கிடையாது. ஒரு மாசமாய் நான் வீட்டில் இல்லாமல் இருந்ததில் கெடுபிடி குறைந்து, மேலோட்டமாய் வேலை பார்க்கத் துவங்கி விட்டார்கள். அதானே? போனால் போகிறது தெரியாத்தனம் என்று விட்டுப்பிடிக்காமல் எதற்காக அனாவசியமாய்க் கோபப்படுகிறேன்?

எரிச்சல் எழுந்த வேகத்திலேயே அடங்கிவிட, பாரதி சின்னதாய் புன்னகைத்துக் கொண்டாள். ஒரு மாசத்திற்கு முன்னால் என்னால், இத்தனை சீக்கிரத்தில் கோபம் தணிந்திருக்காது. புஷ்பாவைக் கூப்பிட்டுக் கத்த வைத்திருக்கும். அவள் பதில் பேசினாலோ, முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாலோ கத்தல் அதிகமாயிருக்கும். அதோடு நிற்காமல் மாலையில் ரமணி அலுவலகத்திலிருந்து திரும்பியதும் 'ஆனாலும் இந்த ஆளுங்களுக்கு ரொம்பத்தான் இடம் கொடுத்துட்டோம். மரியாதையும்



இல்லை, பயமும் இல்லை... எல்லாம் நாம பண்ண தப்பு...' என்று புலம்பச் செய்திருக்கும், கட்டாயம்.

இன்று அப்படி குதிக்கத் தோன்றவில்லை. மாறாக, காரணத்தை ஆராயலாமோ என்று சிந்திக்க முனைந்திருப்பது பெரிய மாற்றம், மிகப் பெரிய மாற்றம்.

மாறியிருப்பதை மனசு ஒப்புக்கொண்டதும் புன்னகை சிரிப்பாக உருவெடுத்தது.

ஊஞ்சலில் சாய்ந்து காலை உதைத்து வேகமாக ஆடுகையில் சற்றுமுன் காற்றில்லாத அறையில் மாட்டிக்கொண்டு மூச்சு முட்டுகிற மாதிரி தோன்றிய அவஸ்தை கூட குறைந்து விட்ட மாதிரி தோன்றியது.

சந்தோஷத்தோடு பார்வையை அலையவிட்டபோது ரொம்ப உயரத்தில், வெறிச்சிட்டுக் கிடந்த வானம் பின்னணியில் நீண்டிருக்க, பறவை ஒன்று வட்டமடித்து பறப்பதைப் பார்க்க முடிந்தது.

கழுகா? பருந்தா?

இறக்கையை துளி அசைக்காமல் விமானம் மாதிரி மிதக்கிறதே, இது எப்படி சாத்தியமாகிறது!

விமானத்தில் பைலட் 'ஆட்டோ க்ருயிஸ்' என்னும் விசையை முடுக்கிவிட்டால், விமானம் யாரும் ஓட்டத் தேவையில்லாமல், தன்னிச்சையாக பறக்கும் என்பார்களே. அப்படி இந்தப் பறவைக்கும் ஏதாவது விசேஷ சக்தி இருக்குமோ! அதை 'ஆன்' பண்ணிவிட்டு, சீராக ஒரே வட்டத்தில் எந்த விசாரமும் இல்லாமல் ஹாய்யாக பறந்து கொண்டிருக்கிறதோ?

தூக்கம் வந்தால் என்ன செய்யும்?

பசித்தால் என்ன பண்ணும்?

கீழே இறங்கிவந்து இரை தேடி, பிடித்து, உண்டு விட்டு மறுபடி மேலே போய்விடுமா? அத்தனை உயரத்தில் விஸ்ராந்தியாய்ப் பறப்பதில் இதற்கு என்ன

சந்தோஷம் அதுவும் தன்னந்தனியாய் ? 'போர்' அடிக்காது !

கேள்விகளில் காணப்பட்ட குழந்தைத்தனம் வாய் விட்டுச் சிரிக்கச் செய்ய, பாரதி எழுந்து உள்ளே போனான் புத்தகங்கள் அடுக்கி வைத்திருந்த அலமாரியிடம் சென்றான் 'பறவை எப்படிப் பறக்கிறது' என்கிற கேள்விக்கு விளக்கம் அறிய 'என்னைக்லோபீடியோ' புத்தகத்தைத் தேடினான். ம்ஹூம், காணோம். எங்கே போயிற்று...? மேல், கீழ் தட்டுகளில், விக்ரம் அறையில் தேடிய நிமிஷத்தில் அவன் அப்புத்தகங்களை கல்லோடு ஹாஸ்டலுக்கு எடுத்துப் போய்விட்டது ஞாபகத்துக்கு வந்தது.

"எதுக்கு இந்த புக்ஸ் எல்லாம் மூட்டை கட்டிண்டு போறானா ? நாலட்ஜ்—மா...கலப்படம் இல்லாம, ஏன், எப்படி, எதுக்குனு ஒரு விஷயத்தப்பத்தி அப்பப்ப தெரிஞ்சுக்கறதுக்கு, இந்த புக்ஸ் அவசியம்—மா. நானு ப்ரெண்ட்ஸோட இருக்கறப்போ, பேச்சோட பேச்சா 'ஜான் லாகி பெயர்ட்' 1926-ல முதமுதல்ல லண்டன் ராயல் இன்ஸ்டிட்யூட்ல டெலிவிஷனை டெமான்ஸ்ட்ரேட் பண்ணி காண்பிச்சார்'ங்கற விஷயத்தையோ இல்ல, 'ஒலிம்பிக் கொடில அஞ்சு கண்டங்களை காட்ட அஞ்சு வளையங்கள் இருக்கற மாதிரி நாம செய்யறதும் அர்த்தம் உள்ளதா இருக்கணும்—'ங்கற சேதியையோ சமயத்துக்குத் தகுந்த மாதிரி சேர்த்துப் பேசினா, 'ப்ச் ! இவனுக்கு இருக்கற ஜெனரல் நாலட்ஜை பாரேன்'னு தம்பமேல அடுத்தவனுக்கு மரியாதை கூடும் ! அதுக்கு இந்த மாதிரி புக்ஸை அடிக்கடி படிச்சு விஷயங்களைத் தெரிஞ்சுக்கணும்— புரியறதா ?"

புரியாமல் என்ன ?

விக்ரம் விளையாட்டாக அவ்வப்போது பேசுவதைத் தானே ஸாராவும் தீவிரமாகத் தன் கருத்துக்களாக வெளியிட்டான்.



"வளரவேண்டும் என்கிற ஆர்வம் இருந்தால் மட்டும் போதாது, முயற்சிவேண்டும். கண், காது, இருதயம் என்று அனைத்தையும் திறந்து வைத்துக்கொண்டு யாரிடமிருந்து எதையெல்லாம் கற்று வரலாம் என்கிற ஆர்வத்துடன் இருந்தால்தான் வளர்ச்சிவரும். மனித மனமும், அறிவும் விசாலமடையும்போது சிந்தனைகளும் குறுகி, கோணிப் போகாமல் விரிவடைகின்றன. ஆரோக்யமான சிந்தனைகள் ஆக்கபூர்வமான செயல்களுக்கு வித்தாகின்றன... ஆக, அத்தனைக்கும் அடிப்படை அஸ்திவாரம் மனம். இது சீராக வளர, சுய அலசலும், சுய விமர்சனமும் வெகுவாக உதவும் தினமும் இரவு படுக்கப் போகுமுன், இன்று என்னென்ன பேசினேன், செய்தேன் என்று சுய அலசல் செய்துகொள்வதன் மூலம் என் குறை நிறைகளை நானே உணர்ந்துகொள்கிறேன் பின் குறைகளைக் குறைக்கவும், நிறைகளைக் கூட்டவும் விடாமல் முயற்சிப்பது மனமுதிர்ச்சிக்கும், செழிப்பான வளர்ச்சிக்கும் வழி செய்கிறது..."

சென்னைக்கு வந்த ஒரு சில நாட்களுக்குள்ளேயே ஸாராவின் தெளிவான கருத்துக்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக்கள் ஏராளமாய்கிட்ட, அவைகள் குளத்தில் எறிந்த கற்களைப்போல பாரதியினுள்ளும் சிந்தனைகளை எழுப்பவே செய்தன.

ஒருவாரம் போலகற்றுள் நாட்டிய படப்பிடிப்பு இல்லாத நாட்களில் காஞ்சிபுரத்தில் பரமாச்சாரியாரைத் தரிசிக்கவும், திருவண்ணாமலையில் ரமணாஸ்ரமத்துக்கும் பாண்டிச்சேரியில் அரவிந்தர் ஆஸ்ரமத்துக்கும், சென்னையில் ஜே. கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷன் இயங்கிய வசந்த விஹாருக்கும் சென்றுவரத் தலைப்பட்டது பாரதியைப் பொறுத்தவரை புதிய திசையை நோக்கி நடக்கவைத்த புதிய சுவடுகளே.

அதுவும் எந்தப் பேச்சைப் பேசினாலும் "என் சிந்தனை, பேச்சு அத்தனைக்கும் அடி உரமாவது இந்திய நாட்டுப் பெரியவர்கள் ஏற்கனவே சொல்லி வைத்து

விட்டுப் போயிருக்கும் கருத்துக்கள்தாம். சின்னவயதில் ஒரு சில வருஷங்கள் பாலஸரஸ்வதியிடம் நியூயார்க்கில் பரதம் பயின்றதும் வெஸ்லியன் யுனிவர்ஸிடியில் கர்நாடக சங்கீதம் கற்றதும் 'இன்டாலஜீ' புரொபஸர் இந்தியத் தத்துவத்தை மனசில் பதியும்படி சொல்லித் தந்ததுமே இன்றைய என் தெளிவான போக்குக்குக் காரணம். ஆக, பாராட்டுக்களை எனக்குத் தராதீர்கள்— இந்தியத் தத்துவங்களுக்குத் தாருங்கள்..." என்று புன்னகையுடன் ஸாரா பேசப் பேச, அன்றாடம் இரவு வீடு திரும்பியதும் உறக்கம் வராத சமயத்தில் நிதானமாக அந்தப் பேச்சுக்களை பாரதி மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்ப்பது ஒரு வழக்கமாகவே ஆகிப்போனது.

சுய அலசல்— சுய விமர்சனம்— மன வளர்ச்சி— தெளிவான சிந்தனை.

நடுநடுவில் அவளே படித்து, கேட்டிருந்த ஜே. கிருஷ்ணமூர்த்தியின் கூற்றுகளும் நினைவில் மின்னாமல் இல்லை.

"ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்கிற ஆர்வம், தூண்டுதல் நிஜமானதாக இருந்தால், பசி, தூக்கம்போல அதையும் எப்படியேனும் நாம் நிறைவேற்றிக்கொள்வது உறுதி..."

உண்மைதான்.

பரத நாட்டியத்தோடு மீண்டும் தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும் என்கிற ஆர்வம் சத்தியமானதாய் இருந்ததால்தானே கடந்த ஒரு மாசமாய் எந்தக் குற்ற உணர்ச்சி இன்றி, தயக்கம் இன்றி, வீட்டைவிட்டு வெளியே சென்று மாஸ்டருக்கு உதவியதும், ஸாரா, மார்க்கோடு பழகுவதும் சாத்தியமாயிற்று! அதுவும் ஸாராவின் தெளிவான சிந்தனை, நடவடிக்கைகளால் ஈர்க்கப்பட்டு, அந்த ரீதியில்...

"டீ கொண்டு வரட்டுமாம்மா?"

லைப்ரரி ஷெல்ஃப்மேல் சாய்ந்தவாறு இன்னதுதான் என்று இல்லாமல் தோன்றிய கருத்துக்களில் ஆழ்ந்திருந்தவள் திரும்பினாள்.



புஷ்பாதான்.

"என்ன, நல்ல தூக்கம் போல இருக்கு?"

புன்னகை மாறாமல் வினவினாலும், புஷ்பா தவறு செய்துவிட்ட மாதிரி தலையைக் குனிந்து கொண்டாள்.

"இல்லம்மா— வந்து..."

"தூக்கம் வந்தா தூங்கு— ஆனா, வேலைகளை முடிச்சுட்டு தூங்கு!"

விளக்கம் புரியாமல் புஷ்பா இருந்திருக்க, பாரதி மென்மையாய்ப் பேசினாள்.

"ஊஞ்சல் மேல ஒட்டடை, ஜன்னல் கதவு எல்லாம் தூசி— நான்தான் இல்லேன்னா தினம் நீயாவது கூட நின்னு கவனிக்கக் கூடாதா புஷ்பா? இப்ப ராணி வந்ததும் எல்லாத்தையும் செஞ்சு முடிச்சுடுங்க... என்ன? சரி, போய் டீ கொண்டு வா... குடிச்சிட்டு நான் வெளியே போய்ப்போறேன்..."

எதற்கெடுத்தாலும் கத்தி படபடக்கும் அம்மாவா இப்படி அமைதியாகப் பேசுகிறார் என்கிற வியப்பு அப்பட்டமாக வெளிச்சம் போடும் முகத்தோடு புஷ்பா நகருவதைப் பார்க்கையில் அடக்கியிருந்த சிரிப்பு மறுபடியும் தலை தூக்க, ஸாரா அவளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்த 'டேல் கார்னகியின்', "மனிதர்களை அன்பால் வென்று, ஸ்நேகமாய் இருப்பது எப்படி?" என்கிற புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, பாரதி பால்கனியை நோக்கி நடந்தாள்.

## 14

கலாக்ஷேத்ரா—
கதைகளின் இருப்பிடம்—
கலைகள் வாழும் புனிதத் தலம்—

எத்தனை அழகான, பொருத்தமான பெயர்!

நுழைவாயிலை ஒட்டி இருந்த பெஸண்ட் அருண்டேல் பள்ளியிலிருந்து வெள்ளை ஜிப்பா, பைஜாமா சீருடை அணிந்து வெளிப்பட்டு 'இது அழகான ஸ்தலம் மட்டும் அல்ல, மிக வித்தியாசமான இடம் கூட' என்று உணர வைத்த மாணவர்கள்...

இயற்கை வளம் நிறைந்த வனம் ஒன்றில் புகுந்துவிட்ட மாதிரி அடர்த்தியான தோகைகளுடன் உயர உயரமாய் நின்ற, கொன்றை, வேம்பு, புளிய, ஆல மரங்கள்.

மூன்று மணி வெயிலை மண்டையில் தட்டி குளிர வைத்த கடற்கரைக் காற்று.

கூட்டமாய்ப் பறந்த கிளிகள், மைனாக்கள், தவிட்டுக் குருவிகள், சிட்டுகள்...

இங்கும் அங்கும் தள்ளித் தள்ளி, கிராமத்து ஜாடையில் ஓடுகள் வேயப்பட்ட சின்னச் சின்னக் கட்டடங்கள்...

வளைந்து செல்லும் செம்மண், கப்பி பாதை...

ஒற்றையாய், தோளில் ஜோல்னா பையும், கதர் குர்தாவுமாய் நடந்து கொண்டிருந்த மனிதர்...

"அதோ அங்க போறாரே, அவர்கிட்ட கொஞ்சம் வண்டிய நிறுத்து..."

வண்டியோட்டி நிறுத்தினான்.

பாரதி கண்ணாடியைத் தழைத்து, முன்னால் சாய்ந்து கேட்டாள்.

"எக்ஸ்க்யூஸ் மீ... தகவல் விசாரிக்கிற மாதிரி இங்க என்க்வைரி இல்லேன்னா, ரிஸப்ஷன் ஆபீஸுனு ஏதாவது இருக்கா?"



அந்த மனிதருக்கு அறுபது, அறுபத்தைந்து வயசு இருக்கலாம். பார்வையைத் தாழ்த்தி மூக்கில் சரிந்த கண்ணாடி வழியாக பாரதியை ஏறிட்டு மெல்லிய குரலில் பதில் கூறினார்.

"இப்படியே நேரா போனா வலது பக்கம் 'ஆபீஸ்'னு போர்டு போட்டிருப்பாங்க. அங்க பிரின்ஸிபால் இருப்பார், எதுவானாலும் அவர்கிட்ட தெரிஞ்சுக்கலாம்..."

"தாங்க்ஸ்..."

வண்டி புறப்பட்டு அவர் குறிப்பிட்ட இடத்தை அடைந்தது.

கதவைத் திறந்து கொண்டு இறங்கி, பூமியைக் கால் ஸ்பரிசிக்க தொடுகையில் செருப்பையும் தாண்டிக்கொண்டு அந்த மண்ணின் வீரியத்தை உணர முடிந்துவிட்ட இனிமையில் பாரதியின் மனசும், உடம்பும் சிலிர்த்தன...

கலாக்ஷேத்ரா...

கலைகளின் இருப்பிடம்...

கலைகள் வாழும் புனிதத் தலம்...

இங்கு வரவேண்டும், கேள்விப்பட்ட அனைத்தையும் கண் குளிர நீ காணவேண்டும், முடிந்தால் இந்த அமைப்போடு தொடர்பு கொள்ளவேண்டும் என்பதெல்லாம் எத்தனை வருஷங்களுக்கு முன் ஜனித்த ஆசைகள்!

வண்டியின் கதவை மூடி அதன்மேல் சாய்ந்தபடி நின்று பார்வையைச் சுற்றிலும் அலையவிட்டபோது பள்ளிப்படிப்பு முடிந்துவிட்ட ஆண்டில், தனது பதினைந்தாவது வயசில், நெஞ்சில் வண்டி ஆசைகளைச் சுமந்து கொண்டு ஒரு காலைப் பொழுதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு முதலில் அம்மாவிடமும் பின்னர் அப்பாவிடமும் பேசிய பேச்சுக்கள் நினைவுப் பெட்டகத்திலிருந்து எழும்பி யாரோ தூசி போக தட்டி, அனுப்பிய மாதிரி துல்லியமாய் ஞாபகத்தில் மிதந்தன.

"ப்ளீஸ்—மா"

இரண்டாவது முறையாக பாரதி கெஞ்ச, செய்து கொண்டிருந்த காரியத்தை நிறுத்திவிட்டு அன்னபூரணி நிமிர்ந்தாள்.

"என்னத்துக்காக இப்படி காலங்கார்த்தால வேலை பண்ணவிடாம தொண தொணக்கறே, பாரதி?"

"அப்பாகிட்ட சொல்லும்மா... ப்ளீஸ்..."

"அது நடக்கற காரியமா எனக்குத் தோணலை..."

"ப்ளீஸ்—மா—எனக்காக முயற்சி பண்ணக்கூடாதா? என்னோட சின்ன வயசு ஆசை உனக்குக்கூடவா புரியலே? இல்லே, உனக்கு இதுல இஷ்டம் இல்லியா? சொல்லிடு"

அன்னபூரணி நீளமாய் மூச்சை இழுத்து வெளியிட்டு, தணிந்த குரலில் பேசியபோது என்றோ தோன்றி யாரும் அறியாமல் உடனுக்குடன் மறந்துவிட்ட கனவு கண்களில் மெல்லியதாய் வெளிச்சம் போட்டது.

"நானும் குழந்தையா இருந்தப்போ இப்ப நீ ஆசைப் படற தினுசில வேணா ஆசைப்பட்டிருக்கேன். ஆனா வாயத் திறந்து யார்கிட்டயும் எதையும் வெளிப்படுத்தின இல்லை. அது அந்தக் காலம். அதனால் முளைக்காமலேயே என் ஆசையெல்லாம் அழுகிப் போயிட்டதுதான் நிஜம். ஹூம்.. இப்ப அந்தப் பேச்சு எதுக்கு? அப்பாகிட்ட பேசணும்... அதானே பேசறேன்... ஆனா, அவர் ஒத்துப் பார்னு எனக்குத் தோணலை..."

நிஜமான அக்கறையுடன் பேசிய அம்மா அன்றிரவே இவள் உடன் நிற்க, அப்பா நாராயணனிடம் பேசவே செய்தாள்.

"வந்து.. நம்ப பாரதிக்கு காலேஜ் எதுலேயும் சேர இஷ்டம் இல்லை..."



அம்மா சின்ன குரலில் தெரிவித்த செய்தியை நம்ப மாட்டாமல் அப்பா கண்களை விரித்தார்.

"அப்புறம்?"

"..கலாக்ஷேத்ராவுல சேர்ந்து டான்ஸ் கத்துண்டு டிப்ளமா பண்ணணுமாம்..." சொல்ல வந்ததை முடிக்காமல் அம்மா நிறுத்த, சில நொடிகளுக்கு மௌனமாய் இருந்துவிட்டு அப்பா தீர்மானமாய்ப் பேசினார்.

"ஸாரி. இதுக்கு நான் சம்மதிக்கப் போறதில்லே... கலாக்ஷேத்ராவுல சேர்றதோ, டான்ஸ் கத்துக்கறதோ பிசகாய நான் வாண்டாம்னு சொல்லலை. காலம் இருக்கற இருப்புல பொண்களுக்கு அடிப்படைக் கல்வி தேவைன்னு அவசியம்னும், வாழ்க்கையில ஒரு பிரச்னை வந்தா அதைச் சமாளிக்க டிகிரி உதவும்னும் நான் நினைக்கிறேன். அதை முடிச்சுட்டு அப்புறமா யாரும் எதையும் செய்யட்டும்... எனக்கு ஆட்சேபணை இல்லை..."

அப்பா பேச்சுக்கு என்றைக்கு யார் எதிர் கருத்து சொல்லி இருக்கிறார்கள், அன்று கூற?

விஷயம் அதோடு முடிந்தது.

கலாக்ஷேத்ராவில் சேரமுடியாது போனாலும், வீட்டோடு மாஸ்டர் வைத்து நடனம் கற்றதும், ஊர் மெச்சும் நடனமணியாகத் திகழ்ந்து அரங்கேற்றம் நிகழ்ந்ததும் உண்மைதான் என்றாலும், கலாக்ஷேத்ராமேல் கொண்ட மோகமும், அதன்பால் கொண்டிருந்த பக்தியும் துளிகூடக் குறையாமல் நீறுபூத்த நெருப்பு போல இத்தனை வருஷங்களாய் உள்ளுக்குள் கனன்று கொண்டிருப்பதைச் சற்றுமுன் தோன்றிய சிரிப்பு புரிய வைக்க, பாரதி நெகிழ்ந்தாள்.

எத்தனை வருஷத்திய ஏக்கம்!

வாஸ்தவமாகவே அந்தச் சின்ன வயசு கனவு, இன்று நனவாகப் போகிறதா?

உணர்ச்சி வயப்பட்டுப் போனதில் நெஞ்சின் படபடப்பு அதிகரித்துவிட்ட மாதிரி தோன்ற, நாவால் உதட்டை ஈரப்படுத்திக் கொண்டவள் 'ஆபீஸ்' என்ற பலகை காட்டிய வழியில் மெள்ள நடந்தாள்.

ஓலை வேய்ந்த குடில். மூங்கிலில் பிணைத்த ஜன்னல்கள்.

செருப்பை அவிழ்த்துவிட்டு சற்றே உயரம் குறைவாய் இருந்த வாசலில் நுழைந்தாள். காற்றோட்டமான அந்த அறையில் இருந்த முதல் மேஜையில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்த நபரை நெருங்கி "எக்ஸ்க்யூஸ் மீ" என, அவர் நிமிர்ந்தார்.

"நமஸ்காரம்... என் பேர் பாரதி... மிஸஸ் பாரதி ரமணி... வந்து... கலாக்ஷேத்ரா பத்தி சில விவரங்கள் தெரிஞ்சுக்கணும்... யாரைக் கேட்கணும்னு சொல்ல முடியுமா?"

எதிரில் அமர்ந்திருந்த நபர் கைகூப்பி வணங்கினார். மிருதுவான தொனியில் பேசினார்

"நமஸ்காரம். உட்காருங்கோ... என் பேர் ராஜாராம் இங்க பிரின்ஸிபாலா இருக்கேன்... உங்களுக்கு என்ன விவரம் தெரியணும்? கேளுங்கோ, சொல்றேன்..."

மற்றக் கல்லூரிகள்போல பிரின்ஸிபால் என்றால் எங்கோ உள் அறையில் இருப்பார். ஸ்வாமியை சந்திக்க, பூசாரிகளின் உத்தரவு பெறுவதற்குள் போதும்போதும் என்றாகிவிடும் என்பதுபோல இங்கும் இருக்கும் என்று நினைத்திருந்ததற்கு மாறாக "நான்தான் பிரின்ஸிபால்— என்ன வேணும்?" என்று எளிமையே ஒரு உருவம் எடுத்தாற்போல முதல்வர் வினவ, பாரதி என்ன பேசுவது என்பது மறந்துவிட்ட மாதிரி திகைத்தாள்.

பின்னர், சமாளித்துக்கொண்டு கேட்டாள்.

"கலாக்ஷேத்ராவ என்னென்ன கோர்ஸ் இருக்குது தெரிஞ்சுக்க விரும்பறேன்."



"அப்படியா! நாட்டியம், வாய்ப்பாட்டு, வாத்தியங்கள், ஓவியம்— எல்லாத்துக்கும் நாலு வருஷ டிப்ளமா கோர்ஸ் நடத்தறோம். இது தவிர இரண்டு வருஷ போஸ்ட்—டிப்ளமா கோர்ஸும் உண்டு. எங்க [illegible] மத்த பள்ளிக்கூடங்கள்லேயும் படிக்கற குழந்தைகளுக்கு பகுதிநேர டான்ஸ், மியூசிக் கோர்ஸும் உண்டு. உங்களுக்கு எந்த கோர்ஸ் தேவைனு குறிப்பிட்டா, அதுபத்தின விவரங்களை விளக்கமாச் சொல்ல [illegible]..."

பாரதி [illegible] ஆராய்ந்தாள். தன் நிலைமையை எப்படிப் புரியவைப்பது என்று அவள் சங்கடப்பட்ட மாதிரி பிரின்ஸிபால் "எதுவானாலும் தயங்காம சொல்லுங்கோ... எங்களால எந்தவிதத்துல உதவமுடிஞ்சாலும் நாங்க சந்தோஷப்படுவோம்..." என்று தட்டிக்கொடுக்க கூச்சம் நீங்காமலேயே பாரதி பேசினாள்

"வந்து—நான்... வந்து..."

"சொல்லுங்கோம்மா... எதுக்கு இப்படி யோசிக்கறேள்?"

"நான்... பாரதி... வந்து..."

"அதான் முன்னாலேயே சொல்லிட்டேளே... மேலே சொல்லுங்கோ..."

பாரதி தொண்டையை செருமிக்கொண்டாள்.

அடி உதட்டைக் கடித்து, எச்சிலைக்கூட்டி விழுங்கிக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"சின்ன வயசுல நான் ராஜமாணிக்கம் மாஸ்டர்கிட்ட டான்ஸ் கத்துண்டு, நிறைய கச்சேரிகூட கொடுத்திருக்கேன். கல்யாணம் ஆனப்புறம் டான்ஸ் கச்சேரி கொடுக்கறத நிறுத்திட்டாலும், ஆத்ம திருப்திக்கு எனக்கு நானே ஆடிப் பாத்துக்கறது உண்டு... இப்ப சீரியஸா திரும்ப டான்ஸ் தொடர்பா ஏதாவது செய்ய

இருக்கற ஆர்வம் ரொம்ப அதிகமாயிருக்கு... ஆனா, இப்ப எனக்கு வயசு நாப்பது... பழையபடி மேடையில ஆடறதுங்கறது முடியாது... அது என்னோட விருப்பமும் இல்லை... என்ன பண்ணலாம்னு யோசிச்சப்போ நாட்டியம் பத்தி தியரி படிக்க முடிஞ்சா ரொம்ப திருப்தியா இருக்கும்னு தோணித்து... அதான் இங்க வந்தேன்... இப்போ நான் கேக்கப்போறதை நீங்க தப்பா எடுத்துக்க மாட்டேள்னு நம்பறேன்... வந்து இந்த வயசுக்குமேல்... நான்... இங்க... ஸ்டூடண்டா சேர முடியுமா?"

கடைசி வரிகளை முணுமுணுப்பாக பாரதி பேச பிரின்ஸிபால் மென்மையாகச் சிரித்தார்.

"இதுல தப்பா எடுத்துக்க என்னம்மா இருக்கு? அற்புதமான ஒரு காரியத்தைச் செய்ய, ஒரு வித்தையை முழுமையாகக் கத்துக்க நீங்க முனையறது குறிச்சு நான் சந்தோஷப்படறேன். கலை ஆர்வம் உள்ளவாளுக்கு எப்படியெல்லாம் உதவ முடியுமோ அதைச் செய்யணுங்கறதுதானே கலாக்ஷேத்ராவோட குறிக்கோளே...! வித்தையைப் படிக்க வயசு ஒரு தடையே இல்லை... இத நீங்க ஞாபகம் வச்சிக்கணும்... எண்பது வயசான பெரியவர் ஒருத்தர் அப்பப்ப முடிஞ்சப்போ வந்து எங்க கிட்ட வீணை கத்துக்கறார், தெரியுமா? வெளிநாட்டுலேந்து வருஷா வருஷம் லீவு கிடைக்கறப்போ மட்டும் வந்து பாட்டு, நடனம் கத்துண்டு போறவாளும் உண்டு. இங்க ரொம்ப கண்டிப்பான குருகுல வாசம் முறையா நாலு வருஷ டிப்ளமோ கோர்ஸ் நடத்தறோம். ஆனா, கூடவே ஆர்வம் உள்ளவாளுக்கு உதவறவிதமா விசேஷ பயிற்சிக்கான வாய்ப்புக்களையும் நாங்க கொடுக்கத் தயங்கறதில்லை... இந்த கலாக்ஷேத்ராவை ஸ்தாபித்த ருக்மணி அருண்டேல், உயர்ந்த இந்தியக் கலைகளை காப்பாத்தறதையும், அதை ஆர்வம் உள்ளவர்களுக்கு சொல்லிக்கொடுத்து பரப்பறதையும்தானே தன் வாழ்க்கையில தலையாய குறிக்கோளா கடைப்பிடிச்சுண்டு இருந்தார்...?"



மேற்கொண்டு அரைமணி போல தங்கி, பிரின்ஸிபாலிடம் பேசி, தன் சந்தேகங்களை எல்லாம் தீர்த்துக் கொண்டு, அவர் தந்த 'விதிமுறைகள்' புத்தகத்தைப் பெற்ற பிறகு வருகிற ஒன்றாம் தேதியிலிருந்து வகுப்புகளுக்கு வருவதாகக் கூறிவிட்டு பாரதி புறப்பட்டாள்.

இரண்டடி நடந்தவள் கொஞ்சம் தயங்கி "இந்த இடத்தை நான் சுத்திப் பார்த்துட்டு போகலாமா?" என்று கேட்க பிரின்ஸிபால் அவளோடு வெளியில் வந்து, மரத்தடியில் அமர்ந்திருந்த பெண்களில் ஒருத்தியை அழைத்தார்.

மஞ்சள் பைஜாமா, முட்டி வரையில் உயர்த்திக் கட்டின சிகப்பு கைத்தறிப் புடவை, மாநிறம்— மின்னல் இடுப்பு— துருதுருத்த விழிகள், ஒற்றைப் பின்னல் என்றிருந்த பெண்ணின் தோற்றமே அவள் நடனம் பயிலும் மாணவி என்பதைப் பறைசாற்றியது.

"சாரதா... இவர் முதல் முறையா கலாக்ஷேத்ராவுக்கு வந்திருக்கார். சுத்தி பாக்க ஆசைபடறார். கிளாஸ் நடக்கற இடம், தியேட்டர், ஆலமரத்தைக் காட்டிட்டு, முடிஞ்சா ஆடிட்டோரியம், ஹாஸ்டல் எல்லாத்தையும் கூட கொண்டு காட்டு..."

பிரின்ஸிபாலிடம் கை கூப்பி விடைபெற்ற பாரதி, சாரதா என்கிற அந்தப் பெண்ணுடன் மெதுவாக நடந்தாள்.

"கலாக்ஷேத்ரா ஆரம்பிச்சு 56 வருஷம் ஆச்சு. 100 ஏக்கர் நிலப்பரப்புல இந்த ஸ்கூல நடத்தறா... இப்படிப் போனா கிளாஸ் ரூம்ஸ், பிரார்த்தனை நடத்தற ஆலமரம் இருக்கு... அந்தப் பக்கமா போனா ஹாஸ்டல், குளியல் அறைகள், மெஸ்... கொஞ்சம் தள்ளி நடன அரங்கம்—"

தோழமையுடன் பேசியவளைப் பார்த்து பாரதி புன்னகைத்தாள்.

"நீங்க டான்ஸ் டிப்ளமா கோர்ஸ் படிக்கிறேளா?"

சாரதா உற்சாகமாய் "ஆம்" என்று தலை அசைத்தாள்.

""நான் மலேஷியாலேந்து இங்க வந்திருக்கேன். டிப்ளமா கோர்ஸ், இது ரெண்டாவது வருஷம். எங்கம்மாவும் ஒரு டான்ஸர்தான். அத்தை கிட்டயே— ருக்மணி அம்மாவ இங்க எல்லாரும் அப்படித்தான் சொல்லுவாங்க... பாடம் படிச்சவங்க... எனக்கு அந்தக் கொடுப்பினை இல்ல... ஆனாலும், இங்கதான் நான் பயிற்சிபெறணும்னு அம்மா பிடிவாதமாக அனுப்பிட்டாங்க—"

""ஹாஸ்டல்ல தங்கிப் படிக்கறீங்களா?''

""ஆமா... என்ன மாதிரி வெளிநாட்டுலேந்து வந்து கோர்ஸ் பண்ணறவங்க ஹாஸ்டல்லியே தங்கிடுவோம்... ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி ஹாஸ்டல்."

பேசிக்கொண்டே மரங்களினூடே காணப்பட்ட செம்மண் பாதையில் நடக்க, ஆங்காங்கு பர்ண சாலை போன்ற வட்டமான சின்னக் குடில்கள் தென்பட்டன.

ஒன்றில் பிடில் வகுப்பு...

இன்னொன்றில் வாய்ப்பாட்டு...

அதற்கும் சற்றுத் தள்ளி இருந்த கூடத்தில் இசை பற்றின தியரி கிளாஸ்— வானமே தெரியாமல் மரங்கள் கவிழ்ந்திருந்த அந்த அமைதியான சோலையில், இயற்கை அன்னை சாமரம் வீச, குயில்கள் பக்க வாத்தியம் இசைக்க, சங்கீதம் பயிலவும், நாட்டியம் கற்கவும் ஒருவர் கொடுத்துதான் வைத்திருக்க வேண்டும் என்கிற நினைப்பு பாரதிக்கு பரவசமூட்டியது.

அத்தனையும் பார்த்து முடித்து பின்பு, பிரார்த்தனை நடக்கும் ஆலமரத்தடிக்கு மீண்டும் வந்தார்கள்.

விழுதுகளைத் தரையில் ஊன்றிய பெரிய ஆலமரம். அதனடியில் ஐம்பது அடி வட்டத்தில் சிமெண்ட்



பூசப்பட்ட தளம். ஆலமரத்தண்டை சிலை ரூபத்தில் நிச்சிந்தையாய் உட்கார்ந்திருந்த பிள்ளையார். அவரை அலங்கரித்த செம்பருத்திப் பூக்கள்.

''இங்கதான் தினமும் காலைல எட்டரை மணிக்கு சர்வ மத பிரார்த்தனை நடக்கும். மத்தபடி, பஜன், கந்து கீர்த்தனை, மொழி வகுப்பு எல்லாம் கூட இந்த ஆலமரத்தடியே நடக்கும். சில சமயம் நாங்க ஒன்னா சேர்ந்து விட்டு இங்க டான்ஸ் ப்ராக்டீஸ் கூட பண்ணுவோம்..."

பாரதி பிள்ளையார் சிலைக்கு எதிரில் நின்று கண்களை மூடிக் கொண்டாள்.

மதுரை மீனாட்சி அம்மனின், தஞ்சை பிரகதீஸ்வரனின், திருப்பதி வேங்கடாசலபதியின் சன்னதிகளில் நிற்பது போல் புல்லரிப்பு உச்சி முதல் பாதம் வரை வியாபிக்க, உடம்பு உதறிப் போட்டது.

சாரதாவுக்கெதிரில் அழுதுவிடுவோமோ என்கிற பயம் உண்டாக, நடக்கென்று கண்களைத் திறந்து "நான் கொஞ்ச நாழி இங்க உக்கார்ந்துட்டு அப்புறமா புறப்படறேன். நீங்க வேணா போங்கோ... சுத்தி காட்டினதுக்கு தாங்க்ஸ்" என்று கூறி அவளை அனுப்பி விட்டு மேடை ஓரமாய் இருந்த திண்ணையில் அமர்ந்து மறுபடி கண்களை மூடிக் கொண்டபோது மூடிய விழிகளிலிருந்து வெளிப்பட்ட நீர் முத்துப்போல கன்னத்தில் உருண்டு, மார்பில் விழுந்தது.

## 15

பாரதி?

ஏர்ப்போர்ட்டுக்கு?

அதுவும், டெல்லி விமானம் வந்து சேரும் இரவு இந்த பதினோரு மணி அளவில்?

நண்பருடன் பேசிக் கொண்டு, எஸ்கலேட்டரில் இறங்கிய ரமணி, பயணிகளை வரவேற்கவென வந்திருந்த கும்பல்மீது எந்தவித ஸ்வாரஸ்யமும் இன்றிப் பார்வையை அலையவிட்ட போது சற்றும் எதிர்பாராதவிதமாய் அங்கு பாரதியைக் காண முடிய, வியப்புடன் புருவங்களை உயர்த்தி "ஹலோ... வாட் எ ஸர்ப்ரைஸ்" என்றார், சந்தோஷம் அப்பட்டமாய் வெளிப்பட...

பிறகு நண்பர் பக்கம் திரும்பி "இது என் மனைவி பாரதி... இவர் ஷர்மா... டெல்லியில் பெரிய தொழிலதிபர்" என்று பரஸ்பரம் அறிமுகம் செய்து வைக்க, அவர் கைகூப்பி "நமஸ்தே" என்றார். பாரதி சின்னச் சிரிப்போடு 'ஹலோ' என்றாள்.

பெட்டிகள் வந்து சேர்ந்ததும், தங்களுடையதை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தார்கள்.

போகும் வழியில் ஷெரட்டன் ஹோட்டலில் ஷர்மாவை இறக்கி விட்டு விட்டுப் போவதாக ரமணி கூறியதால் அவரும் உடன் வரக் கிளம்பினார்கள்.

காரில் பயணித்த நாழிகையில், ஷர்மா செய்யும் தொழிலைப் பற்றியும், சென்னையில் கிளை ஒன்று துவங்க உத்தேசித்திருப்பதையும், அதற்கு ஆலோசகராக இவங்க தான் சம்மதித்திருப்பதையும் சுருக்கமாக ரமணி கூறினார். புன்னகையுடன் அத்தனையும் பாரதி கவனமாய்க் கேட்டுக் கொள்ள, அந்த சிரத்தையை பாராட்டும் விதமாய் ஷர்மா கேட்டார். "மிஸஸ் ரமணி உங்களோடு அலுவலகத்தில் வேலை பார்க்கிறாரா, ரமணி?"

ரமணி உதடு ஒரு பக்கமாய் விரிய குறும்புடன் சிரித்தார்.

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள ஷர்மாஜி?"

"நீங்கள் விவரிக்கும் விதத்தையும், அவர் ஆர்வத்துடன் கேட்டுக்கொள்வதையும் பார்த்தால் வீட்டில்



மட்டும் அல்லாது அலுவலகத்திலும் கூட்டாளிகளாக இருக்கலாமோ என்று தோன்றியது..."

ரமணி தலையைப் பின்னுக்குத் தள்ளிச் சிரித்து செல்லமாக தன் அருகே அமர்ந்திருந்த பாரதியின் தொடையில் ஒரு தரம் தட்டினார்.

"இல்லை ஷர்மாஜி... அலுவலகத்துக்கு பாரதி வருவதில்லை... ஆனாலும் அங்கு நடக்கும் ஒவ்வொரு சின்ன அசைவும்கூட இவளுக்குத் தெரியும்..."

"மிஸஸ் ரமணி வேறு எங்காவது வேலை பார்க்கிறாரா?"

விடாமல் ஷர்மா கேட்ட கேள்விக்கு உடனே பதில் கூறாமல் ரமணி அரை நிமிஷம் தாமதித்தார், மனைவியை ஒரு தரம் அழுத்தப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

"பாரதி வேலைக்குப் போகவேண்டிய அவசியம் எப்போதுமே இருந்திருக்கவில்லை... வீடு, குழந்தைகள் தவிர என் வேலைகள்— இத்தனையும் கவனித்து முடிப்பதற்கே அவளுக்கு நேரம் போதாது..." பேசியவர் பாரதியைப் பார்த்துத் தமிழில் "என்னம்மா, நான் சொல்றது சரிதானே?" என்றார். பின், தொடர்ந்து ஷர்மாவிடம் "பாரதி அற்புதமாய் நாட்டியம் ஆடுவாள். கல்யாணத்திற்கு முன் அவள் புகழ்பெற்ற நடனமணியாகத் திகழ்ந்தாள்" என்று லேசான பெருமிதத்தோடு கூற, முன் இருக்கையில் அமர்ந்திருந்த ஷர்மா திரும்பி, பாரதியை தலையிலிருந்து கால்வரை முழுசாய்ப் பார்த்தார்.

சந்தோஷத்தோடு, "நான் நினைத்தது சரிதான்" என்றார்.

"என்ன நினைத்தீர்கள்?"

"நீங்கள் மிஸஸ் ரமணியை அறிமுகம் செய்ததுமே இவர் நிச்சயம் நடனம் ஆடுபவராகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த உடற்கட்டும்,

கவர்ச்சியும் இருப்பது சாத்தியம் இல்லை என்று நினைத்தேன். எப்படி? என் கணிப்பு சரிதானே?"

தேவைக்கு அதிகமான சிரிப்புடன், அளவுக்கு மீறி இந்த மனிதர் பேசுகிறாரோ— என்ற கேள்விக் குறியுடன் நிமிர்ந்தவளின் சந்தேகம் சரிதான் என்பது போல ரமணியின் தாடைகள் இறுகுகிற மாதிரி தோன்ற, பாரதி அவசரமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு, பார்வையை இருண்டிருந்த தெருமீது வீசினாள்.

சோழா ஹோட்டலில் ஷர்மாவை இறக்கிவிட்டு 'நாளைக் காலையில சந்திக்கிறேன்' என்று சொல்லி விடைபெற்று வீட்டை நோக்கி வண்டி சென்ற நிமிஷங்களில் இன்னமும் அதே இறுக்கத்துடன் கணவர் இருப்பது புரிய, அதைத் தளர்த்தும் உத்தேசத்தோடு அவர் கையோடு தன் கையை கோர்த்து, சின்னக் குரலில் "ஏனாம்? டெல்லி ட்ரிப் எப்படி இருந்தது?" என்றாள் பாரதி.

ரமணி அலுப்புடன் 'ப்ச்' என்று சூள் கொட்டினார்.

"டெல்லிக்கென்ன? அது எப்போதும் போலத்தான் அரசியல் ரீதியா பரபரன்னு இருக்கு... எங்க பாரு டெமான்ஸ்ட்ரேஷன்ஸ், கும்பல், ஆர்ப்பாட்டம், போலீஸ் தடியடின்னு..."

பாரதி கவலையுடன் எதிட்டாள்.

"நீங்க எதுலயாவது மாட்டிண்டேளா?"

"மாட்டிக்காம? ஸப்தர்ஜங் ஹாஸ்பிடல் வழியா போனப்போ ஒரு தரம் காரை மடக்கி நிறுத்திட்டான்— 'ஐம்பது ரூபா பணம் கொடு'ன்னு கேட்டு, நாங்க வாயத் திறக்காமத் தந்ததும், 'நீங்க எங்களுக்கு இனாமா எதுவும் தரவேண்டாம்— இதுக்குதான் அந்தக்காசு'ன்னு சொல்லி, கவர்மெண்டை எதிர்த்து கோஷங்கள் எழுதியிருந்த நாலைந்து ஸ்டிக்கர்ஸ் கார் கண்ணாடி எல்லாம் ஒட்டிட்டான்..."

"அப்புறம்?"



"அப்புறம் என்ன? ஒண்ணுமில்லை... ஆனா, ஒரு எம். பிக்கு நடந்தத கேளேன்— எங்க வண்டிய நிறுத்தின மாதிரி அவர் வண்டியும் நிறுத்தி இருக்கா... எங்களை மாதிரியே அவரும் வாயத் திறக்காம சொன்னத செஞ்சுட்டுப் பேசாமப் போக வேண்டியதுதானே? ஆனா, நின்னுண்டு 'நான் யாருனு புரியாம பேசாதீங்க... நான் மெம்பர் ஆஃப் பார்லிமெண்ட்... இந்த அடாவடி எல்லாம் என்கிட்ட வேண்டாம்'னு முறைச்சதும்..."

முதல் நாள் நடந்த சம்பவம் மறுபடி அணுஅணுவாக நினைவுக்கு வந்துவிட்ட இறுகல் தலையைப் பின்னுக்குத் தள்ளி ரமணி சிரிக்க, பாரதி "அப்புறம் என்னாச்சு?" என்றாள் ஆர்வத்துடன்.

"என்னாகும்? அது வெறி பிடிச்ச கூட்டம். அவா கிட்ட போய் தர்க்கரீதியா வாதம் பண்ணா எடுபடுமா? 'நீங்க யாரா இருந்தாலும் எங்களுக்குக் கவலை இல்லை... நாங்க சொல்றவரைக்கும் அப்படி ஓரமா நில்லுங்கோ'ன்னு நிக்க வச்சுட்டான்."

"அட பாவமே!"

"எல்லாருமா அந்த எம். பி மூணு மணி நேரம் போல கால் வலிக்க நின்னுட்டு, அப்புறமா போனாப் போறதுன்னு போகச் சொன்னதும் கிளம்பிப்போனாராம்... மொத்தத்துல எங்கயுமே எதுவுமே ஆரோக்கியமா இல்லை... சுத்தி நடக்கறத நினைச்சா வருத்தமா இருக்கு— அடுத்த ஜெனரேஷன் எப்படி உருவாகப் போறதோன்னு கவலையாகூட இருக்கு..."

வீடு வந்துவிட்டது.

ட்ரைவர் பெட்டியைத் தூக்கிவர, இருவரும் இறங்கி உள்ளே போனார்கள்.

உடைகளைக் களைந்துவிட்டு, குளிக்க ரமணி சென்றதும், அவருக்காக தயிர் சாதம் பிசைந்து ஃப்ரிட்ஜில் வைத்திருந்ததை எடுத்துக்கொண்டு, பாரதி படுக்கை அறையுள் நுழைந்தாள்.

ஈரத்தலையை துவட்டிக்கொண்ட ரமணி கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்தார்.

"எல்லா நாளும் செமை வேலை... ராத்திரி இளமுருகு டின்னர் பார்ட்டி வேற... சரியான தூக்கமே இல்ல..."

தூங்குவதற்கான முஸ்தீப்புகளில் இறங்கியவர் முன் பாரதி தட்டை நீட்டினாள்.

"ஃபிளைட்ல விரைவ்வரையா புலாவ் கொடுத்திருப்பா... நீங்க சாப்பிட்டிருக்கமாட்டேள்... இந்த தயிர் சாதத்தை சாப்பிட்டு, தூங்கலாம்...ப்ளீஸ், ரமணி... தொட்டுக்க வெங்காய வத்தக்குழம்பும், மாவடுவும் வச்சிருக்கேன்... சின்னக் குழந்தையாட்டம் படுத்தாம எழுந்து சாப்பிடுங்கோம்மா..."

அவள் விடமாட்டாள் என்பது ரமணிக்குத் தெரியும். தவிர, வெங்காய வத்தல் குழம்பு வேறு கமகமத்ததே!

எழுந்து உட்கார்ந்தார். தட்டைக் கையில் வாங்கி, ஸ்பூனால் கிண்ணத்திலிருந்த குழம்பை தயிர் சாதத்தில் ஊற்றிக்கொண்டு, மாவடுவையும் கடித்தவாறு சாப்பிட ஆரம்பித்தார்.

"விக்கி சரியா இருக்கானா? எதுக்காவது போன் பண்ணானா?"

பாரதி உதட்டைக் கடித்தாள்.

ரமணி ஸ்பூனைக் கீழே வைத்துவிட்டு, முகம் சுளிக்கப் பேசினார்.

"நான் கூட ஊர்ல இல்ல— குட்டியா ஒரு போன் போட்டு 'அம்மா— ஆர் யூ ஓகே?'னு கேக்கக்கூடாதா? வயசாச்சே தவிரவும் பொறுப்பே இல்ல..."

"காம்பஸ்ஸுக்குப் போயிட்டா அவனுக்கு வேற எதுவுமே ஞாபகம் இருக்காதே ரமணி... நீங்க ஊருக்குப்



போறது புதுசா, இல்ல நான் தனியா இருக்கறது புதுசா? ரெண்டும் இல்ல... அப்புறம் இந்தத் தடவை மட்டும் [illegible] பொறுப்பா இருக்கணும்னு எதிர்பாத்தா எப்படி?"

"பிள்ளையை விட்டுக் கொடுக்கமாட்டியே!" சாப்பிட்டு முடித்த ரமணி எழுந்து போய் வாயைக் கொப்பளித்துவிட்டு வந்தார். வயிறு நிறைந்ததில் களைப்பு குறைய, "நான் இல்லாதப்போ நீ என்ன பண்ணே? உங்கம்மாவாத்துக்குப் போயிருந்தியா... எத்தனை படம் வி. ஸி. ஆர்ல பாத்தே?" என்றார் காலித் தண்ணீர் டம்ளரை மனைவியிடம் நீட்டியபடி...

பதில் கூறாமல் தட்டு, டம்ளரை சமையல்கட்டு தொட்டியில் போட்டு, அவை வறண்டுவிடாமல் இருக்க வேண்டி குழாயைத் திறந்து தண்ணீர் ஊற்றின பின், பாரதி உள் அறைக்கு வந்து கணவரின் அருகில் படுக்கையில் அமர்ந்தாள்.

"வெத்தலை போட்டுக்கறேளா?"

ரமணி குறும்புடன் கண்களைச் சிமிட்டினார்.

"என்ன, இன்னிக்கு வரவேற்பு ஸ்பெஷலா இருக்கு? மாமி மனசு எறங்கி வெண்ணெ கெட்ட வேணலை ஏர்போர்ட்டுக்கு வந்தப்பவே, என்னடா லாட்டரி அடிக்கறது-னு நினைச்சண்டேன் இப்ப வெத்தலை உபசாரம்! டார்லிங்... என்ன விஷயம் சொல்லிடு! நாலு நாள் என்னைப் பிரிஞ்சி இருந்ததோட பாதிப்பா..."

பேசியவாறு அவளை இழுத்து அணைத்துக் கொண்ட ரமணி, அழுத்தமாய் உதடுகளில் முத்தமிட்டார்.

"நான் ஒத்துக்கறேம்பா... வயசாக ஆகத்தான் நீ ரொம்ப அதிகமா எனக்குத் தேவைப்படறே... உன்னைப் பிரிஞ்சி என்னால இருக்கவே முடியல... என்ன ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ல இருந்து என்ன, மாமிகிட்ட இல்லாம தூக்கமே வரலை, தெரியுமா!"

தாபத்துடன் பேசியவளின் பேச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பாரதி சரிந்து ரமணியின் மார்பில் தலை வைத்துப் படுத்தாள். பனியனுக்கு மேலாக வெளிப்பட்ட மார்பு முடிகளை தன் ஆள்காட்டி விரலால் சுழற்றிக் கொண்டே ரகசியம் பேசுவது போலக் கூறினாள்.

"நான் கலாக்ஷேத்ராவுக்குப் போயிருந்தேன் ரமணி"

கேட்டது புரியாமல் ரமணி ''அ?'' என்றார்

"கலாக்ஷேத்ராவுக்குப் போயிருந்தேன்னு சொல்றேன்''

"ஓ!"

கலாக்ஷேத்ராவுக்குச் சென்றதை சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் இந்த நிமிஷம் எதற்காகப் பேசுகிறாள் என்கிற வியப்பு அந்த 'ஓ'வில் தெளிவாய் விரவி இருந்தது.

''என்ன ஓ!''

''சரி— சந்தோஷம். திருப்தியா?''

"என்ன ரமணி நீங்க... எத்தனை ஆர்வமா சொல்ல வரேன்— புரிஞ்சுக்காம விளையாடறேளே!"

''நிலைமை புரியாம வெளையாடறது யாரு? நீயா நானா?"

ஊடல் நேரத்தில் இதெல்லாம் அவசியம்தானா என்கிற தவிப்புடன் ரமணி கேட்பதைப் புரிந்து கொள்ளாமல் பாரதி தொடர்ந்து பேசிய போது, செய்யத் தீர்மானித்துவிட்ட காரியத்தின் திளைப்பு கண்களில் வெளிச்சமாக மின்னியது. குரலில் ஒரு படபடப்பு இருந்தது.

"நான் விளையாடலை ரமணி... ரொம்ப ஸீரியஸா தான் பேசறேன்... ஏர்போர்ட்லேந்து வர்றப்பவே சொல்லியிருப்பேன். ஆனா, கூட அந்த ஷர்மா இருந்ததால பேச முடியலே..."

26735
430827



மனைவி [illegible] மாய்த் தெரிவிக்க [illegible] படுத்திருந்த ரமணி அவளை மார்பிலிருந்து விலக்கிவிட்டு எழுந்து உட்கார்ந்தார்.

"சொல்லு— எதச் சொல்ல இப்படி தவிச்சுண்டு இருக்கே?"

பாரதி உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள். கண்களில் நட்சத்திரங்கள் மின்ன ஒருவித பரவசத்துடன் பேசினாள்.

''நா கலாக்ஷேத்ராவுக்குப் போயிருந்தேன் ரமணி"

"அட ராமா— இதையே இன்னும் எத்தனை தடவை சொல்லுவே?''

"ஏன் போனேன்னு நீங்க கேக்கவேயில்லையே!"

ரமணி இடக்கையால் தலைமுடியைக் கோதி விட்டுக் கொண்டார். தலைநுக்கட்டுமோ— என்று கேட்ட எரிச்சலை அடக்கியவாறு பொறுமையுடன் பதில் கூறினார்.

"வேற எதுக்குப் போயிருப்பே, ஏதாவது கலை நிகழ்ச்சி பாக்க? அதானே! அர்த்த ராத்திரி பன்னெண்டு மணிக்கு இது ரொம்ப அவசியமான பேச்சா? பார்ல... நான் எவ்ளோ குஷி மூட்லே இருக்கேன் தெரியுமா? அதப் புரிஞ்சுக்காம சப்புனு எதையோ பேசி அத்தனையும் கெடுக்கறியே! டான்ஸ் கச்சேரிக்குப் போன விவரமெல்லாம் காத்தால தெரிஞ்சுண்டா போறாதா? ஓ... கமான் பாரதி... என்னடு...பின்னே பொன்னாட்டம் என்னை 'மூட்' பண்ணிண்டு..."

அவள் கையைப் பற்றி இழுத்து மறுபடி படுக்க ரமணி முயல, பாரதி அவர் பிடியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டாள். எழுந்து இரண்டடி தள்ளிச் சென்று இடுப்பில் கை வைத்தவாறு நின்றாள். கண்களை இடுக்கிக் கொண்டு கணவரை நிதானமாக எதிர்த்துப் பேசினாள்.

''டான்ஸ் ப்ரோக்ராம் பார்க்கவோ, கச்சேரி கேக்கவோ நான் கலாக்ஷேத்ராவுக்கு போகலே ரமணி...

அங்க ஸ்டூடண்டா சேர முடியுமான்னு விசாரிக்கத்தான் போயிருந்தேன்..."

"ஏ... என்ன?"

படுத்திருந்த ரமணி சடக்கென்று தூக்கிவாரிப் போட எழுந்து உட்கார்ந்தார்.

"ஆர் யூ ஓகே பாரதி? என்னாச்சு உனக்கு இன்னிக்கு?"

பதில் கூறாமல் பாரதி மௌனிக்க, ரமணி எழுந்து வந்து அவள் தோளைத் தழுவிக் கொண்டார்.

"நான் இல்லாதப்போ வெயில்ல ரொம்ப அலைஞ்சியா? மாஸ்டர் வீட்டுக்கு அடிக்கடிப் போனியா? அந்த ஸாரா தான் ஊருக்குப் போயிட்டாளே! அப்புறமும் பைத்தியக்காரத்தனமா ஏன் இப்படியெல்லாம் பேசறே? ப்ளீஸ் ஸ்டாப் திஸ் டாக். நான் ரொம்பக் களைச்சுப் போய் வந்திருக்கறது புரியாம, எதையாவது அனாவசியமா பேசி, வீணா என் கோபத்தைக் கிளறாதே... படுத்துக்கலாம் வா டார்லிங்... எதுவானாலும் கார்த்தால பேசிக்கலாம்..."

சமாதானமாகப் பேசிவிட்டுப் படுக்கையிடம் இழுக்க பாரதி 'ப்ளீஸ்' என்றாள் முனகலாக...

"என் தவிப்ப கொஞ்சம் புரிஞ்சுக்கோங்களேன்... ஒரு தீர்மானத்துக்கு வந்துட்டு அதை உடனே உங்ககிட்ட சொல்லணுங்கற ஆசைல தானே நான் ஏர்போர்ட்டுக்கே வந்தேன்னு சொல்றேன்..."

ரமணி அவளைத் தழுவியிருந்த கையை அகற்றினார். ஆத்திரத்தோடு குரலை உயர்த்தினார்.

"திரும்பத் திரும்ப அதையே சொன்னா எனக்குக் கோபம்தான் வர்றது... நீ ஏர்போர்ட்டுக்கு என்னை ரிஸீவ் பண்ற ஆசைல வரலை— அவசரமா ஏதோ சொல்லணுங்கறதாலதான் வந்தே... அதானே...? புரியறது...



எதுவானாலும் கார்த்தால பேசிக்கலாம்னு சொன்னேனா இல்லியோ? மேலமேல பேசி என் எரிச்சல கிளப்பாத பாரதி...ப்ளீஸ்"

சொல்ல வேண்டியதைச் சொல்லிமுடித்ததும், எதிர்ப் பக்கமாகத் திரும்பி ரமணி படுத்துக்கொள்ள, இப்போது என்ன பண்ணுவது என்ற குழப்பத்தோடு பாரதி அப்படியே நின்றாள்.

எத்தனை ஆர்வமாய்க் காத்திருந்தேன்?

கலாக்ஷேத்ராவில் சேர்ந்து முறைப்படி படித்து, பரத கலையை முழுமையாய் அறியப்போகிறேன்— என்கிற முடிவைத் தெரிவிக்க எத்தனை பரவசத்தோடு ஏர்போர்ட்டுக்கே போனேன்?

வாழ்க்கையில் முதன்முறையாய் என் சின்ன வயசு கனவை நிறைவேற்றிக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டியிருக்கிறது என்பதைத் தெரிவிக்க எத்தனை ஆவலோடு காத்திருந்தேன்?

எதையும் புரிந்துகொள்ளாமல் இப்படிப் பிடிவாதமாய்த் திரும்பிப் படுத்தால் என்ன செய்வது?

சட்டென்று கிளர்ந்த ஏமாற்றம் தாங்கமுடியாமல் இருந்தது. அதென்ன இவர் மட்டும் எப்பொழுதும் மனக் கதவைத் திறக்காமல் மௌனிப்பது— என்று முறுக்கிக் கொண்டு எழுந்து, கட்டிலைச் சுற்றிக்கொண்டு அந்தப் பக்கம் பாரதி சென்றாள்.

விழித்துக்கொண்டு படுத்திருந்த ரமணியின் பக்கத்தில் நின்று அழுத்தம் திருத்தமாய்ப் பேசினாள்.

"ஸாரி, உங்களுக்குப் பிடிக்காட்டியும், இப்போ நான் பேசத்தான் போறேன். இந்தப் பேச்சும் நான் எடுத்திருக்கற முடிவும் எனக்கு ரொம்ப முக்கியங்கறதால உடனே உங்ககிட்ட சொல்லிடணும்போல இருக்கு. ப்ளீஸ், அண்டர்ஸ்டாண்ட்... நான் கலாக்ஷேத்ரால சேரப்போறேன் ரமணி... சின்ன வயசுல ஆசைப்பட்டது

நான் நடக்கல... இப்பவாவது அதை நிறைவேத்திக்கறதுல என்ன தடை? நீங்க புரிஞ்சிப்பேன்கற நம்பிக்கை எனக்கு இருக்கு. அந்த எடமும், சூழ்நிலையும் எவ்வளோ தெளிவா இருக்கு தெரியுமா? அங்க சேர்ந்து 'கோர்ஸ்' பண்ண ஒருத்தர் கொடுத்து வச்சிருக்கணும்னு நான் நினைக்கிறேன். எத்தனை வருஷத்து ஏக்கம் என் னோட்டது! கலாக்ஷேத்ராலே சேர்ந்து டான்ஸ் கத்துண்டு..."

அவசரமாய் எழுந்து உட்கார்ந்த ரமணி அவளை முடிக்க விடாமல் கோபத்துடன் குறுக்கிட்டார்.

"டான்ஸ் கத்துண்டு? மேடை ஏறி ஆட உத்தேசமா? இத்தனை வயசுக்குமேல இப்படி ஒரு விபரீத ஆசையா? ஷர்மா சொன்ன மாதிரி க்ளிநிக், ஜிரேஸ் ரெண்டும் இருக்கு. வீணாப் போக விடுவானேன்னு எண்ணமா? நாலு பேர் பார்க்க, பாராட்ட மேடை ஏறி ஆடறு ஆசை வந்துட்டதுல என்ன சொல்றோம், செய்யறோம்னு புரியாம தடுமாறி போயிட்டியா? காட்! என்னாச்சு உனக்கு? இந்த மாதிரி கன்னா பின்னானு என்னிக்குமே நீ பேசினதில்லையே பாரதி? குடும்பம், சூழ்நிலை எல்லாத்தையும் மறந்துட்டு இந்த வயசுல பொறுப்பில் லாம நீ இப்படி பேசறதைக் கேக்கறப்போ எனக்கு அவமானமா இருக்கு... ரியலி .. ஐ'ம் அஷேம்ட்..."

நினைத்ததைவிட வார்த்தைகள் கடுமையாக வாயிலிருந்து வெளிப்பட்டுவிட ஒருவிதக் குற்ற உணர்ச்சியுடன் ரமணி தலையைக் குனிந்து கொள்ள இருபத்தியொரு வருஷ தாம்பத்தியத்தில் அனுபவித்திராத வலி முதல் முறையாக இதயத்தை வலிக்க வலிக்க பிராண்ட, மேற் கொண்டு அங்கு நிற்கக்கூட பிடிக்காத மாதிரி பாரதி திரும்பிக் கால்களை அகல அகலமாய் வைத்து வராந்தாப்பு அறைக்குச் சென்றாள்.

அவளைத் தடுத்து நிறுத்தவோ, 'ஸாரி' என்று மன்னிப்புக் கேட்கவோ விருப்பமில்லாததைத் தன்கு புரிய வைக்கிற நிறுவில் ரமணி காலை நீட்டிப் படுக்கையில் படுத்து கண்களை இறுக மூடிக்கொண்டார்.

# 16

பக்கத்தில் சலனத்தை உணர முடிந்தது.

படுக்கை அசைந்தது, லேசாக அதிர்ந்தது, அமுந்தது.

கண்களைத் திறந்து ரமணி கையில் எப்போதும் கட்டியிருக்கும் கடிகாரத்தைப் பார்த்தார். நேரம் பன்னிரண்டு தாண்டியது என்றது.

எழுந்து உட்கார்ந்து படுக்கையை ஒட்டியிருந்த விளக்கை ஏற்றினார். ஓசைப்படாமல் அருகில் வந்து படுத்திருந்த பாரதியை தலையை ஒடித்து எரிட்டார்.

அவருக்கு முதுகைக் காட்டிக்கொண்டு ஒருக்களித்துப் படுத்திருந்தவளின் தோளில் கையை வைத்து தன் பக்கமாகத் திருப்பினார்.

பாரதி அழுதிருக்க வேண்டும். மூக்கு சிவந்திருந்தது. கண்களைச் சுற்றி நீர் சுரப்பு.

கலைந்திருந்த முடியை ஒதுக்கிவிட்டு, மென்மைக் குரலில் பேசினார்.

"ஐம் ஸாரிம்மா... கனைக்கப் போய் வந்துதோட, வேறுமாதிரியா புத்தி போயிட்டதான கோவமா பேசிட்டேன். இப்பச் சொல்லு... என்ன பேசணும்னு நினைச்சே?"

பாரதி விழிகள் தழும்பபடி இருக்க, மௌனித்தாள்.

"சொல்லுமா"

"வாண்டாம் ரமணி... நீங்க இப்பஇருக்குற 'மூட்'ல... நான் எது சொன்னாலும் சரியா புரிஞ்சுக்க மாட்டேன்... காத்தாலயே பேசிக்கலாம்."

"இல்ல பாரதி... இப்ப படுத்துண்டாகூட தூக்கம் வராது. ஒரு மணி நேரமா நீ ஹால்லயும், நான் இங்கயும் முழிச்சுண்டு இருந்த மாதிரியேதான் தூங்காம மறுபடியும் அவஸ்தைப்படுவோம். அதுக்கு பேசி முடிச்சுடறது நல்லது தானே ?"

பாரதி எழுந்து உட்கார்ந்தாள்.

"அவசரப்பட்டுண்டு, என்ன முடிக்கவிடாம, குறுக்க பேசாம, முழுசா சொல்லவிடுவேளா ?"

"சொல்லு"

பாரதி நீளமாய் ஒரு தரம் மூச்சை உள்ளுக்குள் இழுத்து, தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள். தலைப்பால் முகத்தைத் துடைத்தபின், உறுதியாய் பேசினாள்.

'சின்ன வயசுல எனக்குக் காலேஜ்ல சேர்ந்து டிகிரி படிப்புபடிக்க இஷ்டம் இருக்கல, அப்பவே கலாக்ஷேத்ராவ சேர்ந்து டான்ஸ் கத்துண்டு, பரதநாட்டியத்துல 'ஓஹோ'னு பேர் வாங்கணும்னு நான் ஆசைப்பட்டதையும், அப்பா' அதெல்லாம் நடக்காது; பொம்மனாட்டிக் குழந்தைகளுக்கும் இந்த காலத்துல அடிப்படைக் கல்வி வேணும்— டிகிரி படிக்கிறது ஒரு அவசியம்... அதைப் படிச்சே தீரணும்'னு சொன்னதால காலேஜ்ல சேர்ந்து படிச்சதையும் உங்ககிட்ட சொல்லி இருக்கேன், ஞாபகம் இருக்கா ?"

இருக்கிறது என்று தலை அசைத்த ரமணி "அப்பா சொன்னதுல தப்பு எதும் இல்ல... அது சரியான முடிவு தானே ? காலம் மாறிண்டு வர்றதால..." என்று தொடங்க, பாரதி "ப்ளீஸ்" என்று முனகினாள்.

"குறுக்கே பேசாம கேக்கறேன்னு சொல்லிட்டு, ஆரம்பத்திலேயே என்னை பேசவிடாம பண்றா எப்படி ரமணி ?"

"ஸாரி— நீ பேசி முடி..."



"எங்க விட்டேன் ? ஆ... அப்ப என் ஆசை நிறைவேறல— அதுக்கப்புறம் நானும், சரி நமக்குக் கொடுத்து வைச்சது இவ்வளோதான்னு மனசை தேத்திண்டுட்டேன்... கல்யாணம் ஆச்சு... டான்ஸ் பண்றது கூட நின்னுப் போச்சு... இதுக்காகவும் நான மனசு உடைஞ்சுப் போகல... அப்புறம் குடும்பம், குழந்தைகள்னு என் கவனத்தை முழுசா திருப்பிண்டுட்டேன். ஆனாலும் அப்பப்ப அடிமனசுல டான்ஸ் ஆசை சட்டுனு தலை தூக்கறப்ப எல்லாம், மண்டைல தட்டி உக்கார வச்சுடுவேன்..."

ரமணி கொட்டாவி விட்டார்.

"இதெல்லாம் தெரிஞ்ச விஷயம் தானே பாரதி? சட்டு புட்டுன்னு விஷயத்துக்கு வாயேன்,"

"வரேன் ரமணி— இப்ப நான் நினைக்கறதை நீங்க சரியா புரிஞ்சுக்கணும்னா, அந்த விவரங்களையும் பூரணமா நீங்க புரிஞ்சுக்கறது அவசியமில்லையா ? ஓகே— நேரா சமாசாரத்துக்கே வரேன். ரெண்டு பசங்களும் படிக்க வீட்டை விட்டு போனதிலேந்து எனக்குள்ள பெரிசா ஒரு சூன்யம் உண்டாக ஆரம்பிச்சது. நானும் என்னென்னவோ செஞ்சு பார்த்தேன் ம்ஹூம், ஒண்ணும் சரிபட்டு வரலை, அப்பத்தான் திடீர்னு மாஸ்டரைச் சந்திக்கற வாய்ப்பும் தொடர்ந்து அவருக்கு உதவி பண்றதுக்காக நான் அவர் வீட்டுக்குப் போற சந்தர்ப்பங்களும் கிடைச்சது. நாலு நாள் போயிட்டு வர்றதுக்குள்ள 'ஓஹோ— இதுதான் சரியான தீர்வு'னு நன்னா புரிஞ்சு போயிடுத்து..."

பொறுமை இழந்தவராய் ரமணி குறுக்கிட்டார்.

"எது ? திரும்ப கலாக்ஷேத்ரால போய் டான்ஸ் கத்துண்டு, மேடைல கச்சேரி பண்ணறதா ? வயசை, உன் சூழ்நிலையை மறந்துட்டு... என்ன பாரதி இர்வு இல்லா பேச்சு இது ?"

"நீங்க எதையுமே சரியா புரிஞ்சுக்கலை ரமணி. நிச்சயம் மேடை ஏறி ஆடணுங்கறது என் ஆசை இல்ல..."

"அப்பாடி... அந்த மட்டுக்கும் புத்தியோடத்தான் பேசறே... அப்புறம் ?"

"அதுக்குத்தான் முழுசா என்னை பேச விடுங்கோன்னு சொல்றேன்... ஸாராவோட கழிச்ச இந்த ஒரு மாசத்துல பல உண்மைகளை என்னால் புரிஞ்சுக்க முடிஞ்சுது... நான் வேணா அன்னிக்கு, ஏன் இன்னிக்கும் கூட பிரமாதமா டான்ஸ் ஆடலாம். ஆனா, பரதநாட்டியம் பத்தின என் தியரிடிகல் நாலெட்ஜ் பூஜ்யம்ங்கறது ஸாராவோட பேசப் பேசத்தான் எனக்கே புரிஞ்சுது ரமணி..."

"......"

"அத்தனை வருஷம் கத்துண்டு என்ன பிரயோஜனம்? 'கரணத்த' என்னால அதன் ஸ்லோகத்தச் சொல்லி விளக்கத் தெரியல... ஒரு அளவுக்குக் கச்சிதமா சொல்கட்டு ஜதி சொல்லத் தெரியல... தையும் தத்தா தையும் தாஹா—ன்னு பழகற விதத்துல சாதாரணமாய் சொன்னா ஆச்சா? அதுக்கு பரத சாஸ்திரத்துல சொல்கட்டு இருக்கே, அதெல்லாம் தெரியலையே? அப்புறம் நாட்டியம் தெரியும்னு சொல்லிக்கறதுல அர்த்தம் என்ன ?"

ரமணிக்கு 'போர்' அடித்தது. அடக்கி வைத்திருந்த எரிச்சல் லேசாக முரண்டியது.

"சரிம்மா... இந்த 'தியரி' எல்லாம் தெரிஞ்சா என்ன, தெரியாட்டாதான் என்ன? அத்தனையும் தெரிஞ்சா இப்ப டான்ஸ் கிளாஸ் நீ ஆரம்பிக்கப் போறே ?"

இல்லை என்று பாரதி தலை அசைத்தாள்.

"க்ளாஸ் ஆரம்பிக்கிற உத்தேசம் நிச்சயமா இப்போதைக்கு என்கிட்ட இல்லை"

"அப்புறம் ?"

"ஆத்மதிருப்தின்னு ஒண்ணு இருக்கே ரமணி, அதுக்காக கத்துக்க ஆசைப்படறேன். இது யாருக்காகவும் செய்யத்



தீர்மானிச்ச காரியம் இல்லை... எனக்காக, என் மனசு சந்தோஷத்துக்காக மட்டும் செய்யறதுன்னு நினைக்கறேன்..."

"அதுக்காக ஸாராகிட்ட 'கோர்ஸ்' சேர்ந்துதான் தெரிஞ்சுக்கணுமா? என்னென்ன புக்ஸ் வேணும்னு சொல்லு— [illegible] வாங்கித் தரேன். ஆசை தீரப் படியேன்... காசு [illegible] ?"

பாரதி சிரித்து ரமணியின் கையைப் பற்றி, [illegible] கன்னத்தில் பதித்துக் கொண்டாள்—

"நான் [illegible] [illegible] [illegible], ரமணி... [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] 'எல்லாரும் [illegible] [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]' சொன்னார். [illegible] [illegible] அதிகாரி ஒருத்தர் இப்பவும் அங்க வந்து [illegible] அமெரிக்கா மத்த நாட்டுலேந்து [illegible] வந்து பாடம் கத்துண்டு போறவாளும் இருக்காளாம். [illegible] இருக்கிறவாளுக்கு எப்படியாவது உதவணும்ங்கறதுதான் அங்க நோக்கம்'னு எத்தனை உயர்வா சொல்றார் தெரியுமா ?"

"அப்படின்னா, வாரத்துக்கு ஒருதரம் ரெண்டு மணி நேரம் போயி 'தியரி' கத்துண்டு வந்தா போறுமா ?"

"நோ... நோ... ஞாயிறு தவிர பாக்கி எல்லா நாளும் கிளாஸ் இருக்கு... காத்தால எட்டரைக்கு ப்ரேயர்.

அத்தனை பேரும் ஒண்ணா அந்த ஆலமரத்தடியிலே கூடி சர்வ மத பிரார்த்தனை செய்யறதோட கிளாஸஸ் ஆரம்பம் ஆகுது. ஒன்பதுலேர்ந்து ஒன்பதே முக்கால் வரை தியரி பாடம். அப்புறம் பிராக்டிகல்தான் டான்ஸ் ஆட தீவிரமா கத்துக்காட்டறாங்க. கூட இருந்து பாக்கறது என் அறிவை வளர்க்குமே, ரமணி. மத்தியானம் சமஸ்கிருதம், தமிழ் பாடங்கள். அதுக்கும் மேல ஜெனரல் மியூஸிக் ... பஜன்ஸ். இதை ஸ்லோகம் எல்லாம் கத்துத் தருவா... ஓ! ரமணி... நினைக்கறப்பவே எனக்கு எத்தனை சந்தோஷமா இருக்குத் தெரியுமா? கடைசில, ஒரு வழியா, நான் எத்தனையோ வருஷங்களா ஏங்கினதை எல்லாம் செய்யப் போறேன்—னு படபடப்பா கூட இருக்கு..."

அவளுடைய பரவசத்தையோ, எதிர்பார்ப்புகளையோ புரிந்து கொள்ள முடியாமல் போக, முகம் சுளிக்க ரமணி கேட்டார்.

"அப்படீன்னா, தினமும் நான் ஆபீஸ் போற சமயத்துல நீ வீட்டுல இருக்க மாட்டேன்னு சொல்லு... சாயங்காலம் திரும்பறதுக்குள்ளயாவது வந்துட உத்தேசம் இருக்கா? இல்லை...?"

தன் அடிமன ஏக்கங்களை சற்றும் புரிந்து கொள்ளாமல் கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாக ரமணி குற்றம் சாட்ட, சரக்கென்று பாரதியினுள் கோபம் சீறியது.

"இத்தனை பேசினப்புறமும் இந்த மாதிரி நீங்க கேள்வி கேட்டா என்ன அர்த்தம்? எனக்குப் புரியலை ரமணி!"

"இருபது வருஷத்துக்கும் அதிகமா உண்டாயிட்ட பழக்க வழக்கங்களை ஒரு நொடில நீ மாத்த முயலறதுதான் எனக்குப் புரியல, பாரதி!"

சூடாக ரமணி பதில் கூற, அரை நிமிஷம் பாரதி திகைத்தாள். கொஞ்சம் ஆஸ்வாசப்படுத்திக் கொண்டு பதில் பேசியபோது அவள் குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது.



"இருபது வருஷமா எனக்குன்னு எதையும் நினைக்காம உங்களுக்காகவே வாழ்ந்துட்டேனே—போறாதா? இதுக்கப்புறமும் எனக்குப் பிடிச்சதை நான் செய்யணும்னு நினைக்கறதுல தப்பு எதுவும் இருக்கறதா, எனக்குத் தோணலை..."

"எ... என்னது... என்னது? அப்படீன்னா, குடும்பம், புருஷன், பொறுப்பு எல்லாத்தையும் கவனிச்சது போறும்... இனி, என் இஷ்டத்துக்கு விட்டுடுங்கோ—னு சொல்றியா?"

பாரதி குனிந்து நகங்களை ஆராய்ந்தாள். பேச்சு திசை திரும்புவதை உணர்ந்து தன்னை நிதானப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

"என் பொறுப்புகளையோ, கடமைகளையோ அந்தரத்துல விட்டுட்டு, தான், தன் சுகம்னு நினைக்கறவ நான் இல்லை... கனவுலகூட என்னால அப்படி இருக்க முடியாது..."

"ஏன் முடியாது? போன ஒரு மாசமும் நீ எப்படி இருந்தே? ஞாபகம் இல்லை?"

"ஏன், எப்படி இருந்தேன்? வீட்டுல சமையல், சாப்பாடு ஒழுங்கா நடக்கலியா? வீடு சுத்தமா இல்லையா? அந்தந்த வேலை வழக்கம்போல நடக்கலியா? என்ன குத்தம் கண்டுபிடிச்சேள்? சொல்லுங்கோ, தெரிஞ்சுக்கறேன்..."

"போன மாசம், சாயங்காலம் எத்தனை தடவை என்னோட நீ வெளியிலே வந்தே? அந்த சாராவோட ஊர் சுத்தறதுக்கு தானே உனக்கு நேரம் இருந்தது?"

பாரதி எழுந்து ஜக்கிலிருந்து ஒரு டம்ளர் தண்ணீர் எடுத்துக் குடித்தாள். கணவரின் எதிரில் நின்று கண்களைப் பார்த்து பேசினாள்.

"எஸ்... ரெண்டு, மூணு பார்ட்டிகளுக்கு நீங்க கூப்டப்போ நான் வரலைதான்... உங்க ஃப்ரெண்ட்ஸ்கூட

நீங்க போற பார்ட்டி எல்லாம் எப்பவுமே என்னைப் பொறுத்தவரை போரடிக்கிற சமாசாரம். இத நான் உங்களுக்கு நிறைய தடவை எத்தனையோ சொல்லி இருக்கேன். கவனிக்க வேலை இருந்தது. அதனால வரலைன்னு சொன்னேன். இதுல தப்பு என்ன? ஏன் ரமணி, ஒண்ணு கேக்கட்டுமா? எத்தனையோ தரம் உங்க உறவுக்காரா வீட்டு விசேஷங்களுக்குக்கூட 'எனக்கு வேலை இருக்கும்மா நீ மட்டும் போயிட்டு வா'ன்னு நீங்க சொல்லி நானா போயிட்டு வந்திருக்கேன்? அதை எல்லாம் நான் புகாரா உங்ககிட்ட சொல்லி இருக்கேனா?"

ரமணி தலைகாணியை எடுத்து கோபத்துடன் அந்தப் பக்கமாய் வீசினார்.

"என் வேலையும், நீ ஊர் சுத்தறதும் ஒண்ணாயிடுமா?"

பாரதி உதட்டை ஒருதரம் கடித்துக்கொண்டாள்.

"முதல் பாயிண்ட்— நான் ஊர் சுத்தலை, வாரா வேளா டான்ஸ் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு, பரத நாட்டியம் பத்தி ஆழமா தெரிஞ்சுக்கறதுக்காகத்தான் போறேன். பாயிண்ட் நம்பர் 2— நீங்க உங்க வேலை மூலம் பணம் சம்பாதிக்கறேள், நான் சம்பாதிக்கலை... ஒத்துக்கறேன். ஆனா, ஆத்ம திருப்தின்னு பாக்கறப்போ ரெண்டும் ஒண்ணுதான்னு எனக்குத் தோணறது—"

ரமணி குரல் உயர, கத்தினார்.

"மண்ணாங்கட்டி ஆத்மதிருப்தி... என்னாச்சு உனக்கு பாரதி? இந்த மாதிரி எல்லாம் என்கிட்ட வாதம் பண்ற டைப் நீ இல்லியே! சரி— பசங்க வீட்டைவிட்டுப் போயிட்டதால உனக்கு 'போர்' அடிக்கறது. அக்ரீட். அதுக்காக 'டான்ஸ் மறுபடி ஆடப் போறேன்'ங்கறது தான் பிரச்னைக்கு தீர்வா? ஸில்லி... டோடலி இடியாடிக்... யார்கிட்டயாவது சொன்னா சிரிக்கப் போறா... அப்படியே உபயோகமா ஏதாவது செய்யணும்னா, கல்சரல் அகாடமில சேர்ந்து



ருக்கில், டெய்லரிங்னு ஏதாவது படிக்கறது... யார் வேண்டாங்கறா! உனக்கும் பொழுதுபோகும், வீட்டுக்கும் உபயோகமா இருக்குமே!"

"பொம்பளை ஏதாவது செய்யணும்னாலே சமையலும், தையலும்தான் வழியா ரமணி?"

"ஓகே, ஓகே... வாண்டாம்... சாதாரண பொம்பளையாட்டம் இருக்கப் பிடிக்கலைனா, கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ்ல எம்.ஏ. பண்ணு. தெரியாத சப்ஜெக்ட்னா நானே உதவி செய்யறேன்."

பாரதி உதட்டைப் பிதுக்கினாள்.

"ஸாரிப்பா... எனக்கு அதுலெல்லாம் இன்ட்ரஸ்ட் இல்லை"

"தெருக்குத் தெரு கம்ப்யூட்டர் க்ளாஸ் நடக்கறது... அதுல சேரேன். நாளைக்கு நான் வீட்டுக்கு ஒரு கம்ப்யூட்டர் வாங்கலாம்னு இருக்கேன். உபயோகமாவாவது இருக்கும்"

பாரதி வேதனையுடன் புன்னகைத்தாள்.

"இதுக்குப் பழைய பதில்தான். ஆம் நாட் இன்டரஸ்ட் இன் தோஸ் லைன்ஸ்..."

எதிரில் நிற்பவளைக் கோபமாக ரமணி விழித்துப் பார்த்தார்.

"காட்... மை காட்! இந்தப் பாரதி எனக்குப் புதுசு... இத்தனை வருஷமா என்னோட அமைதியா ஆனந்தமா குடுத்தனம் பண்ண பாரதிக்கு என்னாச்சு?"

"ஒண்ணும் ஆகலை... எனக்குன்னு விருப்பு வெறுப்பு இருக்கறத முதல்முறையா நான் வெளிப்படுத்தறத உங்களால எடுத்துக்க முடியலை... நிதானமா யோசிச்சேள்னா, நான் எந்த அடாவடியும் பண்ணலை, எனக்கு ஈடுபாடு இருக்கற விஷயத்த செய்ய முனைஞ்சிருக்கேங்கற சந்தோஷம் உங்களுக்குப் புரி..."

அவளை முடிக்கவிடாமல் ரமணி அதட்டலாய்ப் பேசினார்.

"வாண்டாம்... புரியலே வாண்டாம். இந்த மாதிரி அர்த்தமில்லாத முடிவுகளை எடுக்க நீ துணிவேன்னு தெரிஞ்சிருந்தா, உன்னைப் பழையபடி டான்ஸ் மாஸ்டர் வீட்டுக்குப் போகவே நான் சம்மதிச்சிருக்க மாட்டேன். தாராள மனசோட நடந்துண்டது பிசகாயிடுத்து. முளையிலேயே கிள்ளி இருந்தா, இப்ப பூதாகாரமா பிரச்னை உருவாகியே இருக்காது. நான் ஒரு மடையன்... சரியான மடையன்..."

ஆத்திரத்துடன் பேசியவரை பாரதி தலையோடு காலாய் ஒரு பார்வை பார்த்தாள்.

பிறகு, எதையும் புரிந்துகொள்ளமாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பவரிடம் எனக்கென்ன பேச்சு என்கிற மாதிரி, போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு, சுவரைப் பார்க்க, ரமணிக்கு எதிர்புறமாய்த் திரும்பிப் படுத்தாள்.

## 17

பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திர புத்தகத்தில் ஆழ்ந்திருந்த பாரதி தன்னை யாரோ பின்னாலிருந்து அணைப்பதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினாள்.

விக்ரம்!

வழக்கமாய் வாசற்படிகளில் தடதடவென்று ஏறி வந்து காலிங் பெல்லை விடாமல் ஓசைபடுத்தி 'ஹாய் மாம்' என்று கூடத்திலிருந்தே கத்தி, தன் வரவை எட்டு வீடுகளுக்குப் பிரகடனப்படுத்தும் மகன் இன்று பரம சாதுவாய் வந்து அணைத்தது ஆச்சர்யத்தைத் தந்தது. கூடவே கவலையை எழுப்பியது.

"விக்கி! என்னாச்சுடா உனக்கு? ஆர் யு ஓகே?"



"ஒண்ணுமில்லையே! நன்னா கல்லுகுண்டாட்டம்தான் இருக்கேன். எம்மா அப்படி கேக்கறே?"

"யானை வெங்கல பாத்ர கடைக்குள்ள புகுந்துட்ட மாதிரி எப்பவும் வீடு ரெண்டுபட நுழையறவன் பூனையாட்டம் வந்திருக்கே! இன்னிக்கு புதன்கிழமைங்கறது வேற ஞாபகத்துக்கு வந்துடுத்து... வெள்ளிக்கிழமை தானே வருவே?"

விக்ரம் போலியான வருத்தத்துடன் கேட்டான்:

"ஏம்மா— புதன்கிழமை வரக்கூடாதா?"

"அதுக்கில்லை விக்கி... ஒவ்வொரு வாரமும் சனி ஞாயிறு லீவு இருக்கறப்பலே வெள்ளிக்கிழமை வர்றதுக்கு ஆயிரம் சாக்கு சொல்லுவே... நாளைக்கு காலேஜ் இருக்கற நாள்... அதான் எதுக்குடா இன்னிக்கு வந்திருக்கான்! உடம்பு கிடம்பு சரியில்லையோன்னு ஒரு நிமிஷம் கவலையா இருந்தது..."

"உன்னைப் பாக்கணும்னு தோணித்து... வந்துட்டேன் அதான் நிஜமான காரணம்..."

பாரதி முன்னால் சாய்ந்து மகனின் தோளைத் தட்டிச் சிரித்தாள்.

"ஐயோ வாண்டாம்பா... இத்தனை ஜல் வைக்கிற சமாசாரமெல்லாம் நமக்குத் தாங்காது. அத்தோட இதுக்கெல்லாம் மயங்கற ஆளும் நான் இல்லை... பேசாம உண்மையை ஒத்துண்டுடு..."

விக்ரம் முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டான்.

"காலம் ரொம்பக் கெட்டுப் போச்சும்மா... நிஜத்தைச் சொன்னாகூட யாரும் நம்பமாட்டேங்கறா... மொத்தத்துல நல்லதுக்குக் காலம் இல்லை..."

அவன் பேச்சும், முகபாவமும் சிரிப்பை அதிகமாக்க கையிலிருந்த புத்தகத்தை பாரதி மூடி வைத்தாள்; அவன் தலைமுடிக்குள் கையைவிட்டு முடியைத் துளாவினாள்.

"திடுதிப்புனு வந்திருக்கறதுக்கு காரணம் சொல்ல இஷ்டம் இருந்தா சொல்லு. இல்லைட்டா வாண்டாம்... சரி... என்ன சாப்பிடறே? தோசை மாவு இருக்கு... வெங்காய ஊத்தப்பம் வார்த்து தரட்டுமா? இல்ல, அரை மணி காத்துண்டிருக்க முடியுன்னா புதுசா, உனக்குப் பிடிச்சதா பண்ணியே தரேன்... என்ன சொல்றே?"

விக்ரம் உதட்டைப் பிதுக்கி இரண்டுமே வேண்டாம் என்கிற மாதிரி தலை அசைத்து மறுத்தான்.

"நீ எம்மா வீட்டுல கஷ்டப்படணும்? நான் ஒரு ப்ரில்லியண்ட் ஐடியா கொடுக்கட்டுமா? நாம ரெண்டு பேரும் சட்டுபுட்டுனு கிளம்பி ஃப்வுண்டன் பிளாஸாவுக்குப் போய் பேல்பூரி, பானிபூரி எட்ஸட்ரா ஒரு பிடி பிடிச்சுட்டு வரலாம். இல்லேன்னா 'கேக்ஸ் அண்ட் பேக்ஸ்' போய் உனக்குப் பிடிச்ச பீட்ஸா, பிண்ட் மில்க் ஷேக் ஒரு கை பார்த்துட்டு வரலாம்... என்ன சொல்றே?"
பேசிய விக்ரம் ஓரடி பின்னால் சென்று இடுப்பை வளைத்து ஆங்கில பாணியில் குனிந்தவன் நாடகத்தில் வசனம் பேசுகிற மாதிரி "தி சாய்ஸ் ஈஸ் யுவர்ஸ் யுவர் ஹைனஸ்... ஐ'ம் அட் யுவர் ஸர்வீஸ்" என்றான்.

சிரிப்பையும் மீறிக்கொண்டு என்னாயிற்று இவனுக்கு இன்று என்கிற சந்தேகக் கேள்வி எழ, பாரதி ஒரு சில விநாடிகள் மௌனித்தாள்.

"ம்? ரெண்டுமே சரிப்பட்டு வரும்னு தோணலை விக்கி... மணி அஞ்சாகப் போறது. அப்பா ஆறு மணிக்கு வந்துடுவார். அவருக்கு கண்ட எடத்துல அழுக்கு கையோடு அந்த ஆள் பேல்பூரி, பானிபூரி கொடுக்கறதும் பிடிக்காது. சின்ன எடத்துல, அரட்டை அடிக்கிற பசங்களுக்கு சரியா உட்கார்ந்து பீட்ஸா சாப்பிடறதும் பிடிக்



காது... அதனால உனக்கு என்ன வேணும்னு சொல்லு ஆத்துலயே நான் பண்ணிடறேன்..."

விக்ரம் பலமாக மறுத்தான்.

"நோ மம்மீ— டோன்ட் நோ... வீட்டுல சமைக்கச் சொல்லி உன்னை கஷ்டப்படுத்தறதுல எனக்கு இஷ்டம் இல்ல... ஜாலியா போயிட்டு வரலாம், வாம்மா..."

பாரதி உதடுகளை அழுத்திக் கொண்டு குறும்பாகச் சிரித்தாள்.

"என்ன என் பிள்ளைக்கு இன்னிக்கு ஞானோதயம் வந்திருக்கு! புதுசு புதுசா கஷ்டம், இஷ்டம்—னு பெரிய பெரிய வார்த்தை எல்லாம் சொல்றது!"

"ஞானோதயம் ஒண்ணும் இல்லை... ஓரோர் நாள் வரச்சேயும் உன்னை எங்கயாவது கூட்டிண்டு போகணும்னுதான் நினைப்பேன்... எதாவது வேலை வந்துடும்... அந்தப் பேச்சு இப்ப எதுக்கு? சின்னச் சின்ன விஷயங்கள் அப்பாவுக்குப் பிடிக்காதத பண்ணலாம், தப்பு ஒண்ணும் இல்ல... பெரிசா செஞ்சு அவர அப்செட் ஆக்கறதுதான் கூடாது... தெரியு— மாம்— நீ ஸெம்பப் போறயா இல்லையா? அப்பாக்கு பிடிக்காதுனு எத்தனை நாள் நீ பேல்பூரி சாப்பிடாம இருப்பே? அதுக்காகவே தான் உன்னை இன்னிக்குக் கூட்டிண்டு போறதுக்குத் தீர்மானத்தோட வந்திருக்கேன்."

மகன் பேசப்பேச, அவன் விளையாட்டில்லை தீவிரமாகத்தான் கூறுகிறான் என்பதைப் புரிந்துகொள்ள முடிய, பாரதியின் வியப்பு அதிகமானது.

"அட்றா சக்கை! இன்னிக்கு மழை கொட்டத்தான் போறது... புஷ்பா, மாடில காயப்போட்டிருக்கிற துணியெல்லாம் எடுத்துண்டு வந்துடு..."

உள் பக்கமாய்த் திரும்பி கேலியாய் பாரதி குரல் கொடுக்க, விக்ரம் புன்னகைத்தான்.

"மழை வந்தா ஊருக்கு நல்லதுதானேம்மா... சரி.. கிளம்பறியா?"

"இருடா... அதிசயமா பிள்ளையாண்டான் வெளில கூப்படறே... மூஞ்சி அலம்பிண்டு, புடவை மாத்திண்டு வந்துடறேன்... நடந்து போய் ஆட்டோ பிடிச்சடலாம்... எனக்கும் 'வாக்'போன மாதிரி இருக்கும்..."

"ஆட்டோவா? என்ன வார்த்தை சொன்னீங்கள் தாயே!" என்று கேட்ட விக்ரம் பையிலிருந்த வண்டிச் சாவியை எடுத்து அவள் கண்முன் ஆட்டி 'டட்டடாய்ங்' என்றான் ராகத்தோடு...

"காரா? யாரது விக்கி?"

"நம்மதுதான்மா... இன்னொருத்தரோடத நாம என் உபயோகப்படுத்தணும்!"

"அது சரி— உன்கிட்ட எப்படி கார் சாவி வந்தது?"

"ஸிம்பிள்மா... அப்பா ஆபீஸுக்குப் போனேன். கார் வேணும்னேன். 'மாருதிய எடுத்துக்கோ, நான் அம்பாஸிடர்ல வந்துக்கறேன்'னு அப்பா சொல்லிட்டார்."

கண்களை இடுக்கிக் கொண்டு பாரதி அரை நிமிஷம் நிதானித்தாள்

"அப்பா ஆபீஸுக்கு? நீ...? என்ன விக்கி சொல்றே? ஒண்ணுமே புரியல...!"

இரண்டு கைகளையும் உயர்த்தி விக்ரம் ஆயாஸத்தோடு குலுக்கினான்.

"கேள்வி... கேள்வி... நூறு கேள்வி! ஏதோ ஆசையா பையன் கூப்பிடறானே, ஹாய்யா போயிட்டு வருவோம்னு இல்லாம, என்னம்மா இது, இண்டர்வ்யூல கேக்கற மாதிரி துருவித் துருவிக் கேட்டுண்டு... ஓகே...



சொல்றேன்... கேட்டுக்கோ... எங்க காம்பஸ்ல கலை விழா நடத்தப் போறோம்... அதுக்குப் பெரிய மனுஷாளைப் போய்ப் பாக்க வண்டி தேவைப்பட்டது. ஸோ, அப்பா ஆபீஸுக்குப்போய் மாருதிய எடுத்துண்டேன். சுருக்க வேலை முடிஞ்சுட்டதால, உன்னோட கொஞ்சதூரம் வெளில போகலாம்னு தோணித்து... வந்தேன்... என்ன, இப்ப திருப்தியா? அப்பாடா... மூச்சு விடாம பேசினது இளைக்குது... இரு, கொஞ்சம் மூச்சுவிட்டுக்கறேன்."

"உங்கள் கல்லூரியில் கலைவிழா இப்போது வராதே... ஜனவரிக்குமேல்தானே எப்பவும் இருக்கும்?" என்று கேட்க நினைத்து பாரதி, இப்படிக் கேட்டால் பிள்ளை எரிச்சல் கொள்வது நிச்சயம் என்று புரிய, நினைப்பை மாற்றிக்கொண்டு உள்ளே போனாள்.

பத்து நிமிஷங்களில் தயாராகி வந்தபோது விக்ரம் கூடத்து சோபாவில் அமர்ந்து நகத்தைக் கடித்தபடி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பது விளங்கியது.

இல்லை— விக்ரம் வழக்கம்போல இல்லை. எதையோ மறைக்க, அல்லது வேண்டுமென்றே உற்சாகமாக இருப்பது போல தோற்றமளிக்க முயற்சிக்கிறான்...

என்ன கவலை அவனுக்கு?

ஏதாவது பிரச்னையா?

அல்லது, நிஜமாகவே கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யும் வேலை மும்முரத்தில் இருப்பதனால்தான் இந்த யோசனையா?

பாரதி அருகில் சென்று "நா ரெடி புறப்படலாமா?" என்றதும், விக்ரம் எழுந்து நின்றான்.

"மாம்ஸ்— யூ லுக் க்ரேட்!"

"தாங்க்ஸ்... அதுசரி, மணி இப்பவே அஞ்சேகால் ஆயிடுத்து. அப்பா வர்றப்போ நாம இல்லாட்டா எப்படி விக்கி?"

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம். அப்பா இன்னிக்கு ஆபீஸ்லேந்து புறப்பட நாழியாகுமாம், சொல்லச் சொன்னார். ஸோ, அவர் வர்றத்துக்குள்ள நாம வந்துடலாம்..."

புஷ்பாவிடம் வாசக்கதவைத் தாள்போட்டுக் கொள்ளச் சொல்லிவிட்டு, கிளம்பினார்கள்.

வண்டியை அரக்கப்பரக்கக் கிளப்பி, அம்மா 'விக்கி... இவ்வளோ வேகம் வேண்டாம்பா' என்று கெஞ்சக் கெஞ்ச, 'ரிலாக்ஸ்மா' என்று கூறிவிட்டு விமானம் ஓட்டுகிற வேகத்தில் எப்போதும் செலுத்தும் விக்ரம் அன்று வண்டியை நிதானமாய் ஓட்டினான்.

தனக்குப் பிடித்த 'மெக்டோனா'வை அலறவிடாமல், மகாராஜபுரம் சந்தானத்தின் பாடல்களை கார் ஸ்டீரியோவில் போட்டுவிட்டு, அவனைப் பார்த்து அசட்டுச் சிரிப்பு சிரிக்க, விக்ரம் ஏதோ காரியத்துக்காகத் தான் தன்னை தாஜா பண்ணுகிறான் என்று சற்றுமுன் தோன்றிய சந்தேகம் மீண்டும் பாரதிக்கு எழுந்தது.

இன்றைக்கு விக்ரம் வீட்டுக்குவரும் நாளே இல்லை. கல்லூரி நாட்களில் ஏதாவது அவசியமான விசேஷத்துக்கு வந்து தலையைக் காட்டிவிட்டுப் போ என்று கெஞ்சினாலும் கூட முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்பவன், இன்று அதிசயமாய் வந்திருப்பதுடன், அப்பாவைக் கேட்டு கார் எடுத்துக்கொண்டு வந்து, வெளியேபோய் சாப்பிடலாமா— என்று வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு போகிறான். அதுவும், அவனுக்குப் பிடித்த பானிபூரி வகையறா சாப்பிட... இத்தனையும் போறாது என்று உபரியாய் மகாராஜபுரம் பாட்டு வேறு...!

வரிசையாய், அரை மணி நேரமாய், பிள்ளை செய்யும் காரியங்களை மறுபடியும் மனதில் நிறுத்திப் பார்த்த போது, ஏதோ முக்கியமான காரணத்துக்காக விக்ரம் 'சாக்காய்' பிடிக்கிறான் என்பது உறுதியாயிற்று.



அப்படி என்ன தலைபோகிற காரியம் இப்படி நடந்து கொள்ள?

யோசித்த வரையில் ஒன்றும் புரியவில்லை.

"என்ன விஷயம் விக்கி? எதற்காக இப்படி நைச்சியம் பண்ணுகிறாய்?— என்று கேட்டுவிட, வாய் வரைக்கும் வந்துவிட்ட வார்த்தைகளை கஷ்டப்பட்டு பாரதி உள்ளே தள்ளினாள்.

இத்தனை முனையும் மகன், தானாகவே பேச்செடுக்காமல் இருக்கமாட்டான். கொஞ்சம் பொறுத்துதான், எப்படி அவனாகத் துவங்குகிறான் என்று பார்க்கலாமே! என்ன அவசரம்?

ஒரு முடிவுக்கு வந்துவிட்ட பாரதி தன்னை ஒருவித தவிப்புடன் ஏறிட்ட மகனைப் பார்த்து புன்னகைத்தாள். அவன் தொடையில் தட்டிக்கொடுத்து "அப்புறமா அர்மால பாக்கலாம்... நீ ரோட பாத்து ஓட்டு..." என்றாள் லேசான சீண்டலுடன்...

ஃபவுண்டன் ப்ளாஸா வந்துவிட்டது.

விக்ரம் வண்டியை உள்ளே செலுத்தி ஓரமாக நிறுத்தினான்.

அதிசயமாய் கூட்டம் அதிகம் இல்லை.

"இங்க வாங்கிண்டு வந்துடட்டுமா?"

"ம்... பணம் வாண்டாமா?"

"எங்கிட்ட இருக்கு..."

இந்தப் பதிலும் பாரதிக்குப் புதுசு. காலையில் நூறு ரூபாய் கொடுத்திருந்தாலும், மாலையில் செலவுக்குப் பணம் கேட்கும் விக்ரம். 'வேண்டாம் இருக்கிறது!' என்பது இதுவரை கேள்விப்படாத பதில்!

பாரதியின் ஆர்வம் அதிகமானது.

எதைச் சாதிக்க இந்தப் பிள்ளை இப்படி நல்ல பிள்ளையாய் அம்மா கிழித்த கோட்டைத் தாண்டாத பிள்ளையாய் வேஷம் போடுகிறது!

பாரதிக்கு வேடிக்கையாய் இருந்தது.

சில நிமிஷங்களில் விக்ரம் திரும்பிவந்தான். இரண்டு கைகளிலும் பேல்பூரி தட்டுக்கள், குளிர்ந்த டபின் செவன் ட்ஸின்... பின்னோடு வந்த சின்னப் பையன் தட்டிப் பூரிகள், தித்திப்பு, கார புளிப்பு ரஸங்கள் அடங்கிய கிண்ணங்கள் கொண்ட ட்ரேயை நீட்ட, உள்ளே அமர்ந்து தன் மடிமீது தட்டை வாங்கி வைத்துக் கொண்டு, 'பத்து நிமிஷம் கழிச்சு வா' என்று அவனை அனுப்பினான்.

"எடுத்துக்கோ—மா" என்றவாறு பாரதியிடம் ஒரு தட்டை நீட்டினான்.

எதுவும் பேசாமல் பேல்பூரியை சாப்பிட்டு முடித்தும், பானி பூரியில் துளையிட்டு ஒன்றில் புளி ரஸம், அடுத்ததில் தித்திப்பு ரஸம் என்று பாரதி சாப்பிட்ட நாழிகையில் சின்னக் குரலில் "அப்பா ரொம்ப அப்ஸெட்டா இருக்கார் மா" என்று விக்ரம் பேச்சைத் துவங்க, வாய் கொள்ளாமல் இருந்த பூரியுடன் பாரதி அவனைச் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்.

ஹோ! கடைசியில் இதுதானா? இதற்குத்தானா இத்தனை முஸ்தீப்புகளும்!

விக்ரம் விழிகளைத் தழைத்தான். ஸ்பூனால் பேல் பூரியைத் துழாவினவன் அதே சின்னக் குரலில் தொடர்ந்தான்.

"ஏதாவது உபயோகமா செய்யணுங்கற உன் தவிப்பு அப்பாவுக்குப் புரியாம இல்லம்மா... ஆனாலும் வந்து..."

வாயிலிருந்ததை விழுங்கின பாரதி கரகரப்பாய் "ஆனாலும்?" என்று மகனுக்கு எடுத்துக் கொடுத்தாள்.



விக்ரம் தயங்கித் தயங்கிப் பேசினான்.

"அப்பாவைப் பத்தி உனக்கு நா எதுவும் புதுசா சொல்ல வேண்டாம்மா—ஏதோ ஒண்ணு சொல்... அவர் எதையும் யோசிக்காம பேசமாட்டார், சொல்லமாட்டார்னு உனக்கே தெரியும்... அவர் சொல்ற மாதிரி நீ கம்ப்யூட்டர் கோர்ஸ், இல்லை [illegible] கோர்ஸ் பண்ணாதான் உனக்கு நல்லதுன்னு எனக்கும் தோணுதும்மா, மானேஜ்மெண்ட் கோர்ஸுக்கு இப்பல்லாம் பல பார்ட்டைம் கிளாஸை நடத்து... அதுல சேர்ந்து படிக்கறது எவ்வளவோ பேர் பெருமையா நினைக்கறா தெரியுமா?... யாம்மா, நான் என்ன சொல்றேன்னா..."

அவனை முடிக்க விடாமல் பாரதி தன் கையை எதிரில் நீட்டித் தடுத்தாள்.

தனித்துளியாக உள் ஒருகுரல் [illegible] கோபத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் கேட்டாள்.

"அப்பா உனக்குப் போன் பண்ணி [illegible] இருந்தாரா விக்கி? அதான் ஆபீஸுக்குப் போயிருந்தியா?"

"நா ஏதோ சொல்லவறேன் நீ எதையோ..."

"ம்... விக்கி— கேட்டதுக்குப் பதில்— எஸ் ஆர் நோ..."

விக்ரம் அறுந்த உணர்வுடன் எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டான்.

"சொல்லுடா"

"எஸ்"

"ரெண்டு நாளுக்கு முன்னால எங்களுக்குள்ள நடந்த பேச்செல்லாம்?"

"ம்"

"நா கலாக்ஷேத்ரா டான்ஸ் கோர்ஸ்ல சேர தீர்மானிச்சுட்டேங்கறதையும் சொன்னாரா?"

"ம்"

பாரதியின் குரல் கன்னென்று உயர்ந்தது.

"இன்னும் வேற என்னென்ன சொன்னார்... கார் பணம் தரேன். எடுத்துண்டு போய் பேச வேண்டிய விதமா பேசி அவ மனசை மாத்திடுனும்னு சொன்னாரா? அதான் இந்த திடீர் அம்மா ஆசை, பேல்பூரி எட்செட்ரா, எட்செட்ரா எல்லாமா?"

இப்போது கோபம் அவள் குரலில் துல்லியமாய் வெளிப்பட, விக்ரம் அவசரமாய்ப் பேசினான்.

"நீ தப்பா புரிஞ்சுக்கறம்மா... அப்பா புகாரா எதையும் சொல்லலை... உன்னை 'தாஜா' பண்ணச் சொல்லியும் கேட்டுக்கலை... அவர் அப்செட் ஆகியிருக்கறதப் பார்த்துட்டு நானாதான் வந்தேன். மாம்ஸ்... ப்ளீஸ்... என்ன பிடிவாதம்மா இந்த வயசுல, அப்பாவைப் புரிஞ்சுக்காம... ப்ளீஸ் மா?"

கெஞ்சலாய் பேசியவனை பாரதி விழித்துப் பார்த்தாள்; அப்புறம் அழுத்தம் திருத்தமாகப் பேசினாள்—

"யார் புரிஞ்சுக்கலை விக்கி? உங்க அப்பாவும் நீயுமா? இல்ல நானா? 'உன்னைப் பாத்தா என் ப்ரெண்ட்ஸ் எல்லாம் அம்மானு நம்ப மாட்டேங்கறா— அக்காவானு கேக்கறா'னு பெருமைபட்டுப்பயே அப்ப உறுத்தாத வயசு இப்ப திடீர்னு ஞாபகம் வந்துடுத்தா விக்கி? ஒண்ணு சொல்லட்டுமா? நீங்கள்ளாம் புரிஞ்சுக்காம தடுக்கவும், என் மனசை மாத்தவும் முயற்சி பண்ணறதப் பாக்கறப்போ, கத்துக்கறதோட நிறுத்திடாம, மேடைல ஏறி ஆடியாத்தான் எண்ணங்கற வேகம் கூட வர்றது தெரியுமா?"

## 18

"ம், அப்புறம்?"

"மேல சொல்றதுக்கு ஒண்ணுமே இல்லப்பா... பேச்ச எடுத்ததுமே அம்மாக்கு ரொம்ப கோவம் வந்துடுத்து. எதுவுமே சொல்ல விடாம 'அம்மாவை தாஜா பண்ணி அவ மனச மாத்து—னு அப்பா சொல்லி அனுப்பினாரா?'னு கேட்டுட்டு, 'நீங்கள்ளாம் தடுக்க, தடுக்க, கத்துக்கறதோட நிறுத்திடக்கூடாது, மேடை ஏறி ஆடணுங்கற வெறி கூட வர்றது. தெரியுமா?'னு ஆத்திரத்தோட அம்மா பேசறப்போ, எனக்குப் பதில் சொல்ல வாயே எழும்பலைப்பா... அந்தக் கோபம், அந்தப் பார்வை, அழுத்தம் திருத்தமான பேச்சு எல்லாம் எனக்கு ரொம்ப புதுசு... அம்மா கிட்ட பேசற மாதிரியே இல்ல— யாரோ அந்நிய மனுஷா முன்னால நிக்கறது போல ஒரு நிமிஷம் கை, கால் உதறிடுத்துப்பா..."

தாக்கமும், வருத்தமும் கலந்து விக்ரம் பேச, கையிலிருந்த பேப்பர் வெயிட்டை உருட்டியவாறு சில நிமிஷங்களுக்கு ரமணி மௌனித்தார். பின்னர் நிமிர்ந்து, மகனை ஏறிட்டு மென்மைக் குரலில் பேசியபோது மனசின் வேதனை குரலில் வெளிச்சப் போட்டது.

"அம்மாவை வெளியே அழைச்சுண்டு போனது, அவளுக்குப் பிடிச்ச 'ஸ்னாக்ஸ் வாங்கிக் கொடுத்தது எல்லாம் சரி, விக்கி, ஆனா, விஷயத்த நீ இதோட இன்னிக்கு விட்டிருக்கணும். நாளை, நாளன்னிக்கு அம்மாவா தான் டான்ஸ் கோர்ஸ்ல சேர உத்தேசிச்சிருக்கறத உன்கிட்ட சொல்ல முனையறப்போ நீ 'எதுக்கும்மா இதெல்லாம்?'னு கேட்டிருந்தா சரியா இருந்திருக்கும். அத விட்டுட்டு 'அப்பா ரொம்ப அப்செட்டா இருக்கார்'னு நேரடியா வொட்டுனு

இன்னிக்கே இந்தப் பேச்சு எடுத்ததுல. நான் தான் உன்னை இப்படி பேசத் தயார் பண்ணி அனுப்பிச்சேன்ங்கற எண்ணம் வேற புதுசா இப்ப உங்கம்மாக்குக் கோபத்தை உண்டாக்கியிருக்கு...''

அப்பா பேசுவது புரியாமல் விக்ரம் விழித்தான்.

''நீங்க அப்ஸெட்டா இருக்கறது நிஜம் தானேப்பா... அதனால்தானே காலேஜுக்குக் கூட போன் பண்ணி 'ஆபீஸுக்கு வாடா'ன்னு காத்தால சொன்னேள்? நானும் கிளாஸ் கட் பண்ணிட்டு வந்தேன்! நீங்க விவரம் சொன்னப்பறம் அம்மா கிட்ட பேசிப்பாக்கட்டுமான்னு உங்கள கேட்டுண்டுதானே வண்டிய எடுத்துண்டு போனேன்?"

சுற்றி வளைக்காமல் நேர் பார்வை பார்த்தபடி மண்டையில் அடிக்கிற ரீதியில் விக்ரம் கேள்வி கேட்க, ரமணி எழுந்து நின்றார். ஏ.ஸி மெஷினிடம் சென்று குமிழைத் திருகி குளிர்ச்சியைக் குறைத்தார். அங்கிருந்தே மகனைப் பார்க்க திரும்பி நின்று கொண்டு கெஞ்சலாய்க் கேட்டார்.

''எல்லாம் சரிதான் விக்கி, ஆனா, அத உங்கம்மா தப்பா புரிஞ்சுக்கற மாதிரி நீ நேரடியா பேசியிருக்கணுமா? இன்னும் கொஞ்சம் பாலிஷ்டா... வந்து நான் என்ன சொல்றேன்னா..."

குற்ற உணர்வில் தடுமாறியவருடன் சரியான வார்த்தைகள் கிடைக்காமல் ரமணி திண்டாட, சட்டென்று விக்ரமுக்கு அவர்பால் பரிதாபம் உண்டாயிற்று. அப்பாவின் இக்கட்டு புரிந்த நிலையில் அவசரமாய்க் குறுக்கிட்டான்.

''ஸாரிப்பா... யு ஆர் ரைட்... நான் இன்னும் கொஞ்சம் பொறுமையா இருந்திருக்கணும். ஐ அக்ரி... நீங்க அப்ஸெட் ஆகியிருந்தது ஒரு பக்கம்னா, நம்ப அம்மாவா இப்படி திடும்னு ஏதோ ஒரு முடிவுக்கு வந்திருக்காங்கற ஷாக் இன்னொரு பக்கம், ரெண்டுமா சேர்ந்துண்டு நிதானம் இல்லாம நடந்துக்க வச்சுடுத்து... ஐம் ஸாரி..."

ரமணி அவன் அருகில் வந்து தோளைத் தட்டிக் கொடுத்தார்.



"உன்னை மட்டும் கோச்சுக்கறதுல அர்த்தம் இல்ல விக்கி... உங்கம்மா ரியாக்ஷன் இப்படி இருக்கும்னு எதிர்பார்த்து நான் உன்னை எச்சரிச்சிருக்கணும்... பதட்டத்துல எனக்கும் ஒண்ணும் புரியாம போயிடுத்து...''

பேசியவர் மேஜையின் விளிம்பில் உட்கார்ந்தார், கண்களில் வழிய நீரை மகன் பார்க்காதிருக்க வேண்டி விரல்களால் விழிகளைக் கசக்கிவிட்டார். தெளிவாகத் தொடர்ந்தார்.

"ரெண்டு நாளா வீடு வீடாகவே இல்ல விக்கி... எங்க கல்யாணமாகி இத்தனை வருஷத்துல உங்கம்மாவும் நானும் பேசிக்காம ஒருமணி நேரம் இருந்ததில்ல... தெரியுமா? ஆனா இப்ப ரெண்டு நாளா ஒருத்தரோட ஒருத்தர் பேசிக்கறதில்ல... என்ன சண்டை, ஆர்க்யுமெண்ட் வந்தாலும் அரை மணிக்குள்ள தப்பு யார் பேர்ல இருந்தாலும் உங்கம்மா தானா வந்து என்கிட்ட 'ஸாரி' சொல்லிடுவா... அதுக்கப்புறம் எனக்கும் 'சே, தப்பு நம்ப பேர்ல இருக்கறச்சே, நாம் தானே முதல்ல ஸாரி சொல்லியிருக்கணும்'னு உறுத்தல் கூட இருக்கும்... அப்படி எதுக்கும் விட்டுக் கொடுக்கற பாரதியா இப்ப இப்படி முரண்டு பண்றான்னு எனக்கு ஆச்சரியமா இருக்குடா. டான்ஸ் கிளாஸ்ல சேர்றதுல எனக்கு நிஜமா விருப்பம் இல்லேனு தெரிஞ்சும் இப்படி பிடிவாதமா இருக்கறது நம்ப முடியாம கூட இருக்கு விக்கி... இதோட ரெண்டு நாளா உங்கம்மாவோட பேசாம இருக்கறதுல என்னால ஆபீஸ்லயும் சாதாரணமா இருக்க முடியல... ஒழுங்கா எந்த வேலையும் பாக்க முடியல... எப்பவும் 'டென்ஷன்'ஆ இருக்கேன். இப்படி என்னை வருத்தப்பட வைக்கறது உங்கம்மாவுக்குப் புரியலையா? இல்ல, புரிஞ்சும் அலட்சியமா இருக்காளா? ஏன்? எதனால இந்த மாற்றம்? இப்படிகூட திடும்னு ஒருத்தர் குணம் மாறுமா? எனக்கு ஒண்ணுமே புரியல விக்கி... வொய் திஸ் ஹாப்பனிங் டு அஸ்? வொய் விக்கி?"

வாய்விட்டு அழுதுவிடுவது போல ரமணி புலம்ப சரேலென்று இருக்கையை விட்டு எழுந்த விக்ரம் இரண்டே எட்டில் தந்தையை நெருங்கி அவர் கைகளைப் பற்றிக் கொண்டான். 'ப்ளீஸ்... அப்பா... ப்ளீஸ்" என்று முனகினான்.

என்றும் இல்லாத அதிசயமாய் தன் அந்தரங்க வாழ்க்கை பற்றி அப்பா பேசுவதைக் கேட்கக் கூச்சமாக இருந்தது. 'வேண்டாம்— மேலே ஒரு வார்த்தைகூடப் பேசாதீர்கள்' என்று வாயைப் பொத்தி விடலாமா என்றுகூட தவிப்பாக இருந்தது.

ஒரு சில நிமிஷங்கள் அப்படியே நின்று கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்ட பின்னர் "சூடா காபி ஆர்டர் பண்ணேன் விக்கி" என்று ரமணி சொல்ல, இண்டர்காமிடம் சென்று செக்ரெட்டரியை அழைத்து இரண்டு கப் காபி அனுப்பும்படி விக்ரம் கேட்டுக் கொண்டான்.

காபி வந்தது.

எதுவும் பேசாமல் இருவரும் குடித்தனர்.

கோப்பைகளை பையன் எடுத்துக் கொண்டு போகும் வரை காத்திருந்து விட்டுப் பேசியபோது ரமணி குழப்பம் குறைந்து தெளிந்து காணப்பட்டார்.

"ஏன்— நீ பேச்சை எடுத்ததுமே அம்மாக்கு கோவம் வந்து 'அப்பா எங்கடா?'னு கேட்டா... மேலே என்ன நடந்தது?"

விக்ரம் உதட்டைப் பிதுக்கி தோளைக் குலுக்கினான்.

"நத்திங்... நத்திங் அட் ஆல் டாடா! ரெண்டு கேள்வி கேட்டுட்டு, பாதி சாப்பிட்டுண்டு இருந்ததை அப்படியே டேபிள்ல வச்சா... அப்புறம் 'எனக்கு ஆத்துக்குப் போகணும். நீ கொண்டு விடறியா? இல்ல நானே ஒரு ஆட்டோ பிடிச்சு போய்க்கட்டுமா?'னு விரைப்பா கேட்டா... 'ஸாரிம்மா... லெட் மீ எக்ஸ்ப்ளேன்'னு நான் ஆரம்பிக்கறதுக்குள்ள 'மேக்கொண்டு ஒரு வார்த்தை கூட பேசாதே விக்கி... கேட்டவரைக்கும் போறும். என்னை நீங்களாம் புரிஞ்சுக்கல... பரவாயில்லை... அட் லீஸ்ட் லீவ் மீ அலோன்...'னு கண்டிப்பா சொன்னப்புறம் நான் என்னப்பா பண்றது? ஒரு வார்த்தை பேசாம, சைலண்டா வண்டியை ஓட்டிண்டு வீட்டுக்கு வந்தேன். அம்மா இறங்கி உள்ளே போனதும் தன் ரூமுக்குப் போய் கதவை சாத்திண்டுட்டா... அங்க நிக்கவும் நின்னு பாத்தேன். என்ன பண்றதுன்னே புரியல... அங்கே யிருந்து உங்களுக்குப் போன் பண்ணி பேசினா கூட அம்மாவோட கோவம் ஜாஸ்தி ஆகும்னு தோணித்து. அதான் உடனே கிளம்பி நேரா ஆபீஸுக்கே வந்துட்டேன்..."



ரமணி நாற்காலியை சுழற்றினார். தலைமுடியைக் கோதியவாறு கண்களை இடுக்கிக் கொண்டு விக்ரமைப் பார்த்தார்.

"நீங்களாம் புரிஞ்சுக்கலை— புரிஞ்சுக்கலை...னு வாய்க்கு வாய் புகார் பண்றாளே, உங்கம்மா, அப்படி எதைத் தான் நாப்ப புரிஞ்சுக்கலைனு சொல்றா? அவளுக்கு இல்லாத சுதந்திரமா? வீட்டு நிர்வாகம், சாமான் வாங்கறது, இல்லை வேற எதுவாவது நான் இத்தனை வருஷமா தலையிட்டிருக்கேனா? எவ்ரிதிங் ஸ் ஹர் டிபார்ட்மெண்ட்—னு ஒரு கேள்வி கேக்காம அத்தனைக்கும் சரினுதானே சொல்லியிருக்கேன்? அப்புறம்? அதெல்லாம் புரிஞ்சுண்டதோட சேர்த்தி இல்ல, ஆனா, மூத்தடவையா டான்ஸ் க்ளாஸ்ல சேர வேண்டாம்னு சொன்னது உங்கம்மாவுக்குப் பெரிய குத்தமாயிடுத்து... அதானே? குடும்பம், அந்தஸ்து, குழந்தை எல்லாத்தையும் மறந்துட்டு இவ என்ன வேணா நிடும்னு தன் இஷ்டத்துக்குத் தீர்மானம் பண்ணுவா— அதுக்கு நான் சம்மதம் கொடுக்கலைன்னா 'என்னை யாரும் புரிஞ்சுக்கலை'ங்கற புலம்பல், புகார்! அதானே விக்கி? வயசை மறந்துட்டு என்ன அசட்டு நடத்தைடா இது! சே, ஐ ம் டிஸ்கஸ்டட்..."

அம்மாவிடம் காட்ட விரும்பாத கோபத்தைக் கேட்க முடியாத கேள்விகளைத் தன்னிடம் காட்டி, கேட்பதன் மூலம் அப்பா தன் ஆத்திரத்துக்கும், வேதனைக்கும் வடிகால் தேடுவதைப் புரிந்துகொள்ள முடிய விக்ரம் பதில் பேசாமல் சும்மா இருந்தான்.

மேஜைமேல் இல்லாத தூசியை ஆள்காட்டி விரலால் துடைத்தான். ஜீன்ஸிலிருந்து வெளிப்பட்ட ஒரு நூலை வெளியில் இழுத்து அறுத்தான். குனிந்து கால் ஷூவின் லேஸை ஒருதரம் அவிழ்த்து முடித்தான்.

"திடுதிப்னு உங்கம்மாவுக்கு இப்படி ஒரு ஆசை வரக் காரணம் என்ன விக்கி?"

கோபம் கொஞ்சம் தணிந்தவராய் வீட்டில் உண்டாகியிருக்கும் சிக்கலுக்கு தீர்வு காணும் விதத்தில் யோசனையுடன் ரமணி வினவ, விக்ரம், உதட்டைப் பிதுக்கி தோளைக் குலுக்கினான்.

"டான்ஸ் மாஸ்டர் ராஜமாணிக்கம் வீட்டுக்குப் போக ஆரம்பிச்சு, அந்த ஸாராங்கற பொம்பளையோட நெருக்கம் அதிகம் ஆனதுமே 'என்னடாது— பாரதியோட பேச்சு, பழக்கமெல்லாம் முன்னே போல இல்லையே'னு கவலைப்பட்டேன். என் சந்தேகம் ஊர்ஜிதமாயிடுத்து. மாபாரமா கல்லைப் போடற இதுசலை யாரையும் கேக்காம இப்படி ஒரு முடிவுக்கு வர்றத்துக்கு அவளுக்குத் தைரியம் எப்படி வந்தது? ம்? இந்த வயசில டான்ஸ் கிளாஸுக்கு போறதாம், நாலு வருஷ டிப்ளமோ கோர்ஸ் பண்றதாம் கடவுளே! உங்கம்மாக்கு என்ன ஆயிடுத்துடா விக்கி?"

விக்ரம் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். யதார்த்தத்தின் அழுத்தம் தாளமாட்டாமல் அப்பா புலம்பித் தீர்க்கும்போது தான் ஜடம் மாதிரி அழுக்கமாய் இருப்பது நியாயமில்லை என்கிற உணர்வுடன் பேசினான்.

"மத்தியானத்துலேந்து நானும் யோசிச்சுண்டுதாம்பா இருக்கேன். ஒருசில மாசங்களுக்கு முன்னாலியே



அம்மா முன்னையவிட 'டல்லா' இருக்கறமாதிரி தோணித்து... ஒண்ணு ரெண்டு தரம் 'என்னம்மா?'னு கேட்டிருக்கேன். பதில் சொல்லாம சிரிச்சுடுவ... சரி, டயர்டா இருக்கும் இல்லை, வீட்டுல யாரும் இல்லாததால 'போர்' அடிச்சிருக்கும்னு விட்டுட்டேன். இப்ப யோசிச்சுப் பாக்கறப்போ ஒரு வேளை..."

அவனை முடிக்கவிடாமல் ரமணி குறுக்கிட்டார்.

"நானும் அப்படித்தான் நினைச்சு, 'உனக்குப் போர் அடிச்சா 'கம்ப்யூட்டர் கிளாஸ்ல சேரு— இல்லைன்னா எம். ஏ. பண்ணு'னு எவ்வளவோ யோசனை சொல்லிப் பார்த்தேன்...ம்ஹூம்... காதுல வாங்கினாதானே?"

"இல்லைப்பா, நான் வேற ஒரு ஆங்கிள்லேந்து பாக்கலாமோனு நினைக்கறேன். அம்மாவுக்கு ஒரு வேளை உடம்பு சரியில்லாமலிருந்தா?"

ரமணி 'ப்ச்' என்று எரிச்சலுடன் சூள் கொட்டினார்.

"வெளையாடாதடா விக்கி... உடம்பு சரியில்லேன்னா டான்ஸ் கிளாஸ்ல சேர்றேன்னா சொல்லுவா ...?"

"நான் சாதாரண உடம்புக் கோளாறு பத்தி சொல்லலைப்பா... அம்மாக்கு ஒரு வேளை 'மெனோபாஸ் ப்ராப்ளம்' தொடங்கிடுத்தோ என்னமோ? அதான் இப்படி ஏதேதோ ஆசையெல்லாம் வர்றதோ என்னமோ? என் ஃப்ரெண்ட் அசோக் தெரியுமில்லையாப்பா? அவன் அம்மாவுக்கு ரெண்டு வருஷத்துக்கு முன்னால திடீர்னு சித்தபிரமை பிடிச்சுப் போச்சு... என்ன ஏதுனு யாருக்கும் ஒண்ணுமே புரியலை... கடைசில பார்த்தா மெனோபாஸ் கோளாறுனு புரிஞ்சுது. ஹிஸ்டரக்டமி பண்ணி, வைத்தியம் செஞ்சதும் கொஞ்சம் கொஞ்சமா தானே சரியாயிடுத்தாம் அந்த மாதிரி அம்மாக்கும்..."

அவன் கூற்றை ஏற்று ரமணி தலை அசைத்தார்.

"நீ சொல்றது நிஜமா வீட்டுல நடக்கறது எனக்கும் தெரியும். இத்தபிரமை பிடிக்கற அளவுக்குப் போகா விட்டாலும் அனாவசியமா சிடுசிடுக்கறது. கோவப் படறது. கத்தறது எல்லாம் நிஜமா பொம்மனாட்டி களுக்குத் தூரம் நிக்கற சமயத்துல, மெனோபாஸ் பீரியட்ல வரும்தான். ஆனாலும்..."

"இல்லப்பா... அப்படி ஒருவேளை இருந்தா அம்மா மேல கோவப்படறது தப்பு இல்லையா? ஹார்மோன்கள் தொந்தரவாலதான் தன்னையும் மீறி அம்மா இப்படி நடந்துக்கறான்னு புரிஞ்சுக்க வாண்டாமா? உடனடியா ஒரு டாக்டர்கிட்ட, நல்ல சைகாலஜிஸ்ட் கிட்ட, அம்மாவ கூட்டிண்டு போறது எல்லாத்துக்கும் நல்லதுனே எனக்குத் தோணறது..."

ரமணி முகவாயைத் தடவிக் கொண்டார்.

"உங்கம்மா உடம்பை கவனிக்கறத விட வேற முக்கிய வேலை எனக்கு இல்ல விக்கி... ஆனா, பாரதி கிட்ட 'மெனோபாஸ் ஸிம்டம்ஸ்' எதுவுமே இல்லியே! மென்ஸஸ் எந்தத் தொந்தரவும் இல்லாம மாசாமாசம் வர்றது. பி.எம்.டி— ப்ரீ மென்ஸ்ட்ருவல் டென்ஷன், அதாவது தூரம் வர்றதுக்கு ஒருவாரம் முன்னயிலேந்தே சில பொம்மனாட்டிகளுக்கு அடிக்கடி எரிச்சல், அனாவசிய கோபதாபம், கத்தல் எல்லாம் இருக்கும்னு சொல்லுவாளே, அதுகூட உங்கம்மாக்குக் கிடையாதே. எதை வச்சுண்டு உங்கம்மாக்கு மெனோபாஸ் ப்ராப்ளம்னு சொல்றது? 'உனக்கு மெனோபாஸ் தொந்தரவு ஆரம்பிக்கறதோ என்னவோ, வேணும்னா டாக்டர்கிட்ட போயிட்டு வரலாம்மா?'னு கேட்டா, நாம அக்கறை யோடு பேசறது புரியாம உங்கம்மா அதுக்கு வேற கோச்சுண்டா என்ன பண்றது?"

விக்ரம் மேஜைமேல் விரலால் கோலம் போட்டான்.

"பேசாம ஒரு மாசம் அம்மாவையும் கூட்டிண்டு சிங்கப்பூர், தாய்லாண்ட், ஜப்பான், இல்லாட்டா



யு.எஸ்.னு போயிட்டு வாங்களேன்பா... ட்ராவல் பண்ணினா இத்தனை வருஷமா வீட்டுலேயே 'போர்' அடிக்க உட்கார்ந்திருந்ததுல அலுத்துப் போயிட்ட அம்மா மனசு மாறுமோ என்னவோ? உங்க ரெண்டு பேருக்குமே ஒரு ஹாலிடே நல்லது பண்ணும்பா..."

ரமணி வேதனையுடன் சிரித்தார்.

"உன்கிட்ட பேசக்கூடாதது எல்லாத்தையும் பேசி யாச்சு— இன்னும் இத மட்டும் பாக்கி வைப்பானேன்? சொல்றேன், கேட்டுக்கோ... உங்கம்மா தன் முடிவைச் சொல்லி, 'அது நடக்காது'னு நான் கத்தினப்புறம், பாவம்னு தோணி நானா அவகிட்ட போயி 'குடும்பத்தை பாத்துண்டு நீ சலிச்சுப் போயிட்டது எனக்குப் புரியறது. அதனால ரொம்ப நாளா நீ ஆசைப்பட்ட மாதிரி காஷ்மீர், இல்ல சிங்கப்பூர் எங்கேயாவது போயிட்டு வரலாமா?'னு கேட்டேன். சிரிச்சுண்டே 'இப்போ திரும்ப்னு பத்து, பதினைஞ்சு நாள் வெளியூர் போக முடியாது ரமணி— ஏன்னா, ஒண்ணாம் தேதிலேந்து ஸினாப்ஸில சேரணுமே'னு தீர்மானமா பதில் சொல்றவளை என்ன பண்ண முடியும்? அதுக்கப்புறம்தான் எனக்குக் கோவம் வந்துடுத்து. நாம தணிஞ்சா இவ தலைமேல ஏறிப்பாளோனு பேசறதையே விட்டுட்டேன். வழக்கம்போல 'ஸாரி ரமணி'னு தானா வருவாளானு பாத்தேன். இல்ல விக்கீ... உங்கம்மாக்கு ஏதோ ஆயிடுத்து... ஐம் ஷ்யூர்... என்ன பண்ணினி அவளோட புத்திய மாத்தறதுன்னு தான் புரியல..."

"தாத்தா பாட்டிய விட்டுப் பேச வைச்சா?"

"உன்கிட்ட சொன்னதுக்கே உங்கம்மா பத்ரகாளியா யிட்டா... அவளோட அப்பா, அம்மா வரைக்கும் விஷயத்தை எடுத்துண்டு போனா, வேற வினையே வாண்டாம்"

"இல்லப்பா... எனக்கென்னமோ நானா தாத்தாவும், அன்னம் பாட்டியும் சொல்ற விதத்துலச் சொன்னா அம்மா கேப்பாளுன்னுதான் தோணறது... கூடவே தெளிவை

விட்டும் அம்மாகிட்ட பேசச் சொல்வா என்னப்பா ? கௌதம் எதையும் நிதானமா யோசனை பண்ணிச் செய்வான்கற நம்பிக்கை அம்மாக்கு உண்டே !''

''இதையும் நான் யோசிக்காம இல்ல விக்கி... தஞ்சாவூர் அம்மன் கோவில் உற்சவத்துல வர்ற ஞாயித்துக்கிழமை நம்ப கட்டளை. வருஷா வருஷம் அதுக்குப் போற மாதிரி இந்த வருஷமும் உங்கம்மாவோட சனிக்கிழமை கிளம்பி கார்ல போயிடணும்னு இருக்கேன். அந்த ரெண்டு நாளும் திருச்சிலேந்து கௌதமை தஞ்சாவூருக்கு வரச் சொல்லிட்டா விவரமா பேசிடலாம். கோவில் உற்சவத்துக்காக கௌதம் வந்திருக்கறதா உங்கம்மாவும் நினைச்சுப்பாளே ஒழிய நான் முன்னேற்பாடா பேசி வரவழைச்சிருக்கேன்னு தப்பா எடுத்துக்கமாட்டா...''

விக்ரம் உற்சாகத்துடன் கையைத் தட்டினான்.

''க்ரேட் பிளான்... கண்டிப்பா கௌதம் சொன்னா அம்மா கேப்பா... நீங்க வேணா பாருங்கோ... ஆனா, அதுக்கு முன்னால தாத்தா பாட்டிய விட்டுப் பேச வச்சா, கௌதமுக்கு வேலை சுலபமா இருக்காதா ?''

பேசியவனை யோசனையுடன் ரமணி ஏறிட்டார்.

''அப்படிங்கறயா ? சரி, அதையும் விடுவானேன். கிளம்பு. போற வழில தாத்தாவாத்துக்குப் போயிட்டே போயிடலாம் இப்பவே மணி ஏழு அங்க போயிட்டு நாம வீட்டுக்குப் போறப்போ ஒன்பதுகூட ஆயிடலாம். அதுக்காக என்ன பண்றது. ஏற்கனவே தலைக்கு மேல வெள்ளம் சாண் போயாச்சு, இனிமே முழம் போனா தான் என்ன ? கமான் லெட்ஸ் கோ...''

பேசியவாறு எழுந்தவர், மேஜை அறைகளைப் பூட்டி, ஃப்ரீப் கேஸை எடுத்துக் கொண்டு கிளம்ப, ஏ.ஸி.ஐ நிறுத்தி விட்டு விக்ரமும் அவரைத் தொடர்ந்தான்.

# 19

கதவைத் திறந்த பாரதி கண்கள் விரிய 'அட...!' என்றாள்.

பின்னே ? அந்த மாலை நாலரை மணி அளவில் தம்பதி சமேதராய் அப்பாவும் அம்மாவும் சொல்லாமல் கொள்ளாமல் மொட்டுபோல வந்து நின்றால் ஆச்சரியம் எழாமல் வேறு எப்படி இருக்கும் ?

''என்னம்மா அதிசயம் இது ! மழைதான் கொட்டப் போறது... வாங்கோப்பா... வாம்மா...''

உற்சாகத்துடன் பாரதி வரவேற்றாள்.

''ஏம்மா வரக்கூடாதா ? இன்னிக்கு வெள்ளிக்கிழமை அஷ்டலக்ஷ்மி கோவிலுக்குப் போகணும்னு தோணித்து. கொஞ்சம் முன்னால கிளம்பினா அப்படியே உன்னாத்துக்கும் வந்துட்டு கொஞ்சநாழி இருக்கலாமேன்னு நினைச்சேன். அப்பாவும் சரின்னார் வந்துட்டோம்'' என்று அன்னபூரணியைத் தொடர்ந்து ''அது மட்டும் காரணமில்லை பாரதி. இன்னிக்கு விக்கி ஆத்துக்கு வர்ற நாள் டிபன் தடபுடலா இருக்குமே! அதையும் ஒருகை பார்க்கலாம்னுதான் வந்தோம். நிஜத்த சொல்லணும்னா உங்கம்மா 'பாரதி ஆத்துலதான் சப்பு கொட்டிண்டு சாப்பிடப் போறோமே, இப்ப எதுக்கு ஒரு காபி?'ன்னு மத்தியான டிபன் எனக்குக் கொடுக்கவேயில்லை, தெரியுமா ? வெறும் காபிதான்... ஆமா, மெனு என்ன, தெரிஞ்சுக்கலாமா ?'' என்று வாஞ்சையுடன் நாராயணன் கேலிக் குரலில் பேசி விலக, பாரதி வாய்விட்டுச் சிரித்தாள்.

''வாருங்கள்'' என்று ஆயிரம் தடவைகள் அழைத்தாலும், 'இந்த வேலை இருக்கிறது, அந்த வேலையை

கவனிக்க வேண்டும்' என்று அலுவலக வேலையை இந்த வயதிலும் காரணம் காட்டி வராத அப்பா, இன்று தானே வலிய வந்து, டிபன் சாப்பிட்டுப் போகிறேன் என்று அறிவிப்பது புருவத்தை உயர்த்த வைத்தாலும் அதுபற்றி தீவிரமாய் எண்ணாமல் சந்தோஷத்தோடு தந்தையை நிமிர்ந்து பார்த்தாள்.

"உங்களுக்கு இல்லாத டிபனாப்பா? என்ன வேணும்னு சொல்லுங்கோ... அரைமணில ரெடி பண்ணிடறேன்"

நாராயணன் குறும்புடன் கண்களைச் சிமிட்டினார்.

"எனக்குன்னு ஸ்பெஷலா எதுவும் வாண்டாம். உன் பிள்ளைக்கு என்ன செய்யறதா இருக்கே அதச் சொல்லு..."

"குலாப்ஜாமூனும்—மசால் தோசையும்..."

சோபாவில் உட்கார்ந்த நாராயணன் "அட்றா சக்கை— எதுக்கோ மூக்குல வேர்த்த மாதிரி, சரியான நாள்லதான் வந்திருக்கோம்" என, மீண்டும் பாரதி சிரித்தாள்.

கணவருக்கு அருகில் அமர்ந்த அன்னபூரணி கையில் வைத்திருந்த வாழையிலைப் பொட்டலத்தை மகளிடம் நீட்டினாள்.

"என்னம்மா?" என்று கேட்டவாறு பாரதி பொட்டலத்தைப் பிரித்தாள்.

நெருக்கமாய்க் கட்டப்பட்ட ஜாதிப் பூக்கள், நாலு முழத்துக்குக் குறையாது. கூடவே செண்டாய் கோர்க்கப் பட்ட செண்பகப் பூக்கள்.

"இனம்பறப்போ பூக்காரி வந்தா, உனக்குப் பிடிக்குமேனு வாங்கிட்டு வந்தேன்."

பாரதிக்கு பிடிக்கும்தான். அவளைவிட ஜாதி, செண்பகம் காம்பினேஷன் ரமணிக்கு அதிகமாய்ப் பிடிக்கும். வைத்துக் கொண்டு படுக்கச் செல்லும் நாளெல்லாம் ராக்கூத்துதான்.



பாரதி ஏதோ நினைவுக்கு வந்த சிரிப்பில் அம்மாவைப் பார்த்துக் கேட்டாள்.

"இத்தனைக்கு இத்தனை நெருக்கமா பூக்காரி பூ கட்டிண்டு வரமாட்டாளே! ஸ்பெஷலா சொல்லி வச்சிருந்தா தானே கொண்டு வருவா?"

அன்னபூரணி என்ன பதில் கூறுவது என்று புரியாமல் கணவர் முகத்தை ஏறிட, நாராயணன் அவசரமாய்ப் பேச்சை மாற்றினார்.

"ஏம்மா— டிபன் ரெடியா? இல்லை, விக்கி வந்தப்புறம் தான் எல்லாருக்குமா?"

கவனம் மாறிய பாரதி புன்னகையுடன் இல்லை என்று தலையசைத்தாள்.

"மணி என்ன? நாலரையா? அஞ்சுக்குள்ள ரெடி பண்ணிடறேன். அதுக்கும் முன்னாடி புறப்படணுங்கற அவசரம் எதுவும் இல்லியே?"

"ஒண்ணும் இல்லை... சொல்லப்போனா அஞ்சுக்கெல்லாம் தான் சாப்பிடணும்னு நீ காலை வெந்நீர கொட்டிண்டு பறக்காத. மாப்பிள்ளையும் சீக்கிரம் வந்துடறேன்னு சொல்லியிருக்காரே! வந்ததும் சேர்ந்தே ஒண்ணா சாப்பிடலாம்."

சமையல்கட்டைப் பார்க்க நடந்து கொண்டிருந்த பாரதி நின்றாள், திரும்பினாள்.

"ரமணி சுருக்க வரேன்னு சொன்னாரா? எப்போ? அப்படின்னா நீங்க இங்க வர்றது அவருக்குத் தெரியுமா?"

நாராயணன் கண்களைச் சிமிட்டாமல் பாரதியை ஏறிட்டார். சில நொடிகள் தாமதித்து எந்தப் பதட்டமும் இல்லாமல் பதில் கூறினார்.

"ஆபீஸ் விஷயமா மாப்பிள்ளைகூட பேசவேண்டியிருந்ததுமா. அப்ப, பேச்சோட பேச்சா சாயங்காலம்

ஆத்துக்கு வர்லாம்னு இருக்கோம்னு சொன்னேன் 'எனக்கும் வேலை அதிகமா இல்ல, சீக்கிரம் வந்துடறேன்'னு அவர் சொன்னார்."

பதில் பேசாமல் உள்ளே வந்த பாரதி கையிலிருந்த பூ பொட்டலத்தை ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் பிரித்து வைத்தாள்.

பெத்தோரின் அபூர்வ வரவும், நெருக்கமாய்க் கட்டின பூவும், ரமணியோடு அப்பா பேசினதாகச் சொன்னதும், அவர் சீக்கிரம் வீடு திரும்பப் போகும் செதியும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு மனதில் எங்கோ உதைத்தன.

என்ன விஷயம்?

மேலே யோசிக்க முடியாதபடி அன்னபூரணி "நான் ஏதாவது செய்யட்டுமா?" என்று கேட்டுக்கொண்டே அருகில் வந்து நிற்க, "ஒன்றும் வேண்டாம். எல்லாம் தயார். போட்டு எடுக்க வேண்டியது தான் பாக்கி— நீ அந்த நாற்காலியை கிச்சனுக்கு அடியில போட்டுண்டு உட்காரு..." என்று கூறிவிட்டு செய்ய வேண்டிய வேலைகளை வரிசையாய்க் கவனித்தாள்.

கடையில் விற்கும் மாவை வாங்கி குலோப்ஜாமூன் பண்ணுவது எளிதுதான் என்றாலும், வீட்டிலேயே கோவா காய்ச்சி எடுத்து செய்வதற்கு அலாதி ருசி என்பதால், முன் ஏற்பாடுடன் முதல்நாளில் இரண்டு லிட்டர் பாலைச் சுண்டக் காய்ச்சி கோவா செய்திருந்ததை எடுத்தாள்.

ஒரு கை சலித்த மைதா மாவையும், கால் ஸ்பூன் பேக்கிங் பவுடரையும் கோவாவுடன் சேர்த்து தட்டில் கொட்டி இழுத்துப் பிசைந்து, சிறு உருண்டைகளாகக் கிள்ளி, விரல் விரலாக உருட்டினாள்.

பின்னர் காஸ் அடுப்பு மேல் அலுமினிய வாணலியை வைத்து ரீஃபைண்ட் எண்ணெயை பாதிக்கும் மேல்



ஊற்றினாள். அது காய்ந்த நாழிகையில் ஒரு டம்ளர் சர்க்கரையை வாய் அகன்ற எவர்சில்வர் பாத்திரத்தில் போட்டு, இரண்டு டம்ளர் தண்ணீர் ஊற்றி பெரிய அடுப்பில் ஏற்றினாள். சர்க்கரை கரைந்ததும் மேலே மிதந்த அழுக்கை எடுத்து, துளி குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், ஏலக்காய் பொடியைத் தூவி, தீயை தணித்தாள்.

காய்ந்துவிட்ட எண்ணெயில் எட்டு விரல் உருண்டைகளை போட்டு, சின்னத் தீயில் பொன்னிறமாக வறுத்தாள். ஒத்தாற் போல வெந்து அவை மேலே மிதந்து கொண்டு வந்ததும், வடித்து எடுத்து, முள்கரண்டியால் ஒருதரம் குத்தி சர்க்கரைப் பாகினுள் போட்டாள்.

இருபது நிமிஷங்களில் குலாப்ஜாமூன்கள் தயாராகி அறையை கமகமக்கச் செய்தன.

அடுத்து, மசால் தோசையிடம் பாரதி கவனத்தைச் செலுத்தினாள்.

முதல் நாள் அரைத்து வைத்திருந்த தோசைமாவை எடுத்துத் திட்டமாய் கொஞ்சம் நீர் ஊற்றி வார்க்கும் பதத்தில் கரைத்தாள்.

இவள் சொல்லி புஷ்பா அரைத்து வைத்திருந்த சட்னி கிண்ணங்களை கையில் எடுத்து பக்குவம் சரியாக இருக்கிறதா என்று பார்த்தாள். இருந்தன.

இரண்டுவகை சட்னி, ஒன்று கெட்டியாய் கொத்த மல்லி வைத்து அரைத்த கார சட்னி தோசையில் உள்ளுக்குள் தடவ, மற்றது சாதா சட்னி, தொட்டுக் கொள்ள.

உருளை, வெங்காயம், காரட், பட்டாணி மசாலா போட்ட கறி கிண்ணத்தில் வெண்ணெய்.

எல்லாம் தயார். மேஜையில் உட்கார்ந்ததும் சுட சுட வார்த்துப் போட்டு விடலாம்.

''புஷ்பா— டேபிள்ல விரிப்பு போட்டு தட்டு, தண்ணி எடுத்து வைச்சியா? கூடவே குலாப்ஜாமூன் சாப்பிட இன்னொரு ஸ்பூன்? இந்தா, இந்த சட்னி, மிளகாய்ப் பொடிகூட, வெங்காய சாம்பாரையும் குடுபண்ணி மேஜை மேல் வச்சுடு... எல்லாரும் காபி சாப்பிட புதுசா டிகாஷன் போட்டுடு... அப்புறம்..."

அவள் பேசிக்கொண்டிருக்கையிலேயே வாசல் மணி அடித்தது.

ரமணிதான்.

"வாங்கோ... வந்து ரொம்பநேரம் ஆச்சா? டிபன் சாப்பிட்டேளா?"

கலகலப்பாய் பேசிக்கொண்டு உள்ளே வந்தவருக்கு நாராயணன் பதில் கூறினார்.

"வந்து அரைமணி இருக்கும். டிபன் சாப்பிட என்ன அவசரம்? நீங்க வந்ததும் சேர்ந்து சாப்பிடலாம்னு நாதான் சொன்னேன்.''

"நீங்க உட்காருங்கோ... நான் கையலம்பிண்டு வந்துடறேன்"

ரமணி உள்ளே செல்ல, பாரதி சமையலறைக்கு வந்து இரண்டு அடுப்புகளிலும் இரண்டு தோசை கற்களை ஏற்றினாள்.

ஒரு கல்லில் சூடு ஏறியதும் மாவை கரண்டியில் எடுத்து சுழற்றி ஊற்றி, மெல்லிய வட்டமாகத் தேய்த்தாள். தீயை தணித்து, தோசை ஒரே மாதிரி வெந்த பிறகு, எண்ணெயை தோசையைச் சுற்றிவிட்டாள். ஒரு ஸ்பூன் கெட்டி சட்னியை தோசையில் அரைவட்டமாகத் தடவினாள். கரண்டி மசாலாவை சட்னிமேல் வைத்து லேசாகப் பரத்தினாள். கொட்டைப் பாக்களவு வெண்ணெயை மசாலாவின் மத்தியில் அழுத்தி, வெறுமனே இருந்த தோசையை இவற்றின் மேல் மடித்து மூடினாள். மசாலா வெளியே வராமல் கவனமாய் தோசையை இரண்டு பக்கமும் திருப்பிப்போட்டாள். மொறு மொறுவென்று ஆனதும் எடுத்துப் பரிமாறுவதற்காக புஷ்பாவிடம் கொடுத்து அனுப்பினாள்.



இரண்டு கற்களையும் உபயோகித்து, பரபரவென்று தோசைகளை வார்த்ததில் காத்திருக்காமல் ஒரே சமயத்தில் நாராயணனும், ரமணியும் சாப்பிட முடிந்தது.

குலாப்ஜாமூனையும், தோசையையும் ருசி பார்த்த நாராயணன் ''என்ன இருந்தாலும் உன் பெண் காரியம் காரியம்தான். எவ்வளிக்காவது இத்தனை ருசியா நீ குலாப்ஜாமூன் பண்ணிருக்கியா? வாயில போட்டா கரையறது. இந்த மசால் தோசைக்கு முன்னால பெங்களூர் மாவள்ளி டிபன் ரூம் தோசைகூட எடுபடாது. ஆமா... நா நிச்சயமா சொல்லுவேன்" என்று மகா பெருமையுடன் பாராட்ட, சமையல் கட்டிலிருந்தபடியே அப்பாவை எட்டிப் பார்த்து 'தாங்க்ஸ்' என்கிற மாதிரி பாரதி புன்னகைத்தாள்.

அன்னபூரணி மென்மை சிரிப்புடன் மகள் அருகில் வந்து நின்றாள்.

"விக்கி எப்ப வருவான்? அவனுக்கும் இப்பவே வார்த்து வச்சுடறியா?"

"ஐயோ— ஆறிப்போயிடுமே... வந்தப்புறம் சூடா வார்த்துப் போட்டாப் போச்சு... என்ன அஞ்சு நிமிஷ வேலை... நீ வேணா உட்காரேம்மா..."

அன்னபூரணி வேண்டாம் என்று மறுத்தாள்.

"நீயும் வா சேர்ந்தே சாப்பிடலாம்."

அப்பாவும் ரமணியும் போதும் என்று சொன்ன பிறகு, தனக்கும் அம்மாவுக்கும் ஆளுக்கு ஒன்று வார்த்து எடுத்துக் கொண்ட பாரதி புஷ்பாவைத் தொடர்ந்து தோசை வார்க்கச் சொல்லிவிட்டு சாப்பாட்டு அறைக்கு வந்தாள்.

அம்மாவை அருகில் உட்காரச் சொல்லி தானும் அமர்ந்தாள்.

இனிப்பை ருசித்த அன்னபூரணி "அப்பா சொன்னதுல தப்பு இல்லை... இந்த மாதிரி மருதுவா எனக்குப் பண்ண வரலை... கொஞ்சம் கல்லாயிடறது" என்றாள்.

தண்ணீர் குடித்துத் தொண்டையைச் செருமிக் கொண்ட நாராயணன் "வயிறு முட்டச் சாப்டுட்டேன். ராத்திரி சாப்பாடுகூட வேண்டாம்" என்றவாறு மகளைக் கரிசனத்துடன் ஏறிட்டார்.

"அக்கறையோட எந்தக் காரியத்த செஞ்சாலும் பலன் இல்லாம போகாது. சமையலும் அப்படித்தான். நீ சிரத்தையா செய்யறது எல்லாம் மணக்கறது. ஆனாலும் எத்தனை நாளைக்கு சும்மா வீட்டுக் காரியங்களையே செஞ்சுண்டு இருப்பே! நீயும் மனுஷிதானே! அலுப்பா இருக்காதா? ஒரு ஐடியா சொல்லட்டுமா பாரதி? நேத்து ஜம்ஷெட்பூர்லேந்து கஸ்தூரி போன் பண்ணா. வர்ற ஏழாம் தேதி அந்த ஊர் தமிழ் சங்கத்துல ஒரு மணி நேரம் அவ பாடறாளாம். வாங்களேம்பா—'னு கூப்டா... உங்கம்மா, நீ, நான் எல்லாரும் பத்து நாள் போயிட்டு வரலாமா? உனக்கும் மாறுதலா இருக்கும், கஸ்தூரியும் சந்தோஷப்படுவா... என்ன சொல்றே?"

கஸ்தூரி அவளுக்கு அடுத்தவள். கல்யாணமான நாளிலிருந்து கணவர் நீலகண்டனுடன் ஜம்ஷெட்பூரில் இருக்கிறாள். நீலகண்டன் 'டெல்கோ' தொழிற்சாலையில் டெபுடி ஜெனரல் மானேஜர். உயர்ந்த பதவி, ஏக செல்வாக்கு, அந்தஸ்தான வாழ்க்கை.

ஆதி நாட்களில் உண்டான எந்தித ஆசைக்கும் பங்கம் வராதபடி, நீலகண்டனுக்கும் இசையில் நாட்டம் இருக்க, இன்றைக்கும் பாடுவதை கஸ்தூரியால் விடாமல் வைத்துக் கொண்டிருக்க முடிவது சந்தோஷப்பட வேண்டிய சமாசாரம். வருஷம் ஒருதரமாவது அவர்களது தொழிற்சாலைக் கொண்டாட்டங்களில் கஸ்தூரி கச்சேரி செய்வது இல்லாமல் போகாது.



இந்த முறை தமிழ்ச் சங்கத்தில்...

ஆனால் கஸ்தூரி தொடர்ந்து பாடுவதற்கோ, தமிழ்ச் சங்கத்தில் கச்சேரி பண்ணப் போவதற்கோ தற்சமயம் அப்பா முக்கியத்துவம் கொடுத்துப் பேசவில்லை. தன்னைச் சென்னையிலிருந்து உடனடியாகப் பத்து நாட்களுக்கு வெளியூர் அழைத்துப் போவதற்காகவே முனைகிறார் என்பதைத் துல்லியமாகப் புரிந்துகொள்ள முடிய பாரதியின் மனசுக் கடப்புப் உதறிப் போட்டன.

சாக்கினுள் கட்டிப் போட்டிருந்த பூனையை ஒருவழியாய் அப்பாவின் பேச்சு வெளியே விட்டுவிட, பாரதி சரக்கென்று நிமிர்ந்து கணவனை ஏறிட்டாள்.

ஆக?

இது உங்களின் அடுத்த நடவடிக்கையா? என்று ஆக்ரோஷமாக வினவிய அந்தப் பார்வையின் வேகத்தைத் தாளமுடியாதது போல ரமணி விழிகளைத் தாழ்த்திக் கொண்டார்.

"ஒன்னுமே பேசாம இருந்தா என்னம்மா அர்த்தம்?"

பாரதி நீளமாய் ஒருதரம் மூச்சை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டாள்.

"என்னப்பா சொல்லணுங்கறேள்?"

"ஜம்ஷெட்பூருக்குப் போறதப் பத்திக் கேட்டேனே! டிக்கெட் வாங்க ஏற்பாடு பண்ணிடட்டுமா?"

பாதி தோசையோடு பாரதி தட்டை நகர்த்தினாள். எழுந்து வாஷ்பேஸினிடம் சென்று வாயைக் கொப்பளித்து, கையைக் கழுவிக் கொண்டாள்.

டவலில் கையைத் துடைத்தவாறு சின்னக் குரலில் கேட்டாள்.

"இதுக்கு நா என்ன பதில் சொல்லணும்னு எதிர் பார்க்கறேள்ப்பா? எல்லா விவரமும் தெரிஞ்சதானே

நீங்க இங்க வந்திருக்கேன்! அப்புறம், நா என்ன பதில் சொல்லேன்னும் உங்களால புரிஞ்சிக்க முடியலையா?''

மூக்கில் சரிந்துவிட்ட கண்ணாடியை ஆள்காட்டி விரலால் நாராயணன் மேலே தள்ளிக் கொண்டார்.

''என்ன சொல்றே நீ?''

"கத்தி வைச்ச என் பேசறேன்னு கேக்கறேன்பா... நா கலாக்ஷேத்ரால சேரப் போறதா ரமணி உங்ககிட்ட சொன்னதனாலதானே வராதவர் இவ்விக்கு இங்க வந்திருக்கேள். 'ஏம்மா இந்த முடிவு?'ன்னு பளிச்சுனு கேக்கறத விட்டுட்டு ஜம்ஷெட்பூர் போலாமா, கஸ்தூரி கச்சேரி கேக்கலாமான்னு எதுக்காக குழந்தைகிட்ட பேசற மாதிரி பீடிகை போடணும்?''

வெளிப்படையான அவள் பேச்சை மற்ற மூவருமே எதிர்பார்க்காததால் அரை நிமிஷம் மௌனமாக நகர்ந்தது.

நாராயணன் விழிகளைத் திருப்பி ரமணியை ஏறிட்டார். ரமணி லேசான கோபத்துடன் தாடை இறுக உட்கார்ந்திருப்பது புரிய, மகளை மீண்டும் ஏறிட்டு, கண்கள் இடுங்கக் கேட்டார்.

"ஆல்ரைட்— நேரடியாவே விஷயத்துக்கு வரேன். ஏன் இந்தத் திடீர் முடிவு பாரதி?''

''எந்தத் தீர்மானத்த திடீர் முடிவுனு சொல்றேன்பா?''

நாராயணன் மேஜைமேல் ஒருதரம் தட்டினார்.

''விளையாடாத பாரதி... நான் என்ன கேக்க றேன்னு புரியாத மாதிரி பேசாத...''

''எனக்கு நன்னா புரியறதுபா... ஆனா, நீங்கதான் எதையுமே நினைவுல வச்சுக்காம கேக்கறேளேனு வருத்தமா இருக்கு...''

எதை நான் நினைவுல வச்சுக்கல?''



"கலாக்ஷேத்ரால சேரணும்னு நான் ஆசைப்பட்டது என் பதினைஞ்சாவது வயசுல— ஞாபகம் இல்லையா? வேணா அம்மாவ கேட்டுப்பாருங்கோ..."

''சரிம்மா... அதுக்கும் இப்ப இந்தத் திடீர் முடிவுக்கு நீ வந்திருக்கறதுக்கும் என்ன சம்பந்தம்? வாஸ்தவமா எனக்குப் புரியலையே...''

பாரதி கையிலிருந்த துண்டை 'டவல் ராக்'கில் மாட்டிவிட்டு, இரண்டு கைகளையும் வயிற்றுக்கு மேலாக கட்டிக் கொண்டாள்.

''சுமார் இருபத்தி நாலு வருஷமா ஆசைப்பட்டதை இப்ப நிறைவேத்திக்க நான் முனையறதை 'திடீர் முடிவு'னு நீங்க திரும்பத் திரும்பச் சொல்றதுதான் எனக்கும் புரியலைப்பா...''

பேச்சு விதண்டாவாதமாக மாறுவதை உணர்ந்த பதட்டத்துடன் அன்னபூரணி குறுக்கிட்டாள்.

"என்ன இது பாரதி எட்டிக்குப் போட்டியா பதில் சொல்ற, அப்பா அக்கறையோட கேக்கறது புரியாம?"

அவளை மேலே பேச விடாமல் நாராயணன் கையை முன்னால் நீட்டினார்.

"இரு அன்னம்... பாரதி சொல்றமாதிரி அவ குழந்தை இல்ல... வந்ததும் நான் நேரடியாவே 'ஏம்மா இப்படி தீர்மானம் பண்ணியிருக்கே...'னு கேட்டு இது நடைமுறைக்கு ஒத்துவராதுனு விளக்கியிருக்கணும். செய்யல— அவ கோவம் நியாயமானதுதான்..." பேசியவர், பாரதியை நிமிர்ந்து பார்த்துத் தொடர்ந்தார்.

"ஐம் ஸாரி பாரதி— இப்பச் சொல்லு, 'திடீர்'னு, ஸாரி அகெய்ன், ஏன் கலாக்ஷேத்ரால சேரறதுனு தீர்மானம் பண்ணினே?"

அப்பா தணிந்து கொடுத்து தன் வழிக்கு வருவது சந்தோஷத்தைத் தர, பாரதி புன்னகைத்தாள்.

"பெரிசா காரணம் ஒண்ணும் இல்லப்பா... அதான் சொன்னேனே, எப்பவோ செஞ்சிருக்க வேண்டியது, அப்போ சரிப்பட்டு வரல... இப்போ டைம் கிடைச்சு, எனக்கு எந்த மாதிரி கோர்ஸ்லாம் இருக்கறது தெரிஞ்சுது. சேர விரும்பறேன்... அவ்வளோதான்..."

"பொழுது போகலைன்னா செய்யி. கத்துக்க உபயோகமா எவ்வளவோ காரியங்கள் இருக்கே பாரதி?"

கணவரின் ஆட்சேபணையை மறந்து அன்னபூரணி மீண்டும் குறுக்கிட, பாரதி புடவைத் தலைப்பின் ஓரத்தை திரித்தவாறு தனக்குத்தானே பேசிக்கொள்கிற தொனியில் முணுமுணுத்தாள்.

"இந்த கோர்ஸ் எனக்கு உபயோகமா இருக்கும், நான் நினைக்கறேனே!"

"என்ன உபயோகம்மா? நாலு வருஷம் படிச்சு புதுசா என்ன பண்ணப்போறே? கச்சேரி கொடுக்கப் போறியா, இல்லை, டான்ஸ் கிளாஸ் நடத்த உத்தேசமா?"

உள்ளுக்குள் எரிச்சல் மண்டத் துவங்குவதை இனம் கண்டு கொள்ள முடிய பாரதி பதில் பேசாமல் நின்றாள்.

ரமணி மேல் கோபம் வந்தது.

முதலில் பிள்ளையைத் தூண்டிவிட்டார். இப்போது பெற்றோர்.

நாலு நாட்கள் வகுப்புக்குப் போய்விட்டு வந்து தானே அப்பா அம்மாவிடம் மெதுவாக, பக்குவமாக இது குறித்துத் தெரிவித்தால் போதும் என்று போட்டிருந்த கணக்கு பிசகிவிட்டு சினத்தோடு யாரும் தன் கண்ணோட்டத்திலிருந்து பார்க்காமல் கண்ணைக் கட்டிவிட்ட குதிரைகளாக தம்தம் போக்கிலேயே பேசுவதும், வாதிப்பதும் வருத்தத்தையும் எழுப்ப, அடி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.



"பாரதி எதுவாவது சொல்லி உன் மனசை குழப்பி இருந்தா, அதுக்காக இப்படி ஏடாகூடமான முடிவுக்கு வரணுமா ரமணி? பேசாம அப்பா சொல்ற மாதிரி எங்க கூட துர்காப்பூருக்கு வா... பத்து நாள் ஆத்துத் தொல்லை இல்லாம நிம்மதியா இருந்துட்டு வந்தா, மனசு தெளிஞ்சுடப் போறது."

அன்னபூரணி முடிக்கும் முன்னர் இனியும் பொறுக்க முடியாது என்பதுபோல பாரதி குரலை உயர்த்தினாள்.

"கேட்டார் பேச்சைக் கேட்டு காரியம் பண்ணற நான் இல்லேம்மா... இத்தனை வருஷம் கழிச்சு நான் சொல்லித் தான் உனக்கு இது தெரியணுமா? சத்தியமா என் ஆத்ம திருப்திக்காகத்தான் இந்த கோர்ஸை சேரப்போறேன். இது என் யாரும் புரிஞ்சுக்கமாட்டேங்கறேள்? என்னவோ செய்யக்கூடாதது செய்ய முனைஞ்சுட்ட மாதிரி ஆளாளுக்கு ஏன் இப்படி மெல்லாம் குறுக்குக் கேள்வி கேக்கறேள்? நான் என்ன வீட்டை விட்டுட்டு வருஷக் கணக்குல எங்கயாவது கண்காணாத இடத்துக்குப் போயிடறேன்னு சொல்றேனா, இல்லை, என் பொறுப்புகளைக் கவனிக்காம ஊர் சுத்தத் தீர்மானம் பண்ணியிருக்கேனா? எதுக்கால ஒருத்தர்விடாம 'ஐயோ— இது வேண்டாம்'னு பதர்றேள்? நிஜம்மா எனக்குப் புரியலை, ஐம் ஆல்ஸோ டிஸ்கஸ்டட் அண்ட் ஹர்ட்..."

பாரதி வேகத்தோடு பேசத் துவங்கியதுமே என்னவோ ஏதோ என்கிற ஆர்வத்தில் புஷ்பா சமையல் அறையிலிருந்து எட்டிப் பார்க்க, நாற்காலியை பின்னுக்குத் தள்ளிவிட்டு ரமணி எழுந்தார்.

"எதுவானாலும் ரூமுக்குப்போய்ப் பேசிக்கலாமே அனாவசியமா ஆளுங்களுக்கு எதிர்ல..."

சொல்ல வந்ததை முடிக்காமல், கடைசி வார்த்தைகளை கிசுகிசுப்பாக பேசிய ரமணி, திரும்பிக் கூடத்தைப்

பார்க்க நடந்தார். மற்றவர்கள் கைகளைக் கழுவிக் கொண்டு அவரைத் தொடர்ந்தார்கள்.

சோபாவில் அமர்ந்த நாராயணன் "இப்படி உட்காரும்மா" என்று பக்கத்தில் சுட்டிக்காட்டி, பாரதியை அருகில் உட்கார வைத்துக்கொண்டார்.

"நிதானமா உணர்ச்சிவசப்படாம நாங்க சொல்றதை கேக்கறியா பாரதி? பொறுப்பில்லாம நீ ஒரு நாள்கூட நடந்துண்டது கிடையாது. இனியும் நடந்துக்க மாட்டே. அது உங்கம்மாக்கு, எனக்கு, ஏன், மாப்பிள்ளைக்கும் நன்னாவே தெரியும். அதனால அந்தக் கேள்விக்கெல்லாம் இங்க இடமே இல்லை. ஆனாலும்மா... வந்து... உனக்கு வயசு இப்ப என்ன? நாப்பது. இத்தனை வயசுக்குமேல குழந்தையாட்டம் நீ டான்ஸ் கத்துப்பேன்னு அடம் பண்றது நியாயமா? நாங்க என்ன சொல்ல வரோம்னா..."

"வயசுக்கும் டான்ஸ் தியரி கத்துக்கறதுக்கும் என்னப்பா சம்பந்தம்? இல்லை, இதுல என்ன குத்தத்த கண்டுட்டேள்? என்னமோ கொலை பண்ண முனைஞ்சுட்ட மாதிரி எதுக்காக எல்லாரும் விழுந்தடிச்சுண்டு என்னை தடுக்கறேள்?"

"அசட்டு பிசட்டுனு முடிவு எடுத்தா அக்கறை உள்ளவா வாய மூடிண்டு பாத்துண்டு இருக்கமுடியுமா பாரதி? இன்னும் நாலு வருஷம்போனா உனக்கு மாட்டுப் பொண் வந்துடுவா... அந்தச் சமயத்துல நீ டான்ஸ் கத்துண்டு இருந்தா, அது தியரியோ இல்ல ப்ராக்டிகலோ— எதுவானாலும், ஊர் உலகம் என்னம்மா சொல்லும்? உன்னை யாராவது அனாவசியமா எதுவும் பேசிவிடுவாளோங்கற ஆதங்கத்துல தான் மாப்பிள்ளையும் நாங்களும் தடுக்கறது புத்திசாலியான உனக்குக் கூடவா புரியல?"

பாரதி ஒரு காலை மடித்து வைத்து, அப்பாவைப் பார்க்கத் திரும்பி உட்கார்ந்துகொண்டாள்.



"மத்தவா தப்பா பேசற மாதிரி நான் என்னப்பா பண்ணப் போறேன்? இப்ப கஸ்தூரி ஆயிரம் பேர் முன்னால பாடப் போறா... ரொம்ப வருஷமா பாடிண்டு தான் இருக்கா. அதை இதுவரைக்கும் யாராவது கேவலமாவோ, அசிங்கமாவோ பேசியிருக்காளா? இல்லையே?"

"அவ பாடறா பாரதி. அதுவும் இதுவும் ஒண்ணா?"

"பாட்டும் ஒரு கலைதான், டான்ஸும் அதே ஆர்ட் தான். இதுல என்ன வித்தியாசம் இருக்கு!"

நாராயணன் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டார். உடனடியாய் பாரதியின் கேள்விக்குப் பதில் கூறாமல் மௌனித்தார்.

"சொல்லுங்கோப்பா... எக்கச்சக்க ஆம்பளை இருக்கற கூட்டத்துல ஒருத்தி எத்தனை வயசானாலும் பாடலாம், மேடை ஏறி கச்சேரிகூடப் பண்ணலாம். ஆனா, தனக்குத்தானே ஆத்ம திருப்திக்காக ஒருத்தி ஆட மட்டும் கூடாதா? பாடறவாளோட வித்வத்தை முன் வரிசைல உக்காந்துண்டு பாராட்டுவேள். ஆனா, டான்ஸ் தியரி படிக்கத் தீர்மானம் பண்ணாகூட நாலு பேர் சிரிப்பானு சொல்லி முளையிலே கிள்ளிடுவேள். அப்படித்தானே? இது என்னப்பா நியாயம்?"

நாராயணன் கண்ணாடியை மீண்டும் மாட்டிக் கொண்டு 'ப்ச்' என்று வருத்தத்துடன் சூள் கொட்டினார். அப்புறம் "நீ எதுக்கும் எதுக்கும் முடிச்சுப் போடறே பாரதி?" என்றார், அதே வருத்தம் குரலில் அப்பட்டமாய் விரவ...

"ஸாரிப்பா— என் பேச்சு உங்களப் புண்படுத்தினா, ஐம் ட்ருலி ஸாரி... ஆனா, நீங்க எல்லாருமே என்னை சரியா புரிஞ்சுக்கவேமாட்டேன்னு பிடிவாதம் பண்ற மாதிரிதான் எனக்குத் தோணறது. நிறைய பேர் பாடறா, அதனாலேயே அதுக்கு நம்ப ஜனங்க நடுவுல அங்கீகாரம் கிடைச்சுடுத்து. ஆனா, டான்ஸ் ஆடறவாளோ, என்னை மாதிரி மனசு சந்தோஷத்துக்காக ஒரு வயசுக்குமேல

கத்துக்க விரும்பறவாளோ விரல்விட்டு எண்ணற அளவு கூட இல்லேங்கறதாலயே, அத செய்ய முனையறப்போ கிரீடங்கிடலா வராது. மத்த சாதாரண மனுஷா புரிஞ்சிக் கலைனா சரி, ஆனா, நீங்கள்ளாம்கூட.... நீங்கள்ளாம் கூட...."

மேலே பேசமுடியாததுபோல குரல் செம்மி, கண்களில் நீர்ப் பூக்கள் ஜனிக்க, பாரதி தலையைக் குனிந்து கொண்டாள். எச்சில் கூட்டி விழுங்கித் தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொள்ள முயற்சித்தாள்.

நாராயணன் எதிர் நாற்காலியில் ஒரு வார்த்தை பேசாமல் உட்கார்ந்திருந்த ரமணியை ஏறிட்டார்.

அவர் தோளை உயர்த்தி, 'அவ்வளவுதான் — இனிச் செய்வதற்கோ, சொல்வதற்கோ எதும் இல்லை' என்கிற தினுசில் விரல்களை விரிக்க, சில நிமிஷங்களுக்கு எதுவுமே பேசாமல் இருந்துவிட்டு, நாராயணன் எழுந்தார்.

"ஆல்ரைட்— உன் முடிவு இதுதான்னா மேலே பேசவோ, விவாதிக்கவோ என்ன இருக்கு? அப்ப நாங்க புறப்படறோம். மாப்பிள்ளை வருத்தப்பட்டது தாங்காம உன்கூட பேச நாங்க வந்தோம். எங்களுக்குத் தெரிஞ்சதச் சொல்லிட்டோம். இனிமே உன் இஷ்டம். நீ கொழந்தை இல்ல, எது சரி, நியாயம்னு தோணுதோ அதச் செய்... வா அன்னம், நாம கிளம்பலாம்..."

எழுந்து நின்ற அன்னபூரணி மகளை நெருங்கிவந்து அவள் தோளில் தட்டிக்கொடுத்தாள்.

"அப்பா சொல்ற மாதிரி நீ புத்திசாலி. தனியா உக்காந்துண்டு யோசனை பண்ணா நல்லது கெட்டது உனக்கே புரியும். உங்க புக்காத்துக் கோவில் உற்சவத்துக் காக நாளைக்கு தஞ்சாவூருக்குப் போப்போறதா மாப்பிள்ளை சொன்னார். அதான் இன்னிக்கே உன்கிட்ட பேசிடலாம்னு வந்தோம். ரெண்டு நாள் தஞ்சாவூருக்குப் போறது நல்லதுதான். உன் மனசுக்கும் மாறுதலா

2-6735
புதூ75



இருக்கும். போய் [illegible] யோசனை பண்ணிப் பார்த்ததுல [illegible] முடிவ மாத்திக்கறதுதான் சரின்னு தோணித்து'—னு நீ சொன்னா, நாங்க சந்தோஷப்படுவோம். உன் மாமியாருக்கும் வயசாச்சு. வயசான காலத்துல எல்லாரும் நிம்மதியா இருக்கணுங்க றதையும், அடுத்தவங்களோட நிம்மதிக்கு நாம பங்கம் விளைவிக்க கூடாதுங்கறதையும் நினைச்சுப்பாரு. அப்புறம் உனக்கே நாங்க சொல்றது சரின்னுபடும்... அப்ப, நாங்க கிளம்பறோம்."

பாரதி புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். சற்றுமுன் தோன்றிய தெளிச்சி குறைந் திருக்க "நான் தஞ்சாவூருக்குப் போப்போறதில்லே" என்றாள் தெளிவாக.

கதவருகில் சென்றுவிட்ட நாராயணன் சட்டென்று திமிர்ந்தார்.

"என்னது?" என்றார் ரமணி உரக்க.

"ஆமா— நான் உங்களோட நாளைக்கு ஊருக்கு வரப் போறதில்ல..."

"இது என்ன புது கூத்து?"

"எனக்கு தூரத்துக்கு நாள். அங்க வந்து ஓரமா உக்காரதவிட இங்கேயே இருக்கறது தேவலைதானே?"

"தூரத்துக்கு நாளைா நீ முன் ஏற்பாடா மாத்திரை சாப்பிட்டு, மென்ஸஸ தள்ளிப்போக வச்சுடுவியே..."

"இந்தத் தரம் மறந்து போச்சு..."

இது நாழிகை அடக்கி வைத்திருந்த கோபம் பட்டென்று வெடிக்க, ரமணி கத்தினார்.

"மறந்து போச்சா— இல்ல, இந்தக் குடும்பத்தோட உறவே வாண்டாம்னு வேணும்னு செஞ்சிருக்கியா? கல்யாணமான இத்தனை வருஷத்துல ஒருதரம் கூட நாம

உற்சவத்துக்குப் போகாம இருந்ததில்ல... பம்பாய்ல இருந்தப்பவும் திட்டம் போட்டு வந்திருக்கோம். ஞாபகம் இருக்கா? அம்மா கேட்டா நான் என்ன பதில் சொல்றது? வரவர உன் அடக்கத்துக்கும், கோண்டமாவா பிடிவாதத்துக்கும் அளவே இல்லாமப் போயிடுத்து...''

எதிரில் மாமனார், மாமியார் நிற்பதையும் மறந்து ரமணி கடுமையாய் வார்த்தைகளைக் கொட்டிய நிமிஷத்தில், பூட்டாமல் இருந்த வாசல் கதவைத் திறந்து கொண்டு 'ஹாய் எவ்ரிபடி' என்று உற்சாகமாய்க் குரல் கொடுத்தவாறு விக்ரம் உள்ளே நுழைந்தான்.

அழுத கண்ணுடன் அம்மா, கோபத்தில் சிவந்த முகத்துடன் அப்பா, செய்வதறியாமல் நின்றிருந்த தாத்தா பாட்டியைப் பார்த்து, 'என்ன நடக்குது இங்கே' என்கிற குழப்பத்துடன் விக்ரம் நிற்க, அங்கிருந்தவர்களின் சங்கடத்தை நீடிக்க விரும்பாத பாரதி "எனக்குத் தலை வலிக்கிறது— நான் உள்ள போய்ப் படுத்துக்கப் போறேன்" என்று பொதுவாகக் கூறிவிட்டு, அவசரமாய் எழுந்து தன் அறைக்குள் வேகமாய்ச் சென்று மறைந்தாள்.

## 20

தாழப் பறந்த விமானத்தின் இரைச்சலில் உறக்கம் கலைந்து போனது.

இரண்டு தரம் புரண்டு படுத்து உறக்கத்தைத் தொடர முயற்சித்தும் பலன் இல்லாது போக, பாரதி கண்களைத் திறந்து, மெள்ள எழுந்து உட்கார்ந்தாள்.

பக்கத்துப் படுக்கையின் வெறுமை, கணவர் தனித்து தஞ்சாவூருக்குப் போயிருப்பதை ஞாபக மூட்டியது.



ரமணிக்குக் கோபம்.

கடைசி நிமிஷம் வரை மனதை மாற்றிக் கொள்வாளோ என்கிற குட்டி நப்பாசையுடன் காத்திருந்தது பொய்த்துப் போக, தான் மட்டும் ஊருக்குப் போக வேண்டி வந்ததில் எக்கச்சக்க கோபம்.

'ரொம்ப வேகமாகப் போகாதீர்கள்; ட்ரைவரைப் பின் சீட்டில் உட்காரச் சொல்லிவிட்டு நீங்களே ஓட்டிக் கொண்டு போக வேண்டாம். மிளகாய்ப்பொடி தடவின இட்லி வைத்திருக்கிறேன். விழுப்புரம் தாண்டியதும் எங்காவது நிறுத்தி சாப்பிடுங்கள். வெறும் வயிறோடு காரில் போவது உங்களுக்கு ஒத்துக்கொள்ளாது'— என்று எதுவுமே நடக்காத இயல்பில் வழக்கமான அக்கறையுடன் கூடவே நடந்து வந்து காரில் ரமணி ஏறும்வரை இவள் சொன்ன எல்லாவற்றுக்கும் 'ம்' என்கிற தலை அசைப்பு கூட இல்லை. அத்தனை கோபம்.

உன்னால்தான் வீம்பாக இருக்க முடியுமா? என்னாலும் முடியும்— என்று உணர்த்துகிற பாவனையுடன் ஒற்றை வார்த்தை கூட 'போய் வருகிறேன்' என்று சொல்லாமல் ரமணி புறப்பட்டுப் போனது நினைக்கையில் வருத்தமாகவே இருந்தது.

ரமணி நினைக்கிற மாதிரி வெறும் வீம்புக்காகவா வரவில்லை என்று சொல்கிறேன்? இல்லையே! இத்தனை வருஷங்களாக ஒருதரம் கூட தப்பாமல் கோயில் உற்சவத்துக்குப் போய் வந்த மாதிரி இந்த முறையும் சென்றிருக்கலாம் தான். ஆனால் திங்கள் கிழமை ஒன்றாம் தேதி அன்றிலிருந்து வகுப்புகளுக்கு வருகிறேன் என்று பள்ளி நிர்வாகியிடம் கூறி விட்ட பிறகு, முதல் நாளே மட்டம் போடுவது சரியான காரியமாகப் படவில்லையே! இது தானே தஞ்சாவூருக்குப் போக முடியாததற்கு முக்கிய காரணம்! அதைப் புரிந்து கொள்ளாமல் வீம்பு, அடம், வேண்டுமென்றே செய்கிறாய் என்று சின்னக் குழந்தை போல குற்றம் சாட்டுவது எதற்காக?

இது தவிர, 'வீட்டு விலக்கு' வரும் சமயம் என்பதும் நிஜம்தான்; சொல்லப் போனால் ரமணி புறப்பட்டுச் சென்று அரைமணிக்கெல்லாம் 'மென்ஸஸ்' வந்தது தானே நடந்தது.

சரி— முக்கியமான விசேஷம் என்றால் ரமணி சொல்வது போல மாத்திரை போட்டுக் கொண்டு 'டேட்டை' தள்ளிப் போகச் செய்தது உண்டுதான். இந்த முறையும் ஒரு வாரம் முன்பே திட்டமிட்டு மாத்திரைகளை சாப்பிட ஆரம்பித்திருக்க வேண்டும். ஏனோ, மறந்து விட்டது. கலாக்ஷேத்ராவுக்குச் சென்று வந்ததும் சின்ன வயது ஆசையை நல்லவிதமாய் நிறைவேற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் வந்து விட்டது என்கிற நினைப்புக்கள் மனசை, புத்தியை முழுமையாய் ஆக்ரமித்துக் கொண்டு விட்டதில் 'உற்சவம் வருகிறது. ஊருக்குப் போக வேண்டும்' என்பது சுத்தமாய் ஞாபகத்தில் பட்டுப் பார்க்கவே இல்லை. நினைவு வந்த போது— காலம் தாண்டி விட்டது. அப்புறம் மாத்திரை போட்டுக் கொள்வதும் ஒன்றுதான். சும்மா இருப்பதும் ஒன்று தான். மணி அடித்துக் கூப்பிட்ட மாதிரி இருபத்தி எட்டாம் நாள் 'டேட்டு' வந்துவிடும் என்பதால் எதுவும் செய்யாமல் இருந்தது ரமணிக்குத் தப்பாகப் போய் விட்டது. "என் மேல் இருக்கும் கோபத்தை இப்படி வெளிக்காட்டுகிறாய்" என்று சொல்லக் கூட சொல்லி விட்டார்.

நிதானமாய் விவரங்களை எடுத்துச் சொல்லலாம் என்றால், எதையும் நம்ப மாட்டேன். உன் கோணத்திலிருந்து பார்க்க மாட்டேன் என்று முரண்டு பிடிப்பவரிடம் எதைச் சொல்லிப் புரிய வைப்பது?

யோசனையில் புருவங்கள் முடிச்சுப் போட்டுக் கொள்ள, பாரதி மெதுவாக எழுந்து, போர்வையை மடித்துத் தலைகாணிக்குக் கீழ்வைத்துவிட்டு, குளியலறைக்குச் சென்றாள்.

பல் விளக்கி, வாய் கொப்பளித்து, நாலு கை குளிர்ந்த நீரைக் கண்கள் மேல் வாரி அடித்துக் கொண்



டாள். முகத்தைத் துடைக்காமல் வெளியில் வந்து கூடத்தைக் கடந்து, கதவைத் திறந்து கொண்டு பால்கனியில் வந்து நின்றாள்.

இன்னும் விடியவில்லை.

சாம்பல் நிற இருட்டு மெதுவாய்க் கரைந்து கொண்டிருந்தது.

கீழ்வானத்தில் ஒற்றை நட்சத்திரம் ஒன்று பளிச்சென்று ஜொலித்தது.

கைப்பிடிச் சுவர்மேல் முழங்கைகளை ஊன்றிக் கொண்டு தெருவையும், விரிந்து கிடக்க மணற்பரப்பையும், தொலைவில் தெரிந்த கடலையும் வெறித்தாள்.

கட்டை, குட்டையான ஆண் ஒருவர் அரைக்கால் நிஜாரும், பனியனும் அணிந்து வேக வேகமாக நடந்தார். நடக்கும் வேகத்தில் இரண்டு கைகளும் கொளகொளவென்று பக்கவாட்டில் ஆடியது பார்க்க வேடிக்கையாய் இருந்தது.

நாயைப் பிடித்தபடி ஒரு வாலிபன்.

சல்வார் கமீஸில் ஏதோ உரக்கப் பேசியவாறு இரண்டு சின்னப் பெண்கள். கீச்சுக் குரலில் அவர்கள் பேசியது அமைதியைக் கிழித்துக் கொண்டு காதில் விழுந்தது

மணலின் ஓரத்தில் குனிந்து நிமிர்ந்து தேகப்பயிற்சி செய்த ஆடவர்.

இங்கும் அங்குமாக நின்ற வண்டிகள்.

சற்றே தலையைத் திருப்பிப் பார்த்தபோது மணலின் நடுவில் இருந்த 'ஆர்ச்'சும் தூரத்தில் வேளாங்கண்ணி மாதா கோவிலின் கோபுரத்துச் சிவப்பு விளக்கினாலான க்ராஸும் பார்வையில் பட்டன. கடலில் மூழ்கப் பார்த்த வெள்ளைக்காரப் பெண்மணியை ஒரு டச்சு சிப்பாய் காப்பாற்றியதை பாராட்டும் வகையில் அந்த 'ஆர்ச்'

கட்டப்பட்டது என்று எப்போதோ படித்தது சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் நினைவில் மின்னியது.

பாரதி அண்ணாந்து இரண்டுதரம் மூச்சை நீளமாய் இழுத்து வெளியிட்டாள்

விடியாத காலை வேளையில் தென்றல் உடம்புக்கு சுகமாக இருந்தது.

வெறுமனே நின்று கொண்டிருக்காமல் காலை வீசிப் போட்டு நடந்துவிட்டு வந்தால் என்ன என்று தோன்ற, நினைத்ததை உடனே செயலில் காட்டும் உத்தேசத்தோடு உள்ளே வந்தாள்.

இரவு உடையைக் களைந்து விட்டு, புடவையை உடுத்திக் கொண்டாள்.

புஷ்பாவை எழுப்ப மனமில்லாமல் வீட்டுச் சாவியைக் கையில் எடுத்துக் கொண்டு, வாசக்கதவை இழுத்துச் சாத்தின பின், வெளியில் வந்தாள்.

சாலையைக் கடந்து மணலில் நடந்தாள்.

நாலடி வைத்தவள் நின்று, செருப்புகளை அவிழ்த்து கையில் தூக்கிக் கொண்டாள்.

சில்லென்ற மணலில் பாதங்கள் புதையப் புதைய நடந்த போது உற்சாகம் பிறந்தது.

சாதாரணத் தரையில் நடப்பதை விட, மணலில் நடப்பது இரண்டு பங்கு நீளம் நடப்பதற்கு சமம் என்பதோடு, அப்பாதங்களை மணல் வருடிக்கொடுக்கும் இதமே அலாதியானது என்பதால் சமயம் கிடைக்கும் போதெல்லாம் இப்படி வெற்றுக் கால்களோடு நடப்பதற்கு அவள் தவறியதே இல்லை.

அலைகள் அடித்து ஓயும் மேட்டை நெருங்கியபோது லேசாக மூச்சு வாங்கியது.



சரிவில் இறங்கி ஈரமணலில், அலைகள் காலில் மோத நடந்தாள்.

இப்படி நடப்பது அவளுக்கு எத்தனைக்கெத்தனை பிடிக்குமோ, அத்தனைக்கத்தனை ரமணிக்குப் பிடிக்காது.

'பாண்ட் ஓரம் நனைந்துபோய், மணல் ஒட்டிக் கொண்டு, அந்தச் சொரசொரப்பு காலை அறுக்க அப்படியாவது 'வாக்' போக வேண்டுமோ? நான் வரவில்லை. நீ வேணுமானால் போய் வா' என்று மறுத்துவிடுவார்.

இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை நடந்து, திரும்பி புறப்பட்ட இடத்துக்கு வந்தபோது கடலின் தொடு வான எல்லை சூரியன் உதயமாகப் போவதற்கு அறிகுறியாக சிகப்பு நிறத்தைப் பூசிக்கொள்ளத் துவங்கியது.

மேட்டில் ஏறி, ஈரம் இல்லாத இடத்தில் செருப்புகளை போட்டு விட்டு, அருகிலேயே அமர்ந்து, கண் எதிரே வர்ண ஜாலம் காட்டிய ஆகாயத்தைப் பாரதி கவனித்தாள்.

மேகம் இல்லாமல் இருந்ததில் சூரியோதயத்தைத் துல்லியமாய்க் காண முடிந்தது.

முதலில் மஞ்சள் நிறத்தில் ஒரு பொட்டு, அது மெல்ல மெல்ல அரைவட்டமாகி மேலே உயர உயர, செம்பருத்தி நிறத்தில் பந்து ஒன்று தலை தூக்கியது. பார்த்துக் கொண்டே இருக்கையில் கடலின் விளிம்பை விட்டு உயரத்தில் ஏறிய சூரியன் இளஞ்சிவப்பு நிறத்திலிருந்து துளித் துளியாய், பொன்னிறமாய், பிறகு மஞ்சளாய் மாற, அந்தக் காட்சியின் அழகு உடம்பையும், மனதையும் சிலிர்க்க வைத்தது.

இப்படி ஒரு தெய்வீக அழகுடன் கைக்கெட்டின தூரத்தில் இருக்கும்போது, பல சென்னைவாசிகள் இதை வாழ்நாளில் ஒரு தரம் கூட அனுபவிக்காமல் உறங்கியே பொழுதைக் கழிக்கிறார்களே என்று தோன்றியது. கூடவே, 'சூரிய உதயம் பார்க்க கன்யாகுமரிக்குப்

போனேன், இமயமலையில் ரசித்தேன்' என்று பெருமைப் பட்டுக் கொள்ளும் நபர்கள், மரீனா, அல்லது எலியட் கடற்கரைக்கு விடிகாலை வேளையில் வந்து சூரியோதயத்தை ரசிக்க முனைவார்களோ என்கிற சந்தேகமும் எழுந்தது.

அழகை ரசிக்க ரஸனை மட்டும் இருந்தால் போகாது, மனசும் வேண்டும். அது இல்லாவிட்டால் எல்லாம் தாறுமாறு தான். அதுவும் தானும் ரசிக்காமல் அடுத்தவர்களையும் ரசித்து அனுபவிக்க விடாமல் ஹிம்ஸிப்பவர்களாகச் சுற்றி இருப்பவர்கள் அமைந்துவிட்டால் ரசனையுள்ளவர் பாடு சரியான திண்டாட்டமாகிவிடும்.

ஒரு விதத்தில் பார்த்தால் ரமணி, விக்ரம், என் அப்பா அம்மா கூட இந்தக் கூட்டத்தில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் தானோ? பின்னே? நான் ரசித்துச் செய்ய விரும்புவதைத் தடுக்க வரிந்து கட்டிக்கொண்டு எல்லோரும் முனைவதை வேறு எப்படி எடுத்துக் கொள்வது? அப்பா அம்மாவாவது முந்தின தலைமுறையைச் சார்ந்தவர்கள் என்பதால் அவர்களின் தயக்கத்தை, கவலையை, வெறுப்பைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் ரமணி? முக்கியமாய் ஐ.ஐ.டி யில் படித்து, மகா புத்திசாலித்தனம், நாகரிகத்தோடு வளையவரும் விக்ரம்?

கல்யாணமான நாள் தொட்டு ரமணி செய்ய விரும்பிய எந்தக் காரியத்துக்கும் பொதுவாக நான் முட்டுக்கட்டை போடாமல் இருந்து வந்ததை பாரதி இப்போது வரிசையாய் எண்ணிப் பார்த்தாள்.

—'பம்பாய் வேலையை விட்டு விட்டு சென்னைக்குப் போகலாமா?' போகலாம், அடுத்தவரிடம் கைகட்டி உத்தியோகம் பார்க்காமல் சொந்தமாய்த் தொழில் செய்யட்டுமா? செய்யுங்கள். ஜிம்கானா, போன்ற கிளப்புகளில் அங்கத்தினராய்ச் சேருவது புது நண்பர்களை அறிமுகப் படுத்துவதோடு, தொழில் வளர்ச்சிக்கு உதவுமே?... அதற்கென்ன சேர்ந்து விட்டால் போயிற்று.



அனாவசியமாய் உறவுக்காரர்கள் வீட்டில் கூட்டம் போட்டு வம்பு பேச இடம் கொடுக்காதே! உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் வேண்டாம்! கல்யாணமோ, கோவிலோ எங்கே போனாலும் பாண்ட் போடுவது தான் வசதியாய் இருக்கிறது, வேஷ்டி கட்டு என்று தொந்தரவு செய்யாதே! சரி— கேட்பதில்லை.

சின்னதும் பெரிசுமாய் எத்தனை விருப்பங்கள், தீர்மானங்கள்! எதற்காவது அனாவசியமாய் ஆட்சேபித்ததுண்டா? இல்லை, தனக்கு வாய் இருக்கிறது என்கிற அசட்டுத்தனத்தில் மொட்டையாய் வாதம் பண்ணியது தான் உண்டா? நிதானம் இல்லை, சொல்வதைக் காதில் வாங்கிக் கொண்டு, தெரிந்த விதத்தில் ஆலோசனை, அல்லது தன் அபிப்ராயத்தைச் சொல்லுவாளே தவிர, 'எதற்கு ரமணி?' என்று ஒரு கேள்வி? இல்லவே இல்லை.

கணவர் விஷயத்தில்தான் இப்படி என்று இல்லை— பிள்ளைகளை வளர்க்கும்போது கூட இதே 'உங்களுக்குத் தெரியாதா?' என்கிற நம்பிக்கையின் அடிப்படையில்தான், நல்லது கெட்டதை ஆராய்ந்து யோசனை பண்ணியிருக்கிறது, அவர்கள் தன் முடிவில் உறுதியாய் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்துவிட்டால் எதிலும் தனக்கும் உரிமை உண்டு என்கிற தோரணையில் பாரதி மூக்கை நுழைத்தது கிடையாது.

'பைக்' வேண்டும், பி.ஏ. படிக்க விருப்பம் இல்லை, கிடார் கற்க வேண்டும், டென்னிஸ் பயிற்சி எடுக்க வேண்டும், மலையேறும் காம்புக்குச் செல்ல வேண்டும்— என்று இரண்டு பிள்ளைகளும் எதெதற்கோ ஆசைப்பட்ட போதெல்லாம் குறுக்கே புகுந்து, ஒரு தரமாவது 'வேண்டாம்' என்று தடுத்திருக்கிறேனா? இல்லை, இல்லவே இல்லை. அவர்களின் கண்ணோட்டத்தை, அதில் உள்ள நியாயத்தைப் புரிந்து கொள்ள முயற்சித்ததோடு, அவற்றை ரமணியும் ஏற்றுக் கொள்ளப் பெருமளவுக்குப் பாடுபட்டதுதானே நிஜம்?

அத்தனையும் மறந்துவிட்டு, இன்று முதல் முறையாய் என் அபிலாஷை ஒன்றை நிறைவேற்றிக் கொள்ள முனையும் போது, கூட்டணி சேர்ந்து கொண்டு எல்லாரும் 'வேண்டாம்' என்று கையைப் பிடித்து இழுப்பது எதற்காக ?

புரியவில்லை—

யோசித்த வரையில் ஏன், என்னாயிற்று, என்ன தவறு கண்டுபிடித்து விட்டார்கள் என்பதெல்லாம் சுத்தமாய்ப் புரியவில்லைதான்.

மனதின் குழப்பம் கண்களை லேசாகக் கலங்க வைக்க, இரண்டுதரம் இமைகளைச் சிமிட்டிப் பாரதி தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

எதுவுமே பேசாமல் ஊருக்குப் புறப்பட்டவரின் கோபம் திரும்புவதற்குள் குறைந்திருக்குமா ? இல்லை, அங்கு அம்மாவுடன் பேசுவதில் ஏறிவிட்ட தீயாக இன்னும் அதிகமாகி விடுமா ? நாட்கள் மாதங்களாக மாறியும் கோபம் தணியாமலே இருந்தால் என்ன செய்வது ?

என்றாவது என் நிலையை இவர்கள் புரிந்து கொள்வார்களா ? அப்படி என்றால், என்று ?

ஒரு வேளை புரிந்து கொள்ளாமலேயே இருந்து விட்டால், சினம் அடங்காமலேயே வாழ்க்கை தொடர முற்பட்டால் ?

சட்டென்று பாரதிக்கு உடம்பு உதறியது—

கலாக்ஷேத்ராவில் சேரும் எண்ணத்தை வேண்டுமானால் கைவிட்டு விடலாமா ? குடும்பத்துக்காக இதைச் செய்கிறேன் என்கிற தியாக உணர்வில் மனதை கண்டித்து...

சிந்தனையைத் தொடரவிடாமல் புத்தி அடிக்குரலில் 'எதற்காக ?' என்று அதட்டி எண்ண ஓட்டத்தை நிறுத்தியது.

என்ன அப்படி ஆகாத, தகாத காரியத்தைச் செய்ய முனைந்து விட்டாய், இப்படிக் குழம்ப ? என்று அழுத்தமாய் எதிர்க் கேள்வி கேட்டது



கலாக்ஷேத்ராவில் சேர முனைந்ததில் கணவன், மக்கள் பேரில் பாசம் குறைந்து விட்டதா ? இல்லை.

வீட்டை, குடும்பத்தை, கவனிக்காமல் பொறுப்பை உதறத் தீர்மானித்து விட்டாயா ? ஐயோ— இல்லை.

பந்தபாசம் போதும் என்கிற சலிப்பு உண்டாகியிருக்கிறதா ?— சே— என்ன அபத்தமான கேள்வி ?

அப்புறம் ?

எதற்காக இந்தக் குழப்பம், தவிப்பு, குற்ற உணர்வு, எட்ஸட்ரா, எட்ஸட்ரா ?

வேதாந்தி ஜே. கிருஷ்ணமூர்த்தி ஒருதரம் 'ஆத்மார்த்தமாகச் செய்ய விரும்பும் காரியத்தைச் செய்ய முனைவது— பசிக்குச் சாப்பிடுவது போல, உறக்கம் வந்தால் தூங்குவது போல— ஒரு இயல்பான காரியமே ; தூண்டுதல் நிஜம் என்றால், செயலும் நிஜம்'— என்று கூறிய வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்து அலைபாய்ந்த மனதை சமாதானம் செய்ய முனைய, உட்கார்ந்தது போதும் என்கிற தீர்மானத்தோடு பாரதி எழுந்தாள்.

அரை நிமிஷம் அப்படியே நின்று ஓரளவுக்கு நிதானமாகி விட்டோம் என்கிற நம்பிக்கை பிறந்ததும், அன்றைக்கும், மறுநாள் கலாக்ஷேத்ராவுக்குப் புறப்படும் முன்னரும் செய்ய வேண்டிய காரியங்கள் என்னென்ன என்று ஒருதரம் நினைத்துப் பார்த்தபடி வீட்டை நோக்கி மெல்ல நடக்க ஆரம்பித்தாள்.

## 21

"ம்மா...... ஆ......"

கௌரி அடிவயிற்றிலிருந்து குரல் கொடுத்தது— 'என் குழந்தைக்குப் பசி எடுத்து விட்டதும், என் மடி கனப்பதும் புரியவில்லையா ?'— என்று கேட்பது போல...

அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்து உற்சவத்துக்கென வந்திருந்த உறவினர்களை, கோவிலுக்குச் சென்று வந்து, மதிய விருந்தை உட்கொண்டு, சிரமபரிகாரம் செய்து விட்டு, மாலை காபியைக் குடித்துவிட்டு, தம்தம் கிராமங்களுக்குப் புறப்பட்டவர்களை, வாசல்வரை சென்று வழி அனுப்பிக் கொண்டிருந்த பார்வதியின் காதுகளில் கௌரியின் அழைப்பு விழ, செய்துகொண்டிருந்த வேலையைப் பாதியில் நிறுத்தி விட்டுப் பின்கட்டைப் பார்க்க நடந்தாள்.

கொல்லைப் படிக்கட்டுகளில் இறங்கி, தோட்டத்துக்குச் சென்றாள்.

கௌரி இதர பசுக்கள் மாதிரி இல்லை. ஜெர்ஸி இனம். மற்றப் பசுக்கள் இரண்டு வேளைக்கும் சேர்த்து மூன்று அல்லது நாலு லிட்டர் பால் தருவதைப்போல அல்லாமல் கௌரி மூன்று தரம், ஒவ்வொரு முறைக்கும் நாலு லிட்டர் பால் கொடுக்கும் உயர்ந்த ரகம். மாலை நான்கு மணிக்கு இதர பசுக்களைக் கறந்துவிட்டு, கொஞ்சம் தாமதமாகத் தான் மூன்றாவது கறவைக்குக் கோனார் கௌரியிடம் வருவார்... ஆனாலும்? மணி ஆறாகப் போகிறது, இன்னமும் பால் கறக்காமல் கௌரி மடி கனக்கக் குரல் கொடுத்து அழைக்கும் வரை கோனார் என்ன செய்து கொண்டிருக்கிறான்?

வேலையைக் கவனிக்காமல் இதர ஆட்களுக்குச் சரியாய் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்த முத்துக்கோனாரை அதட்டிப் பால் கறக்க அனுப்பி விட்டுத் திரும்பியவள் நின்றாள்.

மொட்டை மாடி குட்டைச் சுவரில் தனித்து எதையோ யோசித்தபடி உட்கார்ந்திருந்த ரமணியை ஊன்றிப் பார்க்கையில் முதல் நாள் தலையெடுத்து, காலையிலிருந்து அவ்வப்போது உறுத்திய கேள்வி மறுபடியும் நெஞ்சில் முட்டியது.

என்னாயிற்று இவனுக்கு?



எப்போதும் காணப்படும் கலகலப்பு, சிரிப்பு, பேச்சு எதுவுமே இல்லையே!

என்னமோ கவலை பிடித்துவிட்ட தினுசில், பிரச்னை எதற்கோ தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிற மாதிரி, ஏன் இப்படிச் சோர்வாக இருக்கிறான்?

முதல் நாள் மாலை பிள்ளை காரில் வந்து இறங்கியதுமே பார்வதி கவனித்துவிட்டாள்தான்.

"என்ன ரமணி எப்படியோ இருக்கே? உடம்புக்கு ஒன்றும் இல்லையே?" என்று கேட்கவும் செய்தாள்தான்.

"அ! அதெல்லாம் ஒண்ணும் இல்லம்மா... அஞ்சுமணி நேரம்போல கார்ல வந்தது டயர்டா இருக்கு..."

"பாரதி வரல?"

''இல்ல... நாளைக்கு தான்...''

இதென்னடா புது வியாக்கியானம்— என்று கேட்க நினைத்தவள் பிள்ளையின் முகத்தில் தென்பட்ட வேதனையைப் புரிந்துகொள்ள முடிந்ததாலும், அருகில் உறவினர் ஒருவர் நின்றிருந்ததாலும் அதை ஒதுக்கினாள்.

''விக்ரமை அழைச்சுண்டு வந்திருக்கக் கூடாதா ரமணி... சனி, ஞாயிறு ரெண்டும் லீவு தான் தானே?''

''அவனுக்கு காலேஜ்ல முக்கியமான வேலை இருக்காம்.''

''அட ராமா! கௌதமாவது வருவானா மாட்டானா?''

அம்மா மேலே மேலே தன்னால் பதில் சொல்ல முடியாத கேள்விகளாகக் கேட்டுக் கொண்டே போவது எரிச்சலை எழுப்பிய தினுசில் ரமணி பொறுமை இழந்தார்.

''வாசல்லியே நிக்க வச்சுதான் எல்லாத்தையும் கேக்கணுமா? உள்ளே வந்தப்புறம், மெதுவா பேசிக்கக் கூடாதா?''

பிள்ளை ஏதோ கோபத்தில் இருப்பது புரிய, பேச்சை அத்துடன் பார்வதி நிறுத்திக் கொண்டாள்.

பின்னர் குளித்து உடை மாற்றிக்கொண்டு வந்த போதும் சரி, உறவினர்களுடன் ஒன்றாய் அமர்ந்து இரவு உணவு சாப்பிட்டபோதும் சரி, ரமணி தன் இயல்புப்படி இருக்கவில்லை என்பதை உணர முடிய, மகன் வழிக்கே பார்வதி போகவில்லை.

காலையில் எழுந்ததிலிருந்து வரிசையாய் வேலைகள். கூடவே எதையும் ரமணியோடு தனித்துப் பேசமுடியாத வகையில் உறவினர்கள்...

இப்போது, ஊருக்குப் புறப்படும் உறவினர்களை விடை கொடுத்து அனுப்ப, கீழே இறங்கிக்கூட வராமல், தன் போக்கில் தனியாய்ச் சிந்தனை வயப்பட்டு உட்கார்ந்திருப்பது கவலையை அதிகமாக்கியது.

அடுத்தவர் புரிந்துகொள்ளக்கூடிய ரீதியில் இப்படி வெளிப்படையாக இடிந்துபோகும் அளவுக்கு ரமணிக்கு என்ன பிரச்னை?

அலுவலகத்தில் ஏதாவது கோளாறா? அப்படியே இருந்தாலும் அதை அப்பட்டமாகக் காட்டிக் கொள்ளும் சுபாவம் இவனுக்குக் கிடையாதே!

பாரதிக்கு உடம்பு சரியில்லையா? அதுதான் அவள் வரவில்லையா! மனைவியின் உடல்நிலை குறித்துக் கவலைப்படுகிறானா?

இது காரணமாக இருக்கமுடியாதே! மதியம் சென்னையிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு ''உத்சவம் நன்னா நடந்துதாம்மா? எனக்குதான் வர முடியாமப் போயிடுத்து. நினைச்ச மாதிரியே நேத்து ராத்திரி எனக்கு 'மென்ஸஸ்' வந்துடுத்து. என்னமோ கவனக்குறைவால நான்தான் சரியா 'பிளான்' பண்ணி



மாத்திரை சாப்பிடாமே இருந்துட்டேன். கார்த்தால பூரா மனசெல்லாம் அங்கதான் இருந்தது" என்று பேசிய போது பாரதி கலகலப்பாகத்தான் பேசினாள்! உடம்புக்கு முடியாதவ மாதிரி குரல் சோர்ந்து ஒலிக்கவில்லையே!

அப்புறம்?

அப்ப கட்டைக் கடித்துக்கொண்டு யோசித்த நிமிஷத்தில் 'அவர் பக்கத்துலஇருக்காராம்மா? என்னோட பேசச் சொல்றேளா?' என்று பாரதி கேட்டதும், 'நான் அப்புறமா போன் பண்றேன்னு சொல்லிடும்மா' என்று கூறி ரமணி பேச மறுத்ததும் நினைவுக்குவர, உடம்பு லேசாக உதறிப் போட்டது.

அப்போது குற்றமாகத் தோன்றாதது, இப்போது தவறாகத் தோன்றியது.

எந்த இடத்துக்கும் எந்த விசேஷத்துக்கும் பெண்டாட்டி உடன் வராமல் வந்து ரமணிக்குப் பழக்கமில்லை. வந்த பிறகும் அவள் பெண்டுகள் நடுவில் வேலையாய் இருந்தாலும், அசட்டு சிரிப்புடன் அங்கே வந்து நின்று எதையாவது பேச முயற்சிப்பது குறித்து எல்லாரும் 'ஏய்— பெண்டாட்டி தாஸா— ஒரு நிமிஷம் அவளோடு பேசாமல் உன்னால் இருக்கமுடியாதோ'— என்று கேலிகூடப் பண்ணுவார்கள்தான்.

அப்படிப்பட்ட ரமணி இன்று தனித்து வந்திருப்பதோடு அவளாகத் தொலைபேசியில் அழைத்தும் பேச மறுத்துவிட்டதற்கு என்ன அர்த்தம்?

ஒருவேளை புருஷன் மனைவி நடுவில்...

நினைப்பே வலி தருவதாக இருந்தது.

எதுவானாலும் இரவு படுக்கப்போகும்முன் பிள்ளையிடம் மனம்விட்டுப் பேசிவிடுவது என்கிற உறுதியோடு வீட்டுக்குள் வந்த பார்வதி, எடுத்த தீர்மானத்தைச் செயலில் காட்டும் விதமாக, இரவு சாப்பாடு ஆகி,

அவரவர் படுக்கச் சென்று விட்டபின் அமளி அடங்கியதும் மகனின் அறைக்குச் சென்றாள்.

கட்டிலில் படுத்து விட்டத்தை வெறித்தபடி ரமணி...

அரை நிமிஷம் அப்படியே நின்று அவனைப் பார்த்தவள், ஓசைபடாமல் கதவைச் சாத்திவிட்டு அருகில் சென்று நின்றாள்.

"ரமணி"

திடுக்கிட்டுத் திரும்பிய ரமணி, அம்மாளை அப்போது அங்கே எதிர்பார்க்காத முகபாவத்துடன் எழுந்து உட்கார்ந்தார்.

"நீ படுக்கப் போயிட்டேன்னு நினைச்சேன்மா"

"நீ ஏன் இன்னும் தூங்காம இருக்கே, ரமணி?"

"தூக்கம் வரலை. மெட்ராஸ்ல பதினொரு மணிக்கு மேல தூங்கித்தானே பழக்கம்!"

கட்டிலின் எதிரில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு பார்வதி உட்கார்ந்தாள்.

கண்களைச் சிமிட்டாமல் மகனை அழுந்தப் பார்த்தாள்.

அந்தப் பார்வையின் கூர்மையைத் தாங்க இயலாத மாதிரி ரமணி விழிகளைத் தழைத்துக்கொண்டார்.

"என்ன விஷயம் ரமணி?"

சுற்றி வளைக்காமல் தாய் நேரடியாக விஷயத்துக்கு வந்து விட, அவளை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்துவிட்டு ரமணி மீண்டும் பார்வையை பூமியில் படரவிட்டார்.

"சொல்லுப்பா? எதனால நீ இப்படி அலண்டு போயிருக்கே! நேத்தே கேட்டிருப்பேன். ஆனா, சந்தர்ப்பம் சரியா அமையலை... என்னாச்சு உனக்கு? ஏன்



இப்படி பிரமை பிடிச்சமாதிரி இருக்கே? விவரம் என்னன்னு தெரிஞ்சுக்காம இங்கேயிருந்து நா போறதா இல்லை, சொல்லு..."

அந்தக் குரலில் தென்பட்ட கரிசனம், அன்பு உள்ளத்தைத் தொட்டுக் கண்களை கலங்கச் செய்தது.

நீளமாய்ப் பெருமூச்சொன்றை வெளியிட்ட ரமணி 'ச்' என்று சூள் கொட்டினார். பிறகு, மெல்லிய குரலில் "என்னன்னு சொல்லறதும்மா? மொத்தத்துல எதுவும் நன்னா இல்லை... யார் செய்யறதும் சரியா இல்லை... சொல்லப்போனா கடைசில நம்ப பேர்லதான் பழி வந்து விழறது" என்றார் முணுமுணுப்பாக.

"யார் என்ன செஞ்சது சரியாயில்லே? வெவரமா சொன்னா தானே எனக்குப் புரியும்?"

ரமணி உடனே பதில் கூறாமல் எழுந்து ஜன்னலிடம் சென்று நின்று கொண்டார்.

படுக்கை அறையை ஒட்டியிருந்த தோட்டத்துப் பாரிஜாத மரத்தில் பூத்திருந்த மலர்களின் வாசம் 'கம்' என்று நாசியில் ஏறியது.

பாரதிக்கு இந்த தஞ்சாவூர் வீட்டுக்கு வருவதென்றால் கொள்ளைப் பிரியம். அதுவும், ஜன்னல் அருகில் நின்று பாரிஜாத வாசனையை முகர்ந்தபடி தூரத்தில் தெரியும் பெரிய கோவில் கோபுரத்தையும், அதன் உச்சியில் மின்னும் நீல விளக்கையும் அமைதியான இரவு நேரங்களில் ரசிப்பதென்றால் ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.

பாரதியின் நினைப்பு மறுபடியும் பெருமூச்சு ஒன்றை வெளியிடச் செய்தது.

அம்மாவுக்கு முதுகைக் காட்டியவாறு நின்று கொண்டு, நிழலாய்த் தெரிந்த பிரகதீஸ்வரர் கோவில் கோபுரத்தை ஏறிட்டவாறு தொண்டை அடைக்கப் பேசினார்.

ராஜமாணிக்கம் மாஸ்டர் வீட்டுக்குப் பாரதி போகத் துவங்கியதில் ஆரம்பித்து, வெள்ளிக்கிழமை மாலை அவன் பெற்றோர் வந்தவரை, தங்களுக்குள் நடந்த பேச்சு வார்த்தைகளின், வாக்கு வாதங்களின் அவசிய மான விவரங்கள் அத்தனையும் ஒன்றுவிடாமல் கூறினார்.

"இத்தனை வருஷங்கள்ல அவகிட்ட நா எதுக்கும் கோச்சுண்டதே கிடையாதும்மா. அதுவும் அவ அப்பா அம்மா எதிர்ல அவளிச்கு அப்படி கத்தியதை நினைக்கறப்போ ரொம்ப வேதனையா இருக்கு... யார் சொன்ன தையும்மா துலவாங்காத அளவுக்குப்பாரதி இப்படிமாறிப் போயிட்டானேங்கறதை நினைச்சா, துக்கமாக இருக்கு. அவ நல்லதுக்குத்தான் இத்தனையும் சொல்றோம்கறது கூட அவனுக்கு நிஜம்மா புரியலையா— இல்ல, உங்க வார்த்தையும் எனக்கு அக்கறை இல்லேன்னு வீம்பா இருக்கானா? எனக்கு ஒண்ணுமே புரியலை மா... இந்த வயசுல அவனுக்கு ஏம்மா இப்படி ஒரு விபரீத ஆசை? அவனுக்கு நாம்ப என்ன குறை வச்சோம்? அவ செய்யத் துணிஞ்சுட்ட காரியத்தை நினைச்சா, திரும்ப ஊருக்கே போவாண்டாம், இங்கேயே இருந்துடலாம்னு கூடத் தோணறது... மொத்தத்துல ரொம்ப வேதனை— அவமானம் கூட..."

பேசி நிறுத்திய சில நிமிஷங்கள் ஆகியும் கூட பார்வதி பதில் ஏதும் பேசாமல் இருக்க, ரமணி இருமினார்.

மெதுவாக நடந்து தாயிடம் வந்து நின்றார்.

"உனக்கு அதிர்ச்சியா இருக்கா? இருக்கும். அதான் உன்கிட்ட எதுவுமே சொல்ல வாண்டாம், நம்ப வேதனை நம்பளோடவே இருக்கட்டும்னு வாய்ப் பொத்திண்டு ஊருக்குப் போயிடலாம்னு பாத்தேன். நீ விடல... நான் என்ன பண்றது! சொல்லிட்டேன்"

பெரியவரை பார்வதி நிமிர்ந்து பார்த்தாள். கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு 'உட்காரு' என்று சைகை காட்டினாள்.



ரமணி கட்டிலில் உட்கார்ந்ததும் ஒருதரம் வேதனை யோடு புன்னகைத்துவிட்டு தெளிவாகப் பேசினாள்.

"வருத்தமாதான் இருக்குப்பா. ஏன், அதிர்ச்சியா கூடத்தான் இருக்கு... ஆனா, பாரதியோட தீர்மானம் தெரிஞ்சதால இல்ல... உன்னோட பேச்சு, நடவடிக்கை தான் என்னை பாதிச்சிருக்கு. அத மொதல்ல நீ புரிஞ்சுக்கோ"

ரமணி கேட்டதை நம்பமாட்டாமல் விழித்தார்.

"நான்? என் பேச்சு? என்னம்மா சொல்றே?"

"பின்னே? பாரதி அப்படி என்ன தகாத முடிவுக்கு வந்துட்டான்னு நீ இப்படி வேதனைப்பட்டுக்கறே? என்ன அக்ரமத்தை செய்யத் துணிஞ்சுட்டான்னு இப்படி நிலை குலைஞ்சு போயிருக்கே? ம்?"

"அம்மா, என்னாச்சு உனக்கு?"

குரலை உயர்த்தி ரமணி வினவ, பார்வதி கண்ணாடியை அணிந்து கொண்டு மகனைக் கண்கள் இடுங்கப் பார்த்தாள்.

"எனக்கு ஒண்ணும் ஆகலைடா... நீதான் தெளிவா யோசனை பண்ணத் தெரியாம குழம்பிப் போயிருக்கே. 'ரம்ப பையன் விவேகி, புத்திசாலி. எதையும் சரியா புரிஞ்சுண்டு, நாலு பேருக்கு வழிகாட்டியா இருப்பான்'னு உங்கப்பாவும் நானும் இத்தனை வருஷமா நம்பினது இப்ப பொய்ச்சுப் போயிடுமோன்னு கவலையா இருக்கு..."

"எதை நான் சரியா புரிஞ்சுக்கலைன்னு நீ சொல்றம்மா? இத்தனை வயசுக்கு மேல உன் மாட்டுப் பெண் டான்ஸ் கத்துக்க ஆசைப்படறதையா? நாளைக்கு அவனுக்கு மாட்டுப் பொண் வரப்போறா, இவ டான்ஸ் கிளாஸுக்குப் போயிண்டும், வந்துண்டும் இருக்கணும்னு தீர்மானம் பண்ணியிருக்கறதையா? எதை நான் விவேகத் தோட எடுத்துக்கலைன்னு நீ வருத்தப்பட்டுக்கறே?"

''திரும்பத் திரும்பச் சொன்னதையே சொன்னா எப்படி ரமணி? டான்ஸ் இவ படிக்கறத்துக்கும், அவளுக்கும், இல்ல அவனுக்கு மாட்டுப்பொண் வர்றத்துக்கும் என்ன சம்பந்தம்—டா?''

ரமணி ஆக்கிரோத்துடன் கத்தினார்.

''திருவையாத்துல பொறந்து, ஆயுசு பூரா தஞ்சாவூர்ல வாழ்ந்த நீயாம்மா இப்படி கேக்கறே?''

''எங்க பொறந்து எங்க வாழ்ந்தா என்ன ரமணி? மனசு, சரி, தப்புங்கறது எல்லா இடத்துல இருக்கறவாளுக்கும் ஒண்ணுதானே?''

''அப்ப, பாரதி கலாக்ஷேத்ராவ சேர்றது உனக்குச் சித்தமா படலியா?''

''அதுல குத்தம் என்னடா இருக்கு? அவ கேட்ட மாதிரி ஐம்பது வயசுலேயும் ஒரு பொம்பளை மேடை ஏறி பாடலாம்னா நாப்பது வயசுல மனசு சந்தோஷத்துக்காக ஒருத்தி நாட்டியம் கத்துக்கக் கூடாதா?''

ரமணி முழங்கைகளைத் தொடைகளில் ஊன்றித் தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

''இந்தக் குடும்பத்துல வாக்கப்பட்டவ எடுக்கற முடிவா அது? இல்ல... உனக்கு என்னவோ ஆயிடுத்து அம்மா. இந்த விஷயத்த உங்கிட்ட நான் சொன்னதே தப்பு?''

பார்வதி மென்மையாய்ச் சிரித்தாள்.

''நான் நிதானமா இருக்கேன் ரமணி. அதனாலதான் படபடக்காம அமைதியா என்னால பேச முடியறது. தலைமுறைக்குத் தலைமுறை ஒவ்வொரு குடும்பத்துலேயும் பழக்க வழக்கங்கள் மாறுபடும். இது இயற்கையா நடக்கற சமாசாரம். உங்கப்பா 'ஐயோ—இலானிட்டாளே'னு புலம்பறது கூடாது; என்னா மாறுதல்



வந்தாதான் வளர்ச்சி இருக்கும். மாறாம இருக்கறவன் தேங்கின குட்டைக்குச் சமம். அது கடைசில பாசிபுடிச்சி கொசு உற்பத்தியாகி யாருக்கும் உபயோகம் இல்லாம ஆயிடறது போல, மாறமாட்டேன்னு பிடிவாதமா இருக்கறவனும் வீணாப் போயிடுவா. மாற்றம் நல்ல முறைல வரணும். அதுதான் வளர்ச்சி அப்பத்தான் நாம்பளும் நன்னா இருந்து நம்பள சுத்தி இருக்கறவாளும் சுபிட்சமா இருக்க முடியும்'னு அடிக்கடி சொல்லுவதான் இப்ப எனக்கு ஞாபகத்துக்கு வர்றது... ஒண்ணு கேக்கறேன், பதில் சொல்றியாடா?''

குனிந்து உட்கார்ந்திருந்த ரமணி நிமிர்ந்தார். ஆயாசத்துடன் அம்மாவை 'கேள்' என்கிற ரீதியில் ஏறிட்டார்.

''உங்க தாத்தா செத்துப்போனதும் பாட்டி தனியா இருக்கக்கூடாது நம்பளோட அழைச்சுண்டு வந்து மொட்டை அடிச்சு, சம்பிரதாயப் பிரகாரம் செய்ய வேண்டியது அத்தனையும் செஞ்சோம். ஞாபகம் இருக்கா? ஆனா! உங்கப்பா காலமானதும் 'எங்கம்மாவ எந்தவிதத்துலேயும் அலங்கோலம் பண்ணக்கூடாது'னு நீயே தடுத்துட்டே... இதுவும் நினைப்பு இருக்...''

அவளை முடிக்கவிடாமல் பொறுமையின்றி ரமணி குறுக்கிட்டார்.

''எல்லாம் நன்னா ஞாபகம் இருக்கு பொம்மனாட்டிகளோட உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்காம நடத்துக்கறது தப்பு. 'ஆம்பிளைக்கு விதவன் கோலம் ஒண்ணு இல்லாதப்போ பொம்பளைக்கு மட்டும் விதவைக் கோலம் எதுக்கு'—னு நான் கேட்டதுகூட நினைவுல இருக்கு. இப்ப அதுக்கும் இப்ப நடக்கறதுக்கும் என்ன சம்பந்தம் இருக்குனு நீ பழசை சொல்றே? எனக்குச் சத்தியமா புரியலைமா...''

ரமணியின் கத்தலால் பாதிக்கப்படாமல் பார்வதி புன்னகைத்தாள்.

''என்னை முழுசா பேசவிட்டாதானே என்ன சம்பந்தம் இருக்குனு புரிஞ்சுக்க முடியும்? உங்கப்பா போனப்புறம் உன்கூட வந்து இருனு என்னை நீ கெஞ்சினே, கட்டாயப் படுத்தினே. நான மாட்டேன்னு மறுத்துட்டேன். 'தனியா எப்படிமா இருப்பே?'னு கலங்கிப் போனே. 'இருந்து காட்டறேன் பாரு—'னு நான் தனியா, இத்தனாம் பெரிய வீட்டுல அதே ஆள், அம்பு, வேலைகளோட இத்தனை வருஷமா தனியா தானே இருக்கேன்? ம்?''

''சரி— சரி... அதுக்கும், இப்ப பாரதி முடிவெடுத்திருக்கறத்துக்கும்...''

''இருடா—என்ன கொஞ்சம் பேசவிடேன்... அத்தனை வருஷம் முன்னால ஆம்படையான் செத்துப் போனப்புறம் சம்பிரதாயத்த கடைப்பிடிக்காத ஒரு பொம்பளை தனியா இருக்கத் துணிஞ்சதைகூடத்தான் பல பேர் தப்பாப் பேசியிருப்பா... ஆனா, எங்கம்மா நிம்மதிதான் முக்கியம்னு நீ துணிஞ்சு ஒத்துக்கலியா? அது மாதிரி தான்டா இதுவும். பாரதி சொல்ற இதுல நாப்பது வயசுக்குமேல ஒரு பொம்பளை நாட்டியம் கத்துக்கறதுன்கறது இப்ப சகஜமாக இல்லாத காரணத்தாலேயே அங்க, இங்க யாராவது தப்பா நினைக்கலாம் தான். ஆனா காலம் மாற மாற, இதுவும் பழகப் பழக, சரினு எல்லாரும் ஒத்துண்டுடுவாடா... யோசனை பண்ணினா நான் சொல்றது சரினு உனக்கே புரியும்...''

என்ன பதில் கூறுவது என்று விளங்காமல் ரமணி மௌனிக்கப் பார்வதி தொடர்ந்தாள்.

''ஒரு பொம்பளையோட உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்காம விதவைக் கோலத்த நிர்பந்திக்கறது தப்புனு சித்த முன்னால சொன்னியே, அதே மதிப்புக் கொடுக்கற விஷயம்தான் இங்கயும்... நம்ப நாட்டுல ரொம்ப வருஷமா பொம்மனாட்டிகள் தங்களுக்குனு விருப்பு வெறுப்பு எதையுமே காட்டிக்காம ஆம்படையான், குழந்தைகள் குடும்பம்தான் உலகம்னு வாழ்ந்துட்டதால சமுதாயமும் அதான்



சரினு சொல்றது. ஆனா, அவாளுக்குனு விருப்பு வெறுப்பு இல்லாம இல்ல— உள்ளுக்குள்ள தோணினதை வெளில பொம்பளை இத்தனை காலமும் காண்பிச்சுக்கல... விஷயம் அவ்வளோ தான். இப்ப எல்லாம் மாறிண்டு வர்றதுல 'எனக்குனு ஆசைகள் இருக்கக்கூடாதா'னு அவ யோசிக்கறா... இதுல என்ன தப்பு? ஒருத்தியை பொண்டாட்டியா, அம்மாவாவே பாத்துப் பழகிட்ட குடும்பம் திடும்னு அவ தன் ஏக்கத்த வெளில சொல்றப்போ, 'என்ன திமிர் இது!'னு பதறிப் போறது... உனக்கு இன்னொண்ணை ஞாபகப்படுத்தட்டுமா ரமணி? நீ காலேஜ்ல படிக்கறப்போ வெயில் காலத்துல உடம்புக்கு முடியலைனு நித்தியப்படி பட்டுப்புடவை கட்டற வழக்கத்தை மாத்தி, நூல் புடவை கட்டிக்க ஆரம்பிச்சேன். உங்கப்பா கூட 'உனக்கு அதான் வசதினா— செய்'னு சொல்லிட்டார். ஆனா நீ? 'உன்னை பட்டுப் புடவைல பாத்தாதாம்மா எங்கம்மா மாதிரி இருக்கு... நூல் புடவை நன்னாவே இல்லை... மாத்திக்காதே'—னு பிடிவாதம் பிடிச்சு தடுத்துட்டே. இப்ப கேக்கறேன்— உங்கம்மா, உன் பெண்டாட்டி, சாப்பிடறது, உடுத்தறது மொதக்கொண்டு உனக்குப் பிடிச்ச மாதிரி இருந்தாதான் சரி, இல்லாட்டா தப்பு— அதானேடா? அவளுக்குனு ஒரு மனசு இருக்கு. அதுல விருப்பு வெறுப்பு இருக்குனு நீ எப்ப புரிஞ்சுக்கப் போறே? ம்?''

ரமணி அம்மாளை எதிர்நோக்க விருப்பம் இல்லாமல் தலையைக் குனிந்து கொண்டார்.

''ஒரு பொண் தனக்குனு சில காரியங்களை செய்ய முனைஞ்சுட்டதாலேயே அவள் குடும்பத்த, பொறுப்புகளை, கடமைகளை காத்துல பறக்கவிடவும் துணிஞ்சுட்டானு, நீ நினைக்கதே ரமணி? பாரதி நல்ல பொண்ணுடா... உன் மேல உசிரயே வச்சிருக்கா... அவ உன்னை மதிச்சு நடந்துக்கற மாதிரி நீயும் அவளை மதிக்கறதுதான் உனக்கும் பெருமை...''

உணர்ச்சி வசப்பட்டு பேசிய பார்வதி நாவால் உதடுகளை ஈரப்படுத்தி தன்னை ஆசுவாசம் செய்து கொண்டு எழுந்து நின்றாள்.

"அல்லோதான்— இனிமே இது விஷயமா பேச ஒண்ணுமே இல்ல... நீயா பேச வந்தாலும் நா பேச மாட்டேன். எனக்குத் வர்றது... படுத்துக்கப் போறேன்... மனசைப் போட்டு அலட்டிக்காம, நிம்மதியா நீயும் தூங்கு."

திகைப்பு மாறாமல் அமர்ந்திருந்த பிள்ளையிடம் குனிந்து தோளைத் தட்டிக் கொடுத்தவள், திரும்பிப் பார்க்காமல் நடந்து, கதவைத் திறந்துகொண்டு வெளியே போனாள்.

## 22

சந்தோஷம்— துக்கம்.

தெளிவு— குழப்பம்.

பரவசம்— வலி.

பரபரப்பு— ஆயாசம்.

எல்லாம் ஒரே சமயத்திலோ, அல்லது உடனுக்குடன் மாறி மாறி எழுவதோ சாத்தியமா?

எழுகிறதே, என்ன செய்ய?

கொஞ்சம் நிதானித்து சுய அலசலில் ஈடுபட்டபோது பாரதிக்கு ஆச்சர்யமாக இருந்தது. கோபமும் தலை தூக்கியது.

என்ன அவஸ்தை இது!

இரவு முழுவதும் அயர்ந்து உறங்காமல், அரைகுறை விழிப்பு. தூக்கம் கலந்த நிலையில் ஏதேதோ கனவுகள், கற்பனைகள் என்று பொழுதைக் கழித்திருந்ததில் தலை கனத்தது. நீர் சுரந்துகொண்டு லேசாக உப்பியிருந்த



முகம் கண்ணாடியில் பார்க்கச் சகிக்காமல் பிரதிபலித்தது. சிவந்திருந்த கண்களும் எரிச்சல்.

முதல் நாள் இரவு கண்ட கனவுகள் ஞாபகத்துக்கு வந்தன.

பைஜாமா, சற்றே உயர்த்திக் கட்டப்பட்ட புடவை. தளாங்கு தகதிமி...

தலை நரைத்த ஆசிரியை ஒருவர் எதிரில் அமர்ந்து தட்டுக் குச்சியால் கட்டையைத் தட்டி, ஜதிகளைக் கூற பாரதி ஆடுகிறாள்.

நெற்றியில் வியர்வை முத்துக்கள், வேகமான ஆட்டத்தின் காரணமாய் விரைவுடன் மேலே எழுந்து தணியும் மார்பகம். மலரின் இதழ்களாக விரியும் விரல்கள், வண்டுகளாக அலையும் கண்கள், பிரவாகமெடுக்கும் நதியெனப் பொங்கிய ஜதிச் சொற்களுக்கு ஈடு கொடுத்து அடவுகளைப் போடும் பாதங்கள்.

"பிரமாதம்"

யார்?

பெரிய குங்குமப் பொட்டும், அழகான சிரிப்பும், மூப்பாக கரை போட்ட புடவையுமாய், சாட்சாத் சரஸ்வதி தேவியே மனித உருக்கொண்டு வந்தமாதிரி நின்றுகொண்டு பாராட்டுவது யார்?

நடனமணி ருக்குமணி தேவியா?

அவர்தான் இப்போது இல்லையே! அப்புறம் இது யார்?

யோசிக்க அவகாசம் இல்லை. அதற்குள் காட்சி மாறிவிட்டது.

'நீ சொல்றது கொஞ்சம்கூட நன்னாவே இல்ல பாரதி. உன்னைப் பொண்ணா பெத்ததுக்கு நான் வெக்கப்படறேன்'—

விழிகளை உருட்டியபடி குற்றம் சாட்டும் அம்மா...

'உனக்கும் எனக்கும் இனி எந்த சம்பந்தமும் இல்லை. நான் இத்தனை சொன்னப்புறமும், உன் இஷ்டப்படி நடந்துக்க நீ தீர்மானம் பண்ணியாச்சுன்னா, இனிமே நம்ம உறவெல்லாம் பேருக்கு தான். குழந்தைகளுக்காக ஒரே வீட்டுல இருக்க சம்மதிக்கிறேன். மத்தபடி எந்த உரிமையும் நான் எடுத்துக்க மாட்டேன். நீயும் எதிர் பார்க்காதே'

தலைமுடியை இடது கையால் கோதியவாறு எங்கோ வெறித்த பார்வையுடன் பேசும் ரமணி...

'சனி, ஞாயிறுக்குக் கூட வீட்டுக்கு நான் வரப்போறதில்லை— இங்க வந்துட்டுப் போனா இருக்கற கொஞ்சம் நிம்மதியும் போயிடறது. ஸோ லெட் மீ ஸ்டே அவே...'

தன் சாமான்களை ஷோல்டர் பேகில் திணித்துக் கொண்டே கூறும் விக்ரம்...

இதெல்லாம் கனவுகளா, இல்லை கற்பனைகளா ?

தெரியவில்லை.

படுக்கையை விட்டு எழுந்து, வலுக்கட்டாயமாக வேலைகளில் கவனத்தைச் செலுத்திய போதும் கூடவே சினிமா காட்சிகளாக மனசுக்குள் ஏதேதோ வேண்டாத நினைப்புகள்.

மனசு ஒரு நிலைப்படாமல் தவிப்பது, தாளமாட்டாது போக ஒரு முடிவுக்கு வந்தவளாய் பாரதி படுக்கை அறையிலேயே ஒரு பக்கமாய் தரையில் சப்பணமிட்டு அமர்ந்து, கண்களை மூடிக் கொண்டாள்.

நிதானமாக மூச்சை இழுத்து வெளியிட்டு பிராணாயாமம் செய்து தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ள முனைந்தாள்.

ஒரு கையில் ஞான முத்திரை பிடித்து, மற்றொன்றால் நாஸாக்ர முத்திரையுடன் வலது நாசித்



துவாரத்தை மூடி இடது வழியாக மூச்சை வெளியிட்டு, மீண்டும் உள்ளுக்குள் இழுத்தாள். இரண்டு நாசித் துவாரங்களையும் மூடி மூச்சை நிறுத்தி, பின்னர் இடதை மூடி, வலது வழியாக ஸ்வாசத்தை வெளியிட்டு, மறுபடி உள்ளே இழுத்தாள். இப்படி அனுலோம, விலோம பிராணாயாமப் பயிற்சியை நிதானமாய் பத்துதரம் செய்து முடிப்பதற்குள் ஒருவித அமைதி மனசு பூராவும் வியாபிக்கத் துவங்குவதை உணர முடிந்தது.

பத்து நிமிஷங்கள் போல வெவ்வேறு ஸ்வாசப் பயிற்சிகளைச் செய்து முடித்தபின், இரண்டு கைகளிலும் ஞான முத்திரை பிடித்து, உடம்பைத் தளர்த்திக் கொண்டு தியானத்தில் ஈடுபட்டாள்.

துவக்கத்தில் நன்றாகக் காதுகளில் விழுந்த வண்டிச் சத்தம், காகத்தின் குரல், சமையலறை ஒலி எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கவனத்திலிருந்து மறைய முற்பட்டதும் ஒரு முழுமையான நிசப்தம் ஐம்புலன்களையும் பிடித்தது.

மூடிய கண்களுள் நீலம், பச்சை, மஞ்சள் வண்ணங்களில் வட்டங்கள் தோன்றி, கரைந்ததும் மெதுமெதுவாய் கருமை அடர்த்தியாய்ப் படர்ந்தது.

நீரின் மேல் மிதந்து, மூழ்கி, அடிமட்டத்தைத் தொட்டு, திடுமென லேசாகி விண்வெளியில் பறந்து, சூழ்ந்து ஒன்றுமே இல்லாமல் ஆகி, மறுபடியும் ஸ்திர நிலைக்குத் தானாக வந்து, தியானம் முடிந்துவிட்டதை உணரமுடிய இரண்டு உள்ளங்கைகளையும் அழுத்தத் தேய்த்து அந்தச் சூட்டை மூடிய கண்கள் இதமாக மூன்று முறைகள் வைத்த பாரதி விழிகளைத் திறந்தாள்.

மனசு நன்றாகவே நிதானப்பட்டிருந்தது.

உடம்பின் தேவையற்ற பதட்டமும், கண்களில் எரிச்சலும் அறவே காணாமல் போயிருக்க, ஒருவிதத் தெளிவோடு எழுந்தாள்.

குளியலறை சென்று உடைகளைக் களைந்துவிட்டு ஷவருக்கடியில் நின்றபோது சற்றுமுன் தோன்றி இருந்த அமைதி கூடுதலானது.

மழைச்சாரலாக முகத்தையும், உடம்பையும் நீர்த் துளிகள் வருடிக்கொடுக்க பாரதி முதல் நாள் செய்திருந்த வேலைகளை, அன்று செய்ய வேண்டிய காரியங்களை ஒருதரம் மனதுக்குள் பட்டியல் போட்டாள்.

முதலில் வீடு.

ராணி, புஷ்பா இருவரையும் அருகில் வைத்துக் கொண்டு வீடு முழுக்க ஒட்டடை அடித்து கண்ணாடிகளைத் துடைத்து, பித்தளை சாமான்களுக்குப் பாலிஷ் போட்டு படுக்கை விரிப்புகளை மாற்றி... என்... எல்லாவற்றையும் செய்தாயிற்று.

அடுத்து—ரமணி.

வாரம் பூராவும் அணிந்து போக உடைகள் தயார். அறுந்து போன பட்டன்களைத் தைத்து, லாண்டரிக்குப் போட வேண்டியவைகளை அனுப்பி, தோய்த்து, இஸ்திரி செய்பவற்றைச் செய்து, கறுப்பு, பிரவுன் ஷூக்களுக்கு பாலிஷ் போட்டு, கைக்குட்டைகள், மாற்று ஸாக்ஸ்கள் எடுத்து வைத்து... ஓ... ஒன்றையும் விடவில்லை.

விக்ரம்.

வெள்ளிக்கிழமை என்று இல்லாமல் போன வாரம் போல திடுமென நடு வாரத்தில் வந்தால் இருக்கட்டும் என்று ஒரு கிலோ உருளைக் கிழங்கை வறுத்து வைத்தாயிற்று. எதற்கும் பேல்பூரி சாமான்களை கையோடு தயாராக வைத்துக் கொண்டால், பத்து நிமிஷங்களில் அவனுக்குப் பிடித்த டிபனை ரெடி செய்துவிடலாம். அதற்காக பொறி, ஓமப் பொடி வகையறா தயார். போன வாரம் வந்தபோது போட்டுவிட்டுப் போன அழுக்கு சட்டை சலவை செய்யப்பட்டு அவன் அறையில் காத்திருக்கின்றது. அவ்வப்போது குடிக்க ஃப்ரிட்ஜில் நாலு தம்ஸ் அப், ப்ரூட்டி...



இன்னும் வேறு ஏதாவது மறந்துவிட்டேனா?

கௌதமுக்கு வருகிற பத்தாம் தேதி பிறந்தநாள். ஒரு நாளில் கடைக்குப் போய் பிறந்தநாள் வாழ்த்து அட்டை, இரண்டு டீ ஷர்ட் அல்லது ஜீன்ஸ் வாங்கி கூரியரில் அனுப்பி விட்டால் பொட்டுப்போல பிறந்தநாள் அன்று கைக்குக் கிடைத்துவிடும்.

நாளைக்கு மாமியாருக்கு விவரமாய் ஒரு கடிதம் எழுத வேண்டும்.

அப்புறம்? ஏதாவது விட்டுப்போய் விட்டதா?

குளித்து முடித்து, ஹவுஸ் கோட் அணிந்துகொண்டு கண்ணாடிமுன் நின்றவள், யோசித்தாள்.

ஓ! சனிக்கிழமை போஸ்டில்— டெலிபோன் பில் வந்திருப்பதை ஞாபகமாய் ரமணி ஃப்ரீப் கேஸில் வைத்து-விட்டு, அவர் ஊரிலிருந்து வந்து என்றைக்கு ஆபீஸுக்குப் போகிறாரோ, அன்று நாலு மணிக்குக் கலாக்ஷேத்ராவிலிருந்து திரும்பியதும் செக்ரட்டரிக்குப் போன் செய்து பில் கட்டியாயிற்றா என்று கேட்கவேண்டும்

ரமணி ஊரிலிருந்து வந்ததும்...

எப்போது வருவார்?

நாளை, நாளை மறுநாள்...?

காலையில் எழுந்ததுமே இந்தக் கேள்வி எழ, தஞ்சைக்கு 'கால்' போட்டு "எப்போது வரப்போகிறீர்கள் ரமணி?" என்று கேட்கலாமா என்று அரை நிமிஷம் ஆசைப்பட்டவள் நினைப்பை மாற்றிக் கொண்டாள்.

முதல் நாள் மாமியாருடன் பேசியபின், ரமணியுடன் பேச விரும்பி அழைத்ததும், "அப்புறமாய்ப் பேசறேன்

என்று தவிர்த்தவர். இந்த நிமிஷம்வரை கூப்பிடவில்லை. 'எப்படி இருக்கிறாய்?' என்று ஒரு வார்த்தை கேட்கக்கூடப் பிடிக்காமல் அத்தனை கோபத்துடன் இருப்பவரை மறுபடியும் தொந்தரவு செய்தால் எரிச்சல் அதிகமாகலாம். எதற்கு வீண்வம்பு! சரி— இப்போது வேண்டாம். ராத்திரிவரை தகவல் இல்லை என்றால் கூப்பிடலாம்.

''டிபன் ரெடி பண்ணிடட்டும்மா?''

புஷ்பாவின் குரல் கேட்டு பாரதி திரும்பினாள். கடிகாரத்தை ஏறிட்டாள். அது மணி ஏழரை என்றது.

எட்டரைக்கு சர்வ பிரார்த்தனையுடன் பள்ளி ஆரம்பமாகும் என்று கலாக்ஷேத்ரா மானேஜர் கூறினார். முதல் நாள் என்பதால் கொஞ்சம் முன்னதாகப் போவது, எங்கெங்கு எந்தெந்தக் கிளாஸ் நடக்கும், சாப்பிடுவது எங்கே— போன்ற விவரங்களைத் தெரிந்துகொள்ள உதவும்.

எட்டுக்கு கிளம்பி ஒரு ஆட்டோ பிடித்தால் எட்டேகாலுக்குள் கலாக்ஷேத்ராவுக்குச் சென்றுவிடலாம்.

மனசுக்குள் கணக்குப்போட்ட, இட்லி வார்க்கச் சொல்லி புஷ்பாவை அனுப்பிவிட்டு, தன்னோடு பள்ளிக்கு எடுத்துச் செல்ல வேண்டியவைகளைத் தயார் செய்தாள்.

இவளைப் பொறுத்தவரை நடனப் பயிற்சி வகுப்பு கிடையாது. 'தியரி'தான் முக்கியம். என்றாலும் எதற்கும் இருக்கட்டும் என்று ஒரு பையில் பைஜாமா, மாற்றுப் புடவை ரவிக்கையோடு பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திர புத்தகம், ஒரு வெற்று நோட்டையும் எடுத்து வைத்தாள்.

பர்ஸில் பணம் இருக்கிறதா என்று பார்த்தாள். இருந்தது.

அன்றைக்கு உடுத்தவேண்டிய உடைகளைக் கட்டிலில் மேல் எடுத்துவைத்த பின்னர் சமையல்கட்டுக்குச் சென்றாள்.



''இட்லி தயாரானதும் எனக்கு டேபிள்ல மூணு எடுத்து வை. நீ நாலு எடுத்துண்டு, மிச்சத்துல மொளகாய்ப் பொடி தடவி வைச்சுடு... ஒருவேளை ஐயா திடீர்னு ஊர்லேந்து வந்துட்டார்னாலும், இருக்கட்டும்...''

சட்னி தாளித்துக்கொண்டிருந்த புஷ்பா கேட்டாள்.

''ஐயாகிட்ட பேசினீங்களாம்மா? இன்னிக்கு வரேன்னு சொல்லிட்டாரா?''

''அ? இல்ல... ராத்திரிதான் பேசப்போறேன். இன்னிக்கே ஏன் அவசரப்பட்டுண்டு வரணும்? போனதும் போகாததுமா புறப்பட்டா அம்மா வருத்தப்பட்டுப்பா- அதுவும் நான்கூடப் போகல... சரி, இன்னுண்டு பேச எனக்கு நாழி இல்ல... சொல்றத கவனமா கேட்டுக்கோ... நான் இல்லாதப்போ உறவு மனுஷா இல்ல வேற யாராவது வந்தா 'அம்மா இல்லே'னு வாசலோட அனுப்பிடாதே. உள்ளவந்து உட்கார சொல்லி காபி கொடு. ஃப்ரிஜ்ல ரெண்டு லிட்டர் பால் இருக்கோன்னோ? மத்தியானத்துக்கு எனக்கு தயிர்சாதம் பிசைஞ்சு டப்பால வச்சுட்டியா? வாட்டர் பாட்டில்ல தண்ணி? ரைட்— வேற ஏதாவது கேக்கணுமா? நான் திரும்பிவர நாலு மணி ஆகலாம். கதவ தாப்பா போட்டுண்டு ஜாக்ரதையா இரு. ராணி வந்ததும் ரெண்டு பேருமா அலமாரில இருக்கற பீங்கான் சாமான்கள சோப்போட்டு தொடச்சு வைச்சுடுங்கோ. ராத்திரி சாப்பாட்டுக்கு நான் வந்து என்ன பண்றதுனு சொல்றேன். ட்ரெஸ் பண்ணிக்கப் போகட்டுமா? எனக்கு நாழியாச்சு... இட்லி வெந்ததும் எடுத்துட்டு கூப்பிடு...''

சொல்லவேண்டியதைச் சொல்லி முடித்தவள் தன் அறைக்கு வந்தாள். தலைசீவி, முக ஒப்பனை முடித்து கட்டில் மேல் வைத்திருந்த ரவிக்கையை அணிந்து, கஞ்சி போட்ட காஞ்சிபுரம் நூல் சேலையை கட்டுவதற்காகப் பிரித்து உதறிய நிமிஷத்தில் வாசல் அழைப்பு மணி ஒலிப்பது கேட்டது.

யார் இந்தக் காலை வேளையில்?

''புஷ்பா வாசல்ல யார் பாரு... பேப்பர் பையனா, பில்லை வாங்கிக்கோ சாயங்காலமா வந்து பணத்தை வாங்கிக்கச் சொல்லு...''

கதவைத் திறக்கும் ஓசையும் 'அம்மா கிளம்பிட்டாங்களா?' என்கிற அந்தப் பழக்கமான குரலும் கேட்க பாரதிக்குள் குபீரென்று நீருற்றுகள் கிளம்பிக் கையில் பிடித்திருந்த கொசுவங்களை நழுவச் செய்தன.

கீழே விழுந்த புடவையை அள்ளிக்கொண்டு இரண்டே எட்டில் கதவைப் பார்க்க ஓடியவள் கூடத்தை அடைந்ததும் நின்றாள்.

ரமணிதான்.

கலைந்த தலைமுடி, சோர்ந்த முகம், சிவந்த விழிகளையும் மீறிக்கொண்டு வெளிப்பட்ட பரபரப்புடன் கால்களை அகல அகலமாய் வைத்து அவளை நெருங்கியவர் வலக்கையால் அவள் தோளைப்பற்றித் தன்னிடம் இழுத்து இறுகக் அணைத்துக் கொண்டார்.

சில நொடிகளுக்குப் பிடியைத் தளர்த்தாமல் அப்படியே நின்றவர் அவளுக்கு மட்டும் கேட்கும் த்வனியில் ''நான்... வந்து... பாரதி... நான்'' என்று ஏதேதோ சொல்ல முயன்றார் எதுவுமே கூறத் தெரியாமல் தவித்து கடைசியாய் 'ஐம் ஸாரி கண்ணம்மா' என்று மட்டும் முனக.

அந்த ஒற்றை வரி புருஷன் மாறிவிட்டதை துல்லியமாக பாரதிக்கு உணர்த்தியது.

அதைத் தொடர்ந்து, முன்னறிவிப்பு இல்லாமல், உள்ளுக்குள் குயில் ஒன்று இசைபாட முற்பட பாரதி நெகிழ்ந்தாள்.

அவன் முகத்தைத் தன்பால் திருப்பி 'நான்வந்து... தஞ்சாவூர்ல... அம்மா...' என்று ஆரம்பித்தவரின் உதடுகளில்



விரலை வைத்து 'ஷ்...ஷ்...' என்று மௌனமாய் அடக்கினாள். எந்த விளக்கமும் எனக்குத் தேவையில்லை என்பது போல தலையை அசைத்து அவரைப் பார்த்து புன்னகைத்தாள்.

ரமணி புரிந்துகொண்டுவிட்டார். அங்கு அம்மா புரியவைத்தாரா, அல்லது இவர் தானாகச் சிந்தித்துத் தெளிந்து போனாரா என்கிற விவரங்கள் எல்லாம் இப்போது அனாவசியம். என்னை, என் கண்ணோட்டத்தை, என் மனதை, என் ஏக்கத்தை, என் தீர்மானத்தை ரமணி புரிந்துகொண்டுவிட்டார். இது ஒன்றுதான் முக்கியம்.

குனிந்து, புன்னகைத்தவளின் உதடுகளில் மென்மையாய் முத்தமிட்ட ரமணி, ஏதோ நினைவுக்கு வந்த தினுசில் அவசரமாய் அவள் தோள்களைப்பற்றி, ஓரடி தன்னிடமிருந்து விலக்கி, சின்ன பையனின் முகபாவத்தோடு, கெஞ்சலாய் ஆனால் வேகமாகக் கேட்டார்.

"உனக்கு கிளாஸ் எட்டரைக்கு ஆரம்பமாறதுனு சொல்லே இல்லியா? ஒரு பத்து நிமிஷம் டைம் கொடுக்கறியா! குட்டியா ஷேவ் செஞ்சுண்டு, காக்கா குளி குளிச்சுட்டு நானும் கிளம்பிடறேன். இனிமே தினமும் உன்னை நானே கார்த்தால காலேஜ்ல எறக்கி விடணும்னு தீர்மானம் பண்ணி இருக்கேன், வில் யூ லெட் மீ டூ ஸோ, கண்ணம்மா? நானும் உன்னோடயே புறப்பட்டு ஆபீஸுக்குப் போயிடறது சாயங்காலம் சீக்கிரமா திரும்ப வசதியா இருக்கும். என்ன சொல்றே பாரதி?"

சொல்ல என்ன இருக்கிறது!

பாரதி கண்களை மூடிக்கொண்டு ரமணியின் மார்பில் முகத்தைப் புதைத்து, அவர் முதுகின் பின்னால் கைகளைக் கோர்த்து இறுக அணைத்துக்கொண்டாள்.

இனி எந்த அவஸ்தையும் இல்லை, ரமணியைத் தொடர்ந்து விக்ரமும் மற்றவர்களும் விரைவிலேயே அவளைச் சரியாகப் புரிந்துகொண்டுவிடுவார்கள்.

ரமணி வழிகாட்டிவிட்டார். திரும்பிப் பார்ப்பதற்குள் விக்ரமும், மற்றவர்களும் தங்கள் வேண்டாத சந்தேகங்களை, பயங்களைத் துறந்துவிட்டு அவளை முழுமையாக ஏற்றுக்கொள்ள முன்வந்துவிடுவார்கள், நிச்சயம். இனி எந்தத் தயக்கமும் இன்றி அவள் அவளாக இருக்கலாம், சிந்திக்கலாம், செயல்படலாம்.

நான் நானாக...

ஒரு மனைவியாக, தாயாக, மகளாக, மருமகளாக மட்டுமல்லாமல் பாரதி என்கிற தனி நபராக, அவளுக்கென்று தனி விருப்பு வெறுப்புகள், சிந்தனைகள் கொண்ட ஒரு மனுஷியாக அவளை எல்லோரும் மதிக்கத் துவங்குவது எத்தனை நிம்மதியைத் தரும்; பெருமையைத் தரும்; சுதந்திரத்தைத் தரும்; முக்கியமாய் மரியாதையைத் தரும் சமாசாரம்!

பாரதி கண்களை லேசாகத் திறந்து தலையைச் சற்றே உயர்த்தி ரமணியின் கழுத்தில் தன் உதடுகளைப் பதித்தாள்.

அந்த ஸ்பரிசம்—

சுகமாக இருந்தது.

நிறைவாய் இருந்தது.

கூடவே—

இத்தனை அற்புதமான உணர்வுகளை எனக்குள் உண்டாக்கக்கூடிய இந்த ஆண் என்னைப் புரிந்து கொண்டவர் என்கிற கர்வம் எல்லாத்தையும்விட அதிகமாய் இருந்தது.

▲ ▲ ▲

267735